# Can Man Find the Way to God?

# தேவனிடத்திற்கு செல்லும் வழியை மனிதன் கண்டுபிடிக்க முடியுமா?

Betty Burton Choate

பெட்டி பர்ட்டன் சோட்

Published By
World Evangelism

Copyright© 2011, J.C.Choate Publications

First Print in Tamil : 2017
Copies : 2000

Cover Design and Layout: Betty Burton Choate

*Edited & Translated*

*by*

*B. Arjunan and Glory*

*&*

*K.R.K. Ravi Asir*

*Order from:*

**World Evangelism Publications**

**P.O.Box 5**

**Batlagundu -624 202**

**South India**

**Choate@WorldEvangelism.org**

**WorldEvangelism.org**

**GospelGazette.com**

# அர்ப்பணிப்பு

**"ஒரே வழி"** யில் என்னை வளர்த்து வந்த

தகப்பன் மற்றும் தாய், கிளைட் மற்றும் தியோலா பார்ட்டன்

அவர்களுக்கு;

**"ஒரே வழி"** யை மற்றவர்கள் கண்டுபிடிக்க தன்னோடுகூட

உதவிடுமாறு என்னைக் கேட்டுக்கொண்டவரும்

52 ஆண்டுகள் என்னோடு இருந்தவருமாகிய என் கணவர்

ஜெ.சி.சோட் அவர்களுக்கு;

**"ஒரே வழி"** யில் வாழ்ந்து கொண்டும் தங்கள் பிள்ளைகளுக்குப்

போதித்துக் கொண்டும் வருகிற எங்களது பிள்ளைகள்

ஷீலா லின்,

ஸ்டீவ் பார்ட்டன்

பிராட்லி ஷேனன்

மற்றும் டர்லா ஜேன் ஆகியோருக்கும்;

எல்லாருக்கும் மேலாக

இப்புத்தகத்தை வாசிக்கின்றவர்களுக்கும்

**"ஒரே வழி"** க்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கும்;

இப்புத்தகத்தின் பக்கங்கள் ஒரு

தெளிவான சத்தியத்தின் அறிமுகமென நிரூபிக்கப்படும்படிக்கு

இப்பக்கங்களை ஜெபத்துடன்

நான் அர்ப்பணிக்கிறேன்.

# வெளியீட்டாளரின் உரை

**இ**ப்பாடத்தின் முதல் வெளியீடு - **தேவனிடத்திற்கு செல்லும் வழி** - பல ஆண்டுகளுக்கு முன் நாங்கள் இந்தியாவில் வாழ்ந்து கர்த்தருடைய சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்த போது எழுதப்பட்டது. எளிதில் கட்டுப்படுத்த இயலாதவாறு எங்கும் பரவுகின்ற விக்கிரகாராதனையையும், மார்க்க ரீதியான குழப்பத்தையும் நான் கண்ணுற்ற போது, வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்ற இயேசுவை குறித்த ஒரு தெளிவான, புரிந்து கொள்ளக்கூடிய விளக்கத்தை உருவாக்க நான் வாஞ்சித்தேன். ஆரம்பத்தில் எழுதிய அப்புத்தகம் அச்சாகி அங்கே பயன்பட்டது.

காலம் கடந்து கொண்டிருக்கிறபடியால் இந்த செய்திக்காக மீண்டும் பணியாற்றி அமெரிக்க ஐக்கிநாடுகளில் இப்புத்தகத்தை அச்சிட வேண்டும் என்பதன் அவசியத்தை நான் உணர்ந்தேன். அது இங்கேயும், இன்னும் எண்ணற்ற நாடுகளிலும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருடந்தோறும் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் சபைக்குள்ளாகவும், அதற்கு வெளியே அவிசுவாசிகள் மத்தியிலேயும் என இரண்டு விதமாக சென்றடைவது பிரயோஜனமாக இருக்கும் என்பதிலே நான் நம்பிக்கையுடையவளாக இருக்கிறேன்.

**மனுஷன் தேவனிடத்திற்கு செல்லும் வழியை காண முடியுமா?** - என்ற ஒரு புதிய தலைப்புடனே - ஒரு புதிய முகப்புடனே, பாடத்தின் பெரும் பகுதி விரிவுபடுத்தப்பட்டு மறுபடியும் எழுதப்பட்டு நிறைவடைந்த இப்பணியானது, இறுதியாக அச்சடிப்பதற்கு தயார் நிலையில் இருக்கிறபடியால் நான் நன்றியுடையவளாக இருக்கிறேன். என்னுடைய ஜீவியத்திற்கென்று இருக்கிற மற்றெல்லாவற்றோடும், என் உடைமைகளுடனும், ஆத்துமாக்களை நித்தியமாக இரட்சிக்கும் தேவனுடைய மகத்தான ஊழியத்திலே பயன்படுத்தும்படியாக இப்புத்தகத்தை நான் அவருக்கே ஒப்புவிக்கிறேன்.

**பெட்டி பார்ட்டன் சோட்,**
**வினோனா, மிஸிஸிப்பி**
**செப்டெம்பர், 1,2011.**

# வெளியீட்டாளரைப் பற்றி...

**1995** -ம் ஆண்டு முதல் நானும் எனது மனைவி குளோரியும் சகோதரி பெட்டி பார்ட்டன் சோட்டை நன்கு அறிவோம். இவர் இந்தியாவில் கர்த்தருடைய சபை பல இடங்களில் உருவாக காரணமாக இருந்து வருகிறார். உலக அளவில் இலக்கியம், ரோடியோ மற்றும் டெலிவிஷன் பணிகளை மிகச் சிறப்புடன் செய்து வருகிறார். இவர்களது பணி குறிப்பாக பெண்கள் மத்தியில் எழுச்சியுள்ளதாக இருக்கிறது. இவர்களோடு கர்த்தருடைய பணியை நாங்கள் சேர்ந்து செய்வதில் மிகுந்த சந்தோஷம் அடைகிறோம்.

**சகோ.அர்ஜுனன், கிறிஸ்துவின் சபை, வத்தலக்குண்டு**
**டிசம்பர், 25, 2017**

# உள்ளடக்கம்

1. தேவன் ஒருவர் இருக்கிறாரா?- Is There a God?------------------- 01
2. தேவன் சர்வ வியாபியாய் இருக்கிறார் - God Is Universal-------- 10
3. சிருஷ்டிப்பைப் பற்றிய குறிப்புகள் - Accounts of the Creation-- 15
4. உலகளாவிய ஜலப்பிரளயம் - The Global Flood----------------- 22
5. இந்த தேவன் யார்? - Who Is This God?------------------------ 32
6. உலகத்தில் தீமை இருக்கிறது. தேவன் தீமையை உருவாக்கினாரா? -
There Is Evil in the World. Did God Create Evil? ----------- 43
7. எது தேவனுடைய புத்தகம்? - Which is God`s Book?----------- 52
8. வேதாகமத்தை சரியாக பகுத்து படிக்க ஒரு வழிகாட்டி -
Guide for Rightly Dividing the Bible ------------------------ 71
9. தேவனுடைய திட்டம் - The Plan of God ----------------------- 77
10. இரட்சகர் - Savior ------------------------------------------ 82
11. வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய திட்டம் - God`s Plan Revealed 89
12. தேவனை தொழுது கொள்ளுதல் - Worship of God ----------- 100
13. ஆராதனை நிறைந்த ஜீவியம் - The Worshipful Life --------- 107
14. மரணத்திற்கு பின், என்ன? -After Death, What? ------------- 113
விடைகள் --------------------------------------------------------- 120

# தேவன் ஒருவர் இருக்கிறாரா?
# Is There a God?

**1**

தேவன் ஒருவர் இருக்கிறாரா? இந்தக் கேள்வியை எப்போதாவது நீங்கள் உங்களுக்குள் கேட்டிருக்கிறீர்களா? இக்கேள்வியை உண்மையாகவே கேட்டிருந்தால், தேவனில் ஆழமான விசுவாசம் கொண்டுள்ள ஒவ்வொரு மனித ஆன்மா; முழுவதும் தேவனை மறுதலிக்கிற மனிதன், மற்றும் அநேகக் கடவுள்கள் மேல் நம்பிக்கை வைத்திருக்கிற மனிதன்போன்ற நாமெல்லாரும் இந்தக் கேள்வியோடு மல்லுக்கட்டி நம்முடைய சுயஅறிவில் ஏதோ ஒரு வகையான முடிவிற்கு வந்திருப்போம்.

நாம் வாழ்கிற இந்த சமயசார்பற்ற உலகில், அநேகர் தேவனைப் பற்றிய இக்கேள்வியை ஒரு முக்கியமற்ற அலமாரியில் அடுக்கிவைக்கப்பட்ட புத்தகத்தைப்போலவே தங்கள் மனதில் "நான் மிகவும் அலுவலில் இருப்பதால் இப்படிப்பட்ட அனைத்திலும் இப்போது தலையிட முடியாது" எனக் கூறும் மனப்பாங்குள்ளவர்களாயிருக்கலாம். "நான் குழந்தையாய் இருந்தபோது போதிக்கப்பட்டவற்றிலேயே நம்பிக்கையுள்ளவராகயிருப்பேன்" அல்லது "நான் எனக்காக படித்து முடிக்க நேரமிருக்கும்வரை அறிவியல் அறிஞர்களின் வார்த்தையைப் பின்பற்றுவேன்" என்று சொல்லலாம்.

மற்றவர்கள், ஆழமான படிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பயத்தினால், தாங்கள் வாழ்நாள் முழுவதும் அவர்கள் நம்பியிருந்த நம்பிக்கையை ஆய்வு செய்ய தயங்குகிறவர்களாகவுமிருக்கின்றனர். மேலும், தங்களின் "ஆறுதலின் இடம்" எதுவோ அதைப் பின்பற்றுகின்றனர். என்னுடைய குடும்ப அங்கத்தினர்களும் நெருங்கிய நண்பர்களும் கிறிஸ்தவர்களாக அல்லது இந்துக்களாக அல்லது இஸ்லாமியராக அல்லது நாத்திகர்களாக இருப்பார்களென்றால், படிக்கின்ற எண்ணங்களும் அன்பிற்குரிய ஒவ்வொருவருடைய முடிவுகளும் தவறான பீதி உண்டாக்குகின்றவையாக இருக்கும். இப்படிப்பட்ட கற்றலுக்கு ஊக்கமளிக்கப் போதுமானவை எவையேனும் இருக்கிறதா? முடிவிலே, போதுமான பலத்தோடு தனியாக நிற்க, தேவை ஏற்பட்டால், ஒருவருடைய திடநம்பிக்கையின் மேல் அஸ்திபாரம் போட்டவர்களாயிருக்க ஏதேனும் உண்டா?

**ஜீவனில் அல்லது மரணத்தில், இக்கேள்வி ஒவ்வொரு ஆத்துமாவினால், நிச்சயமாகப் பதிலளிக்கக்கூடியவையாக இருக்கிறது**

தேவனின் தொடர் உயிர்வாழ்வினைப் பற்றிய மாறுபட்ட கருத்துடைய இக்கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கொண்டிருக்கிறோம். நீங்கள் எப்போதாவது ஏன் என்று மனித எண்ணத்தின் எதிரில் உள்ள திகைக்க வைக்கும் எல்லா கேள்விகளையும் குறித்து ஆச்சரியமடைந்திருக்கிறீர்களா? தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கும் மக்கள் அடிக்கடி மூடநம்பிக்கையுள்ளவர்கள் போலவும் கல்லாதவர்கள் போலவும் இருக்கின்றனர். எனவே, அநேக அறிவியல் மற்றும் கல்வியறிவு சார்ந்த உலகத்தால் இக்கால அறிவும் ஆவிக்குரியவற்றைப்

பரியாசப்படுத்துவதும், தேவனைப் பற்றிய எண்ணம் ஏன் முழுவதுமாக அலட்சியம் செய்யப்பட்டதாயிருக்கவில்லையா?

கடந்தகால வரலாற்று மற்றும் தொல் பொருள் ஆராய்ச்சி பதிவேட்டிற்கு உங்கள் கவனத்தைத் திருப்புங்கள், அப்போது நீங்கள் **மனித வாழ்வின் மையப்பகுதியில் தேவனைக் கண்டுபிடிப்பீர்கள்:** தேவனை ஆராதிப்பதும், தேவனுக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பதும், மரணத்தை எதிர்நோக்குதலும்; தேவனுடைய எதிர்பார்ப்பையும் கூட நீங்கள் கண்டுகொள்வீர்கள். இன்றைக்கும் கூட மனிதவர்க்கம் இரண்டு பெரிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: ஏதோ, ஒருவகையில் தேவனை ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்வை கழிப்பவர்கள் என்றும் தேவன் உயிரோடிருக்கிறார் என்பதை மறுதலித்து, அவர் மனிதனுடைய எண்ணத்தில் ஒரு பொய்யான நிர்மானம் மட்டுமே என்று நிரூபிக்க முயற்சிப்பவர்களாக தங்கள் வாழ்வை கழிக்கிறவர்கள் என்றும் இருபெரும் குழுக்களாக இருக்கின்றனர் ஆனால் - **ஏற்றுக்கொள்வதில் அல்லது மறுதலிப்பதில்** - ஒவ்வொரு கலாச்சாரத்தின், ஒவ்வொரு காலத்தின், உலகமுழுவதிலும் தேவன் - மையப்பொருளாகக் கருதப்பட்டவராயிருக்கிறார்.

மக்கள் தங்கள் வாழ்வின் அலுவலில் உண்மையாகவே மறுதலித்து, தவறென நிரூபித்து தேவனுடைய தொடர் ஜீவியத்தை பொய்யென நிரூபித்து, கட்டுக்கதையை விட மேலானவர் என அவரை பிரகடனம் செய்வது வஞ்சகப்புகழ்சியல்லவா - இது வெளிப்படுத்தப்படுகின்றதா? என்கின்றனர். இல்லாத வேறொருவருடைய வாழ்வினை "பொய்யென நிரூபிக்கும்" முயற்சியில் யாரோ ஒருவர் தன் வாழ்வினைக் கழித்துக்கொண்டிருக்கிறாரென எப்போதாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நம்மிடம் ஏதோ ஒன்றை பற்றி சொல்லமுடியாதா?

### "அறிவுபெருத்த" ஒரு மதசார்பற்ற உலகில் தேவனை மறுதலித்தல்

நிச்சயமாக, இன்று இவ்வுலகில் அநேகர் தேவனுடைய மற்றும் சமயக் கருத்துக்களை அவமதிக்கின்றனர். அவர்கள் மறைமுகமாக அல்லது வெளிப்படையாக பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதவர்க்கம் பிற்காலத்தில் "ஒரு கடவுள்" மற்றும் முடவன் நடக்கப் பயன்படுத்தும் கவையுள்ள கொம்பைப்போல "சமயத்தை" சிறிது சிறிதாக அறிவித்தான் என பிரகடனப்படுத்துகிறார்கள். அவர்கள் உயிரினம் அறிவியலால் கொடுக்கப்பட்டது என்று **எல்லா பதில்களும் எல்லா கேள்விகளுக்கும் எல்லாப் பொருட்களுடன்** சம்பந்தமுடையதாயிருக்கிறது என்கின்றனர்.

ஆனால் தாமதிக்கவும்! எவ்வகையிலும் இது என்ன "பரிணாமக் கொள்கை"? இது எல்லாவற்றிலும் வித்தியாசமுடையதும் குழப்பத்தின் அமைப்புகளிலும், இதன் ஆண் மற்றும் பெண் ஜோடிகள், **வாழ்க்கை- இல்லா நிலையிலிருந்து வாழ்க்கை** நிலைக்கு தாவுதலும், மேலும் பரிணாமம் பல லட்சம் ஆண்டுகளுக்கு மேலாக எண்ணற்ற ஒன்றுக்கொன்று சார்புற்ற அமைப்புகளும் என்ற நம்பிக்கையையே நாம் இன்றுவரை பார்க்கிறோம். ஆனால் யாராவது உண்மையிலேயே வெளிப்படையான - பரிணாம (ஒரு வாழ்க்கை அமைப்பிலிருந்து இன்னொரு வாழ்க்கை அமைப்பிற்கு மாறுகின்ற) மாற்றத்தைக்

கண்டிருக்கிறீர்களா? அறிவியல் இம்மாற்றம் நடைபெற முடியுமென **நிரூபித்திருக்கிறதா?** இல்லை, "பரிணாமம்" இதனுடைய முழு நம்பிக்கையின் பாகம் மற்றும் கொள்கைகள் வெறுமனே ஒரு நாத்திக மதமாகவும், அறிவியல் என்ற பெயரின் அடிப்படையில் பகட்டாக காண்பிக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. இதை நம்புகிறவர்கள், தெரிந்துகொள்ளுதலின்படியும் விசுவாசத்தின்படியும் அதுவே உண்மையென்று நம்புகின்றனர். ஏனென்றால் இதன் அஸ்திபாரம் நிரூபிக்கப்படாத, அதேசமயம் பரியாசத்திற்கேதுவான கேலிக்கூத்தாகவும், "சமயத்தின்" அடிப்படையிலில்லாமல், ஆனால் வளர்ந்து வருகிற அறிவியலின் அடிப்படையிலே இவ்வாறு உள்ளது.

அதிகமான மக்கள் "பரிணாமக் கொள்கையை" ஆதரித்து "பெரிய ஓசை" யை நோக்கி (நுண்ணோக்கியில் பார்க்கக்கூடிய சிறிய பொருளைவிட மிகச் சிறிய பொருளை முன்னதாகவே அழுத்த முடியும் என்ற கருத்தோடு இன்று நாம் பார்க்கும் பிரபஞ்சத்தில் வெடிக்கச் செய்யும் பொருளை) அல்லது பிரபஞ்சத்திலுள்ள மிகப்பெரிய துகள் எப்படி உருவானது என்று விளக்கமளிக்கும் நோக்கத்தில் "பரிணாம கொள்கையை" ஆதரிக்கின்றனர். அவர்கள் ஆரம்பிக்கும் சில காரியங்களிலிருந்து வரும் பதில்களே வேறு கேள்விகளை உருவாக்குகிறது என்பது ஒரு பிரச்சனையாயிருக்கிறது. அந்த சில காரியங்கள் எங்கிருந்து வந்தது? யார் அல்லது எது அதை உருவாக்கிற்று? அல்லது அக்காரியம் நித்தியமானவையா? அது எப்போதும் ஜீவிக்கின்றவையா?



சுருண்டு இருக்கும் வாயு மற்றும் தூசிமேகம் 50,000 ஒளி ஆண்டுகளுக்கு மேலாக 72 மில்லியன் ஒளி ஆண்டுகள் தூரத்தில் இலட்சக்கணக்காக நட்சத்திரங்களைக் கொண்டு அமைந்திருக்கிறது.

இக்கேள்விகளுக்கு இப்போது இக்கொள்கை பதிலளிக்கிறது. முழுபிரபஞ்சமும் ஜீவனுள்ளவற்றிலிருந்து ஒரு நேர்த்தியான வெற்றிடத்தில் இயற்கையாக உருவானது என்று ஆழ்ந்து சிந்தித்து கற்றறிந்த அறிவியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்! அவர்கள் கூற்று சரியானதா? வெறுமையிலிருந்து ஒவ்வொன்றும் உருவானது என்பது உண்மைதானா? மேலும் வேறு எந்த வெளித்தோற்றத்திலிருந்தும் உருவாகவில்லை என்பது உண்மை தானா?

இதை சோதித்து பார்க்க முயற்சி செய்யுங்கள். நேர்த்தியான ஒரு வெறுமையானது உருவாயிருந்தது, உலகத்தின் வெளிப்பகுதியிலிருந்து



பென்சில்வடிவ வாயு மற்றும் தூசிகளின் மேகக்கூட்டம் என்று அழைக்கப்படும் இந்த அமைப்பில் எண்ணற்ற விண்மீன்களும் ஒளி மிகுந்த கற்றையாக காணப்படும் பால் வழி

முத்திரையிடப்பட்டிருந்தது. ஒரு கிருமி, ஒரு பாக்டீரியா அல்லது எந்த ஒரு மிகச்சிறிய ஒரு பொருள் உலகினுள் இருக்கவில்லை. பிறகு கவனியுங்கள் நேர்த்தியான வெறுமையான இடத்தை வெடிக்கச் செய்ய எவ்வளவு நாட்கள் ஆகும் - எந்த ஒரு காரணமுமில்லை - உருண்டையான பிரபஞ்சத்திற்குள் - நேர்த்தியான சமநிலை மேலும் சிக்கலான ஒழுங்கின்மையானதாகவும் இருந்தது. அப்போதுதான் ஒவ்வொரு பகுதியும் ஒன்றை ஒன்று சார்ந்து வளர்ச்சியுற்று சரியான நேரத்தில் மற்ற பகுதிகளோடு சார்ந்து நிலைநிறுத்தப்பட ஏதுவாகும்! இது அறியப்படாத, வெறுமையானவை பூர்த்திசெய்யப்பட அற்புதங்களின் வெடிப்பு நடைபெற்றது என்பது நம்புவதற்கு ஏதுவாக இருக்கிறதா? ஒன்றுமில்லாமையிலிருந்து சிலவற்றை உண்டாக்க முடிந்தது. **பிரதானமான ஒருவரில்லாமல் இது நடைபெறாது அல்லவா?**

இப்பேர்பட்ட கருத்தை அறிவியலின் **'அறியப்பட்ட விதி'** ஒவ்வொன்றையும் வெளிப்படையாகவே எதிர்க்கிறது. ஆனால் பரிணாமக் கொள்கையை ஆதரிக்க மக்கள் நல்லதொரு கருத்தை தெரிந்தெடுக்க சந்தேகத்தை எழுப்புகின்றனர். மேலும் அறிவியலற்ற கொள்கையானது நேர்மறையான காரணம் உண்டென கருதுவதற்கு மாறாக ஒவ்வொன்றிற்கும் பின் படைப்பினை விட சக்தி மிகுந்த ஒன்று உள்ளது என்கின்றனர்: நாம் உயிருள்ள உன்னதமானவரை தேவன் என அழைக்கிறோம்.

## நாம் தேவனைக் காணமுடியாது
## We can`t see God

சிலர், தேவனில் விசுவாசம் இல்லாதவர்களாக, இன்னும் தங்கள் சொந்த கண்களால் காண்கிறவற்றையே நம்பும் உணர்வுள்ளவர்களாக, உண்மையாக, "நான் தேவனைக் கண்டதில்லை" அதன்பிறகு, அவர் உண்மையாகவே இருக்கின்றாரா, அதை நான் எப்படி அறியமுடியும்? என அவர்கள் கேட்கின்றனர்.

ஆனால் சற்று நின்று நிதானித்துப்பாருங்கள். உங்கள் சொந்த கண்களால் காற்றைக் காண முடியுமா? எப்போதாவது நீங்கள் புவிஈர்ப்பு விசையை பார்த்திருக்கிறீர்களா? நம்முடைய சரீரக் கண்களால் சாதரணமாக காணமுடியாத பலவற்றில் இவை இரண்டு மட்டுமே. ஏனென்றால் அவைகளெல்லாம் நமக்கு கண்ணுக்குப்புலப்படாத பொருட்களில் ஒரு 'பொருள்' இருந்தபோதிலும், அவைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள் இருக்கின்றன என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஏன்? ஏனென்றால் நாம் எதைச் செய்கிறோமோ அதையே நாம் காணமுடியும். அதே மாதிரி, தேவன் இருக்கிறார் என்பதை நாம் அறியமுடியும் ஏனென்றால் அண்டசராசரங்களிலுள்ள எல்லா சரீரப்பிரகாரமான பொருட்களையும் அவருடைய படைப்பின் வல்லமையின்மூலம் இருக்கின்றன என நாம் காண முடியும்.

ஆனால் சவால் எழும்புகிறது: "அறிவியல் அறிஞர்கள் உருவான பொருட்கள் பரிணாம வளர்ச்சியினால் உருவானவை - அவைகள் சிருஷ்டிகரைக் கொண்டிருக்கவில்லை. எனவே இருக்கின்ற சரீர பிரகாரமான அண்டசராசரங்கள் தேவன் இருக்கிறார் என எவ்வாறு நிரூபிக்க முடியும்? என்கின்றனர்".

## நுண்ணறிவுள்ள திட்டத்திற்கு சாட்சியம் உண்டு

ஒருவேளை நீங்கள் ஒரு பாதையின் வழியே சென்று கொண்டிருக்கலாம், உங்களுடைய கண் புற்களுக்குள்ளே பாதி மறைந்துள்ள ஏதோ ஒன்றை சுட்டிக்காட்டுகிறது. நீங்கள் அதை எடுக்க குனிகிறீர்கள் அதன்பின் அது ஒரு உடைந்துபோன அழகிய பூக்களின் சித்திரம் தீட்டப்பட்ட பீங்கான் தட்டு என்பதை அறிகிறீர்கள். களிமண்ணால் கொஞ்சங்கொஞ்சமாக இவ்விதமான வடிவத்தைப் பெற எத்தனை இலட்சம் ஆண்டுகள் எடுத்திருக்கும், மேலும் இந்த மென்மையான பூக்கள் உண்மையான பூக்களைப்போல அச்சுபதித்து இந்த சித்திரம் தீட்ட எத்தனை அதிகமான பல கோடி ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும் என நான் ஆச்சரியப்படுகிறேன்" என்றும் மேலும் இது எங்கிருந்து, எங்கே உருவாகி, இந்த இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு எவ்வாறு இரண்டு பகுதிகளாக உடைக்கப் பட்டுள்ளது? என நான் அதிசயிக்கிறேன்" என்றும் நினைப்பீர்களா?

இல்லை; இப்படிப்பட்ட நினைவுகள் ஒருபோதும் ஒருவருடைய நினைவிலும் உண்டாகாது. அது தட்டையானதும் வட்டமானதும் - உடைந்த தட்டாக இருந்தபோதிலும், சித்திரந்தீட்டப்பட்டதாகவும் - அதை உருவாக்குவதற்கு மனிதனுடைய மதிநுட்பம் தேவைப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் ஏதோ திறமையுடைய ஓவியர் - மீண்டும், புத்திநுட்பம், சித்திரந்தீட்டும் அறிவுத் திறமையோடுள்ள ஒரு மனிதன் - அழகிய வடிவமைப்பிற்கும் மென்மையான வண்ணங்களுக்கும் பொறுப்பாளியாக இருந்திருக்கிறான் என்பதையும் அறிவீர்கள். மேலும் யாரோ ஒரு மனிதன் உடைந்துபோன துண்டுகளை உங்கள் வழியில் போட்டிருக்கிறான் என்பதையும் அறிவீர்கள்.


மனிதன் தட்டினை உருவாக்குகின்றதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்ததை நிச்சயமாக நீங்கள் பார்க்கவில்லை உங்களால் பார்க்க முடியவில்லை என்பதும் அதை உருவாக்க மனிதனுடைய மதிநுட்பம் தேவைப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையல்லவா? அந்த தட்டு பத்து ஆயிரம் மில்லியன் ஆண்டுகளிலும் கூட தானாகவே உருவாகியிருக்க வில்லை என்பதை நீங்கள் முழுமையாக நிச்சயிக்கவில்லையா?



இது என்ன? விலையேறப்பெற்ற ஒரு மலரா? இல்லை, தேவனாலே சிக்கலான முறையில் வடிவமைக்கப்பட்டிருக்கும் ஒருவகை புல் பூண்டு

இப்போது, நீங்கள் வண்ணம் தீட்டப்பட்ட உடைந்த தட்டிற்குப் பதிலாக உண்மையான பூக்களை - உயிருள்ள பொருட்களை - உங்கள் காலுக்கடியில் அற்புதமான மிகுந்த வண்ணத்திலும் வாழ்வினையும் கொண்டு வளருகின்றவற்றை பார்க்கலாம். நீங்கள் குனிந்து அதற்கருகில், சிக்கலான விபரத்தினையும், அதன் பாகங்களின் ஒரே சீரான சித்திர அமைப்பினையும் பார்க்கச்

சென்று; நீங்கள் இதழ்களின் வழுவழுப்பான தன்மையையும், எப்படியோ அதன் மிருதுவான வெல்வெட்டை தொடும்போது ஏற்படும் மென்மைத்தன்மை; மென்மையான காற்றுவீசுவதனால் ஏற்படும் பூக்களின் இனிய வாசனையை உங்களுடைய மூக்கு நுகர்வதையும் உணர்வீர்கள். பளப்பளப்பான தாவரங்களின் இலைகள், தண்டுகளைக் கண்டு நீங்கள் வியந்து, மேலும் ஊதா வர்ணம், மஞ்சள், நீல நீறம், வெண்மை, ஆரஞ்சு நிறம் அல்லது சிவப்பு நிறம் - இப்படிப்பட்ட வித்தியாசமிக்க இழைகள் நிறங்கள் எல்லாம் ஒரே தாவரத்தில் இருப்பதைக் கண்டு வியப்பீர்கள்!




எலேக்னஸின் அடுக்கடுக்கான இழைகள், குவிக்கப்பட்ட வெளிச்சத்தினால் ஒளிர்கிறது அந்த வடிவமைப்பை பாருங்கள்!

**நுண்ணோக்கியின் உதவியினால் பார்க்கக்கூடிய கண்களை நாம் பெற்றிருந்தோமானால்...**

## If we had microscophic eyes...

உங்களுடைய கண்கள் சிறந்தவைகளாக, பூக்களின் செல்களை உள்நோக்குபவையாக அவைகளின் வேலைப்பாடுகளின் எண்ணற்ற முழுமையை உற்று நோக்குபவையாக, தோற்றத்தை மாற்றும் சூரிய ஒளியினையும் மண் மற்றும் நீரிலிருந்து சத்துக்களை எடுத்து பூக்களினூடே பயனுள்ள சாரத்தை செலுத்தி, முழுத் தாவரத்திற்குள்ளும் சத்துக்களை அனுப்பி, தொடர்ச்சியான வளர்ச்சிக்காக புதிய செல்களை உருவாக்குகிற கார்பன்டை ஆக்ஸைடை எடுத்துக் கொண்டு நாம் சுவாசிக்கும் ஆக்ஸிஜனை வெளியிடுவதைப் பார்க்கக் கூடிய கண்களையுடைய வர்களாய் இருந்தால்! ஆ! இந்த மனிதக் கண்கள் சிறப்பானவற்றை மட்டுமே பார்க்கக்கூடும், நாம் ஆச்சரியமிக்க நுண்ணோக்கியினால் பார்க்கக்கூடிய கண்களால் செல்-உலகங்கள் உயிர் வாழ்வன அனைத்தையும் உருவாக்குகிறது என கண்டுகொள்ளமுடியும்!



நுண்நோக்கியின் மூலம் காணப்படும் கொசுவின் இறகுகள் மிகவும் ஈடுபாடுடைய சிக்கலான வடிவமைப்பை பாருங்கள்

ஆனால், அநேக உயிர்வாழ்வனவற்றை நாம் காணமுடியாது, நம்முடைய சரீர பிரகாரமான உலகத்தில் கூட பார்க்க முடியாது. இப்படிப்பட்ட நுண்ணிய உயிரினங்களை கொஞ்சங்குறைய நிசத்தை உருவாக்கும் இந்தக்

கண்களால் பார்க்கமுடியாதென்பது உண்மையாயிருக்கிறதா? இல்லை, நிச்சயமாக இல்லை!

இப்போது, மிகப்பெரிய அளவில் வடிவமைக்கப்பட்டு, நம் பாதையில் கிடந்த உடைந்துபோன தட்டு, அல்லது உயிருள்ள பூக்கள் அதன் உருவமைப்பில் காணப்படும் நுண்ணறிவு முழுவதுமே உண்மையானதாக இருக்கின்றதா? கொடுக்கப்பட்டுள்ள, ஒரு பூ உருவாக்கப்படுகின்றதை நாம் ஒருபோதும் கண்டிருக்கவில்லை (ஆனால் அந்த தட்டிற்கு ஒரு படைப்பாளி இருந்தார் என்பதை நாம் சந்தேகிப்பதில்லை, இருந்தபோதிலும் நாம் அந்தப் படைப்பாளியை ஒருபோதும் பார்க்கவில்லை) இந்தப் பூக்களின் படைப்பில் கரங்களும் மனதும் இணைந்து ஒரு உருவத்தை படைத்துள்ளது என்றாலும் இந்த சரீரப்பிரகாரமான மனிதக் கண்கள் சாதாரணமாக அதைப் பார்க்கவில்லை. ஆனால் அண்டசராசரங்களில் இருக்கின்ற ஒவ்வொன்றும் நுண்ணறிவையும், வடிவமைப்பையும் காண்பிக்கிற போது, உண்மையாகவே இவைகளையெல்லாம் உருவாக்கிய பிரதானமான அதிகாரமிக்க நுண்ணறிவுள்ள வடிவமைப்பாளர் ஒருவர் ஆதியிலே இவற்றைத் துவங்குவதற்கு இது ஞானமான காரியமில்லையா? வியக்கத்தக்க வகையில் உருவாக்கப்பட்ட ஒரு வெளிப்படையானப் பொருளை நாம் காணும்போது தொடர்ந்து தானாகவும் மற்றும் அறிவியல் பூர்வமாகவும் நிறைவேறுகிறது என்பது உண்மையில்லையா?

சரீரப்பிரகாரமான கண்களின் பார்க்கும் திறன் போதுமான அளவில் இல்லாமல் எல்லாவற்றிற்கும் மேலான மாபெரிய குருட்டுத்தன்மை இருப்பதினால் வெறுமனே தேவன் இருக்கிறார் என்பதை மறுதலிக்கச் செய்கிறது.

## தாக்குதலின் கீழ்...

## Under Attack...

சிருஷ்டிகர் ஒருவர் உண்டென விசுவாசிக்கிற நம்மில் பலரின் தந்திரமான மற்றும் தொடர்ச்சியான நேரடி தாக்குதலின் அவிசுவாச தாக்குதலை ஏற்படுத்துகிறது. அறிவியல் அறிஞர்கள், கல்வியாளர்கள், மேதைகள் எல்லாருடைய கூற்றுகளும் தவறானவையாக இருக்கமுடியுமா? அல்லது நான், நானாகவே குருட்டுத்தனமான நம்பிக்கைகளில் வாழ்கின்றேனா?

தேவன் உயிருடன் இருக்கிறார் என்ற விஷயத்தில் நேர்மையுடனிருக்கும் வண்ணமாக எனக்குள்ளேயே என்னால் பார்க்க முடியாது; என நான் பல கடினமான கேள்விகளை எனக்கு நானே கேட்டிருக்கிறேன். அதற்கு விடையாக என் மனதில் நடுநிலையான முடிவில்லாத, தானாகவே தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிராத எண்ணத்தை வைக்க முயலுகிறேன்.

## முடிவுரை எண் ஒன்று: நான் உயிரோடிருக்கிறேன்!

## Conclusion Number One: I Exist!

இக்கூற்றில், சுயபோராட்டத்தின் மனசாட்சி எனது முதல் உணர்வாகயிருக்கிறது. "அக்கறையில்லாத தர்க்க சாஸ்திரம், வாக்குவாதங்கள் தங்களுக்கு அனைத்து பதில்களும் தெரியுமென நினைக்கிற மேதைகளின் விவாதங்கள், என்னுடைய சொந்த ஜீவியத்தின் உண்மைத்தன்மை இந்த மாறுபட்ட கருத்து உள்ளவரோடு பேசி சமாளிக்க வேண்டியிருக்கிறது என நான்

நினைக்கிறேன். நான் இருக்கிறேன். நான் இருக்கிறவராகவே இருக்கிறேன். இந்த உண்மையை வெற்றி கொள்ள வேறெதுவுமில்லை.

"எனவே நான் இங்கே எப்படி வெற்றிகொண்டேன்? பரிணாம வளர்ச்சி போதுமான விடையாகயிருக்க முடிந்ததா?"

எல்லா விஷயமும் விஷயமற்ற ஒன்றிலிருந்து வந்ததா? உயிருள்ள நிலை உயிரற்ற நிலையிலிருந்து வளர்ச்சியடைந்ததா? ஒவ்வொன்றும் நிரூபிக்கப்பட்டவகையில், கண்டறியப்பட்ட அறிவியலில் மேலும் நம்முடைய மனித அனுபவத்தில் அவைகள் நடைபெறக்கூடுமா என்ற நிராகரிப்புகளிலிருந்து வந்ததா? மனிதர்கள் தங்களுடைய சாதுரியத்தினால் திறமையினால், உழைப்பினால், பொறுமையினால் அதிசயமான பொருட்களை உருவாக்குகின்றனர் - ஆனால் அவைகளில் ஒன்றுகூட படைப்பவரில்லாமல் உயிரடைந்திருக்கவில்லை மேலும் ஒரு மனிதனும் தன்னால் உண்டாக்கப்பட்ட எந்த ஒரு பொருளுக்கும் வாழ்வளிக்க முடிகிறவனாய் இல்லை! ஆனால் மனிதனுடைய ஒரு மிகச் சாதாரணமான, உயிரற்ற படைப்புகூட ஒரு படைப்பாளியை கண்டிப்பாகக் கொண்டிருக்குமென நாம் ஒத்துக்கொண்டால் பிறகு அடிப்படை தர்க்க சாஸ்திரம் மனித உடல் மிகவும் சிக்கலான மற்றும் அதிசயமான உயிருடனிருக்கும் இயந்திரம், அது ஒரு சிருஷ்டிகரை கொண்டிருக்குமென வற்புறுத்துகிறது நியாயம் அல்லவா. உண்மைக்குப் புறம்பான ஒரு வழியும் கிடையாது. என்னுடைய வாழ்க்கை ஒரு சிருஷ்டிகரை சார்ந்திருக்கிறது - அவர் யாராகயிருந்தாலும் அவர் எந்த நாமம் தரித்தவராயிருந்தாலும்.

## முடிவுரை எண் இரண்டு: வெளிப்புறத்தில் இருக்கிற ஏதோ ஒரு சக்திக்கு நான் என் ஜீவியத்தை அளிக்கிறேன்

## Conclusion Number Two: I own my existence to some outside force

"எனவே, நான் இங்கிருக்கிறேன். நான் யாரோ ஒருவரால் உருவாக்கப்பட்டேன்". இந்த உண்மைகள் பரிணாம வளர்ச்சிக் கொள்கையாளர்களின் ஆடம்பரமான பிரசங்கத்திற்கு வாய்பூட்டு போடும். நான் இவர்களுடைய "கோட்பாடு பற்றிய ஒவ்வொன்றையும் அறிந்துகொள்ள அவசியமில்லை (மற்றும் இது ஒரு கோட்பாடாயிருக்கிறது. இது ஒரு நாஸ்தீக மதமாயிருக்கிறது) மேலும் அவர்களுடைய எல்லா ஆதாரமற்ற எண்ணங்களுக்கும் நான் பதிலளிக்கக் கூடியவளாயிருக்க விரும்பவில்லை, ஏனென்றால் அடிப்படை கொள்கை, தானே நிலைக்காது. என்னுடைய வாழ்க்கை தனித்தே எனது சிருஷ்டிகரின் உண்மைத்தன்மையை நிரூபிக்கிறது.

இப்போது நான் இங்கேயிருக்கின்றபடியினால் யாரோ ஒருவர் என்னை உருவாக்கியிருக்கிறார்; "யார் அந்த யாரோ ஒருவர்?" மனிதர்கள் - பூமியில் மிகவும் அறிவுமிக்க உயிரினங்கள் - இன்னொரு மனிதனை சிருஷ்டிக்க முடியாதவன் என அறியப்பட்டுள்ளது இது. எனவே நம்மை உண்டாக்கின யாரோ ஒருவர் நம்மைக் காட்டிலும் பெரியவர், ஆனபடியினால் அவர் இவ்வுலகத்திற்குரியவராயிருக்க முடியாது. இந்த உயிரோடிருக்கிறவர் நாம் புரிந்து

கொள்ள அப்பாற்பட்டவராயும், நாம் பெற்றுள்ள எந்த ஞானமும் அவருடையதும், அவருடைய மனதிலிருந்து நம்மிடம் வருகிறதுமானது - ஆனபடியினால், நாம் உகந்த பதிலைக் கொண்டிருக்கவில்லை ஆனால் நம்முடைய பதிலுக்காக ஆவிக்குரிய வெளிப்படுத்தலை ஆராய்ந்து பார்க்கவேண்டியர்களாயிருக்கிறோம்.

## கேள்விகள்

1. "தேவன் இருக்கிறாரா?" என்ற வினாவினை எவ்வாறு நீங்கள் பகிர்ந்தளித்திருக்கிறீர்கள்?
2. மதம் சம்பந்தப்பட்டிருக்கிற இடத்தில் ஒரு நபரின் "ஆறுதல் இடம்" வழக்கமாக என்னவென்று விவரிக்கப்படுகிறது?
3. தேவன் இருக்கிறார் என்ற வினாவின் அடிப்படையில் மனிதவர்க்கம் எந்த இரண்டு பெரிய பாசறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
4. பல காரியங்கள் -------------- வெறுமனே ----------- முடியாதவைகளாக உள்ளன ஏனென்றால் அந்த வஸ்துக்கள் நம்மால் --------- இருக்கிறது.
5. மனிதக் கண்களால் இவைகளை நன்றாகப் பார்க்கமுடிந்தால் நாம் எந்த உலகங்களுக்குள் பிரவேசிக்க முடியும்?
6. தேவன் இருக்கிறாரா? அல்லது இல்லையா என்ற கேள்வியைக் குறித்து நடுநிலை வகிக்க முயற்சிக்கையில் நம்முடைய மனசாட்சியின் முதல் உணர்வு எப்படிப்பட்டதாயிருக்கும்?
7. என்னுடைய ----------- எதிர்பார்க்கிறது ஒரு ------ ------ அவர் மற்றும் ---------------- நாமத்தை அவர் தரித்திருக்கிறார்.
8. பூமியின் மேல் அதிக மதிநுட்பமுடைய படைப்புகள் இன்னொரு மனிதனை சிருஷ்டிக்க முடியாதபடியினால் நம்மை உருவாக்கிய யாரோ ஒருவர் -------- ---------- மற்றும் ஆனபடியினால் ----------.

# தேவன் சர்வ வியாபியாய் இருக்கிறார்
# God Is Universal

**2**

நம்முடைய சரீரங்களும், பூமிக்குரிய அண்ட சராசரமும் சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு மறுக்கமுடியாத நிரூபணமாக இருக்குமேயாகில், ஒரு தேவன் சகல காரியங்களையும் நிலைநிற்கும்படி கொண்டுவந்திருக்கிறார் என்பதால் நிச்சயமாக அவருடைய உண்மைக்கான நிரூபணம் இன்னும் இருக்கவேண்டும். இந்த பூமிக்கோளத்தை சுற்றிலும் இன்று நாம் மனித இனத்தை உற்று நோக்கும் பொழுது நாம் என்ன கண்டு கொள்கிறோம்? பெரும் சதவீத அளவிலான ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். தேவன் பல வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்படுகிறார் என்பதும், வெவ்வேறான ரூபங்களில் அடையாளப்படுத்தப்படுகிறார் என்பதும் பரவலாக வித்தியாசமான வழிகளில் ஆராதிக்கப்படுகிறார் என்பதும் மெய்தான்! இவ்விதமாக அநேக வேறுபாடுகள் இருப்பினும், தேவன் இருக்கிறார் என்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது.

நாம் வரலாற்று குறிப்புகளுக்கும், தொல் பொருள் ஆராய்ச்சியியலுக்கும் திரும்பும்பொழுது, இன்னும் காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட வரலாற்று நிரூபணங்களுக்கு திரும்பும்பொழுது அந்த ஜனங்களும்கூட தேவனிடத்தில் விசுவாசமாய் இருந்தார்கள் என்ற உண்மையினால் நாம் மீண்டும் நம்முடைய மனதில் அதை பதியவைக்கிறோம்! தேவனை குறித்த உண்மையின் பலமான நம்பிக்கையுடனே வெற்றிகரமாக காலம்முழுவதும் பூமியின் ஜனக்கூட்டம் வாழ்ந்து மரித்திருக்கிறது.

### தேவனை குறித்த ஆரம்பகால மார்க்க நம்பிக்கைகள்

ஆண்ட்ரூ லெங்க் என்பவர், "மார்க்கத்தை உருவாக்குதல்" என்ற தம்முடைய புத்தகத்தில், உலகத்தின் ஆதிகால ஜனங்களில் அநேகர் ஒரே ஒரு உயர்வான தேவனை தொழுதார்கள் என்று உறுதிப்படுத்தினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ.சி. பாக்கொயட் சொன்னார், "மிருக ஜீவன்களுக்கும், இயற்கை பொருட்களுக்கும் ஆத்துமாக்கள் உண்டு என்று நம்பும் கொள்கை பல பிசாசுகள் பற்றிய கொள்கை, பல தெய்வங்கள் உண்டென்று நம்பும் கொள்கை, தத்துவத்தில் ஒரேவிதமான கொள்கையுடையவர்கள், ஏராளமான கொள்கையுடையவர்கள், உலகப் பொருட்களில் பற்றுடையவர்கள், இவ்வாறாக இப்பட்டியலில் நீண்டு கொண்டே செல்லும் உண்மையான சுத்தமான விசுவாசத்திலிருந்து வீழ்ந்து போனதற்கான உதாரணங்கள். இந்த விசுவாசத்தை எபிரெயர்களும், கிறிஸ்தவர்களும் மனித இனத்திற்காக மீட்டுக்கொண்டு வர வேண்டியதாயிருந்தது".

மனிதர்கள் தோன்றிய ஆரம்ப நாட்களில் எந்தவிதமான மார்க்க நம்பிக்கைகளை மனுஷர்கள் கொண்டிருந்தார்கள்? இந்தியாவில் புராதனமான வேதகால வரலாற்றின்படி "ஒரு தெய்வ வழிபாட்டு மார்க்கத்திற்கான

அடையாளங்கள் (ஒரே கடவுள் மேல் நம்பிக்கை) இயற்கையை வழிபடும் கொள்கைக்கு மோதலாக இருந்தன. இயற்கையை வழிபடும் கொள்கை (இயற்கையின் காரியங்களை தேவனுக்கு சமமாக்கி அவைகளை வழிபடுதல்) - படிப்படியாக வீழ்ச்சியடைந்து பாலித்தீயிசம் கொள்கையில் மூழ்கியது. (பல தெய்வங்கள் மேல் நம்பிக்கை) ஆனால் சுரூபங்களை வழிபட்டார்கள் என்று காட்ட ஒன்றும் இல்லை, ஆத்துமாக்கள் ஒரு வித்தியாசமான ச்ரீரத்துக்குள் பிரவேசிப்பது பற்றிய எந்த குறிப்பும் காணப்படவில்லை அல்லது இனத்தை குறித்து பர்க்கும்பொழுதும் பிரமாண ரூபத்தை குறித்தும் எந்த குறிப்பும் காணப்படவில்லை (சி.எச்.பக் எழுதிய இந்தியாவின் நம்பிக்கைகள், நியாயங்கள் மற்றும் பண்டிகைகள்).

### எகிப்தியர்

எகிப்து தேசத்தில் ஆண்டுவந்த அகெநாட்டான் என்ற பார்வோன் (கி.மு.1357 - 1350) ஆட்டன் என்ற ஒரு தெய்வத்தின் முன்னேற்றத்திற்காக தன்னுடைய சக்திகளை அர்ப்பணித்தான். ஆட்டன் என்பது சூரியனுடைய கதிர்களை அடையாளப்படுத்துகிறவைகளாக இருந்தன. மெய்யாகவே ஆட்டன் என்பது சூரிய கதிர்களாக இருந்தனவா அல்லது கடவுளுடைய மகத்துவத்திலிருந்து தொடங்கிய ஒளியை சித்தரிக்க சூரியகதிர்கள் பயன்படுத்தப்பட்டனவா என்ற விவாதங்களும் இருக்கின்றன. அகெநாட்டன் தம்முடைய பாடல் ஒன்றில் இவ்விதமாக எழுதினார்:

"உமது கிரியைகள் எவ்வளவு திரளானவைகள்!
அவைகள் எங்களுக்கு முன்பாக மறைவாயிருக்கின்றன,
ஓ முழுமையான கடவுளே, உமது வல்லமை வேறு எவருக்கும் இல்லை,
உமது இருதயத்திற்கேற்றபடி பூமியை சிருஷ்டித்தீர்
நீர் மாத்திரமே இருந்தபொழுது..."

### சீனர்

சீன வரலாற்றின் காலம் கி.மு.2,500க்கு திரும்பி செல்வோமேயாகில், அங்கே பாபிலோனிய/ அசீரிய கலாச்சாரத்தின் செல்வாக்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த காலமானது சீனாவின் தொடக்க காலங்களை மனித இனம் பாபேலில் இருந்து சிதறிய காலத்திற்கு இணையாக இருக்கிறது. எதிர்பாராத செய்தியாக - மிகஎதிர்பார்ப்பில்லா செய்தியாக - புராதன சீனகையெழுத்தை குறித்த ஒருபாடம் அநேகமான வேதாகம குறிப்புகளையும், எண்ணங்களையும் அறிவிக்கின்றது. சி.எச்.கேங்க் மற்றும் ஆர். நெல்சன் என்பவர்கள் எழுதிய **ஆதியாகமம் கண்டுபிடிப்பு** என்ற புத்தகத்தில் வெவ்வேறான குணாதிசயங்களையும் அவைகளுடைய அர்த்தங்களையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

வரலாற்றுரீதியாக தொடக்கத்திலேயே பாபேலில் இருந்து வெளியேறி வேற்று நாட்டில் குடியேறிய இவர்கள் ஒரே தெய்வ நம்பிக்கை உடையவர்களாயிருந்து தங்களுடைய கடவுளை பரலோக "ஷான்க்டி" என்று அழைத்தார்கள். அந்த சத்தமும் கூட எபிரெய மொழியிலுள்ள "ஷடாய்" என்ற வார்த்தைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறது. அவர்களுடைய தேவத்துவம் மூன்று நபர்களை சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் எந்த விக்கிரகங்களையும் வழிபடவில்லை. அவர்களுடைய ஆதி

சடங்காச்சாரங்களில் ஒன்று **"கரை பலி"** என்று அழைக்கப்படுகிறது (எத்தெல் ஆர்.நெல்சன் மற்றும் ரிச்சர்டு இ.பிராட்பெரி எழுதிய **"ஆதியாகமம் மற்றும் கன்பூஷியஸ் இரகசியம் தீர்வு செய்ய முடியாத நூல்)**

**சொராஸ்ட்ரியர்கள்**

சொராஸ்டர் (628-551 கி.மு) என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட சொராஸ்ட்ரியனிஸம் என்ற மதம் பழமையான மதங்களில் ஒன்றாக இருக்கிறது. குஷ்வந்த் சிங், **"இந்தியா, ஓர் முன்னுரை"** என்ற புத்தகத்தில் "சொராஸ்டர் ஒரு புதிய மார்க்கத்தை போதிக்கும்படி கூறவில்லை ஆனால் சர்வத்தையும் அறிந்த ஒரே கடவுளாகிய மஸ்டாவிடம் நம்பிக்கை கொண்ட பழமையான மார்க்கமாகிய மஸ்டா-யாஸ்நியை மீண்டும் முன் நிலைமைக்கு கொண்டு வரும்படி கூறினார் என்று எழுதியிருக்கிறார்.... சொராஸ்ட்ரியர்களுடைய நம்பிக்கையின்படி, ஆஹீரா மஸ்டா நல்லவராகவும், சகல ஞானமும் பொருந்திய கடவுளாகவும் இருக்கிறார் ஆங்க்ரா மைன்யு என்பது அசுத்த ஆவியாக இருக்கிறது". சொராஸ்ட்ரியருடைய நோக்கம் பொல்லாத ஜனங்களை சுத்திகரிப்பதும், அவர்கள் பிசாசுகளை வழிபடுவதை நிறுத்துவதும் ஆகும். அவர்கள் தேவனை ஆராதிக்க பாடிய பாடல்கள் அவர்களுடைய வேதவசனமாகிய ஜென்ட் - அவெஸ்டாவின் பழமையான பாகமாக இருந்தது.

**தேவனைப் பற்றிய வேதாகம குறிப்பு**

வேதாகம குறிப்பின்படி தேவனோடு கூட மனுஷனுக்கு இருந்த மிக பழமையான காலத்திலுள்ள சுருக்கமான காட்சிகளுக்கு ஒத்ததாக தோன்றுகிற குறிப்புகளை மற்ற பதிவுகளில் நாம் கண்டிருக்கிறோம். தேவன் சகலத்தையும் சிருஷ்டித்தார் என்பதையும் பின்னர் காயீனும், ஆபேலும் (ஆதாம், ஏவாளுக்கு முதலில்பிறந்த குமாரர்கள்) தேவனுக்கு பலிகள் செலுத்தியதையும் நாம் வாசிக்கிறோம். புவிவரலாற்றின் இந்த காலம் அடிக்கடி, "பிதாக்களின் காலம்" என்று குறிப்பிடப்படுகிறது, ஏனென்றால் இந்த காலத்திலே தேவன் **குடும்பத் தலைவர்களோடு கூட ஈடுபாடு உள்ளவராக இருந்தார்.** அவர்களிடம் நேரடியாக பேசிக்கொண்டிருந்தார் அல்லது தம்முடைய சித்தத்தின்படி தொடர்பு கொள்ள தேவதூதர்களை அனுப்பிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஆசாரியத்துவ முறைமை இல்லை, ஆனால் பிதாக்கள் தங்களுடைய குடும்பங்களுக்கு ஆவிக்குரிய தலைமை வகித்து பாவத்துக்காக செலுத்த தேவையான பலிகளை செலுத்திக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதையும் தங்களுடைய பிள்ளைகளுக்கு போதித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆதியாகம புத்தகம் முழுவதும் லாமேக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பலர் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்ததையும் அவர்கள் தேவனோடு பேசியதையும், அவரை தொழுதுகொண்டதையும், அவருக்கு கீழ்ப்படிந்து பலிகள் செலுத்தியதையும், தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதையும் தங்களுடைய தலைமுறைகளின் வாரிசுகளுக்கு போதித்தார்கள்.

யோபின் சரித்திரத்தில் தேவபக்தியுள்ள தகப்பன் தன்பிள்ளைகளுக்கு தேவனைக் குறித்து போதிப்பதையும் அவர்களுடனே தொழுது கொள்வதையும் நாம்



காண முடியும். முதலாம் அதிகாரம் முதலாம் வசனம் சொல்கிறது, "ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும் **தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்"** வசனம் 5 தன் பிள்ளைகளுக்கு தேவனோடிருந்த உறவைக்குறித்த யோபுவின் அக்கறையை விளக்குகிறது. "அவர்களை அழைத்தனுப்பி (தன்னுடைய பிள்ளைகளை) பரிசுத்தப்படுத்தி அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் **சர்வாங்க தகனபலிகளைச்** செலுத்துவான், "ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று" இந்தப் பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்துவருவான்.

**சத்தியத்தின் நுலிழைகள்**

பரந்துவிரிந்த முற்கால மார்க்கங்களின் அமைப்புகள் மற்றும் விளக்கங்களை நீங்கள் வாசித்தபடியினால், இந்த ஒவ்வொன்றிலும் **சத்தியத்தின் குணாதிசயங்கள்** என்று நாம் எதை அழைக்கலாம் என்று காண்பீர்களா? நாம் இவைகளை சற்று ஆழ்ந்து கவனிப்போமாக:

1. **தேவன் சர்வவல்லமையுள்ளவராக, சகலத்தையும் அறியும் ஆவியையுடையவராக இருக்கிறார் என்ற நம்பிக்கை அப்பொழுது இருந்தது.**

2. **தேவனுக்கு பலிகள் செலுத்தப்பட்டன** இவ்வழக்கம் மேலும் இரண்டு நம்பிக்கைகளுக்கு நிரூபணமாக இருக்கிறது.

**அ. நீதியைக் குறித்த "சரி", "தவறு" என்ற அறிவு,** தவறு செய்வதை அவர்கள் தெரிந்து கொள்ளும்போது அது தேவனுக்கு கோபமூட்டியது என்பதை உணர்ந்து கொள்வது விளைவாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வோமேயாகில் அவர்கள் தாங்கள் பாவிகள் என்பதை அறிந்திருந்தார்கள்.

ஆ. ஆராதனையில் தேவனுக்கு **மிருக பலிகள்** செலுத்தப்பட்டன, அவர்களுடைய குற்றங்களின் நிமித்தமாக தேவனை அமைதிப்படுத்தும்படியாக இவைகள் தன்னுடைய பாவங்களை நிவிர்த்தி செய்யும்படியாக மனுஷனுடைய முயற்சிகளாக இருந்தன.

3. **ஆதி காலங்களிலிருந்து மனுஷர்கள் தங்களுடைய மரித்தோரை அடிக்கடி அவர்களுடைய பொக்கிஷங்கள், போஜனம் மற்றும் பயன்படு பொருட்கள் இவற்றுடன் மரணத்துக்குப் பின் ஜீவன் என்ற எதிர்பார்ப்போடு அடக்கம் செய்தார்கள்.** மனுஷர்கள் மிருகங்களிலிருந்து வேறுபட்டவர்களாயிருந்து ஆத்துமாக்களையுடையவர்களாய் இருந்தார்கள். அவர்கள் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுதலை எதிர்நோக்கியவர்களாய் இருந்தார்கள்.

**காணப்படாத நான்கு விஷயங்களில் அகில உலக நம்பிக்கைகள்**

தொன்மையான மார்க்கங்களில் அவர்களுடைய பழமையான அமைப்பு முறைகளில் பரவலாக அவர்களுக்கு இருந்த அடிப்படையான நம்பிக்கைகளை நாம்

பார்த்து இருக்கிறோம். அவைகளை மீண்டும் சிந்தியுங்கள்.

☐ **தேவனிடத்தில்** நம்பிக்கை - ஆனால் நாம் ஒருபோதும் தேவனை கண்டதில்லை!

☐ **பாவம்** குறித்த ஒரு உணர்வும், அது தேவனைத் துக்கப்படுத்துகிறபடியால் அது மன்னிக்கப்பட வேண்டியதின் அவசியமும் - ஆனால் மனுஷ மனதிற்குள் கண்களால் காணக்கூடாத ஒரு காரியமாகிய மனசாட்சி நம்மை குற்றப்படுத்துகிறது.

☐ மனுஷனுக்குள்ளே இருக்கின்ற ஒரு **அழிவில்லாத ஆத்துமாவை** புரிந்து கொள்ளுதல் - இன்னும் எவர் ஒருவரும் ஒரு ஆத்துமாவை கண்டதில்லை!

☐ **மரித்தோரின் உயிர்தெழுதலை** குறித்த ஒரே எதிர்பார்ப்பு - கல்லறையிலிருந்து மீண்டும் வந்த ஜனங்கள் யாரும் உறுதிப்படுத்தும்படி நமக்கு இல்லை என்ற போதிலும், மெய்யாகவே மரணத்துக்குப் பின் ஒரு வாழ்க்கை நிச்சயமாக இருக்கிறது!

ஆகையால் முழுமையாக காணப்படாத காரியங்களில் ஒவ்வொரு பண்டைகால மார்க்கத்தின் ஆதிகால அமைப்புகளில் உருவான இத்தகைய அஸ்திபாரமான நம்பிக்கைகள் எவ்வாறு இருந்தன? முடிவாக அந்த மனுஷர்கள் எளிமையாக ஒத்துக்கொள்ளும்வகையிலே, ஒன்றுமில்லாத நிலையில் இருந்து அல்ல, ஆனால் அவர்களுடைய சொந்தமான தனிப்பட்ட கற்பனைகளில் அவ்வகையான ஆழ்ந்த நம்பிக்கைகள் உருவானது என்பதும் சாத்தியமான காரியமல்ல. ஆனாலும் அந்த ஆரம்ப அறிவு ஒரு மூலகாரணமானவரிட மிருந்துவந்திருக்க வேண்டும் என்பது வெளியரங்கமாக இருக்கிறது! முதல் மனுஷர்களுக்கு இந்த காணப்படாத உண்மைகளை குறித்து அவர்களை சிருஷ்டித்த தேவன் நிச்சயமாக போதித்திருக்கவேண்டும்.

## கேள்விகள்

1. மிக பழமையான மதங்களுடைய குறிப்புகளின்படி, உலகத்தின் ஆதி ஜனங்கள்--------- ஒரே ----------- ---------- -----------.
2. இயற்கையான காரியங்களை தேவனுக்கு சமமாக்கி அவைகளை வழிபடுகிறவர்கள் --------- காரியங்களை ---------- சமமாக்கி அவைகளை வழிபடுகிறார்கள்.
3. பாலித்தீயிஸம் என்றால் என்ன?
4. ஆரம்ப கால இந்து மத வடிவமைப்பில் ஒரு ஆசாரிய முறைமை, மறு அவதார நம்பிக்கை இவைகள் இருந்தனவா?
5. தேவனுக்குரிய புராதானமான சீன பெயர் என்ன?
6. தேவன் பற்றிய வேதாகம குறிப்பை சுருக்கமாக விவரிக்கவும்.
7. "பிதாக்களின் காலத்தில்" தேவன் யாருடன் ஈடுபாடு உள்ளவராயிருந்தார்?
8. இத்தகைய ஆதிகால மார்க்கங்களும் பொதுவான "சத்தியத்தின் தொடர்ச்சியான குணாதிசயங்கள்" மூன்றினை வரிசைப்படுத்தி எழுதவும்.
9. இத்தகைய பழமை வாய்ந்த மார்க்க வடிவமைப்பு காணப்படாத எந்த நான்கு விஷயங்களில் நம்பிக்கையை வெளிப்படுத்தின?
10. பழமையான மார்க்க வடிவமைப்புகளில் இருந்த ஒத்த தன்மைக்கான நியாயமான விளக்கம் என்ன?

# சிருஷ்டிப்பை பற்றிய குறிப்புகள்
# Accounts of the Creation

**3**

தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை உலகில் இன்று அநேக ஜனங்கள் மறுதலித்தாலும், தேவன் ஒருவர் இருக்கிறார், அவரே தம்முடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினாலே சகலத்தையும் நிலைநிற்க செய்திருக்கிறார், ஒவ்வொரு மார்க்கமும் சிருஷ்டிப்பை குறித்த ஒரு சம்பவத்தை கொண்டிருக்கிறது. இவைகளில் பாரம்பரிய கதைகளுடன் கூடிய கேடுபாடுகள் மற்றும் கற்பனையான மிகைப்படுத்துதல்கள் இருந்த போதிலும் காலங்கள் கடந்து செல்லும் பொழுது அவைகள் குறிப்பிடத்தக்க மற்றும் அங்கீகரிக்கத்தக்கவகையில் யாவருக்கும் பொதுவான சத்தியத்தின் நூலிழைகளாக இருக்கின்றன.

**சிருஷ்டிப்பு பற்றிய குறிப்புகள்**

**மாயன்**

மாயன் என்ற இந்திய பழங்குடி இனத்தவர்கள் பூமத்திய ரேகைக்கு மேற்கே ஏறத்தாழ கி.மு.1800 -ம் ஆண்டுகளில் வாழ்ந்தார்கள். அவர்களுடைய போப்புல் ஊ, என்னும் புனித நூலிலே மிகவும் ருசிகரமான இவ்வகை செய்திகளை வாசிக்கிறோம்.

"உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு அமைதி மற்றும் நிசப்தம் ஆளுகை செய்து வந்த பெரும் இராஜாக்களாக இருந்தனர். அப்பொழுது ஒன்றும் இருக்கவில்லை... பூமியின் முகமும் காணப்படவில்லை. அங்கே அசைவற்ற சமுத்திரமும், வானத்தின் ஒரு பெரிதான வெறுமையும் மாத்திரமே இருந்தன... அது இரவாக இருந்தது. இருளில் அமைதி நிலைநின்றது.

"தட்டையானதும், வெறுமையானதுமாக சமுத்திரம் மாத்திரம் இருந்தது. அதுவும் சுவாசம் இன்றி இருந்தது.

"பூமி தன் முகத்தை காட்டும்படியாக ஜலமானது அதின் வழியை கீழ்நோக்கி உருவாக்குவதாக. பூமி!" என்று சிருஷ்டிகர்கள் அழைத்தார்கள். அவர்கள் ஒரே ஒரு முறை அழைத்தார்கள், அங்கே அது இருந்தது. ஒரு மூடுபனியிலிருந்து, தூசு படிந்த மேகத்திலிருந்து உடனே மலைகள் தோன்றின.

" இந்த ஒரு தனிப்பட்ட வார்த்தையில் (சிருஷ்டிகர்களிடமிருந்து) ஊசியிலை மரங்களின் நீண்ட குறுகிய பள்ளங்களும், பைன்மரங்களும் தங்களுடைய கருத்துக்களை வெளியே தோன்றச் செய்தன... "சிருஷ்டிகர்கள் அடிக்கடி "இந்த அமைதி மரங்களின் கீழே என்றைக்கும் ஆளுகை செய்யுமா?" என்று கேட்டார்கள் திடீரென்று அங்கே மான், பறவைகள், சிறுத்தைகள், சர்ப்பங்கள் போன்றவைகள் இருந்தன"

"நமது மகிமை மரங்களின் வழியே ஒரு மனுஷன் ஒரு பாதையில் நடக்கும் வண்ணம் இருப்பதாக என்று சிருஷ்டிகர்கள் அழைத்தார்கள்" (போப்புல்

ஊ. சார்லஸ் பெல்லெக்ரினோ என்பவரால் எழுதப்பட்ட "சோதோம் கொமாராவுக்கு திரும்புதல்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளபடி)

## இந்தியர்கள்

இந்து மதத்திற்கான ரிக் வேதத்தில் நாம் சிருஷ்டிப்பை குறித்த ஒரு பாடலை காண்கிறோம். இராதா கிருஷ்ணன் மற்றும், மூர் என்பவர்களால் வெளியிடப்பட்ட பாரம்பரியம் மற்றும் இந்திய தத்துவம் என்ற நூலில் இருந்தது. கீழ் காணும் சுருக்கமான கருத்துக்களில் பழக்கமான கருத்துகள் இருந்த போதிலும், கேள்வி கேட்கும் அமைப்பானது எதை வெளிப்படுத்துகிறதென்றால் இந்நூலின் மூலப்பகுதி தேவனிடத்திலிருந்து வந்த ஒரு வெளிப்படுத்துதல் என்பதை பார்க்கிலும் முன்னோர்களின் பாரம்பரியத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

"இல்லாதது அப்புறம் இருக்கவில்லை
அதன்பின் இருந்த காற்றும், வானமும் அப்போ இல்லை
எது மறைவாயிருந்தது? எங்கிருந்தது? யாருடைய பாதுகாப்பில்?
அங்கே ஆழம் மற்றும் அளவிடமுடியா ஜலம் இருந்ததா?

"மரணமும் அதன்பின் இல்லை, முடிவில்லா ஜீவனும் இருக்கவில்லை
இரவோ பகலோ இருந்ததற்கான எந்த முன் அடையாளமும் இல்லை
அத்தியாவசியமான தன் இயற்கை சக்தியால் காற்றில்லாமல் ஒன்று சுவாசித்தது
உயிருள்ளவற்றிற்கு மேலாக வேறெந்த பொருளும் இருக்கவில்லை

"அங்கே முதன்முதல் இருந்த இருள் இருளால் கவ்வப்பட்டிருந்தது
குறிப்பிடத்தக்க அடையாளங்களின்றி, எல்லாம் ஜலமாக இருந்தது
வெறுமையாயிருந்த அது மூடப்பட்டதாகிக்கொண்டிருந்தது
அந்த ஒன்று உஷ்ணத்தின் சக்தியினால் உயிர்நிலைக்குள் வந்தது

"ஆதியிலே ஒருவருக்குள் ஆசை பிரவேசித்தது
அதுவே உருவாக்குதலின் சிந்தையான ஆதிவித்தாய் இருந்தது
தாங்கள் இருதயங்களில் ஞானத்தோடே தேடிக்கொண்டிருந்த ஞானிகள்
கண்டுகொண்டனர் உயிர்வாழ்வன மற்றும் உயிர்வாழா இவற்றின் பந்தத்தை

"தாங்களின் விஸ்தரிக்கப்பட்ட ஒளிக்கற்றை இருளினூடே கடந்து
ஆனால் ஒன்று அந்த மேலே இருந்ததா அல்லது கீழிருந்ததா?
படைப்பாற்றலும் உற்பத்தி ஆற்றலும் அங்கே இருந்தது
சக்தி இருந்தது கீழே, உந்து சக்தி இருந்தது மேலே

"உண்மையை அறிகிறவர் யார்? அதை அறிவிப்பவர் யார்?
எப்போது அது பிறந்தது, எப்போது இப்படைப்பு வந்தது?
தேவர்கள் பிறந்தனர் இவ்வுலகின் படைப்பிற்கு பிறகு
இது உதயமாகின பொழுதிருந்து இதனை யார் அறியக்கூடும்?

"எப்போது சிருஷ்டிப்பு உதயமானது என ஒருவரும் அறியார்
மேலும் அவர் இதை உருவாக்கியுள்ளாரா அல்லது இல்லையா
அவரே உயர்வான உன்னதத்தில் அளவீடு செய்கிறார்
அவர் மாத்திரமே அறிவார் அல்லது துரதிஷ்டவசமாக அவர் அறியார் ஒருவேளை"

## எப்லா பட்டணத்திலிருந்த மெசப்பொத்தேமியர்கள்

மெசப்பொத்தேமியா நகரமாகிய எப்லா அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டபொழுது 15,000 களிமண்பலகைகளும் அதன் துண்டுகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. சிருஷ்டிப்பை குறித்த இவ்வரிகள் அத்தகைய களிமண் பலகைகள் ஒன்றிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டதாகும்:

"வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே
பூமி இருக்கவில்லை, நீரே அதை சிருஷ்டித்தீர்,
பகல் உண்டாயிருக்கவில்லை, நீரே அதை சிருஷ்டித்தீர்
காலை வெளிச்சம் உண்டாயிருக்கவில்லை
நீர் இன்னும் அதை உருவாக்காமல் இருந்தீர்"

"இவ்வார்த்தைகள் ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தை எதிரொலிக்கின்றன. இவைகள் வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவைகள் அல்ல, ஆனால் கி.மு.2500-ல் எப்லா நகரத்தின் ராயல் நூலகத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு இலக்கிய பாடத்தின் மூன்று நகல்களில் காணப்பட்டது.

மதத்தை குறித்த பாடமானது கடினமாக அதிக பொருத்தமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நான்கு வரிகளும் மொத்தத்தில் சுருக்கமாக இந்த உலகம் எவ்வாறு உருவாகியது என்பது பற்றிய எப்லா நகர ஜனங்களின் கொள்கையை ஒருங்கிணைத்து சொல்கின்றன. வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவராயிருந்து பூமியையும் பகல் வெளிச்சத்தையும் உண்டாக்கியவர் எல்லாவற்றுக்கும் மேற்பட்ட ஒருவராக இருக்கிறார் (ஜியோவன்னி பெட்டி நாட்டோ எழுதிய **எப்லா நகரத்தின் ஆவண காப்பகம்** என்ற நூல்).

## சீனர்கள்

தொன்மையான கரை பலி சடங்காச்சாரத்தின்படி இந்த வார்த்தைகள் பேசப்பட்டன:

"கர்த்தர் டெ(ஷேங்க்டி), தீர்மானம் செய்த பொழுது வானம், பூமி, மனுஷன் உருவாகும்படி கர்த்தர் சொன்னார். வானத்துக்கும் பூமிக்கும் இடையே ஒழுங்கான முறையில் தனியாக மனுஷரையும், சகல வஸ்துக்களையும் வானங்களிலே எங்கும் பரந்து விரிந்திருக்கும்படி செய்தார் (ஜேம்ஸ் லெக்கி என்பவர் எழுதிய **"தேவன் மற்றும் ஆவிகளை குறித்த சீனர்களின் கருத்துக்கள்"** என்ற நூலில் இருந்து).

ஆதியிலே இருள் இருந்தது, எவ்விடத்திலும் ஒரு பெரிய வெற்றிடம் இருந்தது. அந்த ஷேங்க்டி மனுஷன் மண்ணிலிருந்து தோன்றும் படியாக பேசினார், சகலமும் தன் தன் இனத்தின் படியே விருத்தியாகக்கடவது என்று பேசினார் என்று சீன ஜனங்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

திரும்பவும் புராதனகாலத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சொந்த குணாதிசயத்தின்படி தோட்டத்திலே ஆதாம், ஏவாள் சிருஷ்டிக்கப்பட்ட விதம், சர்ப்பம் ஏவாளை வஞ்சித்தது போன்ற சம்பவத்தையும் சொல்கிறார்கள். "சோதனைக்காரனுக்கான" அடையாளம் இன்னும் மற்ற 7 பேறை சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கிறது. "இரகசியம்" "மனுஷன்" "தோட்டம்" (ஜீவனுள்ள)

"பிசாசு" "மரங்கள்" மற்றும் "மறைத்தல்" ஆகியவைகள் ஆச்சரியமாக இப்பாஷையின் தன்மைகள், நாம் ஆதியாகமம் குறிப்பில் வாசிக்கிற அநேக சம்பவங்களை தங்களுக்குள்ளே உறுதியாக நிலை நிறுத்தியிருக்கின்றன.

**சிருஷ்டிப்பு பற்றிய வேதாகம குறிப்பு**



சிருஷ்டிப்பை குறித்த வேதாகம குறிப்பு ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டபடி இந்த வார்த்தைகளுடன் தொடங்குகிறது:

"ஆதியிலே தேவன்..." "...**தேவன்** வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையாயும் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.

பின்பு தேவன் "**வெளிச்சம் உண்டாகக்கடவது**" என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார். தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார். "சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று"

"பின்பு தேவன், ஜலத்தின் மத்தியில் ஆகாய விரிவு உண்டாகக் கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார். தேவன் ஆகாய விரிவை உண்டுபண்ணி, ஆகாய விரிவுக்கு கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார், அது அப்படியே ஆயிற்று. தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று.

"பின்பு தேவன், வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், **வெட்டாந்தரை காணப்படவும் கடவது** என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது தேவன்: "பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் வி'டியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று.

"பின்பு தேவன், பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்கத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக் கடவது. அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார். அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கவும், பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகிய நாலாம் நாள் ஆயிற்று.

"பின்பு தேவன்: 'நீந்தும் **ஜீவ ஜந்துக்களையும்** பூமியின் மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக் கடவது என்றும் சொன்னார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.

"பின்பு தேவன்: 'பூமியானது ஜாதி ஜாதியான **ஜீவஜந்துக்களாகிய** நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும் காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

"பின்பு தேவன்: '**நமது சாயலாகவும்** நமது ரூபத்தின்படியேயும் **மனுஷனை உண்டாக்குவோமாக;** அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். **தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்;** அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி.1:1-28).

### சிருஷ்டிப்பின் காரியங்களில் சத்தியத்தின் நூலிழைகள்

சிருஷ்டிப்பை குறித்த பல்வேறுபட்ட இக்குறிப்புகள் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவை அல்ல என்ற போதிலும், இக்குறிப்புகள் சிலவற்றில் கேள்விகளும், புராண கருத்துக்களும் வெளியரங்கமாக இருந்த போதிலும் ஒவ்வொரு சம்பவத்திலும் ஆணித்தரமான ஒற்றுமைகள் உள்ளன. **சிருஷ்டிப்பை குறித்த**

**உண்மை சம்பவத்தின் நிரூபணமானது சகலத்தையும் அறிந்திருக்கிற ஒரு தேவனிடமிருந்து முதல் மனுஷர்களுக்கு கையளிக்க தகப்பனிடமிருந்து புத்திரனுக்கும், தகப்பனிடமிருந்து புத்திரனுக்கும் பலதலைமுறைகளை கடந்து, கடைசியில் பல்வேறு பாரம் பரியங்கள் எழுத்து வடிவிலே கொடுக்கப்பட்டன. என்று இந்த சத்தியத்தின் நூலிழைகள் நிரூபிக்கின்றன.**

பல்வேறு கருத்துகளிருந்த அக்காலத்தில் சிருஷ்டிப்பை குறித்த சம்வங்கள் எழுதப்பட்டன புராண காரியங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், எவைகள் **சத்தியத்தின் நூலிழைகளாக இருந்தன?**

1. சிருஷ்டிகர்
2. முழுமையான இருள்
3. எவ்விடத்திலும் ஒரு பெரும் ஆழமான ஜலம்
4. தேவனுடைய வார்த்தையால் வெளிச்சம் வந்தது.
5. தேவனுடைய வார்த்தையால் ஜலங்கள் ஒன்று சேர்ந்தன ஆகையால் பூமியில் வெட்டாந்தரை தோன்றியது.
6. சகல ஜீவராசிகளும் உண்டாயிருக்கும்படி அழைக்கப்பட்டன.
7. மனுஷர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள்

அங்கும் இங்குமாக சிதறியிருக்கிற மனுஷர்கள் **ஒரு சமயத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இல்லாமல் காரிருள் இருந்ததையும், ஜலம் பூமியை முழுவதுமாக மூடியிருந்ததையும் எளிமையாக கற்பனை செய்து பார்த்திருக்க முடியுமா?** பூமியின் வித்தியாசமான பகுதிகளில் வாழ்கின்ற அநேக ஜனங்கள், தாவரம், பிராணி மனித ஜீவியம் ஆகியவை தேவன் கட்டளையிட்ட உடனே ஜீவனுடன் தோன்றின என்று ஒரேவிதமான முடிவுக்கு வந்திருக்க முடியுமா? இன்றைக்கு இருக்கிற பூமியையும், வானங்களையும் உற்று நோக்குவோமேயாகில், ஆதியாகமத்தில் சொல்லப்பட்டதை போன்ற ஒரு சம்பவத்தை எவர் ஒருவரும் தன்னுடைய கற்பனை சக்தியினால் உருவாக்க முடியாது!

ஆனால் ஒவ்வொரு சிருஷ்டிப்பின் சம்பவங்களையும் குறித்த மூலக்கூறுகள் அங்கே இருந்தன! பல்வேறு வகையில் ஒத்திருக்கக்கூடிய குறிப்பிட்ட ஒற்றுமைகள் வெளியரங்கமாக காணப்படுகின்றன, மீண்டும் **இந்த தகவலுக்கான ஒரு மூல காரணம் அங்கே இருந்தது.** அந்த மூலகாரணம் தேவனாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால், தேவனை தவிர வேறு ஒருவரும் அவர் சிருஷ்டிப்பை தொடங்குவதற்கு முன்பு பூமிக்குரிய பொருட்கள் இல்லாதிருந்த நிலையை குறித்து சாட்சி கொடுக்கவில்லை.

**சகலமும் தொடங்கிய உண்மை சம்பவத்தை தேவன்தாமே, முதல் மனுஷனுக்கும் மனுஷிக்கும் போதித்தார்.** அவர்கள் அதை தங்களுடைய பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் போதித்தார்கள். ஆனால் தலைமுறைகள் கடந்து சென்ற போது அநேகர் தேவனை விட்டு நதிகள், சூரியன், சந்திரன், நெருப்பு போன்ற வஸ்துக்களை வழிபட திரும்பினார்கள். அவர்கள் தங்களுடைய மூடநம்பிக்கைகளையும் புராண கண்டுபிடிப்புகளையும் சிருஷ்டிப்பை

குறித்த சம்பவத்துடனே ஒருங்கிணைத்தார்கள். சத்தியத்தின் நூலிழைகள் இன்றைக்கும் நிலைநிற்பது போன்று எந்த ஒரு வாசகருக்கும் இவைகளும் வெளியரங்கமாயிருக்கின்றன.

## கேள்விகள்

1. ஒவ்வொரு பெரிய மார்க்கமும் ---------------- ஐ கொண்டிருக்கிறது.
2. மாயன் "போப்புல் ஊ" சிருஷ்டிப்பு குறித்து என்ன கூறுகிறார்?
3. இந்திய "ரிக்" வேதம் சிருஷ்டிப்பு குறித்து என்ன கூறுகிறது?
4. எப்லா பட்டணத்திலிருந்த மெசப்பொத்தேமியர்கள் சிருஷ்டிப்பு குறித்து என்ன கூறுகிறார்கள்?
5. சீன மொழியில் சிருஷ்டிப்பின் சம்பவம் எவ்வாறு பாதுகாக்கப்பட்டிருக்கிறது?
6. இக்குறிப்பில் மற்றும் வேதாகமக் குறிப்பிலுள்ள "சத்தியத்தின் நூலிழைகள்" ஏழினைப் பட்டியலிடுக.
7. என்ன நடந்தது என்பதைப் பார்க்க சிருஷ்டிப்புக்கு முன் யார் இருந்தார்?
8. சிருஷ்டிப்பின் குறிப்புகளில் உள்ள தெளிவான ஒப்புமைகளை உலகமுழுவதிலும் சிதறியிருக்கிற மனிதர்களால் "கற்பனை" செய்து பார்க்க முடிகிறதா?
9. சிருஷ்டிப்பின் சம்பவத்திற்கான மூலக்கூறு என்ன?
10. எவ்வாறு இந்த சத்தியங்கள் பாதுகாக்கப்பட்டு நம்மிடம் கடந்து வந்துள்ளது?

# உலகளாவிய ஜலப்பிரளயம்
# The Global Flood

**4**

மிகவும் தொன்மையான பதிவுகள் மூலமாக ஒரு உலகளாவிய ஜலப்பிரளயத்தை குறித்து நமக்கு 500 க்கும் அதிகமான குறிப்புகளும் கிடைத்திருக்கின்றன (எச்.எஸ்.பெல்லாமி) "கடந்த காலத்தில் இருந்ததே தற்காலத்திலும் காணப்படுகிறது" என்று நினைக்க விரும்புகிற பரிணாம கொள்கையாளர்களுக்கு எதிராக இது இருக்கிறது. அது திடீரென்று ஏற்படக்கூடிய வழக்கமான ஒரு பேரழிவாக அது இருக்கவில்லை. பூமியின் மேற்பரப்பு முழுவதுமாக ஜலத்தினால் மூடப்பட்டிருந்ததே இதற்கு எதிரிடையான நிரூபணமாக இருக்கிறது.

### பாபிலோன் தேசத்து ஜலப்பிரளய கதைகள்

கில் காமேஷ் இதிகாசம் ஏறத்தாழ கி.மு. 2000 ஆண்டில் எழுதப்பட்டதாயிருந்தது. அதிலே சுமேரிய மொழிபெயர்ப்பு ஒன்றும், ஸெமிட்டிக் மொழிபெயர்ப்பு ஒன்றும் இருக்கிறது. இ.எ.வாலஸ் பட்ஜ் என்பவர் தன்னுடைய பாடத்திற்கு **"ஜலப்பிரளயம் மற்றும் கில்காமேஷ் இதிகாசம் குறித்த பாபிலோனியர்களின் விபரம்"** என்று தலைப்பிட்டார். சுமேரியர்கள் மற்றும் செமிட்டியர்கள் தங்களுடைய சுயமான வழியிலே இணையற்ற முக்கியத்துவம் வாய்ந்த மிகவும் பெரிய பேரழிவை ஞாபகப்படுத்துவது சாத்தியமான காரியமாக இருக்கிறது. இவ்விரு ஜனங்களுக்கும் பாரம்பரியத்தின் மூலமாக அதைக் குறித்த அறிவு பொதுவானதாக இருக்கிறது. அது என்னவென்றால்; நன்கு அறியப்பட்ட எல்லா சம்பவங்களிலும், ஜலப்பிரளயத்தை சுமேரியர்கள் ஒரு வரலாற்று சம்பவமாக குறிப்பிட்டிருந்தனர், ஜலப்பிரளயத்திற்கு முன்பு ஆளுகை செய்த இராஜாக்களின் பட்டியல் பற்றிய குறிப்புகளுக்காக நடைமுறையில் காலத்தை குறிப்பிட முடிந்தது. இருந்தபோதிலும் அவர்களுடைய ஆளுகை பற்றி குறிப்பிட்டிருந்த நீண்டகாலம் நம்ப முடியாத ஒன்றாக இருக்கிறது என்பதும் ஒத்துக் கொள்ளப்படவேண்டிய காரியமாக இருக்கிறது. (இத்தகைய நம்ப முடியாத ஜலப்பிரளயத்துக்கு முன்பு இராஜாக்களின் நீண்ட ஆளுகை அதே சமயத்தில் ஆதியாகமம் புத்தகத்தில் காணப்படும் நீண்ட காலத்துக்கு ஒத்தகருத்து உடையதாக இருக்கிறது).

### பெரோசஸ் என்பவருடைய கருத்தின்படி ஜலப்பிரளயத்தை குறித்து ஒரு பதக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள விஷயம்:

அராதாத்ஸின் மரணத்துக்கு பின்பு அவனுடைய சிசுத்ரஸ் என்ற குமாரன் 18 வருஷங்கள் ஆளுகை செய்தான். இவனுடைய காலத்தில்தான் ஒரு பெரும் ஜலப்பிரளயம் நிகழ்ந்தது; இந்த வரலாறு இவ்விதமாக விவரிக்கப்படுகிறது. ஒரு தரிசனத்தில் கரோனஸ் என்ற தெய்வம் அவனுக்கு காட்சியளித்தது. அது டீஸியஸ் மாதம் 15-ம் தேதியிலே ஒரு ஜலப்பிரளயம் தோன்றி அது மனுஷ இனத்தை அழிக்கும் என்று எச்சரித்தது. எனவே டீஸியஸ் சகலகாரியங்களின் தொடக்கம், விவரம் முடிவு இவற்றை எழுதும்படி கட்டளையிட்டார். மேலும் அவ்வாறு எழுதப்பட்ட செய்தியை சிப்பாராவில் உள்ள சூரியனின் நகரத்தில் புதைத்து விடும் படியாகவும் கட்டளையிட்டார். அத்துடன் ஒரு கப்பலை கட்டி அதற்குள் தன்னுடைய

சிநேகிதரையும், உறவினர்களையும் சேர்த்துக் கொண்டான். அனைவரும் உயிர்வாழ்வதற்கு தேவையான அனைத்தையும் வித்தியாசமான பிராணிகளையும் தன்னுடன் நான்கு கால் பிராணிகளையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளவும், ஆழத்துக்கு பயப்படாமல் தன்மேல் நம்பிக்கையாயிருக்கவும் கட்டளையிட்டார்.

"அவர் கடவுளிடம் கேட்டார், தான் கப்பலை செலுத்த வேண்டுமா? என்று, ஆம் தேவர்களிடமாக கப்பலை செலுத்த வேண்டும் என்று பதிலளிக்கப்பட்டது. அதன் காரணமாக மனித இனத்தின் நன்மைக்காக ஒரு வேண்டுதல் செய்தான் அதன்பின் அவன் தெய்வீகமாக கீழ்ப்படிந்தான்; அவன் 5 விளையாட்டரங்கத்தின் அளவு நீளம் கொண்டதும், 2 விளையாட்டரங்கத்தின் அளவு அகலம் கொண்டதுமான ஒரு கப்பலை கட்டினான். அதற்குள்ளாக அவன் ஆயத்தம் செய்த சகலத்தையும் வைத்தான்; இறுதியாக இவையனைத்தையும் அவன் தன் மனைவி, பிள்ளைகள், சிநேகிதரிடமும் தெரிவித்தான்.

பூமியிலே ஜலப்பிரளயம் ஏற்பட்ட பின்பு ஏற்ற நேரத்தில் காற்று வீசியது. சிசுத்ரஸ் கப்பலில் இருந்து பறவைகளை பறக்கவிட்டான், அவைகள் எந்த இரையையும், கால்களை வைத்து இளைப்பாற எந்த இடத்தையும் காணாமல் அவனிடமாய் மீண்டும் திரும்பின. சில நாட்கள் இடைவெளி விட்டு பின்பு அவைகளை இரண்டாம் முறையாக அனுப்பினான் இப்பொழுதோ அவைகள் தங்களுடைய கால்களில் லேசான சேறுடன் திரும்பின மூன்றாம் முறையாக அவன் இந்த பறவைகளை பரீட்சார்த்தமாக வெளியே அனுப்பினான்; ஆனால் அவைகளோ மீண்டும் அவனிடம் திரும்பி வரவே இல்லை. அப்பொழுதிலிருந்து ஜலங்களுக்கு மேலாக பூமியின் மேற்பரப்பு காணப்பட்டது என்ற முடிவுக்கு அவன் வந்தான். ஆகையால் அவன் கப்பலிலே ஒரு துவாரத்தை உண்டாக்கி அதன் வழியாக வெளியே பார்த்த பொழுது ஏதோ ஒரு மலையின் அருகே ஒரு மணற்பாங்கான ஏரிக்கரையை கண்டான். உடனே அவன் அங்கே தன் மனைவி பிள்ளைகள், கப்பலோட்டியுடனே கப்பலை நிறுத்தினான். சிசுத்ரஸ் இதற்கு பின்பு அவன் பூமிக்கு தன் தொழுகையை செலுத்தினான். கப்பலில் இருந்த தன்னோடே சேர்ந்து வந்தவர்களுடனே தேவர்களுக்கு பலிகளை செலுத்தினான். மறைந்து போனான்"

**கயிச் மாயர்களின் போப்புல் வூ என்ற நூலில் இருந்து குறிப்பிடப்பட்டது**

97. ஏதோ ஒன்று முதலில் தோன்றிய உடனே வானத்தில் பிரகாசித்தது.

98. வானத்தின் அஸ்திபாரத்திலிருந்து ஒரு கரிய மேகம் மேலெழுப்பியது.

99. அதனுள்ளே ஆதாத் கடவுள் பெருஞ்சத்தமிட்டார்

100. நாபு மற்றும் ஷாரு தேவர்கள் (அதாவது மார்துக்) முன் சென்றார்கள்.

101. உயர்ந்த நிலத்தின் மேலும், சமவெளியிலும். ஸ்தானாபதிகளாக கிரமமாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தார்கள்.

106. ஆதாத்தின் சுழல் காற்று (அல்லது புயல்) வானம் வரைக்கும் அடித்துக்கொண்டு சென்றது.

107. ஒவ்வொரு ஒளிச்சுடரும் இருளாக மாறியது.

108. ....நிலம்.... அது வீணானதாக விடப்பட்டிருந்தது போல்

109. ஒரு முழுநாள் அளவில் (வெள்ளம் திடீரென்று தாக்கியது)

110. வெள்ளம் வேகமாக உயர்ந்தது, (ஜலம்) பர்வதங்களை சென்றடைந்தது.

111. (ஜலம்) ஜனங்களை ஒரு யுத்தத்தைப்போல தாக்கியது.

112. சகோதரன் தன்னுடைய சகோதரனை பார்க்கவில்லை.

113. வானத்தில் மனுஷர்கள் அறியப்படாதிருந்தார்கள் வானத்தில் (அல்லது அடையாளங் காணப்படாதிருந்தார்கள்)...

128. ஆறு நாட்கள் இரவும் பகலுமாக

129. காற்றும், புயலும் வலிமையாக அடித்தது, சுழல் காற்று தேசத்தை மேற்கொண்டது.

130. ஏழாம் நாள் ஆனபொழுது புயல், சூறாவளி மற்றும் யுத்தத்திற்கு முடிவு வந்தது.

131. அது ஒரு சேனையைப் போன்று யுத்தம் செய்தது.

132. சமுத்திரம் அமைதலானது, கொடூரமான காற்று தணிந்தது, சூறாவளி முடிவடைந்தது.

133. நான் அந்த பகலிலே பார்த்தேன், குரல்கள் அடங்கின

134. சகல மனுஷ இனமும் சகதியாய் மாறின

135. நிலமானது சம மட்டமான தரையாக வைக்கப்பட்டது.

136. நான் காற்றுக்கான துவாரத்தை திறந்தேன், வெளிச்சம் என் கன்னத்தில் மேல் விழுந்தது.

137. நான்தானே வணங்கினேன், கதறினேன்

138. கண்ணீர் என்னுடைய கன்னங்களில் வழிந்தோடியது.

139. சமுத்திரத்தின் எல்லைகள் வரை, பூமியின் இடங்களை உற்று நோக்கினேன்.

141. நிஷிர் பர்வதத்தில் கப்பலானது தரை தட்டியது

143. முதலாம் நாள், இரண்டாம் நாளிலே நிஷிர் பர்வதமானது கப்பல் நகராதபடி கப்பலை வைத்துக்கொண்டிருந்தது.

144. மூன்றாம் நாள், நான்காம் நாளிலே நிஷிர் பார்வதமானது கப்பல் நகராதபடி கப்பலை வைத்துக் கொண்டிருந்தது.

145. ஐந்தாம் நாள், ஆறாம் நாளிலே நிஷிர் பர்வதமானது கப்பல் நகராதபடி கப்பலை வைத்துக்கொண்டிருந்தது.

146. ஏழாம் நாள் ஆனபொழுதோ

147. நான் ஒரு புறாவை சுதந்திரமாக பறந்து செல்லும்படி வெளியேவிட்டேன்

148. அந்த புறாவானது பறந்து சென்றது, பின்னர் திரும்பவும் வந்து சேர்ந்தது.

149. ஏனென்றால் அது மீண்டும் வந்த பொழுது தங்கி தாபரிக்க எந்த இடமும் இல்லாதிருந்தது.

150 நான் ஒரு தூக்கணாங் குருவியை வெளியே கொண்டுவந்து அது சுதந்திரமாக செல்லும்படி பறக்க விட்டேன்

151. அந்த குருவியானது வெளியே பறந்து சென்று மீண்டும் திரும்பிவந்தது.

152. ஏனென்றால் அது மீண்டும் வந்த பொழுது அது தங்கி தாபரிக்க ஒரு இடமும் இல்லாதிருந்தது.

153. நான் கப்பலுக்கு வெளியே ஒரு காகத்தை கொண்டு வந்து அதை சுயாதீனமாக பறக்க விட்டேன்.

154. காகம் வெளியே பறந்து சென்று பறவைகள் தேடிச் செல்லும் தண்ணீர்களை கண்டது

155. அது புசித்தது, மென்மையான பொருட்களை சேர்த்தது மேலெழும்பி சென்றது, ஆனால் திரும்ப வரவில்லை.

156. பின்னர் நான் சகலத்தையும் நான்கு காற்றுகளினிடமாய் கொண்டு போய் அங்கே பலி செலுத்தினேன்.

157. நான் மலைச்சிகரத்தின்மேல் ஒருபலி செலுத்துவதற்கான பிரயாணத்தை தொடங்கினேன்

158. நான் அதற்கான பாத்திரங்களை ஏழு,ஏழு எண்ணிக்கையாக ஒழுங்கு செய்து வைத்தேன்.

159.அவைகளின் கீழே நான் நாணல்களையும் கேதுரு கட்டைகளையும், மிருதுச் செடிகளையும் குவித்தேன்

160. தேவர்கள் அந்த மணத்தை நுகர்ந்தார்கள்.

**ரிக் வேதத்தில் இந்துக் குறிப்புகள் (போப்புல் ஊவிலிருந்து).**

ரிக் வேதத்தில் இந்த குறிப்பு (1.45; 2.33) இந்து மதத்தை குறித்து சொல்கிறது. மானு என்ற ஒரு மனுஷனை குறித்து அது பேசுகிறது. மானு என்பவர் ஒரு மாபெரும் துறவியாக இருந்தார். ஒரு தீர்க்கதரிசியைப் போன்று இருந்தார். அவர் மூலமாக தேவர்கள் பேசினார்கள். அவருடைய தகப்பனார் சூரியன், அவருடைய பாட்டனார் (தாத்தா) பிரம்மா (இந்து மதத்தின் சிருஷ்டிப்புக்கான கடவுள்) ஆனால் அவன் இவர்கள் இருவரை பார்க்கிலும் இயன்றவரையில் எது வேண்டுமானாலும் செய்வதிலும், அவனுடைய பெருங்கஷ்டங்களிலும், மிகவும் எளிமையாக இருப்பதிலும் அவர்கள் இருவரையும் மிஞ்சினவனாகவும் இருந்தான். அவன் தன்னுடைய ஒரு காலால் பத்தாயிரம் ஆண்டுகளாக நின்று கொண்டிருந்தான். (ஜே.எம்.மேக்ஃபீ எழுதிய **இந்தியாவின் புராணக் கதைகளும் பழங்கதைகளும்**).

பழங்கதையின்படி ஒரு மீன் மானுவிடம் சொன்னது, "உலகத்தின் அழிவு சமீபமாயிருக்கிறது... மானு தன்னுடைய ஜீவனை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமேயாகில் அவர் நெருங்கிக் கொண்டிருந்த சூறாவளியையும், புயலையும் தாக்குப்பிடிக்க தக்கதாக ஒரு பெரிதும் வல்லமை நிறைந்ததுமான படகை உருவாக்க வேண்டும் என்று அவர் பெற்றுக் கொண்ட போதனைக்கு இணங்க மானு ஒரு பேழையை உருவாக்கினார், எல்லாவகையான விதைகளையும் அதற்குள்ளாக சேமித்தார், பின் கொந்தளிக்கும் கடலின்மேல் அவர் பிரயாணத்தை தொடங்க தயாரானார்.

பல வருஷங்களுக்கு பின்பு கப்பலானது "மதுபானம் பண்ணிய ஒரு வேசிக்கு ஒப்பாக" தடுமாறியது. எல்லா ஜீவன்களும் அழிக்கப்பட்டன தண்ணீர்கள் பலம் குன்றத் தொடங்கிய பொழுது ஒரு மீனானது பேழையை இமயமலைக்கு இழுத்து

சென்றது. கப்பலை ஒரு மரத்தினிடமாக நங்கூரம் பாய்ச்சும்படி மானுவுக்கு உத்திரவிடப்பட்டது.

சகலமும் ஜலப்பிரளயத்தில் அமிழ்ந்துபோனபடியால், மனித இனத்தில் இப்பொழுது மானு மாத்திரமே ஜீவனோடு உள்ளவராக இருந்தார். தன்னுடைய பிள்ளைகளை பாதுகாக்க தக்கதாக சுத்தமான வெண்ணெய், புளித்த பால் மற்றும் தயிரை ஜலத்தில் எறிந்தார். அவைகள் ஒரு ஸ்திரீயாக உருவாயின, அவள் மூலமாக ஒரு புதிய மனித இனமும் பிறந்தது. இந்த வாக்கியங்களின்படி இது உலகளாவிய ஜலப்பிரளயம் மற்றும் அதன் பின் விளைவாக இருக்கிறது.

## சீன குறிப்பு

சீன புராதன இலக்கியமாகிய ஹிஹ்கிங் என்ற நூல் ஃப்யூஹியின் குடும்பம், ஒரு ஜலப்பிரளயமானது ஏற்பட்டபொழுது அவர்கள் எப்படி காக்கப்பட்டார்கள் என்பதை குறித்து பேசுகிறது. இப்பழமையான இலக்கியம் முழு உலகமும் வெள்ளத்தால் சூழப்பட்டதாக சொல்கிறது, மலைகள் மற்றும் சகலத்தையும் அது சூழ்ந்தபோதிலும் ஒரு குடும்பம்மாத்திரம் ஒரு படகின் உள்ளே உயிர் பிழைத்திருந்தது என்று சொல்கிறது. இந்த மனிதர் அவர்களுடைய நாகரீகத்தின் தந்தை என்று சீனர்கள் கருதுகிறார்கள். ஃப்யூஹி, அவருடைய மனைவி, அவருடைய 3 குமாரர்கள் மற்றும் 3 குமாரத்திகள் மாத்திரமே அந்த பெரும் ஜலப்பிரளயத்தில் **பாதுகாக்கப்பட்டவர்களாயிருந்தார்கள்** என்று இந்த குறிப்பு சுட்டிக்காட்டுகிறது. ஜனத்தொகை மீண்டும் கணக்கிடப்பட்டது என்றும் அது குறிப்பிடுகிறது (வட மேற்கு திசையில் சிருஷ்டிப்பை குறித்த வலைசேவை).

எழுதப்பட்ட கதாபாத்திரங்கள், சிருஷ்டிப்பை குறித்துள்ள விளக்கத்தை கூற பயன்படுத்தப்பட்டபடியால் மிகவும் பழமைவாய்ந்த சீன கதாபாத்திரங்களும் உலகளாவிய ஜலப்பிரளயத்தை குறித்துள்ள குறிப்பை பாதுகாத்தன. "படகு"க்கான அடையாளங்களும். "மூன்று கப்பல்களினால் உருவாக்கப்பட்டன, "கப்பல்" எட்டு என்றும் "வாய்" என்றும் உருவாக்கப்பட்டிருந்தன. இவைகள் "ஜனங்கள்" என்ற வார்த்தையை குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு காலத்திலும் சீன தேசத்தை சேர்ந்த நபர் "படகு"க்காக ஒரு கதாபாத்திரத்தை பேசினார் அல்லது எழுதினார். அவர் பேழையினாலே எட்டு ஆத்துமாக்கள் ஜலப்பிரளத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்கள் என்பது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! (ஆதியாகமத்தின் கண்டுபிடிப்பு).

## ஆஸ்டெக்

"வெகு காலத்துக்கு முன்பு டாபி என்ற பெயருடைய ஒரு மனுஷன் வாழ்ந்தார். டாபி மிகுந்த பக்தியுள்ள ஒரு மனுஷனாக இருந்தார். சிருஷ்டிகர் டாபியிடம் அவர் வாழத்தக்கதாக ஒரு பேழையை உருவாக்கும்படி சொன்னார். அவர் வசித்த அந்தபடகில் தன்னுடைய மனைவியையும், சகல பிராணிகளிலும் ஒவ்வொரு ஜோடியையும் தன்னுடனே சேர்த்து கொள்ளும்படி அவருக்கு சொல்லப்பட்டது. இயற்கையாக ஒவ்வொருவரும் அவரை பைத்தியக்காரர் என்று எண்ணினார்கள். பின்பு மழை பெய்யத் தொடங்கி வெள்ளமும் வந்தது. மனுஷர்களும், விலங்கினங்களும் மலைகளின் மேல் ஏற முயற்சித்தார்கள், ஆனால் வெள்ளம்

மலைகளையும் சூழ்ந்து கொண்டது. இறுதியாக மழையும் நின்றுபோனது. வெளியே ஜலம் வற்றிப் போனது என்று தீர்மானித்தபொழுது டாபி ஒரு புறாவை வெளியே விட்டார், அந்தப் புறாவானது மீண்டும் பேழைக்கு திரும்பவில்லை. **(வடமேற்கு திசையில் சிருஷ்டிப்பின் வலைப்பணி)**

உலகின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்த வேறுபட்ட மக்கள் எழுதிய இந்த காரியங்கள் வெவ்வேறு நூற்றாண்டுகளில் எழுதப்பட்டிருந்தாலும் பழங்கால கருத்துக்கள் நிரம்பியிருப்பினும், ஆதி. 6-9 அதிகாரங்களில் அளிக்கப்பட்டிருக்கிற வேதாகம குறிப்புக்கு இணக்கமாக ஒத்துப்போகிறவைகளாய் இருக்கின்றபடியால் இன்னும் **சத்தியத்தின் நூலிழைகள்** நீடித்திருக்கின்றன என்பதை நாம் காண்கிறோம். இவைகள் நமக்கு சொல்வது என்னவென்றால் இந்த குறிப்புகள் அனைத்தும் ஒரு ஆரம்ப இடத்திலிருந்து தொடங்கியிருக்கின்றன: ஜலப்பிரளயத்தின்போது உயிர் வாழ்ந்தவர்கள்.

**ஜலப்பிரளயம் பற்றிய வேதாகம குறிப்பு**

"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு" ஆதி.6:5.

மனுஷருடைய இருதயங்களில் இருந்தமிகுந்த பொல்லாப்புக்கு எதிரிடையாக "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்" (வசனம் 9).

"அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்"

"நீ கொப்பேர் மரத்தால் உனக்கு **ஒரு பேழையை** உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாகக் கீல் பூசு. நீ அதைப் பண்ண வேண்டிய விதம் என்னவென்றால் பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்கவேண்டும். நீ பேழைக்கு ஒரு ஜன்னலை உண்டுபண்ணி, மேல் தட்டுக்கு ஒரு முழத் தாழ்த்தியிலே அதைச் செய்து முடித்து, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்து, கீழ் அறைகளையும், மூன்றாம் தட்டின் அறைகளையும் பண்ணவேண்டும்.

"வானத்தின் கீழே ஜீவ சுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க நான் **பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை** வரப்பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம். ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும் உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள் பிரவேசியுங்கள்.

"**சகல வித மாம்சமான ஜீவன்களிலும்** ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு, பேழைக்குள்ளே சேர்த்துக் கொள். ஜாதி ஜாதியான பறவைகளிலும், ஜாதி ஜாதியான மிருகங்களிலும், பூமியிலுள்ள சகல ஜாதி ஜாதியான ஊரும் பிராணிகளிலும் வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னிடத்திலே

வரக்கடவது. உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாகச் சகலவித போஜன பதார்த்தங்களையும் சேர்த்து, உன்னிடத்தில் வைத்துக்கொள் என்றார்.

"நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடி யெல்லாம் அவன் செய்து முடித்தான்" (ஆதி.6:11-22).

நோவா பேழையைக் கட்டி முடித்த பின்பு, தேவன் நோவாவுடனே பேசி அவனுக்கு சொன்னது என்னவென்றால், "இன்னும் ஏழுநாள் சென்றபின்பு, நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் மழையை வருஷிக்கப்பண்ணி, நான் உண்டாக்கின ஜீவ ஜந்துக்கள் அனைத்தையும் பூமியின்மேல் இராதபடிக்கு நிக்கிரகம் பண்ணுவேன் என்றார்"

"...நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது அன்றையதினமே நோவாவும், நோவாவின் குமாரராகிய சேமும், காமும், யாப்பேத்தும், அவர்களுடனேகூட நோவாவின் மனைவியும், அவன் குமாரரின் மூன்று மனைவிகளும், பேழைக்குள் பிரவேசித் தார்கள். அவர்களோடு ஜாதி ஜாதியான சகல விதக் காட்டு மிருகங்களும், ஜாதி ஜாதியான சகல வித நாட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊருகிற ஜாதி ஜாதியான சகலவித ஊரும்பிராணிகளும், ஜாதி ஜாதியான சகல விதப் பறவைகளும், பலவிதமான சிறகுகளுள்ள சகலவிதப் பட்சிகளும் பிரவேசித்தன... கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்"

"ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்துக் கொண்டிருந்தது (ஆதி.7).

"தேவன் பூமியின் மேல் காற்றை வீசப்பண்ணினார் அப்பொழுது ஜலம் அமர்ந்தது. ஆழத்தின் ஊற்றுக் கண்களும், வானத்தின் மதகுகளும் அடைபட்டன; வானத்து மழையும் நின்று போயிற்று... ஏழாம் மாதம் பதினேழாம் தேதியிலே பேழை அரராத் என்னும் மலைகளின் மேல் தங்கிற்று.பத்தாம் மாதம் மட்டும் ஜலம் வடிந்துகொண்டே வந்தது; பத்தாம் மாதம் முதல் தேதியிலே மலைச்சிகரங்கள் காணப்பட்டன. நாற்பது நாள் சென்ற பின், நோவா தான் பேழையில் செய்திருந்த ஜன்னலைத்திறந்து, ஒரு காகத்தை வெளியே விட்டான்; அது புறப்பட்டுப் பூமியின் மேல் இருந்த ஜலம் வற்றிப்போகும் வரைக்கும் போகிறதும் வருகிறதுமாய் இருந்தது.

பின்பு பூமியின் மேல் ஜலம் குறைந்து போயிற்றோ என்று அறியும்படி ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியே விட்டான். பூமியின் மீதெங்கும் ஜலம் இருந்தபடியால் அந்தப் புறா தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் காணாமல் திரும்பிப் பேழையிலே அவனிடத்தில் வந்தது; அவன் தன் கையை நீட்டி அதைப் பிடித்துத் தன்னிடமாகப் பேழைக்குள் சேர்த்துக்கொண்டான்.

"பின்னும் ஏழுநாள் பொறுத்து, மறுபடியும் புறாவைப் பேழையிலிருந்து வெளியே விட்டான். அந்தப் புறா சாயங்காலத்தில் அவனிடத்தில் வந்து சேர்ந்தது; இதோ, அது கொத்திக் கொண்டு வந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயில் இருந்தது; அதினாலே நோவா பூமியின்மேல் ஜலம் குறைந்து போயிற்று என்று அறிந்தான். பின்னும் ஏழு நாள் பொறுத்து, அவன் புறாவை வெளியே விட்டான் அது அவனிடத்திற்குத் திரும்பி வரவில்லை.

"அவனுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில் முதல் மாதம் முதல் தேதியிலே பூமியின் மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று; நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப் பார்த்தான்; பூமியின் மேல் ஜலம் இல்லாதிருந்தது. இரண்டாம் மாதம் இருபத்தேழாம் தேதியிலே பூமி காய்ந்திருந்தது. அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: நீயும் உன்னோடே கூட உன் மனைவியும், உன் குமாரரும், உன் குமாரரின் மனைவிகளும் பேழையை விட்டுப் புறப்படுங்கள். உன்னிடத்தில் இருக்கிற மிருகங்களையும், பூமியின் மேல் ஊருகிற சகல பிராணிகளையும் உன்னோடே வெளியே வரவிடு; அவைகள் பூமியிலே திரளாய் வர்த்தித்து, பூமியின் மேல் பலுகிப் பெருகக் கடவது என்றார்.



"அப்பொழுது நோவாவும், அவன் குமாரரும், அவன் மனைவியும், அவன் குமாரரின் மனைவிகளும் புறப்பட்டு வந்தார்கள். பூமியின் மேல் நடமாடுகிற சகல மிருகங்களும், ஊருகிற சகல பிராணிகளும், சகல பறவைகளும் ஜாதி ஜாதியாய்ப் பேழையிலிருந்து புறப்பட்டு வந்தன. அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து கொண்டு, அவைகளை பலிபீடத்தின்மேல் தகன பலிகளாகப் பலியிட்டான். சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார்.

"அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது; நான் இப்பொழுது செய்தது போல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை.

"பூமியுள்ள நாளளவும்
விதைப்பும், அறுப்பும்
சீதளமும், உஷ்ணமும்
கோடை காலமும், மாரிகாலமும்
பகலும் இரவும்
ஒழிவதில்லை
என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார் (ஆதி.8)

"பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் நோக்கி: நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும், உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற ஜீவ ஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்.

"இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும் உங்களோடே என் உடன்படிக்கையை

ஏற்படுத்துகிறேன் என்றார்.

"அன்றியும் தேவன்: எனக்கும், உங்களுக்கும் உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவ ஜந்துகளுக்கும் நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக;

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.

"அந்த வில் மேகத்தில் தோன்றும்போது, தேவனுக்கும் பூமியின் மேலுள்ள சகலவித மாம்ச ஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப்பார்ப்பேன் (ஆதி.9:8-16).



ஒவ்வொரு மழைக்கு பின்னர் உண்டாகும் வானவில்லும், மனுஷனுடனே தேவன் செய்த உடன்படிக்கையின் ஒரு புதிய உறுதிப்படுத்துதலாக இருக்கிறது

## சத்தியத்தின் நூலிழைகள்

பல நூற்றாண்டுகளிலே சம்பவித்திருக்கிற வித்தியாசமான ஜலப்பிரளய சம்பவங்களில் ஒரு மாதிரியை ஒப்பிட்டு பார்க்கும்போது, நாம் அநேக வித்தியாசங்களை காண்கிறோம். எது உண்மையான குறிப்பாக இருக்க முடியுமோ அத்துடன் வெளிப்படையான புராண அடிப்படை கொள்கைகளும் கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய கோட்பாடுகளையெல்லாம் நாம் அசட்டை செய்துவிட்டு மீண்டும் அடிப்படையான **சத்தியத்தின் நூலிழைகளை** உணர்ந்து கொள்வோமேயாகில் அவைகள் ஜலப்பிரளய காலத்தில் வாழ்ந்தவர்களிடமிருந்து மட்டுமே வந்திருக்க முடியும்

1. ஒரு **உலகளாவிய ஜலப்பிரளயத்தை** குறித்த எச்சரிக்கை கொடுக்கப்பட்டது.

2. **ஒரு மனுஷன்** தன்னையும், தன் குடும்பத்தையும் **ஒவ்வொரு வகை பிராணியையும், ஆகாரத்தையும்** காப்பாற்ற தக்கதாக அறிவுறுத்தப்பட்டான்.

3. பேழைக்கு வெளியே இருந்த சகல ஜீவன்களையும் ஜலப்பிரளயம் அழித்து போட்டது.

4. பேழையானது **ஒரு மலையை** சென்றடைந்தது.

5. பூமியின் நிலைமையை சோதித்தறியும்படி **பறவைகள்** வெளியே அனுப்பப்பட்டன.

6. ஜீவனோடு இருந்தவர்கள் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி தேவனை தொழுது கொண்டார்கள்.

## ஒருங்கிணைந்த உறுதிப்பாடு

தேவனை குறித்த புராதனமான மற்றும் வேதாகமத்தின் குறிப்புகளை உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அவர் சிருஷ்டித்ததை குறித்தும், ஜலப்பிரளயமானது பூமியை சூழ்ந்து கொண்டதையும் நாம் படிப்பதன் மூலமாக தேவன் மேலுள்ள ஒரு நம்பிக்கை பூமியின்மேல் மனுஷனுடைய ஜீவியத்தில் முற்றிலுமாக ஊடுருவிச் சென்றிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். தேவனுடைய ஆரம்ப அறிவுக்கான ஒரு தனிப்பட்ட மூலாதாரத்தின்

அத்தியாவசியத்தை மறுப்பது என்பதும் சாத்தியமான காரியம் அல்ல. இதே விதமாக சிருஷ்டிப்பை குறித்தும், ஜலப்பிரளயத்தை குறித்தும் அவருடைய அறிவை புரிந்து கொள்வதென்பதும் சாத்தியமான காரியம் அல்ல, ஏனென்றால் அதைக் குறித்த அப்பட்டமான ஒத்த தன்மை புராணங்கள் மூலம் ஒளிவீசி பல்வேறுபட்ட ஜனங்கள் மத்தியில் பல நூற்றாண்டுகளாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்த உண்மைகள் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பது சத்தியமானது என்று நிரூபிக்கின்றன.


## கேள்விகள்

1. பல வித்தியாசமான எண்ணங்கள் இருந்தபோதிலும் எல்லா காலத்திலும் உலகத்திலுள்ள பெரும் பாலான ஜனங்கள் -------------ல் நம்பிக்கை உள்ளவர்களாயிருந்திருக்கிறார்கள்.
2. தொன்மையான காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் ஒரே தேவன் அல்லது பல தேவர்கள் என்பதில் எந்த ஒரு பொதுவான நம்பிக்கையை சுட்டிக் காட்டுகின்றன?
3. தேவனிடத்தில் உள்ள நம்பிக்கைகளை குறித்த **சத்தியத்தின் நூலிழைகள்** மூன்றினை வரிசைப் படுத்தவும்.
4. உலகம் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற நான்கு காரியங்களை வரிசைப் படுத்தவும்.
5. சிருஷ்டிப்பை குறித்த சம்பவங்களில் உள்ள **சத்தியத்தின் நூலிழைகளை** வரிசைப்படுத்தவும்.
6. ஜலப்பிரளயம் குறித்த சம்பவங்களிலுள்ள **சத்தியத்தின் நூலிழைகளை** வரிசைப் படுத்தவும்.
7. இந்த சில சம்பவங்கள் வேதாகம விளக்கத்திற்கு முந்திய காலத்தை சேர்ந்ததாக இருக்கின்றபடியால் மோசே தன்னுடைய சமகாலங்களில் புராணங்கள் பொதுவாக நம்பியவைகளையே வெறுமனே மீண்டும் சொன்னார் என்பதை இது சுட்டிக்காட்டுகிறதா அல்லது நிரூபிக்கிறதா? ஏன் அவ்வாறு இருக்க முடியாது?
8. எவ்வாறு இவ்விதமான எண்ணற்ற சிருஷ்டிப்பு மற்றும் ஜலப்பிரளயம் பற்றிய சம்பவங்கள் அவைகளுடைய புராண கேடுபாடுகள் மத்தியிலும் தேவனை குறித்த நம்பிக்கையை எவ்வாறு உறுதிப்படுத்துகிறவைகளாக இருக்கின்றன?

### அளவிற்குட்பட்ட என்னுடைய மனம்

### தேவனை எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்?

முதலாம் அதிகாரத்திலுள்ள தோட்டத்தின் பாதையிலே மீண்டும் நடந்து செல்லும் பொழுது இறுக்கமாக/ பாதியளவு மூடிய கண்களால் நிலத்திலே கறுப்பாக நகர்ந்து செல்லும் ஒரு எறும்பை போல ஒன்றை அடையாளம் காண்னும்படி நான் கீழ்நோக்கி என்னுடைய பாதங்களை பார்க்கிறேன். நாம் இருவருமே ஜீவராசிகளாக இருந்தபோதிலும், நாம் அந்த அளவுக்கு வித்தியாசமான ஜீவராசிகளாக இருக்கிறபடியால் அந்த சிறிய ஜீவராசியுடனே கூட எந்த ஒத்த தன்மையும் இல்லை என்பதை நான் மிகவும் சரியாக உணர்கிறேன். மேலும் அது என்னை குறித்து ஆழ்ந்த அறிவுடைய தாயிருப்பதற்கு என்ன சாத்தியக்கூறு இருக்கிறது?



எறும்பின் கண்கள் மனித சரீரத்தின் மிகவும் பெரிய தன்மையை அவனுடைய பாதம் தொடங்கி முகம் வரைக்கும் தன்னைப் பார்க்கிலும் - என்னைப் போன்று ஆயிரத்து இருநூறு மடங்கு பெரிதான ஒன்றரை மைல் உயரம் கொண்ட ஒரு சரீரத்தை காண முயற்சி செய்கின்றனவா? எறும்பானது இவ்விரு கைகளின் உருவாக்கும் வல்லமையை அல்லது அழிக்கும் வல்லமையை கற்பனை செய்து பார்க்க கூடுமா? எறும்பானது என்னுடைய சிந்தனை வழிமுறைகளில் பிரவேசிக்க முடியாதா? அல்லது என்னுடைய பேச்சின் ஒரு வார்த்தையை உணர்ந்து கொள்ள முடியாதா, என்னுடைய எண்ணங்கள் மற்றும் சிந்தையை குறித்த அறிவில் தொலை நோக்குடன் கூடிய ஒரு எதிர்பார்ப்பு கூட இல்லாமல் அது இருக்கின்றதா? ஆறடி உயரமுள்ள என்னிலும் வேறுபட்ட வஸ்துவினால் உருவாக்கப்பட்ட எறும்பின் இருதயமானது உணர்வு பூர்வமாக என்னை அடையவோ என்னில் அன்பு கூரவோ முடியுமா?

என்ன மதியீனமான கேள்விகள்! உருவாக்கப்பட்ட வகையிலுள்ள இந்த வேறுபாடுகள் என்னுடைய இருப்பு, என்னுடைய மனம், மற்றும் என்னுடைய ஆவிக்கும் எறும்புக்கும் இடையே வெற்றி கொள்ள முடியாத ஒரு சுவரை உருவாக்குகிறது. திட்டவட்டமாக என்னிலிருந்து எறும்புக்கும், எறும்பிலிருந்து எனக்கும் சந்தித்துக் கொள்ளும் இடம் என்று ஒன்றில்லை.

## மேற்கொள்ள முடியாத சுவர்

முடிவில்லாத ஆவியாயிருக்கிற தேவனுக்கும், எறும்பின் அளவான மற்றும் முடிவுடைய எனக்கும் இடையே மற்றொரு மேற்கொள்ள முடியாத சுவர் ஒன்று காணப்படுகிறது. மனிதனாகிய நான் என்னுடைய சிறிய தன்மையில், எங்கும் வியாபித்திருக்கிற பிரசன்னத்தையுடைய தேவனை நான் எவ்வாறு காணத் துவங்கக்கூடும்? குறைவான பலத்துடனே இருக்கின்ற நான், ஒன்று மில்லாமையில் இருந்து பரந்துவிரிந்த அகில உலகத்தையும் அதிலிருக்கின்ற ஒவ்வொரு வஸ்துவின் பகுதியையும் உருவாக்கும்படி பேசியவருடைய வல்லமையை நான் எவ்வாறு உணர்ந்து கொள்ள முடியும்? ஆறடி உயரம் அளவுள்ள என்னுடைய மனம் எவ்வாறு மிகவும் பெரிதானதும், வாயுக்கள் நிறைந்ததும் வெடி சத்தத்துடன் எரிகிறதுமான வல்லமையுடைய சுட்டெரிக்கும் சுவாசம் என் உலகத்தை அளவிட முடியுமா? உலகங்களை உருவாக்கிய இந்த மனமே எலெக்ட்ரான் நுண்நோக்கியினால் மாத்திரமே காணக்கூடிய மிகவும் சிறிய செல்களை உருவாக்கியிருக்கிறது? மெய்யாகவே காணப்படுகிறவைகள் காணப்படாதவைகளினாலே உருவாக்கப்படுகிறது!

"விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்" (எபி.11:3).

எவ்வளவு பரிதாபம், ஒரு எறும்பானது எவ்வாறு என் சிந்தனைகளை அறியமுடியுமோ அதைப்பார்க்கிலும் அதிகமாக என்னுடைய சிறிய மனமானது தேவனுடைய பாஷையை புரிந்து கொள்ள முடியாது அல்லது அவருடைய சிந்தனை வழிமுறைக்குள்ளாக பிரவேசிக்க முடியாது - நான் தேவனை எவ்வாறு அளவிட முடியும்?

ஆனால், நாம் அவருக்காக கதறுகிறோம் அமைதியாக்க முடியாத ஒரு குரல் ஒன்று அவருடைய இரக்கத்துக்காக, அவருடைய அன்புக்காக ஒலித்துக் கொண்டிருக்கிறது. மிகவும் சிறியவர்களாய் இருக்கிற நாம், மகத்தான ஆவியாயிருக்கிற தேவனை நாம் அறிய ஆவலாயிருக்கிறோம் என்பதும், முழுவதும் மறைக்கப்பட்டதாயிருக்கிற வழியை அவருடைய ஆவியினால் அடையாளப்படுத்துகிற தென்பதும் மிகவும் குறைவாக இருக்கிறது. அதையே நாம் செய்கிறோம்! ஏன்? ஏனென்றால் சிருஷ்டிக்கப்பட்ட மற்ற எல்லாவற்றிலுமிருந்து நாம் வித்தியாசமாக உருவாக்கப்பட்டிருக்கிறோம். வேதாகமத்திலே அவருடைய நிருபம் மூலமாக தேவன் நமக்கு உரைத்தார் நாம் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்டோம் என்று "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் **ஜீவாத்துமாவானான்** (ஆதி.1:26,27;2:7).

## அவருடைய சாயலில்....

ஆம், உண்மையாகவே நாம் நம்மை தேவனோடு ஒப்பிடுகையில் எறும்பின் அளவைப் பார்க்கிலும் குறைவானவர்களாகவே இருக்கிறோம். நம்முடைய திறமைகளும் எறும்பின் அளவை பார்க்கிலும் குறைவாக இருக்கின்றன. ஆனால் தேவன் நம்முடைய மனங்களிலும் ஆவிகளிலும் அவருக்கு ஒத்த தன்மையை கட்டுவித்தார். இயலாமை என்னும் சுவரை தகர்க்க ஒரு பாலத்தை தமக்கு கட்டுவித்தார். தம்மை குறித்து ஒருவர் அறிந்து கொள்ளும் நிலை விந்தையாக

மனுஷனுக்குரியதாயிருந்தாலும், அவ்வாறு சாகாமலிருந்து அறிந்து கொள்ளும் நிலை என்பது தேவனுடையதாகவும் இருக்கிறது. தேவனானவர் அப்படியே போய் விடுகிறதில்லை. மனுஷனுடைய ஆவியானது அதனுடைய கொஞ்சமான ஜீவிய காலத்தை தேவனை தேடுகிறதில் அல்லது அவரை மறுதலிக்கிறதில் செலவிடுகிறது. ஆனால் எப்பொழுதுமே அது தேவனைப்பற்றிய கேள்விக்கு தொடர்புடையதாக இருக்கிறது. உண்மை என்னவென்றால் ஒவ்வொரு மனுஷ ஜீவனும் தனக்குத்தானே தேவன் இருக்கிறார் என்ற கருத்திற்கு எதிராக எந்த ஒரு தனிப்பட்ட கேள்வியும் இல்லை என்பதற்கு வல்லமை நிறைந்த ஒரு உறுதிப்படுத்துதலாக இருக்கிறது!

## தேவனை விவரிக்கவும் அடையாளப்படுத்தவும் வரலாற்று முயற்சிகள்

தேவனை அறிந்து கொள்ளும் மனுஷர்களுடைய குறிக்கோளில் போட்டியிடுகிற இரண்டுபக்கங்கள் இருக்கின்றன: உறுதியான நம்பிக்கை என்னவென்றால் பிரதானமான ஜீவனுள்ளவர் ஒருவர் இருக்கிறார், இது பொருட்களை தெய்வமாக கருதும் மனுஷருடைய சுபாவத்திற்கு எதிரானதாக இருக்கிறது. அது அவர்களுக்கு நன்மை செய்யக் கூடியதாக இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள் அல்லது அப்படிப்பட்ட வஸ்துக்களை குறித்து பயம் உடையவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். இது தேவனுக்கும் சாத்தானுக்கும் (சாத்தானுடைய தூதர்களுக்கும்) இடையே தொடர்ந்து நடைபெறும் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தின் விளைவாக இருக்கிறது என்பதை நம்முடைய பாடம் தொடர்ந்து சொல்கிறபடியால் நாம் கற்றுக் கொள்வோம். இது நித்தியமான சர்வ வல்லமை பொருந்திய ஒருவருக்கும், சிருஷ்டிக்கப்பட்ட ஆவிக்குரிய ஜீவன்களுக்கும் அவர்களுடைய வல்லமையின் மேலுள்ள இச்சை அவர்கள் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்யும்படி வழிநடத்தியது என்பதை நாம் கற்றுக் கொள்வோம். அவர்களுடைய கலகம் எந்த ஒன்றையும் எல்லாவற்றையும் தேவன் என்று வழிபடத்தக்கதாக அது மனுஷர்களை வழி நடத்தும்படி உருவெடுத்தது. ஆனால் தேவன் சொல்கிறார் அவர் மாத்திரமே தொழுது கொள்ளப்படத்தக்கவர். அதனால் சுரூபங்களையும், மிருகங்களையும், மனுஷர்களையும் அல்லது இப்பிரபஞ்சத்தின் மூலகங்களையும் மேன்மைப்படுத்துவது என்பது சாத்தானை அவனுடைய வஞ்சனையின் மூலம் அவனை வழிபடுவதற்கு மேலானது அல்ல. அப்போஸ் தலனாகிய பவுல் ரோமர் 1:20-25 வசனங்களில் பரலோகத்தின் தேவனிடத்தில் பயபக்தியாயிருப்பதற்கு பதிலாக இந்த மனுஷர்கள் விக்கிரகங்களையும், பொய்யான "தேவர்களையும்" வழிபடுவதை குறித்து எழுதியதை கவனியுங்கள்.

"எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற் கொண்டு, தெளிவாய்க் காணப்படும் ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும்பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்".

"இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். ஆமென் பின் வந்தவைகளெல்லாம் தேவனை குறித்த கேடுபாடான கொள்கைகளாயிருக்கின்றன. மிகவும் பழமை வாய்ந்த போதனைகள் ஒரே தெய்வ வழிபாட்டை குறித்ததாக இருந்த போதிலும், சில நூற்றாண்டுகள் கடந்த பின்பு இயற்கையை வழிபடுதல், பல தெய்வ வணக்கம், விக்கிரகாராதனை பற்றிய மத நம்பிக்கைகள் உலகம் முழுவதும் பெருகின.

### தேவனைப் பற்றிய இந்து மதக் கொள்கை

இந்துக்களுடைய சிந்தனையின்படி கீழ்கண்ட சிறிய வேத குறிப்பானது "தேவர்களின் பிறப்பு" பற்றிய ஒரு விளக்கமாக இருக்கிறது:

"நாம் இப்பொழுது தேவர்களின் பிறப்பை குறித்து ஆச்சரியத்துடனே பேசுவோமாக... புனிதமான பேச்சின் ஆண்டவர், ஒரு கொல்லனை போன்று அவர்களை ஒன்று சேர்த்து காற்றை ஊதினார். தேவர்களின் மிக முந்திய காலங்களில் இருப்பது, ஒன்றும் இல்லாமையிலிருந்து பிறந்தது. ...இதற்கு பின்பு வானத்தின் கால் பாகங்கள் அவள் கைகளையும் தன்னுடைய சரீரத்தையும் தாழ்த்தி, கால்கள் அகன்ற நிலையில் பிறந்தன ஆதித்திலிடமிருந்து தக்சா பிறந்தாள், தக்சாவிடமிருந்து ஆதித்தில் பிறந்தாள், அவளுக்கு பின் பிறந்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்ட தேவர்களாகவும் முடிவில்லாத இரத்த சம்பந்தமான உறவினர் களாகவும் இருந்தார்கள். ..... ஆதித்திலுக்கு எட்டு குமாரர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அவளுடைய சரீரத்தினாலே பிறந்தவர்கள். ஏழு பேருடன் அவள் தேவர்கள் மத்தியில் சென்றாள் ஆனால் அவள் மார்த்தாண்டனாகிய சூரியனை ஒரு புறமாக எறிந்து விட்டாள். ஆதித்தில் தன்னுடைய ஏழு குமார்களுடன் மிக முந்திய காலத்துக்குள்ளாக சென்றாள். ஆனால் மார்த்தாண்டனை அவள் தாங்கிக் கொண்டபடியால், அதற்கு பதிலாக ஒரு குழந்தையை பெற்று பின் சீக்கிரமாக மரிப்பாள் (ரிக் வேதம், ஆலோசனை பதிப்பாசிரியர் பெட்டி ரேடிஸ்)

துளசிதாசரின் இராமாயணத்திலிருந்து குறிப்பிடப் படுகிறது, பக்கம் 399 மற்றும் 400: இந்திரன் தன்னுடைய வழிகளில் ஒரு நாளைப்போல இருக்கிறான். அவன் தேவர்களுக்கு இராஜாவாக இருந்த போதிலும் அவனுடைய வஞ்சனைக்கும், துரோகத்திற்கும் அளவில்லாமல் இருக்கிறது. அவன் மற்றவருடைய இழப்பையும், தன்னுடைய ஆதாயத்தையுமே விரும்புகிறவனாக இருக்கிறான். அவன் சூது நிறைந்தவனாகவும், கெட்ட குணாதிசயம் உள்ளவனாகவும், எவர் ஒருவர் மேலும் நம்பிக்கையற்றவனாகவும் இருக்கிறான்.

### தேவனை குறித்த பாபிலோனிய பொதுக் கொள்கை

பாபிலோனிய தெய்வத்தின் பெயர் மார்துக் என்பதாகும். இதன் நேரடியான அர்த்தம் "சூரியனின் எருது கன்றுக்குட்டி" என்பதாகும் இவன் "ஈ" என்பவனுடைய புத்திரனாகவும், தேவர்களின் தலைவனாகவும் இருக்கிறான். இவன் ஒரு செழிப்பின் தெய்வமாக இருந்தான். இவன் புராதனமாக இடி மற்றும் புயல் காற்றுகளின் ஒரு தெய்வமாக இருக்கிறான். அவனுடைய மனைவியாய் இருந்தவள் சர்பனித்து.

சிருஷ்டிப்பை குறித்த பழமையானதொரு இதிகாசப் பாடலில் (எனுமா எலிஷ்) குழப்பத்தின் பெரிய மிருகங்கள் ஆகிய தியாமத் மற்றும் கிங்குவை மார்துக் தோற்கடித்தான், அங்கேயே அவன் மாபெரும் வல்லமையை பெற்றுக் கொண்டான். சர்வ லோகத்துக்கும், மனித இனத்துக்கும் சிருஷ்டிகர், ஒளிக்கும் ஜீவனுக்குமான தெய்வம் மற்றும் ஆளுகிறவர் என்றும் சொல்லிக் கொண்டு எழும்பி 50 வகையான பட்டங்களுக்கு உரிமை கோரினான். அதன் விளைவாக அவன் "ஆண்டவர்" என்று அர்த்தம் கொள்ளும் "பேல்" என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.

**தேவனை குறித்த கல்தேயர்களின் கொள்கை**

ஊர் மற்றும் ஆரான் ஆகிய பட்டணங்களில் சந்திர தெய்வமாகி நன்னாரை வணங்குவதென்பது மேலோங்கி இருந்தது. அவர் அழகாக தொங்கிக் கொண்டிருக்கும் தாடியை கொண்டவராகவும், பிறைச் சந்திரனை தன்னுடைய அடையாளமாக கொண்டவரும் 30 ஐ தன்னுடைய எண்ணாக கொண்டவருமாக இருந்தார். அவர் 'பாவம்' என்ற பெயராலும் அழைக்கப்பட்டார். அவர் தேவர்களின் தகப்பன் என்று அறியப்பட்டவராக இருந்தார். சகலத்தையும் சிருஷ்டித்தவர் என்று அறியப்பட்டிருந்தார். மேலும் சில பழமையான தேசங்கள் சந்திரன், சூரியனுக்கு பெற்றோராக இருந்ததாக கொள்கை கொண்டிருந்தன. இதனுடன் சந்திரன் ஒரு காலத்தில் அதன் வரிசையில் நீண்ட காலத்துக்கு முன்பு ஒரு சூரியனாகத்தானே இருந்தது (தியாஸஃபி அகராதி).



**தேவனை குறித்த எகிப்தியர்களின் கொள்கை**

"ரா என்பது பலவிதமான உருவங்களை அடையாளப்படுத்துகிறது மிகவும் வழக்கமான உருவம் என்னவென்றால் வளைந்த அலகை கொண்ட ஒரு பருந்து பறவையின் தலையைக் கொண்ட ஒரு மனுஷன் மேலே ஒரு சூரிய ஒளிவட்டத்துடனே காணப்பட்டான், ஒரு குளவியின் தலையுடனே காணப்பட்ட மனுஷன் (அவனுடைய உருவத்தில் கெப்ரியை போன்று) அல்லது ஒரு செம்மறியாட்டு கடாவின் தலையை கொண்ட ஒரு மனுஷன் ஆகிய உருவங்களில் இருந்தன இந்த "ரா" என்பது முழு சரீரம் கொண்ட ஒரு செம்மறியாட்டு கடாவாகவும் முழுசரீரம் குளவி ஃபீனிக்ஸ் (அரேபிய பாலை வனத்தில் 600 ஆண்டுகள் வாழ்ந்து தன்னையே எரித்துக்கொண்ட ஒரு பெரிய பறவை) நாரை, பாம்பு, எருது, பூனை அல்லது சிங்கம் மற்றும் பல சிருஷ்டிகளை போன்று சித்தரிக்கப்பட்டது.

"ரா"வின் பிரதானமான அல்லது தலைமை பக்திமையம் ஹெலியோ போலிஸ் (எகிப்திய மொழியில் தூண்களின் ஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் லூனு) என்பவர் உள்ளூர் சூரிய தெய்வம் ஆற்றம் என்று அழைக்கப்பட்டார் அல்லது ஆற்றம் - ரா என்று அழைக்கப்பட்டார், இவரே முதல் நபராக எந்நீடை தோற்றுவிக்கிறவராக ஷு மற்றும் டெஃப்னட், கெப் மற்றும் நட், ஆஸிரிஸ், செட், இஸிஸ் மற்றும் நெஃப்திஸ் ஆகியோரை உள்ளடக்கியவராக காணப்பட்டார். இவருடைய பிராந்திய பக்தி "ரா" வை ஒரு சூரிய தெய்வமாக ஸ்தாபித்து ஏறத்தாழ இரண்டாம் இராஜ வம்ச காலத்தில் இருந்து வளரத் தொடங்கியது. நான்காம் இராஜ வம்ச காலத்தில் பார்வோன்கள் "ரா" க்களின் வெளிப்பாடுகளாக காணப்பட்டார்கள்.

அவர்கள் "ரா" க்களின் குமாரர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

## தேவனை குறித்து புத்த மதத்தினரின் கொள்கை

இந்து மதத்தை சேர்ந்த பிராமண ஆசாரிய முறைமையிலிருந்த வசைபாடுதல்கள், கேடுபாடுகளின் விளைவாக ஞான உபதேசத்தை புத்தர் தேடினார் அவர் தேவர்கள் மற்றும் தேவதைகள் பற்றிய உபதேசங்களை புறக் கணித்தார். ஏனென்றால் அவைகள் மூட நம்பிக்கையிலும், சூனிய வித்தையிலும் தான் முடிவடைகின்றன என்று உணர்ந்தார். ஆனால் தெய்வம் இல்லாத வெற்றிடம் இப்படியாக சிருஷ்டிக்கப்பட்டது அவருடைய சீடர்கள், புத்தருக்கு சுரூபங்களையும், கட்டிட பிரகாரங்களையும் எழுப்பி, அவரை தங்களுடைய தெய்வம் ஆக்கிக் கொண்டார்கள்.

## தேவனை குறித்த ஸ்லவோனியர்களின் கொள்கை

இந்த ஸ்லவோனியர்கள் (மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் ஸ்லவோனிக் பாஷை பேசுபவர்கள்) ஒரே வான தேவனை வணங்கினார்கள், ஆனால் இவர்களுடைய கொள்கை ஆள்தத்துவமற்ற சக்தியை குறித்த இந்துக்களின் கருத்துக்கு நெருக்கமாக இருக்கிறது இது மனுஷருடைய விஷயங்களை தனித்து வைக்கக் கூடியதாகவும், அந்த காரியங்களை அவரால் எண்ணப்படவும் கூடாத சிறிய தெய்வங்களுக்கு விடப்பட்டதாகவும் இருந்தது.

## தேவனை குறித்த சீனர்களின் கொள்கை

கன்ஃபூஸியஸ் என்பது கிழக்கத்திய மதம்/தத்துவம். கன்ஃபூஸியஸ் மிகவும் சரியாக தத்துவம் என்று குறிப்பிடப்பட்டாலும் உலக மதங்கள் பற்றிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னவென்றால் "புத்த மதம் முதல் சொராஸ்ட்ரிய மதம் வரை அல்லாமல் மற்ற மதங்களுடனே தவிர்க்க முடியாத வகையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கன்ஃபூஸியஸ் மதம் சீன தேசத்தில் தொடங்கி கொரியா, தைவான், மற்றும் வியட்நாம் நாடுகளுக்கு பரவியது. இந்த கன்ஃபூஸியஸ் மதத்தின் போதனைகளுக்கு செவிகொடுக்கிற அநேக ஜனங்கள் சீனபாரம்பரிய டாவோயிஸம் மற்றும் பாரம்பரிய பிராந்திய பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைள் ஒருங்கிணைந்த மதத்தை சார்ந்தவர்களாய் இருக்கிறார்கள் (மத சகிப்புத்தன்மை).

## தேவனைக் குறித்த கொள்கையில் வீழ்ச்சி

உலகின் பல்வேறுபட்ட பிரதான மதங்களின் "தேவர்கள்" பற்றிய விளக்கங்களிலிருந்து, காலங்களும் தலைமுறைகளும் கடந்து செல்லும் பொழுது தேவனை குறித்த கொள்கை ஒட்டுமொத்தமாக சீர் கெட்டு போயிருக்கிறதை நாம் காணமுடியும் சாத்தான் எப்பொழுதுமே மனித சமுதாயத்தை அதன் சிருஷ்டிகர் பற்றிய விஷயத்தில் குழப்பம் அடையும் படி கிரியை செய்கிறவனாயிருந்திருக்கிறான்.

## தேவனை குறித்த வேதாகமக் கருத்து

வேதாகமத்தின் தேவன் தனித்தன்மை உடையவராக இருக்கிறார். 1யோவான் 4:8-ல் எல்லாவகையிலும் வேதவசனம் குறிப்பிட்டிருக்கிறபடி அவர் அன்பின் சாராம்சமாக இருக்கிறார். அவர் மனுஷர்களை சிருஷ்டித்தவகையில் பகுத்தறியும் மூளைகள், அழிவில்லாத ஆத்துமாக்கள் இவற்றை நமக்கு அளித்திருப்பது விலை மதிக்க முடியாத பொக்கிஷமாகவும், அன்பின் ஈவாகவும் இருக்கிறது. தேவனுடனே கூடிய தனிப்பட்ட உறவில் பதிலீடாக நாம் தேவனை நேசிக்கத்தக்க வகையில் அந்த பலனுடனே நாம் உண்டாக்கப்பட்டோம். மேலும் நாம் உண்மையுள்ளவர்களாக அவருடைய பிள்ளைகளாக இருந்தால் "நாம்

அவரோடே நித்தியமாக ஜீவிப்போம்" என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். யார் தேவனிடத்தில் அன்பு கூருவதையும், அவருக்குக் கீழ்ப்படிவதையும் தெரிந்துகொண்டார்களோ அவர்கள் மத்தியிலே சிருஷ்டிகராகிய தேவனை குறித்த அறிவு ஆதாம், ஏவாள் காலத்திலிருந்து தலைமுறை தலை முறையாக கடந்து வந்தது. நாம் ஆதியாகமம் புத்தகத்தில் வாசிக்கிறபடி குடும்பங்களுக்கு தலைவர்களாயிருந்த பிதாக்களுடனே தேவன் செயல்படுகிறவராயிருந்தார். பின்னர் மோசேயின் மூலமாகவும், அவரை பின்பற்றிய தீர்க்கதரிசிகள் மூலமாகவும், நாம் "பழைய ஏற்பாடு என்று அழைக்கிற தேவனுடைய செய்தி பாதுகாக்கப்படும்படி அவர் செய்தார். தேவன் தம்மை மனுக்குலத்திற்காக வெளிப்படுத்தின செய்தியுடன் "புதிய ஏற்பாடு" நிறைவு பெறுகிறது.

வேதாகமத்தில் நாம் எந்த வகையான தேவனை காண்கிறோம்? அவர் நெருப்பாக அல்லது நீராக, சூரியன் அல்லது சந்திரனாக, கல்லாக அல்லது மரமாக சித்திரிக்கப்டுகிறாரா?

"... உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" (யாத்.20:2-5).

தேவன் பொன்னினாலோ அல்லது வெள்ளியினாலோ அல்லது மரம் அல்லது மாம்சம், இரத்தத்தினாலோ உருவாக்கப்பட வில்லை ஆனால் அவர் ஆவியிலே நித்தியமானவராக இருக்கிறார். அவருடைய பிரசன்னம் எங்கும் இருக்கிறது. அவர் குறிப்பிட்ட அளவான கிரியைகள் கொண்ட மாம்ச சரீரத்திற்கு கட்டுப்பட்டவர் அல்ல "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது? என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா.66:1,2).

**வேதாகம எழுத்தாளர்களில் ஒருவர் காரண காரியத்தோடு பேசுகிறார்:**

"உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப்பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்" (சங்.139:7-12,14).

## தேவன் பூரணராயிருக்கிறார்

கடந்த கால மார்க்கங்களில் இருந்த தேவர்களும் தேவதைகளுமானாலும் சரி, அதைப்போல இன்று நடைமுறையில் இருக்கிறவைகளானாலும் சரி, அடிக்கடி

அவைகள் மனுஷருடைய காரியங்களுக்கு அப்பாற்பட்டவைகளாயிருக்கின்றன அல்லது அப்படியே மனுஷரைப் போன்று மிகுந்த உற்சாகம், கோபம், பேராசைகள் மற்றும் தீய நடக்கைகளில் அவர்களுடைய ஈடுபாடு; அல்லது தாங்களுடைய வல்லமையில் மனுஷர்களுக்கு அப்பாற்பட்ட வகையில் பிரமிக்கத்தக்க மனுஷனாக இருப்பது ஆனால் அடிக்கடி அவர்கள் மற்ற தேவர்கள் அல்லது தேவதைகளால் தோற்கடிப்படுகிறவர்களாக அல்லது கொல்லப்படுகிறவர்களாக இருக்கிறார்கள்.

தேவர்களை குறித்து இப்படிப்பட்ட கருத்துகள் மனுஷருடைய மனதிலே எவ்வாறு தோன்றக் கூடும் என்பதை நாம் தர்க்க ரீதியாக உணர்ந்து கொள்ள முடியும். மனுஷர்கள் அவர்களை உற்று நோக்கும் பொழுது இத்தகைய தேவர்கள் தங்களை போன்றிருப்பதையும் ஆனால் பெரிதானவர்களாகவும், மிகுந்த வல்லமையுடைவர்களாய் இருப்பதையும் கற்பனை செய்து பார்க்க முடியும்.

இதற்கு மாறாக வேதவாக்கியங்கள் மனுஷனுடைய புத்திக்கு அப்பாற்பட்டவரும், நாம் நம்முடைய கற்பனையில் சிந்திக்க கூடிய எந்த ஒரு காரியத்துக்கும் அப்பாற்பட்டவருமாயிருக்கிற ஒரு தேவனை சித்தரித்து காட்டுகின்றன. இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி தேவனை கூடுதலாக விவரிக்க மனுஷ வார்த்தைகள் இல்லை. தேவனை உள்ளபடியே உணர்ந்து கொள்வதற்கு எந்த மனுஷ வார்த்தைகளும் இல்லை, தேவனை உள்ளபடியே உணர்ந்து கொள்வதற்கு எந்த மனுஷ சிந்தனையும் இல்லை.

நம்முடைய வரம்புக்குட்பட்ட திறமையினாலே வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது என்று நாம் வாசிக்கிறோம்; தேவன் பூரணராயிருக்கிறார், பரிசுத்தமானவராக, நீதி, நியாயம் உள்ளவராகவும் இருக்கிறார். அவருடைய சுபாவத்திலே ஏதாகிலும் அசுத்தம் அல்லது பரிசுத்தமில்லா தன்மை இருக்கும் என்று கற்பனை செய்து கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது.

"கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் ,கிரியைகளின் மேலுமுள்ளது. கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார்"

"நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்"

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.... என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக; மாம்ச தேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும். என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கக் கடவது" (சங்.145:8,9,14,16).

"வானங்களே செவி கொடுங்கள், நான். பேசுவேன்; பூமியே என் வாய்மொழிகளைக் கேட்பாயாக. கர்த்தருடைய நாமத்தைப் பிரசித்தம் பண்ணுவேன்; நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள்; அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக் கேடில்லாத சத்தியமுள்ள தேவன்: அவர் நீதியும் செம்மையுமானவர் (உபா.32:',3,4).

**தேவனுடைய இயல்பு மாறுகிறதில்லை மற்றும் மாற முடியாதது**

தாம் தொடர்ந்து இருப்பதற்காக வெளிப்புறத்திலுள்ள சக்தி எதையும் சார்ந்திருக்கிறதில்லை. அவர் இயல்பிலே நித்தியமானவர். அவருடைய அறிவு பூரணமானது, அவருடைய வல்லமை நிறைவானது, அவர் எங்கும் இருக்கிறார்.

அவருடைய குணாதிசயத்திற்கான காரணம் கற்பித்தல்கள் பிழையற்றவை தேவன் இருக்கிறவண்ணமாகவே இருக்கிறார். அவர் மாறக் கூடாதவர். அவர் என்ன சொல்கிறாரோ அல்லது செய்கிறாரோ அதை பூரண அறிவோடும் புத்தியோடும் செய்கிறார் ஆகையால் சரியான சத்தியத்தை வார்த்தைகளாக சொல்கிறார், அதை நாம் மாறுபாடில்லாத பிரமாணமாக வரையறுக்கிறோம்.

'நான் கர்த்தர், **நான் மாறாதவர்...**" (மல்கியா 3:6)

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந் துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; **அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை**" (யாக்.1:17).

"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9).

## தேவனுடைய நியாயம்

தேவன் தம்முடைய இயல்பிலே மாறாதவராக இருக்கின்ற போதிலும், அவர் தொடர்ந்து நம்முடைய மனோபாவங்களையும், அவருக்கான நம்முடைய மறுமொழிகளையும் அறிந்தவராயிருக்கிறார். அவர் நம்முடைய நடத்தைக்கு மறு மொழியாக நேர் மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ செயல்படுகிறார். நாம் அவருக்கு விரோதமாக பாவம் செய்கிற பொழுது நம்முடைய பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது.

"இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்குக் **கர்த்தருடைய** கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. **உங்கள் அக்கிரமங்களே** உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; **உங்கள் பாவங்களே** அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

"ஏனென்றால், உங்கள் கைகள் இரத்தத்தாலும், **உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும் கறைப்பட்டிருக்கிறது; உங்கள் உதடுகள் பொய்யைப்பேசி, உங்கள் நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது. நீதியைத் தேடுகிறவனுமில்லை, சத்தியத்தின்படி** வழக்காடுகிறவனுமில்லை; மாயையை நம்பி, அபத்தமானதைப் பேசுகிறார்கள்; தீமையைக் கர்ப்பந்தரித்து, அக்கிரமத்தைப் பெறுகிறார்கள்" (ஏசா.59:1-4).

மனுஷர்கள் தவறு செய்கிற பொழுது அவர்கள் தேவனுடைய இயற்கையான மாறாத பரிசுத்தத்தை நியாயத்தை மீறுகிறார்கள், தேவனுக்கு இவ்விஷயத்தில் தெரிந்தெடுத்தல் என்று ஒன்றில்லை, ஆனால் அவர் பாவியையும், அவனோடே கூட அவனுடைய பாவங்களையும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்க வேண்டியதாயிருக்கிறது. நாம் ஒத்துக்கொள்ளுகிற நியாயமுறைகளிலும், நியாயக்கேடான கிரியைகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. ஒரு நபர் அத்தகைய சட்டங்களை மீறுகிற பொழுது அவன் தன்னுடைய கிரியைகளுக்காக நியாயத்திலே கொண்டுவரப்பட பொறுப்பாளியாக இருக்கிறான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நம்முடைய உரிமை மற்றும் நியாயத்தை குறித்த அறிவு தேவனுக்குள் இருக்கும் பண்புகளை அடிப்படையாக கொண்டதாக இருக்கிறது. இவைகள் மனுஷன் "அவருடைய சாயலில்" உருவாக்கப்பட்ட பொழுதே நன்கு

பதிக்கப்பட்டதாயிருந்தன எனவே நம்முடைய பாகத்திலே உள்ள ஒரு பாவத்திற்கு தண்டனை நியாயமான தேவனிடமிருந்து வர வேண்டியதாகவே இருக்கிறது என புரிந்து கொள்வதற்கு நமக்கு அது கடினமாக இருக்காது.

### அன்பு மற்றும் இரக்கத்தின் சாராம்சமாகவும் தேவன் இருக்கிறார்

தேவனிடத்திலே பூரணத்துக்கான ஒவ்வொரு குணாதிசயமும் இருக்கிறது மனுஷனோ வென்றால் இவ்வகையான குணாதியசங்களில் இதுவரை மிகவும் குறைவுபட்டவனாகவே இருக்கிறான். ஆகையால் மனுஷன் இருக்கின்ற தாழ்மையான நிலைக்கு தேவன் கீழ்நோக்கி சென்றடைவது என்பது தேவனுக்கு சாத்தியமான காரியம் அல்ல. ஏனென்றால் நாம் அனைவருமே பாவஞ்செய்கிறவர்களாயிருக்கிறோம் இவ்வாறு இல்லாமல் இருந்த போதிலும் தேவன் மற்ற இரண்டு குணாதிசயங்களாகிய **அன்பு மற்றும் இரக்கத்தின்** சாராம்சமாக இருக்கிறார்.

தேவன் ஏன் தம்முடைய சிருஷ்டிப்பின் கீழ்ப்படியாமையையும் உண்மையற்ற தன்மையையும், தூஷணத்தையும் சகித்துக் கொள்ளவேண்டும்? நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளும் நிலையில் நாம் இல்லை என்ற உண்மையின் அடிப்படையில் தேவன் ஏன் நம்முடைய பாவங்களை மன்னிக்கத்தக்கதாக ஒரு வழியை உண்டாக்க வேண்டும்? நாம் நம்முடைய சொந்த அநியாயத்திலிருந்து இரட்சிக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஏன் அவர் நமக்கு சொல்ல வேண்டும்? தேவன் நம்மை சகித்துக் கொள்கிறார் ஏனென்றால் அவர் **மனிதவர்க்கத்தை நேசிக்கிறார்.** நம்முடைய அற்பமான தன்மையிலும் அவர் நம்மை வழி நடத்துகிறார் ஏனென்றால் **அவருடைய இரக்கம் பெரிதாயிருக்கிறது.**

"பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் **அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.** நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1யோவான்4:7-10).

"அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1யோவான்4:19).

மனுஷ இருதயத்திலும் கூட **அன்பானது இரக்கம் மற்றும் மன்னிப்புக்கான ஒரு வாஞ்சையை உருவாக்குகிறது.** தேவன் தம்முடைய பெரிதான அன்பிலே இரக்கத்திற்கான முதல் மூலகாரணராக இருக்கிறார். தேவன் தக்க சமயத்திலே அதை அறிவித்தார்.

"கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்;" (யாத்.34:6,7).

"அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு... (ஏசா.63:9).

"ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" (லூக்.6:36).

ஏனென்றால் மனுஷனுடைய பாவத்திலும், கீழ்ப்படியாமையிலும் இருந்தபோதிலும் தேவன் அவனிடத்தில் அன்பு கூருகிறார். ஏனென்றால் அவர் மனுஷன் தன்னை நெருங்கிச் சேரவேண்டுமென்று வாஞ்சிக்கிறார். மனுஷன் தன்னிடமாய் மீண்டும் வரும் வழியை அவனுக்கு போதிக்கவேண்டுமென்று விரும்புகிறார். தேவன் அளித்துள்ள எளிதான திட்டத்தின்படி யார் ஜீவிப்பார்களோ அவர்களை மன்னித்து அவர்களை தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள அவர் விருப்பமுடையவராக இருக்கின்றார்.

"... நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே.31:34).

## கேள்விகள்

1. எந்த சில காரியங்களிலே மனுஷர்கள் எறும்பின் பார்க்கும் திறன், உணர்ந்து கொள்ளும் திறன் இவற்றுக்கு அப்பாற்பட்டவர்களாயிருக்கிறார்கள்?
2. மனுஷருக்கும் தெய்வத்தன்மைக்கும் இடையே காணப்படுகிற மேற்கொள்ள முடியாத சுவரை குறித்து ஆராய்ந்து பேசவும்.
3. நாம் தேவனை காண அல்லது உணர்ந்துகொள்ள முடியாது என்ற போதிலும் நம்முடைய ஆவிகள் என்ன செய்கின்றன?
4. மனுஷன் தனிப்பட்ட வகையில் "------------------" என்பது மனுஷனுடையதாக இருந்தாலும் ------------------------- -------------- ------------------ என்பதும் -------------.
5. தேவன் ---------------------- ------------------------- ------------ - --------------------- மனுஷனுடைய ஆவி சொற்பமான ஜீவிய காலத்தை -------------- அல்லது -------------------- ------------------------ தொடர்புடையதாயிருக்கிறது.
6. தேவன் இருக்கிறார் என்பதற்கான மிகப்பெரிய நிரூபணங்களில் ஒன்று என்ன?
7. இந்த கேள்விகளையும், சிந்தனைகளையும் பகுத்து என்ன முடிவை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள்?

## உலகத்தில் தீமை இருக்கிறது தேவன் தீமையை உருவாக்ினாரா?

## There Is Evil in the World. Did God Create Evil?

**6**

யாரோ ஒருவர் சொல்கிறார், "இந்த உலகம் முழுவதற்குமாக ஒரு நல்ல தேவன் மேலானவராக அன்பான மனுஷர்கள் கீழாக என்று இருந்திருப்பார்களேயாகில், இது என்ன ஒரு அற்புதமான ஸ்தலமாக இருந்திருக்கும்!" என்ன ஒரு அற்புதமான ஜீவியமாக இருந்திருக்கும்! ஆனால் இவ்வுலகில் மனுஷர்களைபற்றிய இலட்சிய காட்சி உண்மையை விட்டு தூரமாக இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஒருவகையில் நம்முடைய ஜீவியங்களில் ஆசீர்வாதம் மற்றும் தேவனுடைய அன்பை குறித்த நிரூபணத்தை நம்மை சுற்றிலும் நாம் முழுமையாக காண்கிறோம். ஆனால் சகல இடங்களிலும் நாம் தீமை, கொடுமை, அநியாயம், பாவம் மற்றும் மரணம் இவைகளையே காண்கிறோம்.

அப்படியானால் தீமை எங்கிருந்து வந்தது? தேவன் பாவத்தை உருவாக்ினாரா? தேவன் தாமே நல்லவராகவும், கெட்டவராகவும், இவ்வாறே இருவிதமாக ஒளியாகவும், இருளாகவும், சிருஷ்டிகராகவும், அழிக்கிறவராகவும் இருக்கிறாரா? சில மதங்கள் இவ்விதமாக போதிக்கின்றன சில ஜனங்களும் இவ்விதமாக நம்புகிறார்கள்.

தீமையை குறித்த அநேக புராண விளக்கங்கள் இருக்கின்றன அஞ்ஞான மார்க்கங்களில் ஒரு தேவதைகள் கூட்டம் இருந்தது /இருக்கிறது அந்த தேவர்கள் மனுஷர்களிலிருந்து மிகவும் குறைவான வித்தியாசம் கொண்டவர்களாகவும், நம்முடைய பலவீனங்கள், பொறாமைகள், போட்டிகள் இன்னும் காட்டிக்கொடுத்தல் கொண்டவர்களாக சித்தரிக்கப்பட்டார்கள். பல தெய்வ வழிபாட்டு மார்க்கங்களின் தேவர்கள் தீயகாரியங்களை செய்கிறவர்களாகவும், தங்கள் பாவங்களில் பிடிக்கப்படுகிறவர்களாகவும் இன்னும் தண்டிக்கப்படுகிறவர்களாகவும் கூட எண்ணப்பட்டார்கள் / எண்ணப்படுகிறார்கள்.

"தேவன்" ஐ குறித்த இந்த கருத்துக்கள் சிருஷ்டிப்பின் மூலமாகவும், வேதவாக்கியங்கள் மூலமாகவும் நாம் அறிந்திருக்கிற தேவனுடைய மகத்துவம் மற்றும் பூரணத்துவம் இவற்றிலும் முரண்பட்டவைகளாக இருக்கின்றன. இன்னும் தேவன் இருக்கின்ற சகலத்துக்கும் சிருஷ்டிகராக இருப்பாரேயாகில், அவர் தீமையை உருவாக்க வில்லையென்றால், தீமை இருப்பது எவ்வாறு விளக்கப்பட முடியும்?

### தேவன் மனுஷரை நல்லவர்களாக இருக்கும்படி சிருஷ்டித்தார்.

சிருஷ்டிப்பின் நேரத்தில் மனுஷனை குறித்த தேவனுடைய விளக்கம் "நல்லது" என்றவிதமாக இருந்தது (ஆதி.1;31). அவர் பூரணராக இருந்தார், அவரிடத்தில் தீமை இல்லாதிருந்தது ஆனால் நித்தியமான ஆத்துமாவுக்குள்ளாக தம்முடைய சுவாசத்தை ஊதினார் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்கு கீழ்ப்படிவதை அல்லது கீழ்ப்படியாமல் இருப்பதை தெரிந்துகொள்ளும் வல்லமையையும் தேவன் மனுஷனுக்கு அளித்தார் (ஆதி. 2;16,17).

ஆதியாகமம் 3-ம் அதிகாரம் சர்ப்பத்தின் வடிவில் வந்த சோதனைக்காரன் ஏவாளிடத்தில் வந்து (முதல் ஸ்திரீ) அவளிடத்தில் தேவனுக்கு கீழ்ப்படியாமலிருப்பது அறிவையும் பல நல்ல காரியங்களையும் கொண்டு வரும். தேவன் எச்சரித்த மரணத்தை கொண்டு வராது என்று சொன்னான். ஆகையால் ஏவாளும், பின்பு

அவளுடைய புருஷனாகிய ஆதாமும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதை தெரிந்து கொண்டார்கள். அவர்களுடைய முடிவின் மூலமாக பாவமும் அதை பின் தொடர்ந்து சகல வயதுவந்த மனுஷர்களின் முடிவுகளும் அந்த நாளிலிருந்து மனுஷ சமுதாயத்தை வருத்திக் கொண்டிருக்கிறது.

தேவன் மனுஷருக்குள்ளே பொல்லாப்பை உருவாக்கினாரா? இல்லை **தேவன் அவர்களுக்கு தெளிவாக தெரிந்தெடுத்து கொள்ளும் வல்லமையை கொடுத்தார்.** அவர்களோ கீழ்ப்படியாமையை **தெரிந்துகொண்டார்கள்.**

## தேவதூதர்கள் யார்?

நாம் வரலாற்றில் ஒருபடி பின்நோக்கி செல்வோமேயாகில், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த சமயத்திலிருந்தே ஏற்கெனவே இருந்ததாக காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவன்கள் "தேவ தூதர்கள்" (ஆதி.3:24) என்று அழைக்கப்பட்டார்கள். அதை குறித்துதான் ஏதேன் தோட்டத்துக்கு போகும் வழியை ஜீவவிருட்சத்தில் பங்கு கொள்ளாதபடிக்கு அங்கே கேருபீன்கள் காவலுக்கு வைக்கப்பட்டார்கள். ஆதி.1,2 அதிகாரங்களில் சிருஷ்டிப்பின் சம்பவத்தில் தேவதூதர்கள் பெயரிடப்படாமல் இருக்கிறபடியால், தேவனுடைய வல்லமையினால் அவர்கள் இருந்திருக்க வேண்டும். பூமிக்குரியவைகள் எல்லாம் சிருஷ்டிக்கப் படுவதற்கு ஆறு நாட்களுக்கு முன்னே.

தேவதூதர்கள் "தேவர்கள்" ஆக இருக்கிறார்களா? அவர்கள் இயற்கையிலும், தேவனுடைய காரியத்திலும் பங்கு கொள்கிறவர்களாக இருந்திருக்கிறார்களா? அவர்கள் தேவனாக தொழுது கொள்ளப்படக்கூடுமா?

## மனுஷர்கள் மற்றும் ஆவிக்குரிய ஜீவன்கள் மத்தியில் காணப்படும் பாவத்தை குறித்த ஒரு சுருக்கமான வரலாறு

தேவன் இருக்கிறார் என்பதை "நிரூபிக்க" வேதாகமம் முன்வராததை போன்று (ஆதி.1;1) ஆதியிலே தேவன்.... என்று தொடங்குகிற விதமாக தேவதூதர்கள், சாத்தானின் தூதர்கள் மற்றும் பொல்லாங்கான தூதர்கள் - அவர்களுடைய இருப்பின் அங்கீகாரமும் கருதப்படுகிறது. இது ஒரு நியாயமான அணுகு முறையாக இல்லையா? மாம்ச கண்களால் ஆவிக்குரிய ஜீவன்களை காணக் கூடாதிருக்கிறபடியால், அவைகள் இருக்கின்றன என்பதை தேவன் அவைகளை குறித்து என்ன சொல்லியிருக்கிறாரோ அதை விசுவாசிப்பதை அடிப்படையாக கொண்டு அவைகளை ஒத்துக்கொள்ளவேண்டும். நாம் தேவனை தேவனென்று விசுவாசிக்க வில்லையானால், வேதாகமத்தை அவருடைய வார்த்தையென்று ஏற்றுக்கொள்ளவில்லையானால், அந்த புத்தகத்தில் அவர் சொல்லக்கூடிய எந்த ஒன்றும் காணப்படாத ஆவிக்குரிய உலகத்தை குறித்து அல்லது பொல்லாப்பை குறித்து நமக்கு எந்த ஒரு தெளிவையும் விளக்கத்தினாலே ஏற்படுத்தாது. நாம் தேவனை விசுவாசிப்போமேயாகில் அந்த ஆவிக்குரிய உலகத்தில் நாம் காணும்படியாக என்னென்ன அறிவின் பலகணிகளையெல்லாம் அவர் திறக்கிறாரோ அப்பொழுது நாம் பாராட்டப்படத்தக்கவர்களாயிருப்போம்.

பழைய புதிய ஏற்பாடுகள் இரண்டு முழுவதிலும் மாம்சத்துக் குரியதல்லாததாயிருக்கிற பூமிக்குரிய பொருளாயிராத "ஜீவன்கள்" குறித்து நாம் வாசிக்கிறோம். வேதாகமத்தின் 66 புத்தகங்களில் மொத்தம் 34 புத்தகங்களில் தேவதூதர்களை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல்வேறு பட்ட ஆவிக்குரிய ஜீவன்களை குறித்து 300 தடவைகளுக்கு மேலாக பேசப்பட்டிருக்கிறது.

**நல்ல தூதர்கள் இருக்கிறார்கள்**



**"சாதாரணமான" தூதர்கள் பரம "சேனை" என்று அழைக்கப் படுகிறார்கள்;** பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரம் ஆயிரம் தேவதூதர்கள் தேவனை கொண்டிருக்கிறதாக விவரிக்கப்படுகிறார்கள் (வெளி. 5:11) இன்றைக்கும் உலகத்திற்கு இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தமாக ஊழியஞ் செய்யும்படி அனுப்பப்படுகிற பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள் (எபி.1:14). அவர்கள் வணங்கப்பட வேண்டியவர்கள் அல்ல, ஏனென்றால் அவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட பணிவிடை ஆவிகள் (கொலோ.2;19).

தேவதூதர்கள் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்யும்படி அனுப்பப்படுகிற அநேக உதாரணங்கள் வேதவாக்கியங்களில் இருக்கின்றன. வழக்கமாக அவர்கள் கண்ணுக்கு புலப்படாதவர்களாக இருந்தார்கள்/இருக்கிறார்கள். அதன் காரணமாகவே அவர்கள் யாருக்கு உதவி செய்து கொண்டிருந்தார்களோ அந்த ஜனங்களாலும் கூட அவர்கள் இருந்தது உணரப்பட முடியவில்லை. ஆனால் அவர்கள் ஜனங்களுக்கு வெளிப்படையாக காணப்பட்ட பொழுது, அவர்கள் மனுஷரூபத்தில் தங்களை வெளிப்படுத்தினார்கள் - வெளிப்படையாக. தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ஆவிக்குரியஜீவன்களாக அல்ல. எப்படியிருப்பினும் தேவதூதர்கள் மனுஷர்களுக்கு காணப்பட்ட பொழுது தேவன் தம்முடைய ஆவியினால் ஏவப்பட்ட குறிப்பிலே தேவதூதர்கள் என்று அடையாளப்படுத்தினார். அவற்றில் சில இடங்களில் அவர்கள் ஊழியஞ் செய்யும் சமயங்களில் அல்லது தேவனுடைய செய்தியை அளிக்கும் இடங்களில் தங்களுடைய பரலோக அடையாளத்தை வெளிப்படுத்தினார்கள் (ஆதி.24:7; 28:12; 2இரா.6:14-17;சங்.34:7; லூக்.2:13-14; மத்.4:11; அப்.12:7-9).

♦ **கேரூபீன்கள்:** தேவதூதர்களாக இருக்கிற இவர்கள், பின்வரும் வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் ஆதி.3:24; சங்.80:1,99:1; ஏசா.37:16.

♦ **சேராபீன்கள்;** தேவதூதர்களாகிய ஜீவன்களுக்கு மற்றொரு பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது (ஏசா.6:2,6).

♦ **பிரதான தூதன்:** கர்த்தர் தாமே பிரதான தூதனுடைய சத்தத்தோடே இந்த உலகத்தின் முடிவை அறிவிக்கிறதற்கு வருவார் என்று 1தெச.4:16 உரைக்கிறது. மோசே மரித்தபோது பிசாசுடனே கூட அவனுடைய சரீரத்தை குறித்து பிரதான தூதன் தர்க்கித்து பேசியதாக யூதா 9ம் வசனம் உரைக்கிறது.

♦ **பெயரிடப்பட்ட தேவதூதர்கள்: இரண்டு தூதர்கள் மாத்திரம் பெயர்** குறிப்பிடப்பட்டவர்களாக இருக்கிறார்கள்; பிரதான தூதனென்று **அழைக்கப்பட்ட** மிகாவேல் (தானி.10:13-21; 12:1; யூதா9; வெளி.12:7-9). **மற்றும் தானியேல்** தீர்க்கதரிசியிடம் அனுப்பப்பட்ட காபிரியேல் (தானி.8:16;9:21) **இவனே யோவான்**

ஸ்நானகன் மற்றும் இயேசுகிறிஸ்து ஆகியோர் கர்ப்பத்தில் தோன்றுவார்கள் என்பதை அறிவித்தான் (லூக்.1:19,26).

**எப்பொழுது, எவ்வாறு, எங்கிருந்து சாத்தான் வந்தான்?**

ஏசாயா 14:12-15 மற்றும் எசேக்.28:11-19 ஆகிய தீர்க்கதரிசன வசனப்பகுதிகள் ஒடுக்குகிற இராஜாக்களிடத்தில் பேசுகிறதாக தோன்றினாலும் அந்த மொழி நடை இரண்டு வகையான அர்த்தம் கொண்டதாக இருக்கிறது. மேலும் **இவ்விளக்கங்களின் குறிப்பிட்ட பாகங்கள் ஒரு மனுஷனை குறித்த விளக்கத்திற்கும் அதிகமாக தோன்றுகிறது** ஏசாயா இவ்விதமாக குறிப்பிடுகிறார், "அதிகாலையின் மகனாகிய விடி வெள்ளியே" (லூஸிபர்)" என்று அவனை குறித்து இரண்டு பலம் வாய்ந்த சொற்றொடர்களை கூறி இருக்கிறார். 1. அவர் லூஸிபரை **வானத்திலிருந்து விழுந்த** தூதன் என்று விவரிக்கிறார். 2. அவர் **லூஸிபர்** தன்னுடைய பெருமையில் பரலோகத்தின் தேவனையும் மேற்கொள்ளும் ஆசையில் சொன்ன மேட்டிமையான சொற்றொடர்களை குறிப்பிடுகிறார். உண்மையில் **பெயரிடப்பட்ட ஒரு மூன்றாவது தூதனாக** காணப்படுகிறார். ஆனால் இந்த இடத்தில் **இவன் கலகம் செய்கிற விழுந்துபோன தூதனாக** காணப்படுகிறான்.

"**அதிகாலையின் மகனாகிய** விடிவெள்ளியே, (லூஸிபர்) நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! **நான் வானத்துக்கு ஏறுவேன்,** தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங் களில் ஏறுவேன்; **உன்னதமானவருக்கு ஒப்பாவேன்** என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே "ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்.

எசேக்கியேலின் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டவன் "பூரண அழகுள்ளவன்" என்று விளக்கப்படுகிறான் (எந்த மனுஷனும் பூரணமானவன் என்று அழைக்கப்பட முடியாது) தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன் என்றும் விவரிக்கப்படுகிறான் - ஆனாலும் - ஆதாம், ஏவாளை தவிர எந்த மனுஷரும் அங்கே இருக்கவில்லை, அவன் "காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்" என்று அழைக்கப்பட்டான். கேருப்களின் விளக்கத்தின்படி அவர்கள் தேவனுடைய சிங்காசனத்தை சுற்றிலும் இருக்கிறவர்கள், ஆனாலும் இந்த ஒருவன் மற்ற கேருப்களுக்கு மேலாக அபிஷேகம் பண்ணப்பட்டவனாக காணப்படுகிறான்.

மேலும் இவன் **சிருஷ்டிக்கப்பட்ட** நாள் துவக்கி **"குறையற்றிருந்தவன்"** (பூரணமானவன்) என்று விவரிக்கப்படுகிறான் (ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து மனுஷர்கள் "பிறக்கிறார்கள்", சிருஷ்டிக்கப்படுகிறது இல்லை; மீண்டுமாக இங்கே விவரிக்கப்படுகிறவன் ஒரு மனுஷன் அல்ல என்ற அடையாளம் இருக்கிறது) என்றாலும் சிருஷ்டிக்கப்பட்ட இந்த ஜீவன் **கொடுமை, மேட்டிமை, பொல்லாத ஆசைகள் நிறைந்தவனாயிருந்தான்.** ஆவிக்குரிய ஜீவன்களுக்கு **தெரிந்து கொள்ளும் வல்லமை** இருந்தது, அதாவது சிருஷ்டிகரை உண்மையாய் சேவிப்பது அல்லது கலகம் பண்ணி **பாவஞ்செய்து** இவன் திரளான அக்கிரமங்களினாலே ஒரு "பயமூட்டும் பொருள்" ஆகவும் "தேவ நிந்தனையான ஒரு காரியமாகவும்" அவன் ஆனான், தேவனுடைய பர்வதத்திலிருந்து தள்ளப்பட்டான்:

"... பின்னும் கர்த்தர்: **நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்;** நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழக்குள்ளவன் நீ தேவனுடைய

தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திர நீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது; **நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில்** உன் மேள வாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.

"நீ காப்பாற்றுகிறதற்காக **அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்** அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினாய்

"நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டிபிடிக்கப்பட்டது மட்டும்; **உன் வழிகளில் குறையற்றிருந்தாய்**

"உன் வியாபாரத்தின் மிகுதியினால் உன் கொடுமை அதிகரித்து நீ **பாவஞ்செய்தாய்;** ஆகையால் நான் உன்னைத் தேவனுடைய பர்வத்திலிருந்து **ஆகாதவனென்று தள்ளி**, காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை நான் அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போட்டேன் வெளி.12:7-12 வசனங்களில், வானத்தில் யுத்தம் பற்றிய விளக்கம் அளிக்கப் பட்டிருக்கிறது.



"வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ள வில்லை வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று. உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்

"அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும், வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான்

"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

"ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களி கூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்கால மாத்திரம் உண்டென்று அறிந்து மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்"

இந்த யுத்தம் எப்பொழுது நடந்ததென்று தெளிவாக வெளிப்படுத்தப்படாமலிருக்கிறது. ஆனாலும் "வலுசர்ப்பம்" - சாத்தான் - மற்றும் அவனுடைய தூதர்கள் மிகாவேல் மற்றும் அவனைச் சேர்ந்த தூதர்களுக்கு எதிராக யுத்தம் பண்ணினார்கள். இந்த இரு சேனைகளும் ஆவிக்குரிய ஜீவன்களாயிருக்கின்றன, ஒரு சேனை தேவனுக்கு உண்மையுள்ளதாகவும், மற்றொன்று கசப்பான கலகத்துடனே தேவனுக்கு எதிராக யுத்தம் செய்து கொண்டிருக் கிறதாகவும் இருக்கின்றன **தேவனுக்கு கீழ்ப்படியாமலிருப்பதை தெரிந்து கொண்டு பொல்லாங்கானவர்களாயிருக்கும்படி தெரிந்துகொண்டவர்கள்** - நீதிமான்களுக்கு எதிராக யுத்தம் செய்து கொண்டு, உலகம் முழுவதும் பொல்லாப்பைப் பரப்பிக் கொண்டிருக்கிற சாத்தான் பூமியிலே தள்ளப்படுகிறான் என்ற செய்தியுடனே யுத்தம் நிறைவு பெற்றது.

**சாத்தானுடனே விழுந்துபோன பொல்லாங்கான தூதர்கள்**

▶▶ **பொல்லாத ஆவிகள் அல்லது விழுந்துபோன தூதர்கள்:** 2பேதுரு 2-4 மற்றும் யூதா 6-9 ஆகிய வசனங்கள் நியாயத்தீர்ப்புக்கென்று வைக்கப்படும்படியாக அந்தகார சங்கிலிகளுக்குள் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற பாவஞ்செய்த தூதர்களை குறித்து பேசுகிறது.

▶▶ **பிசாசுகள்:** சாத்தானுடைய கட்டளையின்படி செய்கிற ஆவிக்குரிய ஜீவன்கள் (வெளி.16:13,14; ஏசா.8:19;உபா.32:17)

**விழுந்துபோன தூதர்களுக்கும், விழுந்துபோன மனுஷனுக்கும் இடையேயுள்ள ஒத்த தன்மை**

புதிய ஏற்பாட்டின் புத்தகமாகிய யூதாவில் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (6-9). தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட தூதர்களின் உலக ஆவி "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்கள்" என்று உரைக்கிறது. இந்த ஒத்த தன்மை அந்த தூதர்களும், சோதோம் கொமோராவிலே வசித்தவர்களும் தங்களுடைய பொல்லப்பினிமித்தமாக அழிக்கப்பட்டவர்களிடையே காணப்படுகிறது (ஆதி.19).

சோதோம் கொமோரா பட்டணத்தார் **தங்களை சீர் கேடான விபசார நடக்கைக்கு ஒப்புக்கொடுத்ததை** யூதா 7-ம் வசனம் விளக்குகிறது. அவர்கள் தாங்களே ஒருமனதாக எந்த விதமான தடையுமின்றி தங்களுடைய பரஸ்பர உடன்பாட்டின்படி பொல்லாப்பை **தெரிந்துகொண்டார்கள்.** அவர்கள் தங்களுடைய தீர்மானத்தை நிலைநிறுத்த சோதோமுக்கு வந்திருந்த இரண்டு மனுஷரை (மனுஷ ரூபத்தில் காணப்பட்ட தூதர்கள்) நிர்பந்தம் செய்தார்கள். அவர்கள் அந்த வீட்டின் கதவை உடைக்க ஆயத்தமாயிருந்தார்கள் அப்பொழுது அந்த தேவதூதர்கள் தெருவாசலிலிருந்த சிறியோரும், பெரியோருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள்; அப்பொழுது அவர்கள் வாசலைத் தேடித் தேடி அலுத்துப்போனார்கள் (ஆதி.19:11). இன்றைக்கும் கூட இந்த உலகத்தில் திரளான ஜனங்கள் எய்ட்ஸ் மற்றும் பல பால்வினை நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கிற அநேக ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்கள் சீர்கேடான பாலுறவுக்கு தொடர்புடைய கெட்ட நடத்தைக்கு **தங்களை விற்றுப் போட்டார்கள்.**

இந்த விளக்கம் ஆதி.6:5-ல் சொல்லப்பட்ட உலகளாவிய ஜலப்பிரளயத்துக்கு முன்பு இருந்த மனித சமுதாயத்தினை குறித்த விளக்கத்தை போன்று அதிகமாக இருக்கிறது."மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் **நித்தமும்**

பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு".

**தேவன் பொல்லப்பை சிருஷ்டித்தாரா?**

நாம் மீண்டும் நம்முடைய ஆரம்ப கேள்விக்கு வருகிறோம். தேவன் பொல்லாப்பை உருவாக்கினாரா? வேதவாக்கியங்கள் சொல்கின்றன, "தேவன் உண்டாக்கின எல்லாம் **மிகவும் நன்றாயிருந்தது**" (ஆதி.1:31) என்று. தேவனிடத்திலோ, தேவன் உண்டாக்கின எந்த ஒன்றிலுமோ பொல்லாப்பு காணப்பட வில்லை. அப்படியென்றால் தீமை எவ்வாறு வந்தது? தெரிந்தெடுத்து கொள்ளும் சுயாதீனத்தில் அப்பியாசம் ஆனபடியால் சிருஷ்டிகரிடத்தில் அன்பு கூரவும், கீழ்ப்படியவும் அல்லது அவருடைய சித்தத்தை அசட்டை செய்யவும், அவருக்கு கீழ்ப்படியாமற்போகவும் தக்கதான தெரிந்தெடுப்பை செய்ய முடியும்.

தேவதூதர்கள் - சிருஷ்டிக்கப்பட்ட ஆவிக்குரிய ஜீவன்கள் - தேவனுடைய பிரசன்னத்தில் ஜீவித்தல். தேவன் இருப்பதையும் அவருடைய அன்பையும் தொடர்ந்து கண்டு உணர்ந்தவர்கள். என்றாலும் வானசேனையில் ஒரு பகுதியினர் தேவனுக்கு எதிராக கலகம் பண்ணுவதை தெரிந்து கொண்டார்கள். அவர்கள் "சாத்தான்" என்றும் "பேல்செபூல்" என்றும் "வலுசர்ப்பம்" என்றும் "பிசாசு" என்றும் அழைக்கப்பட்டவனால் வழிநடத்தப்பட்டார்கள்.

அதன் விளைவாக சாத்தானும் அவனுடைய தூதர்களும் பரலோகத்துக்கு புறம்பே தள்ளப்பட்டார்கள். **பாவஞ்செய்த தூதர்களை மீட்க எந்த வழியும் ஏற்படுத்தப்படாமலிருந்திருக்கிறது.** ஏனென்றால் அவர்கள் ஆவிகளாயிருக்கிறார்கள் அவர்கள் மெய்யான தேவனுடைய பிரசன்னத்தில் வாழ்ந்தவர்கள். நியாயத்தீர்ப்பின் கடைசி நாளிலே பிசாசும் அவனுடைய தூதர்களும் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போடப்படுவார்கள் (மத்.25:41) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த இடைப்பட்ட காலத்தில் சாத்தானும் அவனுடைய சந்தர்ப்ப வாதிகளும் பூமியை பொல்லாப்பினாலும் அதனுடைய சகல விளைவுகளினாலும் கெடுத்து சாத்தானை பின்பற்றுவார்கள். இதைக் குறித்து தேவன் எச்சரிக்கிறார்.

"பூமியிலும், சமுத்திரத்திலும் வாசமாயிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக் காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும் என்று சொல்லக்கேட்டேன்" (வெளி.12:12). மேலும் "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

**பாவம் நிறைந்த மனுஷர்களின் முடிவு என்னவாக இருக்கிறது?**

மனுஷர் பாவம் செய்வதை தெரிந்தெடுத்து கொள்கிறார்கள். நம்மில் ஒருவரும் அநேக சமயங்களில் சோதனைகளிலும், சாத்தானுடைய வஞ்சனையிலும் விழாமல் வாழ்ந்திருக்கிறதும், மரித்திருக்கிறதும் இல்லை. பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற தண்டனை நமக்கு விதிக்கப்பட்டிருக்கிறதா? (மத்.25:41). மீண்டுமாக தெரிந்தெடுப்பு நம்முடையதாயிருக்கிறது. நாம் தேவனுடைய மகிமையை ஒருபோதும் கண்டதில்லை என்பதை அவர் அறிந்திருக்கிறார். நாம் அவரிடத்தில் அன்பு கூர்ந்து

அவருக்கு கீழ்ப்படிகிறோம், ஏனென்றால் அவர் இருக்கிறார் என்றும், அவர் எல்லாருக்கும் மேலான தேவனாக இருக்கிறார் என்றும் **நாம் விசுவாசிப்பதை தெரிந்து கொண்டிருக்கிறோம்.**

"கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்; என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.

**"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்"** (சங்.103:8-14).

தேவன் உலகத்தின் பொல்லாப்பிலிருந்து நம்மை விடுவிக்கவும் அத்தோடு இந்த ஜீவனுக்குப்பின் அவரோடே கூட நித்திய நித்தியமாக நம்மை இரட்சிக்கவும் ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கிறார். என்றென்றைக்கும் ஜீவனோடிருக்கிற அவருடைய அன்பும், இரக்கமும் எல்லாரையும் சென்றடையும். மேலும் அநேகமாக நாம் அனைவரும் இரட்சிக்கப்படுவோம் - **நாம் அவரைத் தொரிந்து கொள்வோமாகில்...**

**கேள்விகள்**

1. இவ்வுலகத்தில் நாம் என்ன காண்கிறோம்?
2. நன்மையையும், தீமையையும் குறித்து சிலமார்க்கங்கள் என்ன போதிக்கின்றன?
3. தேவன் மனுஷருக்குள்ளே தீமையை உருவாக்கினாரா? இல்லை, ---------- ----------- -------- அவர்கள் ------- -------- கீழ்ப்படியாமல் இருக்க.
4. வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தூதர்களின் வகைகளை பெயர் சொல்லவும்.
5. லூஸிபர் வீழ்ச்சியடைய காரணமாயிருந்த அவனுடைய மனநிலை என்னவாக இருந்தது?
6. லூஸிபர் சிருஷ்டிக்கப்பட்ட போது, அவன் காப்பாற்றுகிறதற்காக ------- ------ ---- என்று விவரிக்கப்பட்டான். அவன் ------- --------- வைக்கப்பட்டான் என்று விவரிக்கப்பட்டிருக்கிறான்.
7. வெளி.12:7-12 வசனப்பகுதியின்படி வானத்திலே யுத்தம் உண்டானபோது யார் யாருடனே யுத்தம் செய்து கொண்டிருந்தார்?
8. சாத்தான் தேவனுடைய சமூகத்தினின்று தள்ளப்பட்ட போது அவன் எங்கே சென்றான்?
9. அவன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறான்?
10. தேவதூதர்களில் சிலரை குறித்து யூதா எழுதின நிருபத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

11. விழுந்து போன தூதர்களுக்கும் எந்த இரண்டு பட்டணங்களுக்கும் இடையே இணையான காரியம் சொல்லப்பட்டிருக்கிறது? அப்பட்டணங்களிலே இருந்த தவறு என்ன? அவைகளுக்கு தேவன் என்ன செய்தார்?

12. தேவன் தமக்கு எதிராக கலகஞ் செய்த தூதர்கள் மன்னிக்கப்படும்படியாக ஒரு வழியை ஏன் உண்டாக்க வில்லை?

13. எத்தனை மனுஷர்கள் சாத்தானுடைய சோதனைகளை உற்றுக் கவனித்து பாவம் செய்திருக்கிறார்கள்?

14. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்கு கீழ்ப்படிகிறோம் --------அவர் இருக்கிறார் என்றும் அவர் எல்லாருக்கும் மேலான தேவனாக இருக்கிறார் என்றும் -------- நாம் ------ இருக்கிறோம்.

15. எவ்வாறு தேவனுடைய அன்பும்,இரக்கமும் நம்மை அடைந்து நம்முடைய பாவத்தின் விளைவுகளிலிருந்து நம்மை இரட்சிக்க முடியும்?

# ஏது தேவனுடைய புத்தகம்?
# Which Is God`s Book?

## 7

**நாம்** கண்டிருக்கிற மார்க்கங்களின் உருவமைப்புகளின் சுருக்கமான காட்சிகள் முற்றுப் பெறாதவைகளாக மாத்திரமே இருந்த போதிலும், அவைகள் நன்றாக பொருந்தியிருக்கிற விதமானது அவைகளுக்கிடையேயுள்ள நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்கள் குறிப்பிடத்தக்கவகையில் ஒத்த தன்மையுடையவைகளாக இருக்கின்றன. வேதாகமத்தில் நமக்காக அதிக முழுமையான பதிவு நமக்காக பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெளிப்படையான இதிகாச பாத்திரங்களும் கதைகளும், மற்ற வகை "புனித" நூல்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. வேதாகமத்தில் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்ட காலம் தொடங்கி அவனுடைய வரலாற்றை குறித்த உண்மையான விளக்கத்தை நிரூபிக்கப்பட்ட சுருக்கமான, ஆனால் தெளிவான உண்மை சம்பவத்தை நாம் வாசிக்க முடியும்.



**வரலாற்றுத் தொடர்புடைய வேதாகம ஆவண மதிப்பு.**

இது அதற்குள்ளேயே ஒரு பொக்கிஷமாக இருக்கிறது. வேதாகம குறிப்பானது மனித இனத்துக்கு கொடுக்கப்பட்டிருக்காவிடில் இந்த அண்ட சராசரம், நமது உலகம் அல்லது மனித இனம் உருவானது என்பதை நாம் அறிந்திருக்க மாட்டோம். பாவம் எவ்வாறு உருவானது என்பதையும் அதன் விளைவாக நன்மைக்கும், தீமைக்கும் இடையே உருவான போராட்டத்தையும் அறிந்திருக்க மாட்டோம். பரிணாம கொள்கையாளர்களின் கருத்துக்கு எதிராக ஆதிகால மனுஷர்கள் மிருகங்களைக் காட்டிலும் சற்று கூடுதலாக மேம்பட்டவர்களாக இருந்தார்கள். சகல ஜனங்களும் நிர்வாணமாகவும், அலைந்து திரிகிறவர்களாகவும் குகைகளிலும் மற்ற தற்காலிகமான உறைவிடங்களிலும் வாழ்ந்து வந்தார்கள். வேதாகமம் சொல்கிறது, ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய ஆரம்ப கால சந்ததியாரும் முழுமையான மனுஷர்களாய் இருந்தது மாத்திரமல்ல திறமையானவர்களாகவும், புத்திக் கூர்மையுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் பட்டணங்களை கட்டினார்கள், விவசாயம் செய்கிறவர்களாகவும், திரளான மந்தைகளையுடையவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் இசைக்கருவிகளை உருவாக்கினார்கள், பித்தளை மற்றும் இரும்பு வேலை செய்கிற தொழிலாளிகளாகவும் இருந்தார்கள். தொழிலாளர்களுக்கு ஆசாரியராகவும் இருந்தார்கள் (ஆதி.4:16-22). உண்மையாகவே ஆதியாகமத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிற காட்சியானது ஆரம்ப கால நூற்றாண்டுகளின் போது நடந்த எல்லா சம்பவங்களினை அடையாளப்படுத்தும் ஒரு மெய்யான வரை குறிப்பாக மாத்திரமே இருக்கிறது. ஏனென்றால் வேதாகமம் எழுதப்பட்டதற்கான நோக்கம் ஒரு முழுமையான வரலாற்றை அளிப்பதற்காக அல்ல, ஆனால் மனித சமுதாயம் கட்டப்படுவதற்கான தேவ செய்தியின் மேல் அஸ்திபாரத்தை போடும்படியாக எழுதப்பட்டது.

இந்த ஆவணம் தொடர்கையில் பாவம் மிதமிஞ்சி பெருகி அதன்விளைவாக உலகளாவிய ஜலப்பிரளயம் ஏற்பட்டு அதன் பாதிப்பு நம்முடைய பூமிக்குரிய உலகத்தில் ஏற்பட்டதும், இச் செய்தியின் முக்கிய பாகங்களாக இருக்கின்றன. இத்தகைய வேதாகம தகவல் இல்லாவிட்டால் ஆரவாரமான ஜலங்கள் எழும்பி பூமியை மூடிவிட்ட ஜலப்பிரளயத்தின் போது மனுஷர் பிராணிகள் மற்றும் தாவரவகைகளாகிய ஜீவன்கள் இவைகள் வேகமாக அடக்கம் செய்யப்பட்டதால் உருவாகிய பெரிதான அகழ்வு படிமங்களை குறித்த எந்த விளக்கமும் நமக்கு கிடைத்திருக்காது. சமுத்திரத்திலிருந்த ஜீவராசிகளின் அகழ்வு படிவங்கள் (Fossils) எப்படி மலைச் சிகரங்களை அடைந்தன என்று நாம் அறிந்திருக்க மாட்டோம். ஜலம் அடுக்கடுக்காக எழும்பி பூமியின் மேற்பரப்பை எவ்வாறு மூடிப் போட்டது என்பதற்கான ஒரு விளக்கமும் இருந்திருக்காது.

நோவாவின் குமாரர்கள் - சேம், காம், யாப்பேத் - வரலாற்று மக்களின் முற்பிதாக்கள் ஆனார்கள். இன்று சேமின் சந்ததி மத்திய கிழக்கில் வாழ்கிறார்கள்; காமின் சந்ததி ஆப்பிரிக்காவில் குடியேறினார்கள்; யாப்பேத் ஐரோப்பா என்று அழைக்கப்பட்ட தேசத்தில் குடியேறினார்கள்

**தேசங்களின் பட்டியல்**

இந்த ஒவ்வொரு ஜனங்களின் வம்ச வரலாறும் ஆதியாகம் 10,11 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுடைய சந்ததியாருடனே எழுபது தேசங்களின் பெயர்களும் சொல்லப்பட்டிருக்கிறது. வேதாகமத்தின் சரியான தன்மையை சந்தேகிக்கிறவர்கள் "இந்த தேசங்களின் பட்டியல் ஆதியாகமத்தை எழுதியவரின் கட்டுக் கதையே அல்லாமல் வேறல்ல" என்று கூறியிருக்கிறார்கள். மிகவும் பழமையான இந்த தேசங்களை குறித்த சில குறிப்புகள் அறியப்பட்டிருக்கின்றன. ஆனாலும் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய தேடும் பணியை தொடர்ந்தபடியால், உண்மையிலேயே இருந்த இந்த தேசங்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய நிரூபணத்தை வேதாகம குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறபடியே சரியாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள் (ஜலப்பிரளயத்துக்கு **பின்பு**, பில் கூப்பர்)

மீண்டும் வேதாகமத்தின் சித்தரிப்பை உறுதி செய்யும் வகையில் ஜலப்பிரளயத்தை தொடர்ந்துவரும் மிக தொன்மையான நாகரீகங்கள் முன்னேற்றம் அடைந்த கட்டுமான வகைகள், திறமை வாய்ந்த வேலைப்பாடுகள் - 'குகை மனுஷர்களின்' வேலை அல்ல என மீண்டும் பரிணாம கொள்கையாளர்களின் உபதேசத்திற்கு எதிரிடையாக இருக்கின்றன. பட்டணங்கள் அடிக்கடி திட்டமிடப்பட்ட முறைமைகளின்படி வீடுகளுக்கான தண்ணீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வசதிகளுடன் இருந்தன. சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கற்களை பயன்படுத்தி கட்டப்பட்ட மாபெரும் நினைவுச் சின்னங்கள் இருந்தன, அவை இன்றைக்குள்ள பொறியாளர்களுக்கும் சவால் விடக் கூடிய வகையில் அமைந்துள்ளன.




வேதாகம குறிப்பின் வரலாற்று சரி நிலைக்காகவும் அது நமக்கு சொல்லுகிறபடி நாம் யார் என்ற செய்திக்காகவும் நாம் இங்கு உயிர் வாழத்தக்கதாக எப்படி வந்தோம், இன்றைக்கு உலகத்தில் நம்முடைய நோக்கம் என்ன என்ற தகவலை, நமக்கு சொல்கிறபடியால் நாம் மிகவும் கடன்பட்டவர்களாயிருக்கிறோம். இந்த

நம்பிக்கையான மிகவும் ஆதாரம் உள்ள தகவல் நமக்கு இல்லாவிடில், நாம் ஒரு அறியாமை கடலில் இடறி விழுந்திருப்போம். வேதாகமத்தில் புராண அடிப்படை கொள்கைகள் இல்லாதிருப்பது மற்ற மார்க்க புத்தகங்களிலிருந்து நம்மை நோக்கி வந்திருக்கிற முரண்பாடுகளுக்கு இது மோதலான கருத்தாயிருக்கிறது.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி மிகவும் பழமையான இந்து வேதங்களின் பாடல்கள் வேதாகம குறிப்புக்கு ஒத்த வகையில் தேவன் மற்றும் சிருஷ்டிப்பை பற்றிய சம்பவங்களுக்கான குறிப்புகளை கொண்டிருந்தாலும், பின் நாட்களில் இந்து மத வேதங்களும் புனித புத்தகங்களும் இணைக்கப்பட்டபடியால் எண்ணிக்கைக்கு அடங்கா தெய்வங்களைப் பற்றியும், பூமியின் "சரித்திரத்தை" பற்றியும் அநேக புராணக்கதைகள் தோன்றின. அப்படிப்பட்ட கதைகளில் ஒன்று "அமிர்தம்" என்னும் ஒரு திரவத்தை பெறத்தக்கதாக அதை குடிப்பவர்கள் உயிரோடு இருப்பதற்காக அதை பெறும்படியாக எதிர்பார்ப்பு இருந்தது. அவர்கள் அழியாத தன்மையை பெற்றுக் கொள்ளும்படியான எதிர்பார்ப்பும் இருந்தது. ஜே.எம். மேக்ஃபை எழுதிய **இந்தியாவின் புராணங்களும் பழங்கதைகளும்** என்ற புத்தகத்திலிருந்து, "பொற்காலத்தில் உலகம் இளமையாயிருந்த பொழுது தேவர்களோ அல்லது அவர்களுடைய ஒன்றுவிட்ட சகோதரர்களோ, பேய்களோ முடிவில்லாதவர்களா யிருக்கவில்லை. மற்ற சிருஷ்டிகளைப்போலவே அவர்களும் முதிர்வயது மற்றும் மரணத்துக்குட்பட்டவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய தன்மைகளில் இது ஒரு குறையாக இருந்தது. அவைகள் பகுதிகளாக பிரித்து அகற்றப்பட வேண்டியதாயிருந்தது. மேரு பர்வதத்தின் சரிவுகளில் விருப்பமுள்ள குழுக்களின் ஒரு மாநாடு சரியாக நடத்தப்பட்டது....

"கிரியைகளெல்லாம் தொடங்கப்படுவதற்கு முன்பு ஒரு கடைந்த துருவம் அத்தியாவசியமானதாக இருந்தது. அந்த நோக்கத்திற்காக தேவர்களும் பேய்களும் மந்தாரா என்றழைக்கப்பட்ட ஒரு பர்வதத்தை பயன்படுத்த தீர்மானம் செய்தார்கள். அந்த பர்வதம் 77,000 மைல் உயரமுள்ளதாகவும், அதற்கு சமமான தூரத்திற்கு அதன் வேர்கள் ஆழமாக சென்ற நிலையிலும் இருந்தது. அவர்கள் அதை வேரோடு அகற்ற முயற்சி செய்த பொழுது, அவர்கள் தங்களுடைய ஒருங்கிணைந்த முயற்சி பலனளிக்கவில்லை என்பதை கண்டார்கள்... எவ்வாறு இருப்பினும் அவர்கள் கவலைப்படவேண்டாம் என்று விஷ்ணு அவர்களுக்கு சொன்னார். ஆனந்தா என்ற பெரிய சர்ப்பம் அவர்களுக்காக மலையை அகற்றும் ... வாசுகி என்ற மற்றொரு சர்ப்பமும் அந்த பணியை செயல்படுத்த ஒத்துக் கொண்டது (புதற்றத்தை ஏற்படுத்தும் ஒரு கயிறாக). ஆயிரம் வருஷங்களுக்கு மேலாக தேவர்களும் பேய்களும் தங்களுடைய கடுமையான பணியில் ஈடுபட்டார்கள்....

".... அவர்கள் முன்னும் பின்னுமாக அவனை (வாசுகி) இழுக்கையில்... அவன் திரவ நஞ்சை நீரோடைகளாக தன்னுடைய கோபம் நிறைந்த பற்களிலிருந்து முன்பாக ஊற்றினான் அந்த நஞ்சு நிலப்பகுதியை துடைத்துப் போட்டது. இறுதியாக முழு பூமியின் மேலாகவும் பெருமளவில் அழிவுக்கு நேராக தேவர்களையும், பேய்களையும் பிராணிகளையும், மனுஷரையும் கொண்டு சென்றது. தங்களுடைய துக்கத்தில் அழிக்கும் கடவுளாகிய சிவனை நோக்கி வணங்கினார்கள்..... அவன் விஷத்தை பருகியவனாக இருந்தான். இந்த வல்லமையான விஷத்தை



குடித்த செய்கை சிறு தீங்கை கூட அவனுக்கு ஏற்படுத்த வில்லை. ஆனால் இது எப்பொழுதும் கவனிக்க கூடிய ஒன்றாக இருந்தது. அது அவனுடைய தொண்டையில் ஒரு நீல நிற அடையாளத்தை ஏற்படுத்தியது. இந்நாள் வரைக்கும் அவனை வழிபடுகிறவர்கள் அவனை நீல கண்ட தேவனென்று அழைக்கிறார்கள்...."

தேவனிடத்தில் நம்பிக்கையற்றவர்களுடைய படைப்பாகிய இதிகாசங்களுக்கும், வேதாகமத்தில் உள்ள குறிப்புகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு என்னவென்றால் வேதாகமத்தில் பெரிதான அறிவு பூர்வமான சாட்சிகள் இருந்தது அவைகளுக்கான உரிமையாளர் தெய்வீகமானவர் என்பதே!

## நாம் வேதாகமத்தை எவ்வாறு பெற்றோம்?

உலகிலுள்ள சகல புத்தகங்களின் மத்தியில் இன்னும் மார்க்க சம்பந்தமான "புனித வார்த்தைகள்" மத்தியிலும் வேதாகமம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. பெரும்பாலான புராதான நூல்களுக்கு ஒன்று அல்லது இரண்டு பிரதிகள் அல்லது முற்றுப் பெறாத பகுதிகள் மாத்திரமே இருக்கின்றன. சில சமயங்களில் அப்படிப்பட்ட நூல்களை நம்முடைய அறிவானது மற்ற எழுத்தாளர் களால் கூறப்பட்ட மேற்கோள்கள் மூலமான செய்திகள் வாயிலாக மாத்திரமே அறிந்து கொள்கிறது. ஆனாலும் பழைய புதிய ஏற்பாடுகளின் தொன்மையான பிரதிகள் மூலபாஷைகளில் நமக்கு இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் இன்று நமக்கு இருக்கின்றன. ஆரம்பகால எழுத்தாளர்களின் மேற்கோள் களில் இருந்து மாத்திமே முழுவேதாகமும் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க முடியும். இது தேவனுடைய வார்த்தை என ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது.



வேதாகமம் எப்பொழுது எழுதப்பட்டது, அது யாரால் எழுதப்பட்டது? இதிகாசத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்தாளர்கள், தங்களை சுற்றியுள்ள மார்க்கங்களை குற்றஞ்சாட்டுகிறார்கள். ஏனென்றால் அந்த மதங்கள், வேதாகமத்தின் முதல் புத்தகங்கள் எழுதப்படுவதற்கு முன்பு ஆதிக்கம் பெற்றவைகளாய் இருந்தன ஆனால் அந்த எழுத்தாளர்கள் தங்களுடைய சுய அறிவிலிருந்து மாத்திரம் எழுதியிருப்பார்களேயாகில், தங்களை சுற்றியுள்ள மத நம்பிக்கைகளை அவர்கள் ஒருங்கிணைத்து எழுதியிருப்பார்களேயாகில், அவர்களுடைய செய்தியானது, அதே வகையான இதிகாசத்திற்குரிய மற்றும் மூட நம்பிக்கையாகிய மத சடங்காச்சாரங்கள் மற்றும் எழுதப்பட்ட சொற்றொடர்கள் நிறைந்தவைகளாக இருந்திருக்கும்.

ரஃபிக் சகரியா என்பவர் தம்முடைய **"தேவனை கண்டு பிடித்தல்"** என்ற புத்தகத்தில் கடவுளை குறித்த பழமையான கருத்துக்களை பின் வருமாறு விளக்கியிருக்கிறார்:

"இந்த தேவர்களும், தேவதைகளும் வரையப்பட்ட சித்திரங்களிலும், வர்ண வேலைகளிலும் சிற்ப வேலைப்பாடுகளிலும் வெவ்வேறு அமைப்புகளில், வெவ்வேறு வழிகளில் அடையாளப்படுத்தபட்டிருக்கின்றனர், இவைகள் அவர்கள் வளமாயிருந்த ஆரம்பகால நாகரீக காலங்களை நமக்கு ஞாபகம் ஊட்டுகின்றன.

இவைகள் போஜனம் மற்றும் பானம்பண்ணி களியாட்டுகளில் ஈடுபடுவதாக காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கூலிக்காக போர் செய்தல், வெற்றிகளை கொண்டாடுதல் இவைகளும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. பாலுறவுக்கு தொடர்பான எதிர்பாராத சந்திப்புகள் சில சித்திரங்களில் அடையாளப் படுத்தப்பட்டு வரையப்பட்டிருக்கின்றன. முன்பு அவைகளெல்லாம் தெய்வீக உலகில் வாசம் செய்கிறவைகளாக கருதப்பட்டிருந்தன. அவைகள் ஏறத்தாழ மனுஷ உலகத்தின் சரியான நகலாக கருதப்பட்டிருந்தன; அதில் ஒவ்வொரு தேவனுக்கும், தேவதைக்கும் ஒரு குறிப்பிட்ட வேலை ஒதுக்கப்பட்டிருந்தது. ஒருவர் காற்றுக்கு பொறுப்பான வராகவும், மற்றொருவர் ஜலத்துக்குப் பொறுப்பானவராகவும், மூன்றாம் நபர் பூமிக்கு பொறுப்பானவராகவும் இப்படியே சென்று கொண்டிருந்தது. அவைகளுக்கு மனுஷ உருவங்கள் கொடுக்கப்பட்டிருந்தது மாத்திரமல்ல அவர்கள் மனுஷரைப் போன்றே தாலந்து மற்றும் திறமை கொண்டவர்களாக வெளிப்படுத்தப் பட்டிருந்தார்கள் மேலும் அவர்கள் புத்திகூர்மை மற்றும் நன்மை மாத்திரம் அல்ல தீமையும் செய்யக் கூடியவர்களாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்தார்கள்.

வேதாகமத்திலுள்ள தேவனை குறித்த் சித்தரிப்போ - மனித இனத்தை குறித்த எந்த குறிப்போ - மனுஷனுடைய சிருஷ்டிப்பின் காலம் தொடங்கி ஜலப்பிரளயத்தினால் ஏற்பட்ட அழிவு வரலாற்றுக்கு தொடர்புடையதாய் இருக்கிற, உண்மையாகவே வேதத்தில் எழுதியிருக்கிறகாரியங்களை குறிப்பிடுகிறவைகள் ஜனங்கள் மத்தியிலே அந்த காலத்திலும், ஸ்தலத்திலும் பரிசோதிக்க படாததாய் காணப்படுகிற இதிகாச கேடுபாட்டை எடுத்துப்போடுகின்றன. வேத வசனத்தில் இக்கருத்து மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. "....கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று" (எரே.1:2) இன்னும் 2தீமோ.3:16-ல் முழு விளக்கமும் கொடுக்கப்பட்டது: "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது..." என்று.

வேதாகம எழுத்தாளர்கள் தங்களுடைய வரலாற்று தகவல்கள் அல்லது தேவனை குறித்த தங்களுடைய கருத்து, அல்லது அவர்களுடைய செய்தி போன்றவைகளை தங்களை சூழ்ந்திருந்த பாரம்பரியங்கள் மற்றும் மார்க்கங்களிலிருந்து அவர்கள் எழுதவில்லை. மாறாக அவர்கள் தேவன் அவர்களுக்கு சொல்லும்படி கூறியது எதுவோ அதை மாத்திரம் அவர்கள் மிக உறுதியாக அறிவித்தார்கள். ஆகையால் வேதாகமமானது பழங்கால நூல்கள் மத்தியிலும் கடவுளை குறித்த சித்தரிப்புகள் மத்தியிலும் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. இது ஒட்டு மொத்தமான இதிகாச கேடுபாடுகளை விட்டு நீண்ட காலமாக அகன்று போன வரலாற்றையும் கூட உள்ளடக்கியதாக இருக்கிறது. விஞ்ஞான உண்மைக்கு தொடர்புடைய சொற்றொடர்கள், விஞ்ஞான உண்மைகள் அந்த நாட்களில் அறியப்படாமலும், உணரப்படாமலும் இருந்த போதிலும், வேதவாக்கியங்கள் எழுதப்பட்ட பொழுது விஞ்ஞானரீதியாக சரியாக எழுதப்பட்டிருந்தன.

உலகத்திலே இன்றைக்கு பல்வேறுபட்ட மார்க்க சம்பந்தமான வகையில் மனுஷனை வழிநடத்தக்கூடிய அநேக புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. சிலர் இன்றைக்கு மனுஷனை பார்க்கிலும் பெரிதான ஒரு ஆவியினால் தாங்கள் ஏவப்படுகிறதாக உரிமை கொண்டாடுகிறார்கள். எல்லா மார்க்கங்களுமே மெய்யாகவே தாங்கள் இருப்பதற்கு தெய்வீகமான அதிகாரம் உடையவைகளாக

இருப்பதாக உரிமை கொண்டாடுகின்றன. தாங்கள் போதிக்கிற உபதேசங்களுக்காக அவைகள் சொல்லுகிற சட்டதிட்டங்களின்படி மனிதன் வாழ வேண்டும் என்று அவைகள் போதிக்கின்றன.

ஆனால் நாம் கவனித்திருக்கிறபடியே நம்மை சுற்றியிருக்கிற உலகத்தையும், நம்மையும் கவனிப்பதே ஒரு சிந்திக்கக்கூடிய மனுஷனை இந்த எல்லா கடவுள்களும், மார்க்கங்களும் உண்மையானவைகளாக இருக்க முடியாது என்று நம்பச் செய்கிறதற்கு போதுமானதாக இருக்க முடியும். நாம் காண்கிற இந்த காரியங்கள் அனைத்தும் பல சிருஷ்டிகர்கள் அல்ல, ஒரே சிருஷ்டிகர் இருக்கிறார் என்று சாட்சி கொடுக்கின்றன. அந்த புத்தகங்கள் தெய்வீகமான ஆசிரியரால் எழுதப்பட்டவை என்று உரிமை கொண்டாடுகிறவர்களின் ஆசிரியருக்கான தன்மை ஒன்றுக்கொன்று வேறுபட்டதாயிருக்கிறது. இயற்கையாகவே அவைகள் அனைத்தும் தெய்வீகமான தொடக்கத்தை உடையவைகளாக இருக்க முடியாது. தெய்வீகமான சிருஷ்டிகர், பூரணமான ஒருவர் தாம் உருவாக்கிய மற்ற வெளிப்படுத்துதல்களுக்கு முரண்பாடாக இருக்க முடியாது என்பது தெளிவாக இருக்கிறபடியால் அவைகள் அனைத்தும் அந்த ஒரே பூரணமான தெய்வீகமான சிருஷ்டிகரிடமிருந்து வர முடியாது. சத்தியமானது சத்தியத்திற்கே முரண்பாடாக இருக்கிறதில்லை. நம்முடைய பிரச்சனை என்ன வென்றால், நாம் அநேக நூல்களை பகுத்து ஆராய்ந்து எந்த ஒரு நூல் ஆட்சேபனைக்கு இடமின்றி மனுஷனுடைய திறனுக்கு மேலான நூலை ஏற்படுத்தும் திறனுடையவரால் ஏற்படுத்தப்பட்டது என்பதற்கான நிரூபணம் உடையதாக அது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

**தேவனுடைய மற்றும் அவருடைய புத்தகத்தின் குணாதிசயங்கள்**

**எந்த ஒரு புத்தகம் மெய்யாகவே தேவனிடத்தில் இருந்து வந்திருக்கிதோ அந்த புத்தகத்தின் பக்கங்கள் முழுவதிலும் தேவனுடைய குணாதிசயங்கள் காணப்படும்.**

▶▶ அது தொடக்கம் முதல் முடிவு வரை எந்த முரண்பாடும் இன்றி - முழுமையான ஐக்கியத்தை வெளிப்படுத்தும்.

**▶▶ அது மனுஷன் உருவாகும் முன்னே நடந்த காரியங்களை வெளிப்படுத்தி, மரணத்துக்கு பின் சம்பவிக்கப்போகிறது என்ன என்பது பற்றிய ஒரு தெளிவான காட்சியை அளிக்கக் கூடியதாக இருக்கும்.** ஏனென்றால் தேவன் நித்தியமானவராயிருந்து சாட்சியளித்திருக்கிறார், மேலும் சம்பவிக்கப் போகிற சகல காரியங்களையும் குறித்து சாட்சியளிக்கிறார்.

▶▶ அது **மனுஷன் அறியாத பல உண்மைகளை** கொண்டிருக்கும், புத்தகத்தின் ஆசிரியர் சகல காரியங்களையும் அறிந்திருக்கிறபடியால் **வருங்கால காரியங்களை முன்னுரைக்கும்.** தேவன் தம்முடைய சிருஷ்டிக்கு எதையெல்லாம் மிக சிறந்ததாக காண்கிறாரோ அதை செய்கிறதற்கு அவர் அளவில்லாத வல்லமையுடையவராக இருக்கிறார் என்பதை அது எடுத்துரைக்கும்.

**▶▶ அது மனுஷனுடைய வல்லமைக்கு மேலானதாகவும் அதை அழிக்கும் வல்லமையுடையதாகவும்,** எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்கும் ஒருவரால் பாதுகாக்கப்படுகிறதாகவும் இருக்கும்.

▶ அதன் ஆக்கியோன் பூரணராயிருக்கிறபடியால் நிலையான தேவைக்காகவோ அல்லது தற்செயலான மறுபதிப்புக்காகவோ அல்லாமல் மனுஷரால் எழுதப்பட்ட ஒவ்வொரு புத்தகமும் உண்மையானதாயிருக்கிறது.

▶ **இந்நூல் முழுவதிலும், அதினுடைய ஒவ்வொருபக்கத்திலும் ஒரு அடிப்படை நோக்கத்தை கொண்ட ஒரே தேவனையும்** அந்நோக்கத்திற்கு பின்னே அவர் மனுஷனோடு கொண்டுள்ள ஈடுபாடு தொடர்புகளையும் வெளிப்படுத்தும்.

▶ **இந்நூல் தேவனுடைய அன்பின் பரிசுத்தத்தை** பிரதிபலிக்கக்கூடியதாகவும் தவறு செய்யும் மனுக்குலத்தை **விரும்பி** பரிதபிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

## தேவனுடைய புத்தகம்

பல் வேறுபட்ட மார்க்க புத்தங்களை நாம் கவனமாக படிக்கும்பொழுது அது வெளிப்படுத்துகிற **இந்த எல்லா தேவைகளுக்குமான ஒரே ஒரு அளவீடு என்னவென்றால் – அது வேதாகமம் மட்டுமே.**

▶ சில புத்தகங்கள் கட்டாயமாக ஒரு ஒழுங்கான அடிப்படையில் பரிசீலனை செய்து மாற்றப்படவேண்டும். அப்புத்தகங்களை ஆதரிக்கிறவர்கள் அவர்களுடைய பழமையான மார்க்க முறைமை இந்த நவீனகாலத்துக்கு ஏற்புடையதாக இல்லை என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும்.

▶ சில புத்தகங்கள் ஒரு கடவுளை மனுஷனுக்கு சற்று மேலாக மனுஷனை போன்றே ஆசைகள் சோதனைகள் மற்றும் பாவங்களுக்கு கீழ்ப்பட்டவராகவே காண்பிக்கின்றன.

▶ சில புத்தகங்கள் அநேகம் தேவர்களை நகைக்கக் கூடியவகையில் கற்றறிந்தோரால் அசட்டை செய்யப்பட்டு உண்மையற்றவைகளை தங்கள் மனதுக்கு ஏற்றபடி வெளிப்படுத்துகிறார்கள்.

▶ சிலர் மனிதனிடமுள்ள மேன்மையாக இருத்தல், மேன்மை யானவைகளை செய்தல் போன்றவைகளுக்கான வாஞ்சையை தூண்ட தவறிவிடுகிறார்கள். மனுஷனுக்கு முன்பாக ஒரு முன் மாதிரியான பரிசுத்தத்தை அடையும் நிலையில் வாழுகிற ஒரு கடவுளை குறித்த சித்தரிப்பு இவர்களுக்கு இல்லை.

▶ சிலர் அற்புதங்களை செய்வதாக உரிமை கொண்டாடுகிறார்கள். ஆனால் அவைகள் அற்புதம் என்ற வார்த்தையையே பரியாசம் செய்வதாக இருக்கிறது.

▶ மரணத்துக்கு பின் மனுஷனுக்கு என்ன சம்பவிக்கிறது என்ற விரிவான காட்சிகளை சில புத்தகங்கள் சித்தரிக்கின்றன.

ஒரே ஒரு புத்தகம் மாத்திரமே மனுஷன் தன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்ளும் திட்டத்தை மாத்திரமல்ல, மனுஷன் தனக்கு தானே அதை செய்ய முடியாது என்பதினால் அதை செய்யும் ஒரு இரட்சகர் இருக்கிறார் என வெளிப்படுத்துகிறது. இந்த ஒரு புத்தகம் தவிர மற்ற எல்லா புத்தகங்களும் தேவனுடைய ஸ்தானத்தை குறைவாக அளவிட்டு காண்பிக்கின்றன, நாம்

அவைகளை குறித்து படித்தவகையில் ஒரே ஒரு தேவன் இருக்கின்றபடியால் எந்த விதமான எதிர்ப்புக்கும் இடமின்றி இந்த ஒரு புத்தகம் மாத்திரமே அவருடைய கிரியை என்பதற்கு தகுதி உடையதாக இருக்கிறது. அப்புத்தகம் எழுதப்பட்டதை அவர் வழிநடத்தியிருப்பாரேயாகில், ஒரு நவீன கால எழுத்தாளரின் கிரியைகள் அவரை நன்கு அறிந்தவர்களால் அங்கீகரிக்கப்படுகிறபோது தவறுகளுக்கு இடமின்றி அப்புத்தகத்தின் பக்கங்கள் முழுவதிலும் மகிமைப்படுவார்.

**ஒற்றுமை**

**உருவாக்கியதில் ஒற்றுமை.** இந்த ஒரு புத்தகம் இருக்கிறதென்றால் அதுவே ஒரு அற்புதமாக இருக்கிறது. இதன் முதல் பகுதியானது எகிப்தின் சகல ஞானங்களையும் கற்றறிந்து எகிப்திலே ஒரு அதிபதியாயிருந்த ஒரு மனுஷனாகிய மோசே என்பவரால் ஏறத்தாழ மூவாயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்டது. இப்புத்தகத்தின் கடைசி பகுதி 1900 க்கும் அதிகமான ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் தாழ்மையான நிலையில் ஏஜியன் சமுத்திரத்திலிருந்த ஒரு சிறிய தீவிற்கு நாடு கடத்தப்பட்ட ஒரு மீனவரால் எழுதப்பட்டது. இந்த இரு எழுத்தாளர்களுக்கும் இடையே ஆயிரத்து அறுநூறு வருஷங்கள் கடந்து சென்றன. இப் பெரிய பகுதிகள் மற்ற அறுபத்து நான்கு பகுதிகள் இன்னும் வேறு முப்பத்தெட்டு எழுத்தாளர்களால் எழுதப்பட்டன!

இம்மனுஷர்களில் சிலர் ஐசுவரியவான்களாய் இருந்தார்கள், சிலர் மிகவும் ஏழைகளாயிருந்தார்கள்; சிலர் கல்வியறிவுள்ளவர்களாகவும், சிலர் எவ்வகையிலும் கல்வியறிவற்றவர்களாகவும் இருந்தனர். சிலர் இராஜாக்களுடைய ஸ்தலங்களில் வாழ்ந்தார்கள், இன்னும் சிலரோ வீடென்று அழைக்க ஒரு இடமுமின்றி வனாந்தரத்தில் சுற்றி திரிந்தார்கள். அவர்களுடைய வாழ்நாட்காலம் 1600 வருஷங்களை உள்ளடக்கியதாக இருந்தது. அவர்களில் சிலர் சமகாலத்தை சேர்ந்தவர்களாக இருந்தார்கள் இன்னும் சிலரோ மற்றவர்களால் எழுதப்பட்டவைகளை சென்றடையும் வாய்ப்பு உள்ளவர்களாக இருந்தார்கள். முழுமையாக இந்த அறுபத்தாறு புத்தகங்களும் ஒன்றாக கொண்டுவரப்பட்ட பொழுது, முதல் புத்தகத்தின் தொடக்கத்தில் இருந்து கடைசி புத்தகத்தின் முடிவுவரை ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட சம்பவமாக இருக்கிறது! பல காலங்களில் கிடைத்து இதுவரை சேகரிக்கப்பட்ட சகல நூல்களிலும் பார்க்கும் பொழுது இந்த விதமாக ஒரு அருமையானதும், அற்புதமானவகையில் எழுதப்பட்டதுமான வேறொரு புத்தகம் இல்லை!

▶ **எழுதியதில் ஒற்றுமை:** ஒருவர் வேதாகத்தின் பக்கங்களை வாசிக்கின்ற பொழுது நாற்பது பேரின் எழுத்தை, சிந்தனையை அல்ல அது ஒருவருக்கே உரிய எழுத்துகளும், சிந்தனைகளும்தான் அது என்பதை அவர் உணர்ந்து கொள்கிறார்! இதை எழுதிய ஒவ்வொருவரும் தேவனால் ஏவப்பட்டது என்று உரிமை கொண்டாடினார்கள். அவர்கள் எழுதியதில் உள்ள முழுமையான ஒற்றுமை, ஒரு சிந்திக்கின்ற நபருக்கு அவர்களுடைய உரிமை கோரல்கள் வெறுமையானவைகள் அல்ல என்பதற்கு ஒரு பெரிய நிரூபணமாக இருக்கிறது.

இதில் ஈடுபாடுள்ள மனுஷர்களின் எண்ணிக்கை, இதை எழுதுவதற்கு எடுத்துக்கொண்ட வருஷங்களின் எண்ணிக்கை, எழுதிய மனுஷர்களின் வேறுபட்ட பின்னணிகள் இவற்றை போன்ற ஒத்த தன்மை கொண்ட வேறொரு புத்தகம் ஏதாகிலும் உண்டா?

▶ **மையப் பொருளில் ஒன்றுமை:** வேதாகமம் பரதீசில் இருக்கின்ற ஒரு மனுஷனின் பூரணமான தன்மையுடனே தொடங்குகிறது (ஆதியாகமம் 2) அவன் தன்னை உருவாக்கியவருக்கே எதிரியாக மாறும்படி அந்த நிலையிலிருந்து அவன் வீழ்ந்ததை அது காட்டுகிறது (ஆதியாகமம் 3) இந்த சம்பவம் தேவனுடைய திட்டமாகிய முழுமையான சந்தோஷம் என்ற நிலையிலிருந்து விழுந்து போன மனுஷனை அதே நிலைக்கே மீண்டும் கொண்டுவரும் வகையில் தொடர்ந்து செல்கிறது (ஆதி.22:15-18; 3:8,9) இன்னும் கீழ்ப்படிதலுள்ள மனுஷன் தேவனுடனே ஒப்புரவாகி அவருடனே நித்திய ஜீவனுக்குரிய சந்தோஷத்தை அனுபவிக்கும் ஒரு தெளிவான காட்சியுடன் முடிவடைகிறது (வெளி.22:1-5). **ஒட்டுமொத்தமான அறுபத்தாறு புத்தகங்கள் முழுவதிலும் மனுஷனுடைய மீட்பின் மையப்பொருள் வேதாகமத்தில் தங்க இழைகளாக மின்னுகின்றன.**

இந்த எல்லா புத்தகங்களும் வேறுபட்ட எழுத்தாளர்களால் எழுதப்பட்ட போதிலும் மெய்யாகவே **இவைகள் ஒரே நிகழ்ச்சியின் அறுபத்தாறு அத்தியாயங்களாக இருக்கின்றன.** மற்றொரு ஆச்சரியமும், அதிசயமும் ஆன உண்மை மேலோங்கி நிற்கிறது: **இந்த முழு சம்பவத்திலும் எந்த ஒரு இடத்திலும் ஒரு முரண்பாடு கூட காணப்பட வில்லை.** ஒரு மனுஷன் ஒரு காரியத்தை எழுதி, அபாரமான அறிவு கொண்ட சக எழுத்தாளர் ஒருவரால் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் எந்த ஒரு இடத்திலும் திருத்தி எழுதப்பட வில்லை! பிந்தி வந்த ஒருவரால் முந்திய புத்தகம் மறுபதிப்பாக இந்த காலத்துக்கேற்றவகையில் எங்கும் வெளியிடப்படவில்லை! இத்தகைய விநோதமான தோற்றம், எப்பொழுதுமே, முன்போ இன்னும் இன்றுவரையோ புத்தகங்களின் வரலாற்றில் நடந்ததில்ல.

## அறிவு

◆ **விஞ்ஞான வெளிப்படுத்துதல்.**

வேதாகமத்தின் எழுத்தாளர் மெய்யாகவே தேவனாக இருக்கிறபடியால் அநேக காரியங்களின் சுருக்கமான காட்சிகள் மனுஷனுடைய அறிவிற்கு அப்பாற்பட்ட வகையில் வேதாகமத்தின் பக்கங்கள் அனைத்திலும் எழுதப்பட்ட காலத்திலேயே பரவலாக காணப்படுகிறபடியால் இது ஆச்சரியமான காரியமல்ல.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மனுஷன் தேவனை கேள்வி கேட்க துணிந்த பொழுது தேவன் இத்தகைய விசாரணைகளினாலே அவனுக்கு சவால் விட்டார். "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி. அதற்கு அளவு குறித்தவர் யார்? அதின்மேல் நூல் போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு. அதின் ஆதாரங்கள் எதின் மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்? அப்பொழுது விடியாத

காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே" (யோபு 38:4-7) என்றார்.

இந்த வார்த்தைகள் எழுதப்பட்ட காலத்தில் சர்வ லோகத்தையும் குறித்து ஒரு குறைவான புரிந்து கொள்ளுதலே இருந்தது. சூரியனை சுற்றியுள்ள பூமியின் சுற்றுவட்டப்பாதை, அந்த சுற்றுவட்டப்பாதையில் பூமியை நிறுத்தியிருக்கிற புவி ஈர்ப்பு விசை அல்லது பூமியின் அளவு மற்றும் எடை போன்றவைகள் பூமியின் சுற்றுவட்டப்பாதையை எவ்வாறு தொடர்ந்து நடத்துவதற்கு காரணமாயிருக்கின்றன என்பதை புரிந்து கொள்வதற்கு சிக்கலாக இருந்தது. அந்த சமயத்தில் சர்வலோகத்தையும் சிருஷ்டித்த தேவன் ஒருவரே யோபுவினிடத்தில் சவால் விடத்தக்கவகையில் அப்படிப்பட்ட சிந்தனைகளையுடையவராக இருந்தார்.

கேள்விகள் இவ்வண்ணமாக தொடர்ந்தன, விஞ்ஞான ரீதியான கேள்விகளுக்கு யோபுவினால் பதிலளிக்க முடியவில்லை.

"மரணவாசல்கள் உனக்குத் திறந்ததுண்டோ? மரண இருளின் வாசல்களை நீ பார்த்ததுண்டோ? வெளிச்சம் வாசமாயிருக்கும் இடத்துக்கு வழியெங்கே? இருள் குடிகொண்டிருக்கும் ஸ்தானமெங்கே? (யோவு38:17,19).

மனுஷன் பூமியிலே குடியேறுவதற்கு முன்பு நிழலாக இருந்த கடந்த காலத்தை குறித்து நாம் வாசிக்கிறோம்:

"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார்; வெளிச்சம் உண்டாயிற்று" (ஆதி.1:2,3).



உலகம் சிருஷ்டிக்கப்பட்ட அதிசயமான சம்பவம் இப்படியாக தொடங்குகிறது. இதன் முடிவான கருத்தாக சகல காரியங்களும் நிலை கொண்டு இருப்பதற்கு புத்தியுள்ள பதிலாக மாத்திரம் இது இருக்கிறது. மனுஷன் இவைகளையெல்லாம் விஞ்ஞானத்தின் மூலமாக பெற்றுக்கொள்ளும் ஞானத்தையும் அறிவையும் அடைய வளருகிறவரையில் உலகத்தை குறித்த அநேக இரகசியங்கள் தேவனுடைய புத்தகத்தில் மறை பொருளாக வைக்கப்பட்டிருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்த உண்மைகள் வேதாதகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன, மனுஷன் அவைகளை காணத்தக்கதாக அவனுக்காக காத்துக் கொண்டிருந்தன.

உதாரணமாக மேலே குறிப்பிட்டபடி விஞ்ஞானிகள் சமீபத்தில் தான் **நட்சத்திரங்கள் ஒரு சத்தத்தை உண்டாக்குகின்றன** என்பதை கண்டுபிடித் திருக்கிறார்கள் அவைகள் பூமியிலே மிக உயர்வான தொழில் நுட்பக் கருவிகளை கொண்டுதான் கண்டறியப்பட முடியும். ஆனாலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சிருஷ்டிப்பின் ஆரம்பத்தை குறித்த தம்முடைய விளக்கத்தில், **நட்சத்திரங்கள் "பாடின"** என்று குறிப்பிட்டிருந்தார்.

சமீபத்திய வருஷங்களில் மாத்திரமே **ஒளியானது விண்வெளியினூடே காற்றில் பயணிக்கிறது** என்று அறியப்பட்டிருக்கிறது! மனுஷர்கள் இதை அறிவதற்கு வெகு காலத்திற்கு முன்பே தேவன் இதை அறிந்தவராய் ஒரு இடத்திற்கு பதிலாக **ஒளி எவ்விடத்தில் வாசம் செய்கிறது** என்பதையும் **விண்வெளியில் ஒளியின் அசைவையும்** குறிப்பிட்டிருக்கிறார்! மற்றொருவசனத்தில் நாம் "அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்" (ஏசா.40:22) என்று வாசிக்கிறோம். இந்த வார்த்தைகளைக்குறித்த ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், உண்மையாய் இருக்கின்ற இந்த வார்த்தைகள் எழுதப்பட்ட அந்த சமயத்தில் மனுஷர் பூமி தட்டையாக இருப்பதாக நம்பினார்கள். ஆனாலும் வெளிப்படுத்துதலினாலே **பூமி தட்டையாக அல்ல உருண்டையாக இருப்பதாக** அறிவித்தார்கள்!

இன்னும் பல மனுஷருடைய கட்டுக்கதைகளில் அட்லஸ் என்ற ஒரு இராட்சத மனுஷனுடைய தோள்களின்மேல் பூமியை தாங்கிக் கொண்டிருப்பதாக நம்பப்பட்டது அல்லது ஒரு பெரிய ஆமையால் தாங்கப்பட்டிருந்ததாக அல்லது ஒரு யானையின் முதுகின் மேல் அமைந்திருப்பதாக நம்பப்பட்டது. அப்படிப்பட்ட சிறுபிள்ளைத்தனமான கருத்துக்கள் அந்நாட்களிலிருந்த மிக ஞானமுள்ள மனுஷர்களாலும் நம்பப்பட்டன என்பது தேவன் தம்முடைய அளவில்லாத அறிவை தம்முடைய ஏவப்பட்ட எழுத்தாளர் மூலமாக 'அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார்" (யோபு 26:7) என்று அறிவிக்கும்படி செய்திருக்கிறார். பல நூற்றாண்டுகளுக்கு மேலாக **பூமி மெய்யாகவே அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது** என்பதை மனுஷர் அறியாதிருந்தார்கள்!

இந்நாள் வரைக்கும் கூட, **புவி ஈர்ப்பு விசையையும் அது எவ்வாறு செயல்படுகிறது** என்பதையும் விவரிப்பது விஞ்ஞானிகளுக்கு சாத்தியமில்லாத காரியமாயிருக்கிறது. பூமியானது எவ்வாறு மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் சுழன்று கொண்டிருந்த போதிலும், நாம் எவ்வாறு திடீரென்று வெட்ட வெளிக்கு அனுப்பப்படாமலிருக்கிறோம். நாம் அப்படிப்பட்ட பிரமாண்டமான இயக்கம் எதையும் உணராமல் இருக்கும்போது, அந்த வேகத்தைப் பார்க்கிலும் 100 மடங்கு வேகத்தில் சூரியனை எவ்வாறு சுற்றி வந்து கொண்டு இருக்கிறோம்! இந்த அண்ட சராசரத்தில் பூமியும் அதன் இயக்கமும் பற்றிய அநேக விந்தையான செய்திகள் இன்னும் முழுமையாக வரையறுக்கப்படவில்லை, மிகவும் குறைவாக அறியப்பட்டிருக்கிறது. ஆனால் மிகவும் புத்தி கூர்மையுடையவராயிருந்து பூமியை சிருஷ்டித்து அதன் எண்ணிமுடியாத குழப்பங்களை அறிந்தவரே இதை வடிவமைத்தவராய் இருக்கிறார். அவைகளில் சிலவற்றை அவர் வேதாகமத்தில் வெளிப்படுத்தியுமிருக்கிறார்.

ஆழ்ந்த பக்தியுடையவரும், தேவனுடைய புத்தகத்தின் மாணவருமாகிய மேத்யூஃபான்டைன்மாரி (1806-73) என்பவர் அதன் பக்கங்களில் **'கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும்"** (சங்.8:8) என்று குறிப்பிடப்பட்டிருப்பதை வாசித்தார். இந்த வழிகளை தான் காணப்போவதாக அவர் அறிவித்தார். தான் வாசித்ததை அடிப்படையாகக் கொண்டு அதை செய்வதற்காக திட்டமிட்டார். இன்றைக்கு அவர்

வரைந்த சஞ்சரிப்புக்கான கடல்பாதைகளை பெரிதான 10 கப்பல்கள் வரிசையாக பின்பற்றி செல்கின்றன. மதிப்பிற்குரிய மாரி அவர்கள் இன்றைக்கு சமுத்திர விஞ்ஞானத்தில் பிதா என்று அறியப்பட்டிருக்கிறார். ஆனால் சங்கீதங்களிலுள்ள தகவலை குறித்து அதன் எழுத்தாளர் இப்படிப்பட்ட ஒரு காரியத்தை வேறெந்த மனுஷரும் அறியாதிருந்த பொழுது எவ்வாறு அறிந்திருந்தார்? சகல அறிவையும் உடைய ஒருவரே என்பது தான் பதிலாக இருக்க முடியும் - **தேவன்** - அதை அவருக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

வேதாகமத்தின் பக்கங்களில் மனுஷனுடைய அறிவுக்கு மேலான அறிவுக்கு அப்பாற்பட்ட எழுத்துகளில் அந்த சமயத்தில் தகவல்களை மற்றும் அநேக வசனங்களை கொண்டிருந்தன. அவைகள் இன்னும் விஞ்ஞானிகளாலும் புரிந்து கொள்ளப்படாதவைகளாய் இருக்கின்றன.

இப்படியாக, இந்த ஆச்சரியமான ஒற்றுமைக்கும் கூடுதலாக மனுஷர்கள் தனிமையாக அறிந்து கொள்ள முடியாதிருக்கிற பல காரியங்களை வேதாகமம் நமக்கு சொல்கிறது. விஞ்ஞான தகவல்கள் அடங்கிய அதன் சொற்றொடர்கள் எதுவுமே எப்பொழுதுமே தவறு என்று கண்டறியப்படாமல் இருக்கிறது. இன்றும் மனுஷர் விஞ்ஞானத்தின் ஆளுகையில் அதிகமாக கற்றுக்கொள்ளுகிறபடியால் இப்புத்தகத்தின் சரியான தன்மை அதிகமதிகமாக மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

### மனுஷனுடைய ஆரம்பம்,
### மற்றும்
### அவன் மரணத்திற்கு முன்னும் பின்னும் உள்ள தகவல்

மனுஷன் வாழ்வதற்கு முன்பு உலகமானது எப்படி இருந்தது என்பதை மட்டும் தேவனுடைய புத்தகம் சொல்லுகிறதில்லை, ஆனால் இந்த புத்தகம் மாத்திரமே நாம் வாழ்வதற்கான திருப்தியை ஒரு விளக்கத்தை நமக்கு சொல்கிறது. மூன்று எளிமையான சட்டங்களை ஒப்பிட்டு பார்க்கும் ஜனங்களின் சிந்தனையில் திடீரென்று அதிகரித்தது தான் பரிணாம கொள்கையாக இருக்கிறது.

1. **அறியப்பட்டிருக்கிற விஞ்ஞானத்தின்படி விபத்துகள் குழப்பத்தை மட்டுமே உருவாக்குகின்றன.** இது சந்தேகத்திற்கிடமில்லாத ஒரு உண்மையாய் இருக்கிறது. இந்த சட்டத்திற்கு விதிவிலக்காக எப்பொழுதும் எதுவுமே இல்லை.

2. மேலும் விஞ்ஞானத்தில் அறியப்பட்டிருக்கிறபடி வெப்பசக்திக்கும், **இயந்திர சக்திக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய இயற்பியல் பிரிவின் இரண்டாம் விதியின்** (Second Law of Thermodyanamics) படி தனியாக விடப்பட்ட எந்த ஒன்றும் **மோசமான நிலைக்கு விருத்தியடைந்து,** ஒரு **தாழ்ந்த நிலையையும் ஒழுங்கில் குறைவான நிலையையும் அடையுமே தவிர ஒரு உயர்ந்த நிலையை அடையாது.** எல்லா காரியத்திலும் வேலையாள் மறுக்க முடியாத வகையில் இளைப்படைந்து போகிறார். அநேகவருஷங்கள் ஜாக்கிரதையாக விலைமதிக்க முடியாதபடி பணியாற்றி ஒரு கோதுமை வகையை செயற்கையாக முன்னேற்றமடைய செய்தாலும் அத்தகைய ஒரு காரியம் வெறுமனே ஒரு விபத்தின் விளைவாகவோ அல்லது எளிமையான இயற்கை மாற்றம் மாறாமல் ஒருபோதும்

நடந்ததில்லை, அது காலத்தையும் "இயற்கையையும்" விட்டு விலகியதாயிருந்து சகலகாரியங்களும் மிகவும் மோசமானவைகளாயின.

**3. வாழ்க்கை வரலாற்றில் ஒருபோதும் ஜீவனில்லாத ஒரு பொருள் ஜீவனை வழங்கியதில்லை.** இன்றைய உலகில் ஜீவனை நிலைநிறுத்தும்படியாக, அங்கே ஏற்கெனவே மற்ற வஸ்துகளுக்கும் ஜீவனை அளிக்கத்தக்க வல்லமையுடைய ஏதோ ஒன்று ஜீவித்திருக்கவேண்டும். இந்த ஜீவனானது ஜீவனிலிருந்துதான் வரவேண்டும் என்று விஞ்ஞான விதியானது உரிமையுடன் உரைக்கிறது. ஆகையால் தேவன் ஒருவரே, அவருக்குள் ஜீவன் வாசம் பண்ணுகிறதென்பது இயற்கையாய் அமையப்பெற்ற காரியமாய் இருக்கிறது (யோவான் 5:26) அவர்தாமே தாம் சொன்னபடியே மனுஷன் ஜீவனோடிருக்கும்படி கொண்டுவந்தார்.

மனுஷன் எப்படி வந்தான் என்ற குறிப்பை வேதாகமமானது விவாதிக்கிற தில்லை. மனுஷன் பூமியின் மண்ணினாலே உருவாக்கப்பட்டான், தேவன் அவனுடைய நாசியிலே ஜீவ சுவாசத்தை ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான் (ஆதி.2:7) என்று அது குறிப்பிடுகிறது. மனுஷன் எப்படி ஒரு ஜீவனுள்ளவன் ஆனான் என்று தேவன் எளிமையாகவும், அழகாகவும் வெளிப்படுத்தி அவருடைய புத்தகத்தில் சொல்லியிருக்கிறது போல, வேறெந்த பதிலும் திருப்திகரமானதாக இருக்கிறதில்லை.

மனுஷன் இந்த உலகத்தைவிட்டு நீங்கிய பின்பு என்ன ஆவான் என்பதையும் வேதாகமம் நமக்கு அறிவிக்கிறது. வேறெந்த புஸ்தகமும் மரணத்தின் வாசலை ஊடுருவிச் சென்று நம்பத்தகுந்த பாஷையிலே அதற்கு அப்பால் என்ன இருக்கிறது என்று விவரிக்கவில்லை. பல மார்க்கங்கள் மூலமாக வந்த திரளான கதைகள் எளிதாக புரிந்து கொள்ளப்படத்தக்க வகையில் அவைகள் மனுஷரால் பரப்பப்பட்ட கட்டுக்கதைகளுக்கு அப்பாற்பட்ட தெளிவில்லாத கருத்துக்களா யிருக்கின்றன.

எதிரிடையாக சொல்வோமானால் வேதாகம வார்த்தைகள் தேவனுடைய அறிவின் அதிகாரத்தோடு ஒலிக்கின்றன. மனுஷனுடைய மரண நேரத்தை குறித்து அது சொல்கிறது, "**நீ மண்ணாயிருக்கிறாய்**, மண்ணுக்குத் திரும்புவாய்" என்று இது முற்றிலும் வேறுபாடாய் தோன்றுகின்ற போதிலும், மனித சரீரமானது உண்மையிலேயே நாம் எந்த மண்ணின் மேல் நடக்கிறோமோ அதே மண்ணின் மூலக்கூறுகளால் உருவாக்கப்பட்டதாய் இருக்கிறது! (ஆதி.3:19).

"மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகும்" (பிர.12:7).

"அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபி.9:27).

மனுஷனுடைய முடிவில்லா ஆவியான பாகம் அவனை மற்ற ஜீவ ஜந்துகளிடமிருந்து பிரிக்கிறது, ஏனென்றால் அது தேவனுடைய மேலான ஈவாக இருக்கிறது. ஆத்துமாவை கண்ணால் காணவோ, ருசிக்கவோ, தொடவோ முடியாதென்றாலும், அது இருக்கிறது என்பதை குறித்தும், அதன் அழிவில்லாத தன்மையையும் குறித்தும் மனுஷர் எல்லாரும் உணர்வுள்ளவர்களாய்

இருக்கிறார்கள். மிகவும் பழங்கால மனுஷரும் தங்களுடைய மரித்தோரை பூக்கள், உணவு மற்றும் தாங்கள் பொக்கிஷமாக வைத்திருந்தவைகள் அல்லது தங்களுடைய ஜீவியத்தில் பயன்படுத்தியவைகள் இவைகளோடு புதைத்தது மரணத்துக்கு பின் ஜீவன் உண்டு என்ற அவர்களுடைய நம்பிக்கையையும், சரீரம் மரணம் அடைகின்றபோதிலும், ஆத்துமாவானது தொடர்ந்து ஜீவனுள்ளதாயிருக்கும் என்ற ஜாக்கிரதையுடன் கூடிய அவர்களுடைய அறிவையும் வெளிப்படுத்து கிறதாயிருக்கிறது. சரீரத்தில் அவரவர் செய்த கிரியைகளுக்கான நியாயத்தீர்ப்பை பெற்றுக்கொள்ளும்படியாக ஆத்துமாவானது தன்னை தந்த தேவனிடமாய் திரும்புகிறது என்று வேதவாக்கியங்கள் நமக்குச் சொல்லுகின்றன.

"பின்பு நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன் அவருடைய சமூகத்திலிருந்து பூமியும், வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.

"**மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்;** அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; **அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.** சமுத்திரமும் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும், பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்"

"பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்.

"**தேவன்தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.** அவர்களுடைய கண்ணீர்யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின. அங்கே இராக்காலமிராது; விளக்கும், சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார் அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" (வெளி.20:11-15;21:1-4; 22:5).

### தீர்க்கதரிசன முன்னறிவு

மனுஷன் ஆதியிலே மகிழ்ச்சியாயிருந்த பூரண நிலையிலிருந்து விழுந்துபோவான், அவன் தன்னுடைய பாவங்களை நிவர்த்தி செய்யும்படி

அளிக்கத்தக்கதாக அவனுக்கு ஒன்றும் இராது என்பதை தேவன் அறிந்தவராய் இருந்து மனுஷனுடைய பாவங்கள் மன்னிக்கப்படத்தக்கதாக தேவன் ஆதியிலேயே ஆயத்தம் பண்ணி இருந்தார். தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகமானது பல நூறு ஆண்டுகளுக்கு பின்பு நடக்க இருக்கும் சம்பவங்களை குறித்த முன்னறிவையும், திட்டத்தையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஒரு உதாரணத்திலும் தீர்க்கதரிசனம் தவறானதாயிருக்கவில்லை; எந்த ஒரு காரியத்திலும் நிறைவேறாமல் தவறி விட வில்லை.

தேவனுடைய வழி நடத்துதலின்படி எதிர்காலத்தின் **பொதுவான** சம்பவங்களையல்ல, **குறிப்பிடத்தக்க விளக்கங்கள்** தவறாக உணர்ந்து கொள்ளப்படாததாய் இருந்து, தீர்க்கதரிசன புத்தகங்கள் முன்னுரைக்கப்பட்டன.

◆ **மேதிய பெர்சிய சாம்ராஜ்யத்தின்** எழுச்சி அதை ஆளுகை செய்த முக்கியத்துவம் வாய்ந்தவர்களில் ஒருவராகிய **கோரேஸ்** என்னும் பெயருடையவர் (ஏசா.44:28; 45:1-14) இந்த சாம்ராஜ்யம் தோன்றுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே முன்னுரைக்கப்பட்டார்.

◆ **எகிப்து தேசத்தை தேவன் பின்வருமாறு சொல்லி சபித்தார்:** "எகிப்தியரின் சிறையிருப்பைத் திருப்பி, அவர்களை அவர்களுடைய ஜநந தேசமாகிய பத்ரோஸ் தேசத்திலே திரும்பிவரப் பண்ணுவேன்; அங்கே அவர்கள் அற்ப ராஜ்யமாயிருப்பார்கள். அது இனி ஜாதிகளின் மேல் தன்னை உயர்த்தாமல், மற்ற ராஜ்யங்களிலும் அற்பமானதாயிருக்கும், அவர்கள் இனி ஜாதிகளை ஆளாதபடிக்கு அவர்களைக் குறுகிப்போகப்பண்ணுவேன்" (எசே.29:14,15).

இந்த சாபத்தின் காலம் தொடங்கி, எகிப்து தன்னுடைய அண்டை நாடுகளின் மத்தியில் ஒரு அற்ப தேசமாகத்தான் இருந்தது. அப்படிப்பட்ட ஒரு வல்லமையான தேசத்திற்கும் வரும் வீழ்ச்சியையும் அது தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக தாழ்மையான நிலையில் இருந்ததையும் அதை தாழ்த்தக்கூடிய வல்லமையையும், அதன் நிலையை முன்னறிந்து கொண்டவராக தேவனைத் தவிர வேறொருவரும் போதுமான விளக்கம் அளிக்கவில்லை.

◆ மாபெரும் உலக சம்பவங்களாகிய **நான்கு உலக சாம்ராஜ்யங்களின் எழுச்சியை** குறித்த முன்னுரைத்தலாகிய தீர்க்கதரிசனம் மற்றொரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. மிகவும் குறிப்பாக விளக்கப்பட்டுள்ள இந்த நான்கு சாம்ராஜ்யங்களையும் தற்செயலான எந்தவொரு வரலாற்று மாணவரும் தீர்க்கதரிசன பாடத்தை (தானி.2:7-48) வாசிக்கிற பொழுது உடனே அடையாளம் கண்டுகொள்ள முடியும். **பாபிலோனிய சாம்ராஜ்யம்** தொடங்கி (அந்த சமயத்தில் இருந்தது) அதற்கு பதிலாக **மேதிய பெர்சிய சாம்ராஜ்யமும்,** அதன் பின் **கிரேக்க சாம்ராஜ்யமும்** (தானி.8:20,21 வசனங்களில் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது) இறுதியாக **ரோம சாம்ராஜ்யமும் - அதை தொடர்ந்து வருகிறது** (தானி.2:44). இந்த தேவனுடைய ராஜ்யத்தின் ஸ்தாபிதம் தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டும், உரைக்கப்பட்ட காலத்திலிருந்து அறுநூறு ஆண்டுகளுக்கு மேலாக முழுமையாக நிறைவேறாமல் இருந்தன. தேவன் தவிர யார் ஒருவர் எதிர் கால சம்பவங்களை முன்னாக கண்டு அவைகளை மிகவும் தெளிவாக விளக்கியிருக்க முடியும்?

தேவன் முழு உலகத்தையும் குறித்த காரியங்களில் விருப்பமுடையவராக இருக்கிறார், அவர் வழிகாட்டிய அநேக காரியங்கள் சம்பவித்திருக்கின்றன என்பதை குறிப்பிடப்பட்டும், நிறைவேறியும் இருக்கிற அநேகமான தீர்க்கதரிசன சொற்றொடர்களால் நாம் உணர்ந்து கொள்ளமுடியும். ஆனால் அவர் தனிப்பட்ட மனுஷனை குறித்தும் அக்கறையுடையவராக இருக்கிறார் இந்த அக்கறையானது அநேகம் முறை வேதாகமத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## மனுஷனுடைய ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கான வழியை தேவன் திட்டமிட்டார்

முன்பே குறிப்பிட்டிருந்தபடி மனுஷனை அவனுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கும்படி ஒரு வழியை உண்டாக்கத்தக்கதாக உலகத் தோற்றத்துக்கு முன்னே ஒரு இரட்சகரை கொடுக்கத்தக்கதாக தேவன் திட்டமிட்டார். உலக சம்பவங்களின் முழு பாதையும், இந்த தீர்க்கமான கருத்தை சுற்றியே சுழன்று கொண்டிருக்கிறது.

ஒரு தேசம் எழும்பியது, அதன் மூலமாக தேவனுடைய போதனைகளும், ஆராதனைகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கு எதிரிடையாக சுற்றிலுமிருந்த சகல ஜனங்களும் ஒவ்வொரு வகையான விக்கிரகத்தை வழிபட்டு மூட நம்பிக்கைகளில் மூழ்கிப்போயிருந்தார்கள். குறிப்பிட்ட காலத்தில் இரட்சகர் பிறக்க வேண்டுமென்பதற்காக சகல காரியங்களும் ஆயத்தம் பண்ணப்பட்டன.

இந்த எல்லாகாரியங்களும் சம்பவிக்கும் முன்பே, இவைகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. அவைகள் தேவனுடைய வழி காட்டுதலின்படியே அவருடைய முன்னறிவுடனே, மனுஷர் மூலமாக அடிக்கடி தீர்க்கதரிசனமானது குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவர்கள் எழுதி கொண்டிருந்தது என்ன என்று உணராதிருந்தார்கள். அவர்களில் சிலர் ஆபூர்வமாக வாழ்ந்து தீர்க்கதரிசன நிறைவேற்றத்தைக் கண்டார்கள். ஒவ்வொரு சமயத்திலும் குறிப்பிடப்பட்ட நேரத்தில் விவரிக்கப்பட்ட விதமாக வாழ்க்கையில் மெய்யாகவே அந்த தீர்க்கதரிசனங்கள் வெளிப்படுத்தப்பட்டன, அவைகள் விவரிக்கப்பட்டபடியே நடந்தேறின அளவில்லாத அறிவு, அவருடைய புத்தகத்திலுள்ள முன்னறிவு நூற்றுக்கணக்கான நிரூபணங்களுக்கான விளக்கமாக மாத்திரம் இருக்கிறது.

## தேவனுடைய வல்லமையானது அதனுடைய சத்துருக்களிடம் இருந்து பாதுகாக்கப்படவும் காப்பாற்றப்படவும் வேதாகமத்தின் நீடித்த தன்மை வெளிப்படுகிறது

தேவன் தம்முடைய புஸ்தகத்தை எழுத அறிவுடையவராக இருந்தது மாத்திரமல்ல, அவர் அதை நிரூபிக்கவும் பல யுகங்களாக் அதை பாதுகாக்கும் வல்லமையுடையவராகவும் இருந்தார். வேதாகமத்தின் பக்கங்களை எழுதுவதற்காக பயன்படுத்தப்பட்ட தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்ட மனுஷர்களால் பல அற்புதங்கள் செய்யப்பட்டன. இந்த எழுத்தாளர்கள் தேவனால் வழி நடத்தப்பட்டவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக இவைகள் செய்யப்பட்டன. இந்த அற்புதங்கள் நடைபெற்ற சமயத்தில் அவைகளில் எவையேனும் விவாதிக்கப்பட்டு வெற்றியடைந்ததில்லை. அவைகள் கண்கண்ட சாட்சிகளினால் உண்மையானவைகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவைகள் முயற்சி செய்த தேவனுடைய சத்துருக்களினாலும் பொய்யென்று நிரூபிக்கப்படவில்லை. அற்புதங்கள் நடந்த நாளில் சத்துருக்களினால் அதை பொய்யென்று நிரூபிக்க

முடியவில்லை, இன்றைக்கு ஜனங்கள் அந்த அற்புதங்களை சந்தேகிக்கும் நிலைமையில் இல்லை. தேவனிடத்திலிருந்து பேசிய மனிதர்கள் உண்மையாகவே அவருடைய கருவிகளாய் இருந்தார்கள் என்று சவால் விடுத்த மனுஷருக்கு அவைகள் குறிப்பிடப்பட்ட நிரூபணங்களாய் நிற்கின்றன (மத்.10:38,யோவா. 20:30,31).

"அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த **அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் ஆமென்**" (மாற்கு 16:20).

**தேவனுடைய புத்தகத்தின் எதிரிகள்**

பேசப்பட்ட வார்த்தையும் எழுதப்பட்ட வார்தையும் உண்மையிலேயே தேவனிடத்திலிருந்துதான் வந்தன என்று நிரூபிப்பதற்கு அற்புதங்கள் வல்லமையுடையவைகளாய் இருந்த போதிலும் அவைகள் போதுமானதாக இருக்கவில்லை. தேவனுடைய புத்தகத்தை அழிக்கும் வீணான முயற்சிகளில் தங்களுடைய ஜீவியங்களை அநேகமான சத்துருக்கள் செலவழித்து இருந்திருக்கிறார்கள்.

**விசுவாசமில்லாத விஞ்ஞானிகள்** தேவனுடைய புத்தகத்தின் மேல் பரியாசங்களை குவிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். தேவனுடைய புத்தகத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற மெய்யான விஞ்ஞானத்துக்கு எதிராக இந்த விஞ்ஞானிகளுடைய கொள்கைகள் தாமே பொய்யென்று வெளியரங்கமாகி இருக்கின்றன.

**தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள்** வேதாகம எழுத்தாளர்களால் பேசப்பட்ட திட்டவட்டமான ஸ்தலங்கள் மற்றும், ஜனங்களின் உண்மையை சந்தேகிக்கும் குற்றமுடையவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய சந்தேகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக தவறு என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன, இன்றைக்கு அநேகர் வேதாகமத்தின் தகவலை பண்டைய நகரங்கள் மற்றும் தொன்மையான பொருட்களை அகழ்ந்து ஆராய்ச்சி செய்ய ஒரு வழி காட்டியாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

**நாஸ்திகர்** (SKEPTICS) இந்த புத்தகம் புராணக்கதைகளின் தொகுப்பு என்றும் சோதனை நேரத்தில் அது நிலை நிற்க வில்லை என்றும் அறிவித்தார்கள். இத்தகைய சொற்போர்களில் எந்த ஒன்றும் அதை சேதப்படுத்தக்கூடாமலிருக்கிறது.

தாங்கள் **வேதாகமத்தின் போதனைகளை பின்பற்றுகிறவர்கள்** என்று உறுதியாக சொல்லிக்கொள்ளுகிற மனுஷர் சில சமயங்களில் மிகவும் ஆபத்தான சத்துருக்களாக மாறியிருக்கிறார்கள். ஜனங்கள் மேல் தங்களுடைய வல்லமையை நிலைநாட்ட விரும்புகிற மார்க்க தலைவர்கள் திரள் கூட்டத்தாரிடம் இருந்து வேதாகமத்தை விலக்க தீர்மானம் செய்தவர்களாக ஒவ்வொரு வேதாகம பிரதியையும் சுட்டெரித்து, வேதாகம செய்தியை பொது ஜனங்களின் பல பாஷைகளில் மொழியாக்கம் செய்தவர்களை துன்புறுத்தி கொன்றிருக்கிறார்கள்.

வேதாகமத்தை **விசுவாசிப்பதாக சாதிக்கும் மற்றவர்கள்** வேதாகமத்தின் அதிகாரத்தை குறைவாக மதிப்பிடும் வார்த்தைகளை பேசுவதும், புஸ்தகங்களை எழுதுவதுமாக இருக்கிறார்கள். தங்களை விசுவாசிகள், அறிஞர்கள், வேதபண்டிதர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் தேவனுடைய வார்த்தையில் உள்ள அடிப்படை சத்தியங்களை மறுதலிக்கிறார்கள். அவர்கள் கூடுமானால் அதன் செய்தியை அழித்து விடுவார்கள்.

▶▶ ஆனாலும் இன்றைக்கு சர்வலோகத்திலும் வேதாகமத்தை போன்று பயப்படத்தக்க வகையில் எந்த ஒரு புத்தகமும் இல்லை.

▶▶ ஒவ்வொரு வருடமும் இதன் பிரதிகளே மற்றெந்த புஸ்தகங்களை காட்டிலும் அதிகமாக விற்பனை ஆகிறது. மற்ற புஸ்தகங்களை காட்டிலும் அதிகமான பாஷைகளிலும், பிராந்திய மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

▶▶ வானத்தின் கீழே ஒவ்வொரு தேசத்தின் நன்னடத்தை பிரமாணங்களை உருவாக்குவதிலும் ஜெயம் கொள்ளும் செல்வாக்கை உடையதாக இருந்திருக்கிறது. ஒவ்வொரு அன்புள்ள நல்ல பிரமாணத்துக்குமான தொடக்கத்தின் அடிச்சுவடுகளை பின்னோக்கி காண்போமேயாகில் அது தேவன் தம்முடைய ஆவியினால் ஏவப்பட்டு எழுதின எழுத்தாளர்கள் மூலம் முதலாவது தேவனால் அளிக்கப்பட்டதாகவே இருக்கிறது.

▶▶ எங்கே வேதாகமத்தின் உபதேசங்கள் பரவலாக பின்பற்றப்படுகிறதோ அங்கே வித்தியாசமில்லாமல் ஜனங்கள் எல்லாவகையிலும் செழிப்படைகிறார்கள். மேலும் ஒரு தேசமானது வேதாகமத்தின் கருத்துக்களை விட்டு விலகுகிறபொழுது, அந்த தேசம் மிகவும் தாழ்த்தப்பட்டுப்போகிறது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" (நீதி.14:34).

இப்படியாக வேதாகமம் எழுதப்பட்ட சமயத்தில் வல்லமையின் மகத்தான செயலாக்கம் இருந்தது மாத்திரமல்ல, வேதாகமமானது அதனுடைய சத்துருக்களால் வரும் அழிவில் இருந்தும், தேவனுடைய வல்லமையின் தொடர்ச்சியான உபயோகத்தினால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. நாமும் அது ஒருபோதும் அழியாது என்ற நிச்சயமுடையவர்களாயிருக்கிறோம்.

"வானமும் பூமியும் ஒழிந்து போம்; என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" மத்.24:35

வேதாகம புத்தகம் இருக்கும் படியாக அதை கொண்டு வந்த வல்லமையானது, அதை பாதுகாத்து அதன் உபதேசத்தை பின்பற்றி நடக்கிறவர்களை அது ஆசீர்வதிக்கிறது.

"கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்" (சங்.128:1,2).

வேதாகமத்தை எழுதிய தேவன் **பூரணமானவராய்** இருக்கிறார். அவருடைய புஸ்தகமும் **பூரணமானதாய்** இருக்கிறது. அவர் **அழிக்கப்பட முடியாதவராய்** இருக்கிறபடியால், அது போலவே அவருடைய புத்தகமும் அழிக்கப்பட முடியாததாய் இருக்கிறது. தேவன் **ஒரு போதும் மாறாதவராய்** இருக்கிறபடியால், அவருடைய புஸ்தகமும் **மறுபார்வை செய்யப்பட வேண்டியதில்லை.** இன்றைய தேவைகளுக்கும் அது பொருத்தமானதாக இருக்கிறது. வேதாகமத்தின் பக்கங்களில் அதனுடைய மை இன்னும் ஈரமாக இருக்கிறது, முன்பு இருந்த வண்ணமாகவே. இது தேவனுடைய **தெய்வீக தன்மை, ஒரே விதமான தன்மை, மகத்துவம்** இவற்றை மாத்திரம் பிரதிபலிக்கிற கண்ணாடியாக இராமல், மனுஷனுக்கான **அவருடைய அன்பையும், இரக்கத்தையும்** வெளிப்படுத்துகிறதும் அல்லாமல் மனுஷன் தன்னுடைய சிறுமையான நிலையிலும் தன் சிருஷ்டிகருக்கு முன்பாக இயலாதவனாக

இருக்கிறான் என்பதையும் பிரதிபலிக்கிறது. நாம் பின்பற்ற பிரயாசப்படுகிற தேவனுடைய மகா பரிசுத்தத்தை நம்முடைய பலவீனங்களையும், தோல்விகளையும் தாண்டி உற்று நோக்குவோமானால் காணமுடியும்.

இப்புத்தகம் கிழக்கிலுள்ள எந்த தேசத்தையுமோ அல்லது மேல் நாட்டு தேசத்தையுமோ சேர்ந்ததல்ல. இது எந்த ஒரு மார்க்கத்தின் உற்பத்தி பொருளும் அல்ல மாறாக இது முழு உலகத்திற்கும் ஒரே தேவனாயிருக்கிறவரின் செய்தியாயிருக்கிறது. இது முழு உலகத்தின் ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வொரு மனுஷனையும் வழிநடத்தக் கூடியதாக இருக்கிறது. அதன் உபதேசங்களை பின்பற்றுவதற்காக அது நம்மை யுத்தம் செய்கிற கலகக்கார கூட்டங்களாக பிரிக்கிறதில்லை. மாறாக நம்முடைய நித்திய பிதாவுக்கு நாம் ஊழியம் செய்யும் படியாக அது நம்மை ஐக்கியப்படுத்தும். நாம் இப்புத்தகத்தை - புத்தகங்களின் புத்தகம் - **வேதாகமம்** என அழைக்கிறோம்.

## கேள்விகள்

1. உண்மையாகவே தேவனிடத்திலிருந்து வருகிற எந்த புத்தகமும், அதனுடைய பக்கங்களை முழுவதுமாக தேவனுடைய ---------------- கொண்டதாக இருக்கும்.
2. நவீன தேவைகளுக்கு பொருந்தும்படியாக வேதாகமம் இன்றைய தேதிக் கேற்றபடி கொண்டுவரப்பட வேண்டியதாயிருக்கிறதா?
3. வேதாகமத்தின் முதல் புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டது? கடைசி புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டது?
4. முழு 66 புத்தகங்களும் வாசிக்கப்படுகிறபொழுது அவைகள் ---------- ------------- -- ---- ------ என்பதை சொல்கின்றன.
5. எழுத்தாளர்கள் தாங்கள் என்ன எழுதவேண்டும் என்பதை எவ்வாறு அறிந்தார்கள்?
6. வேதாகமம் மனுஷனுடைய --------, தேவனுடைய திட்டமாகிய ----- மனுஷனை------ ஒப்புரவாக்கி -------- சந்தோஷத்தை அனுபவிக்கும்-- -------- காட்சியுடன் முடிவடைகிறது.
7. தேவன் தம்முடைய தீர்க்கதரிசி ஏசாயாவின் மூலமாக தாம் ---------- வீற்றிருக்கிறதாக விளக்குகிறார்.
8. சகலமும் இருப்பதற்கான விளக்கமாகிய எந்த எளிமையான சட்டதிட்டங்கள் பரிணாம கொள்கையை தள்ளுபடி செய்கின்றன?
9. எந்த மேதிய பெர்சிய ராஜாவானவன் பிறப்பதற்கு நானூறு வருஷங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக பெயர் சொல்லப்பட்டான்?
10. வேதாகமம் எழுதப்பட்ட பொழுது, எதை நிரூபிக்க அற்புதங்கள் பிரயோஜனமாயிருந்தன?
11. அந்த அற்புதங்களை கண்ட சத்துருக்கள் எதை ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது?
12. மற்றெந்த புஸ்தகங்களையும் பார்க்கிலும் எந்த புஸ்தகத்தின் பிரதிகள் ஒவ்வொரு வருஷமும் அதிகமாக விற்பனை ஆகின்றன?
13. ஒவ்வொரு மனுஷனையும், மனிதஇனத்திற்கான நல்ல பிரமாணத்தையும் தேவனால் கொடுக்கப்பட்ட ------- ----------------- கண்டு கொள்ளமுடியும்.
14. எவ்வளவு காலம் வேதாகமம் பாதுகாப்பப்பட்டதாயிருக்கும்?
15. கிறிஸ்தவமார்க்கத்தின் உற்பத்தியாக வேதாகமம் இருக்கிறதா? அது யாருடைய செய்தியாக இருக்கிறது?

# வேதாகமத்தை சரியாக பகுத்து படிக்க ஒரு வழிகாட்டி
# Guide for Rightly Dividing the Bible

**8**

**வேதா**கமம் இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது: **பழைய , புதிய ஏற்பாடுகள்.**

பழைய ஏற்பாட்டில் மொத்தம் 39 தனித்தனி புஸ்தகங்கள் அடங்கியிருக்கின்றன தேவனுடைய பிரமாணத்தையும், பின்னர் இஸ்ரவேல் ஜனங்களுக்காக அவர்களை ஒரு தேசமாக பாதுகாத்து வைத்திருந்ததையும், அதன் மூலமாக அவருடைய குமாரன் பிறக்கும்படியாக இருந்ததையும் சொல்கிறது. சத்தியத்தின் ஐசுவரியங்கள் இதில் அடங்கியிருக்கிறபடியால், வரலாற்றுக்காக அதை அளிக்கிறபடியால், இயேசுவை குறித்த தீர்க்கதரிசனங்களுக்காகவும், கீழ்ப்படிதலுக்கான பலன்களின் உதாரணங்களுக்காகவும், கீழ்ப்படியாமைக்கான தண்டனைக்காகவும் இந்த வேதவசன பகுதியை நாம் அறிந்து கொள்வது நன்னைமயானதாக இருக்கிறது.

பழைய ஏற்பாடு இரண்டு நீண்ட கால கட்டங்களை குறித்து சொல்கிறது. அந்த நேரத்தில் தேவன் மனுஷரோடு இரண்டு அடுத்தடுத்த பிரமாணங்களின் கீழ் ஈடுபாடு உடையவராக இருந்தார். தேவன் தனிப்பட்ட விதமாக பிதாக்களுடனே, குடும்பத் தலைவர்களுடனே செயல்படுகிறவராக இருந்தார். இது **"பிதாக்களின் காலம்"** என்று அழைக்கப்படுகிறது. கர்த்தர் தமக்கு கீழ்ப்படிதலாயிருந்தவர்களுடனே நேரடியாக பேசினார். அவர்களுக்கு வழிநடத்துதல் களையும், கற்பனைகளையும் வழங்கினார். அக்காலத்தில் வாழ்ந்தவர்களில் ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோர் முக்கியமான முற்பிதாக்களுக்கான உதாரணங்களாயிருக்கிறார்கள். இந்த கால கட்டம் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு தொடர்ந்தது.

யாத்திராகமம் புஸ்தகத்தில் நாம் கால கட்டத்தின் இரண்டாவது பிரதானமாக பிரிவின் தொடக்கத்தை பார்க்கிறோம்: தேவன் ஆபிரகாமுக்கு பண்ணிய வாக்குத்தத்தங்கள் இஸ்ரவேல் தேசம் உருவாகி மோசேயின் மூலமாக இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட பொழுது நிறைவேறின ஆயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு இப் பிரமாணமானது நடைமுறையில் இருந்தது. கிறிஸ்துவின் வருகைக்காக உலகத்தை ஆயத்தப்படுத்த தேவனானவர் இஸ்ரவேல் ஜனங்கள் மூலமாக கிரியை செய்து கொண்டிருந்தார். இது **"மோசேயின் காலம்"** என்று அழைக்கப்பட்டது.

அநேகம் ஜனங்கள் வேதாகமத்தை சரியாக பகுத்து பார்க்கிறதில்லை. அவர்கள் "பத்து கட்டளைகளையும்" மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தையும் வாசிக்கிறார்கள் மேலும் அந்த ஜனங்கள் எல்லாரும் இன்றைக்கும் அந்த பிரமாணத்தின்படி ஜீவிக்க வேண்டியதாய் இருக்கிறது என்று எண்ணுகிறார்கள். ஆனால் அந்த கற்பனைகள் அந்த காலத்திலேயே வாழ்ந்த சகல

ஜனங்களுக்குமாக கொடுக்கப்படவில்லை! அவைகள் குறிப்பாக தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலருக்காக கொடுக்கப்பட்டதேயொழிய அவைகள் ஒருபோதும் முழு உலகத்தையும் கட்டுப்படுத்துகிறதாக இருக்கவில்லை.



நியாயப்பிரமாணத்தினாலே கிறிஸ்தவர்கள் நியாயந்தீர்க்கப்பட மாட்டார்கள் கொலோ.2:14 கிறிஸ்து "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக்குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து வெற்றி சிறந்தார்" (கொலோ.2:14).


கலாத்.3:24,25 விளக்குகிறது: "இவ்விதமாக நாம் விசுவாசித்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்கு கீழானவர்களல்லவே. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் கடைசி காலமாகிய **"கிறிஸ்துவின் காலம்"** என்று அழைக்கப்படும் கால கட்டத்தில் கிறிஸ்தவர்கள் வசிக்கிறார்கள். இந்த காலம் வேதாகமத்தின் இரண்டாவது பெரும்பிரிவாகிய **புதிய ஏற்பாட்டில்** இருக்கிறது.

புதிய ஏற்பாடு 27 புஸ்தங்களை கொண்டதாக இருக்கிறது, இதன் பெயரே குறிப்பாக உணர்த்துகிறது: தேவன் தம்முடைய ஜனங்களோடே கூட செய்த புதி ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை, **முழு உலகத்திலும் உள்ள சகல கீழ்ப்படிந்த ஜனங்கள்.** புதிய ஏற்பாட்டின் கீழ் இருக்கிற ஒரே ஆவிக்குரிய இராஜ்யமாகிய தேவனுடைய விசேஷமான தேசம், இது தேவனுடைய குடும்பத்துக்குள்ளாக பிறந்த சகல ஜனங்களினால் உருவாக்கப்பட்டு இவ்விதமாக **கிறிஸ்தவர்களா**கிறார்கள். வேதாகமத்தின் பகுதியாக புதிய ஏற்பாடு என்றும் இது இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் இன்றைக்கு இதன்படி ஜீவிக்க வேண்டும். ஏனென்றால் அந்த ஏற்பாடு அல்லது பிரமாணத்தினால் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். (யோவான் 12:49).

✦ புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் **மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான்** என்பதாகும். இவைகள் **இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தை** குறித்த நான்கு விவரங்களை அளிக்கின்றன இவைகள் பொதுவாக "நான்கு சுவிசேஷங்கள்" என்று தவறாக அழைக்கப்படுகின்றன. இது ஒரு தவறான குறியீட்டு சொல்லாக இருக்கிறது. கிறிஸ்துவின் ஜீவியத்தை பற்றிய ஒரே ஒரு சுவிசேஷம் - நற்செய்தி - கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் கிறிஸ்துவினுடைய நான்கு சீஷர்களினால் அளிக்கப்பட்டிருக்கிறது அவைகளை படித்து கிறிஸ்துவினிடத்திலும் தேவனிடத்திலும் உள்ள விசுவாசத்தை விருத்தி செய்து கொள்ளுங்கள்.

✦ அடுத்த புஸ்தகம் கிறிஸ்துவின் சரீரமாகிய அவருடைய சபை - பூமியிலே ஆவிக்குரிய தேவனுடைய குடும்பம் - மற்றும் நாம் எவ்வாறு அதின் ஒரு

பாகம் ஆகலாம் இவற்றை குறித்த பல சத்தியங்களை போதிக்கிறது. **அப்போஸ் தலருடைய நடபடிகள்** எனும் இந்த புஸ்தகம், யார் கிறிஸ்தவர்கள் ஆகிறார்களோ அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.



✦ அதனை தொடர்ந்து வரும் **இருபத்தோறு புஸ்தகங்கள்** ஏற்கெனவே கிறிஸ்தவர்களாய் இருந்தவர்களுக்கு **தேவனுக்கான அர்ப்பணிப்பிலே அவர்கள் எவ்வாறு ஜீவிக்க வேண்டும் மற்றும் வளரவேண்டும்** என்பதற்காக எழுதப்பட்டன.

✦ கடைசி புஸ்தகமாகிய **வெளிப்படுத்தின விசேஷம், தீமையின்மேல் நன்மையின் இறுதியான வெற்றி,** சாத்தான் மற்றும் அவனுடைய சகல ஊழியக்காரர் மீது கிறிஸ்துவும், கிறிஸ்தவர்களும் அடையும் ஜெயம் இவற்றை வெளிப்படுத்துகிறது. உபத்திரவத்தின் மத்தியிலும் கிறிஸ்துவை பின்பற்று கிறவர்களுக்கு இது நம்பிக்கையை அளிக்கிறது.

வேதாகமத்தை படிப்பதில் சில விஷயங்களில் நீங்கள் முன்பே கொண்டிருந்த நம்பிக்கையை பற்றிக்கொண்டிருக்கும் முயற்சிக்கு எதிராக உங்களை காத்துக்கொள்ளும். நீங்கள் பார்க்க விரும்புகிறதை மாத்திரம் பார்ப்பீர்களேயாகில், அதே தலைப்புக்கான மற்ற போதனைகளுக்கு நீங்கள் உங்களை குருடராக்கி கொள்கிறீர்கள், தவறான முடிவுகளை எட்டும் பெரிய அபாயத்தில் நீங்கள் இருப்பீர்கள். தேவனுடைய வார்த்தையை படிப்பதில் இவ் வழியில் முன்னேறி செல்லுங்கள்:

✦ ஒரு குறிப்பிட்ட தலைப்பில் சொல்லப்படிருக்கிற அனைத்தையும் தேடுங்கள்.

✦ தலைப்பிற்கான வசனங்களின் முழு தொடர்ச்சியையும் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவியாக இருக்கும்படி ஒரு ஒத்தவாக்கிய அகராதியை உபயோகியுங்கள்.

✦ ஒவ்வொரு பத்தியையும் அதைச் சுற்றியுள்ள வசனங்களின் வெளிச்சத்தில் ஆழ்ந்து சிந்தித்து பாருங்கள்; அப்பொழுது நீங்கள் என்ன சொல்லப்பட்டிருக்கிறதை மிகச்சரியாக உணர்ந்து கொள்வீர்கள்.

✦ வித்தியாசமான வசனப்பகுதிகள் ஒன்றுக் கொன்று ஒரு விளக்க உரையாக இருக்கக்கடவது.

✦ ஒரு குறிப்பிட்ட தலைப்புக்கான தகவல்கள் அனைத்தையும் சேகரித்து, எந்த ஒரு வசனமும் மற்ற வசனங்களுக்கு முரண்படாத வகையில் வசனங்களை நீங்கள் புரிந்து கொண்டிருக்கிற பொழுது அந்த குறிப்பிட்ட தலைப்பில் நீங்கள் சரியான புரிந்து கொள்ளுதல் உடையவர்களாக இருக்கிறீர்கள்.

✦ பாடத்தின் பத்திகளுக்கிடையே ஒரே முரண்பாடு இருப்பதாக தோன்றினால் - அந்த விஷயத்தில் நீங்கள் அவைகளை சரியாக உணர்ந்து

கொள்ளாமல் இருக்கிறீர்கள். நீங்கள் அந்த பாடத்தை மீண்டும் மிகுந்த ஜாக்கிரதையோடும், ஒரு ஜெப சிந்தையோடும் படிக்க சத்தியத்துக்கான உங்கள் தேடுதலில் தேவனுடைய வழி நடத்துதலை கேட்க வேண்டியது மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. பொறுமையாக இருங்கள். உங்களுடைய அறிவும், புத்தியும் வளர்வதற்கு காலம் தேவைப்படுகிறது.

✦ சத்தியத்தில் அன்பு கூராதிருக்கிறவர்களுக்கு ஏற்படும் கடுமையான விளைவுகளைக் குறித்து 2தெச.2:10-12 வசனங்களிலுள்ள எச்சரிக்கையை நினைவு கூருங்கள். "... ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு..." **சத்தியத்தில் நாம் அன்பு கூருகிறதும்,** மற்றெல்லாவற்றை பார்க்கிலும் அதை உணர்ந்து கொள்ள விரும்புவதும் மிக முக்கியமானதாயிருக்கிறது.

அத்தகைய ஒரு படிப்புக்கு ஒரு ஒத்தவாக்கிய அகராதியிலுள்ள பட்டியலை ஒரு உதாரணமாக எடுத்து கீழ்வரும் தலைப்பையும் வசனக் குறிப்புகளையும் என்ன போதிக்கப்பட்டிருக்கிறது என்ற உணர்ந்து கொள்ளுதலுக்காக சிந்தித்து பார்ப்போம். ஒரே முழுமையான ஒத்தவாக்கிய அகராதியில் அநேகம் தலைப்புகளில் டஜன் கணக்கான அல்லது இன்னும் நூற்றுக்கணக்கான வசனக் குறிப்புகள் இருக்கும்.

**கீழ்ப்படிதல்:**
ஆதி.49:10
நீதி.30:17
ரோமர் 1:5
ரோமர் 5:19
ரோமர் 6:16
ரோமர் 16:19,26
2கொரி.7:15
2கொரி.9:13
2கொரி.10:5,6

தேவன் எந்த ஒரு குறிப்பிட்ட தலைப்புக்கும் சொல்வதற்காக அநேகம் காரியங்களை உடையவராக இருக்கிறார் என்பதை மாதிரியாக கொடுக்கப்பட்டுள்ள இந்த வசனங்கள் காட்டுகின்றன. இவ்விதமான சொற்றொடர்கள் வேதவசனம் முழுவதிலும் சிதறிக்கிடக்கின்றன எந்த ஒரு தலைப்புக்கும் உரிய முழுமையான காட்சியை பெறுவதற்காக எழுதப்பட்டிருக்கிற அனைத்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பின்பு போதனையில் ஒரு புரிந்து கொள்ளுதலை அடைவதற்காக வேத வாக்கியங்களில் முரண்பாடு கிடையாது என்பதை ஞாபகப் படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு வசனம் மற்றொரு வசனத்திற்கு முரண்டபாடாக தோன்றுமானால், ஒன்று அல்லது இரண்டு வசனங்களை புரிந்து கொள்வதில் ஏதோ தவறு இருக்கிறது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. அவ்வசனங்கள் ஒத்துப் போகின்றவரையில் மேலும், வசனங்களை மீண்டும் அவசியம் படிக்க வேண்டும்.

சில சமயங்களில் ஜனங்கள் உபதேசங்கள் அல்லது வசனப்பகுதிகளை தவறாக புரிந்துகொள்ளும் ஒரு நிலையை அடைகிறார்கள், ஏனென்றால் அவர்கள் மெய்யாகவே அவைகள் மற்றவர்களுக்காக வேறுவிதமான சூழ்நிலைகளில் எழுதப்பட்டிருந்தனவென்று அவ்வசனங்களை தங்களுக்கு ஏற்றபடி பிரயோகிக்கின்றனர். இந்த கேள்விகள் தேவனுடைய வார்த்தையை சரியாக பகுத்து படிக்க உதவிகரமாக இருக்கும்:

❖ **பேசியவர் யாராக இருந்தார்?** அது தேவனா சாத்தானா, ஒரு மனுஷனா, ஒரு தீர்க்கதரிசியா அல்லது யார்?

❖ **யாரிடத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தார்?** ஆதாமிடத்திலா, தானியேலிடத்திலா அல்லது ஒரு அவிசுவாசியினிடத்திலா அல்லது பொதுவாக மனுஷ சமுதாயத்தினிடமா?

❖ **எப்பொழுது அது பேசப்பட்டது?** அது பழைய ஏற்பாட்டு காலத்திலா அல்லது புதிய ஏற்பாட்டு காலத்திலா? ஒரு குறிப்பிட்ட வேதாகம காலத்தில் சகல ஜனங்களிடத்திலுமாக பேசப்பட்டதா அல்லது எல்லா மார்க்க அமைப்புகளின் காலத்திலுள்ள ஜனங்களிடத்தில் பேசப்பட்டதா?

❖ **எந்த பிரமாணத்தின் கீழ் அவர் பேசிக் கொண்டிருந்தார்?** நியாயப்பிரமாணத்தின் கீழாகவா, பிதாக்களின் கால பிரமாணத்தின் கீழாகவா, அல்லது கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழாகவா?

வேதவாக்கியங்களை படிப்பதற்கு எப்பொழுதும் திறந்த மனதுடனும் ஜாக்கிரதையுடனும் இருங்கள். கடந்த காலத்தில் பல்வேறுபட்ட பாடங்களில் நீங்கள் பொய்யான நம்பிக்கை கொண்டவர்களாக இருந்திருக்கலாம், அவைகளை குறித்து நீங்கள் புதிய சத்தியங்களை கற்றுக் கொள்கிறபடியினால் அவசியம் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளும் விருப்பமுடையவராக இருக்க வேண்டும். "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32).

## கேள்விகள்

1. வேதாகமத்தில் எத்தனை பெரும் பிரிவுகள் இருக்கின்றன? அவையாவை?
2. பழைய ஏற்பாட்டில் எத்தனை புஸ்தகங்கள் அடங்கி இருக்கின்றன? புதிய ஏற்பாட்டில் எத்தனை இருக்கின்றன?
3. பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்த இரு பிரதானமான பிரமாணங்கள் யாவை?
4. அநேகம் ஜனங்கள் வேதாகமத்தை ------------------------------ இல்லை
5. எந்த பிரமாணத்தை கிறிஸ்துவானவர் சிலுவையின் மேல் ஆணியடித்து நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார்?
6. நியாயப்பிரமாணத்தின் கீழ் யார் தேவனுடைய ஜனங்களாயிருந்தார்கள்?
7. பிதாக்களின் காலத்தில் மனுஷனோடு தேவனுக்கு இருந்த உறவை எந்த புஸ்தகம் நமக்கு சொல்கிறது?
8. --------, ----------, ----------, மற்றும் --------- கிறிஸ்துவின் ஜீவியத்தை குறித்து நமக்கு சொல்கின்றன.

9. எந்த புஸ்தகம் கர்த்தருடைய குடும்பமாகிய சபையைக் குறித்து சொல்லுகிறது.

10. புதிய ஏற்பாட்டின் எத்தனை புஸ்தகங்கள் பிரதானமாக கிறிஸ்தவர்களின் வளர்ச்சிக்காக எழுதப்பட்டன?

11. வேதாகமத்தைபடிக்கும் பொழுது பின்பற்றவேண்டிய ஏழு குறிப்புகளை வரிசைப்படுத்தவும்:

 1.
 2.
 3.
 4.
 5.
 6.
 7.

12. தேவனுடைய வார்த்தையை "சரியாக பகுத்து பார்க்க" நமக்கு உதவியாக இருக்கும் நான்கு கேள்விகளை வரிசைப்படுததவும்.

 1.
 2.
 3.
 4.

13. வேதவாக்கியங்களைபடிக்கிற பொழுது ஒரு --------------- வைத்துக்கொள்வது முக்கியமானதாக இருக்கிறது.

14. புதிய சத்தியங்களை கற்றுக் கொள்ளும் பொழுது ஒருவர் அவசியமாக செய்ய வேண்டியது என்ன?

15. "-------------- அறிவீர்கள்; ---------- உங்களை ---------------" (யோவான் 8:32).

# தேவனுடைய திட்டம்
# The Plan of God

**9**

புஸ்தகம் - **வேதாகமம்** - தேவனிடமிருந்து மாத்திரமே வந்திருக்க முடியும் என்பதை நாங்கள் வெளிப்படுத்தி இருக்கிறோம். ஆதியிலே தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் என இது அறிவிக்கிறது. ஆழத்தின் மேல் இருண்ட வெற்றிடம் இருந்தது, அது பூமியாக மாற வேண்டியிருந்தது, அவர் தனிமையாய் இருக்கவில்லை அவருடனே வார்த்தை இருந்தது, அவர்மூலமாகவே சிருஷ்டிப்பு பணி நடந்தது. காலம் நிறை வேறினபோது அவரே தேவ குமாரன் என்று அழைக்கப்பட்டார்.

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை **தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.** அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவா.1:1-3).

"அவர் **அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும்,** சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்க்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது (கொலோ.1:15-17).

ஒன்று சேர்ந்தவகையில் ஒரே தேவனானவர் மூன்று நபர்களில் இருக்கிறார் - தேவன், வார்த்தை ஆவியானவர் - பல நூற்றாண்டுகளில் என்ன சம்பவிக்க இருக்கிறது என்பதை முன்பே கண்டு முன்திட்டமிட்டார் அந்த திட்டமானது தீர்க்கதரிசன வாக்கியங்களில் பழைய ஏற்பாடு முழுவதிலுமாக முன்னுரைக்கப்பட்டது. அதற்கான காலம் நிறைவேறின பொழுது, அது நேர்த்தியாக தெளிவுடனே. உலகம் முழுவதிலும் உள்ள வேறெந்த புத்தகத்திற்கும் இணையில்லா வகையில் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டது (மத்.13:35).

முதல் மனுஷனும், ஸ்திரீயும் பாவம் இல்லாமல் சிருஷ்டிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு நன்மை செய்வதை அல்லது தீமை செய்வதை தேவனுக்கு கீழ்ப்படிவதை அல்லது கீழ்படியாமல் இருப்பதை தெரிந்து கொள்ளும் மனங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. சில மார்க்கங்கள் தேவன்தாமே தீமையை சிருஷ்டித்தார் என்று போதிக்கின்றன. ஆனால் அது உண்மையல்ல. ஆதாமும், ஏவாளும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதை **தெரிந்து கொண்டார்கள்.** அது அவர்களுடைய கீழ்ப்படியாமையின் **தெரிந்து கொள்ளுதலாக இருந்தது. அதுவே உலகத்தினுள்ளே பாவத்தைக் கொண்டு வந்தது.**

அவர்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே, அவர்களுடைய தோல்விக்கான வழிகளை தேவன் ஏற்படுத்தியிருந்தார். எந்த ஒரு அழிந்து போகிற மனுஷனும் தன்னுடைய சொந்தக் கீழ்ப்படியாமையினால் பாவங்களுக்காக பரிகாரம் செய்து கொள்ள முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். பாவம் செய்தவர்களோடு அவர் ஐக்கியம் கொண்டிருக்க முடியாது. செய்யப்படும் பாவங்களால் இந்த வெற்றிடத்தை கடந்து செல்ல ஏதோ ஒரு பாலம் இல்லாமல், தேவனும் மனுஷனும் நித்தியமாக பிரிக்கப்பட்டிருப்பார்கள்.

பாவம் இல்லாதிருக்கிற சமாதானபலி ஒன்றே பாவத்தை அகற்றிவிட போதுமானதாயிருந்தது - இவ்விதமாக மனுஷனுடைய இரட்சிப்புக்கான திட்டமானது உலகத் தோற்றத்துக்கு முன்னே உண்டாயிருந்து தேவனுடைய புத்தகத்தின் எழுத்தாளர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது.

"நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை **மீட்டுக் கொள்ளத்தக்கதாக** காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா.4:4-5).

"அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, **கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு** ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபி.9:27-28).

இப்படியாக தேவன் தம்முடைய சிருஷ்டிக்காக கொண்டிருந்த அன்பு மனுஷருடைய பாவங்களை நீக்கும்படியாக தம்முடைய சொந்த குமாரனையே கோரமான பலியாக ஆக்கும்படி ஏவியது. கிறிஸ்து மரித்தது **எல்லா மனுஷருக்காகவும்** மரித்தார். எக்காலத்தில் வாழ்ந்தவராயினும் எல்லா மனுஷருடைய ஆத்துமாவையும் மீட்கும் பொருளாக அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தியதும் போதுமானதாக இருக்கிறது. இது சகல ஜனங்களும் தங்களுடைய கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமையை கருத்தில் கொள்ளாமல் இந்த பலியின் மூலமாக சகல ஜனங்களும் இரட்சிக்கப்படுவார்களேயாகில், அது தேவனுடைய நீதிக்கு உகந்ததாக இராது.


மனுஷரில் எவர் ஒருவரும் பாவமில்லாத ஜீவியம் ஜீவிக்க முடியாது என்ற போதிலும், தேவனை அநேகர் சபித்து மறுதலித்த போதிலும், சிலர் தம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தம்மை பிரியப்படுத்தும்படி வாஞ்சிப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் ஆகையால் யார் தேவனை பின்பற்றுவார்களோ அவர்கள் மற்ற மனுஷரிடமிருந்து தேவனால் பிரிக்கப்பட்டு ஒரு குழுவாக ஒன்று சேர்க்கப்பட்டு தேவனுடைய குடும்பம் என்று அழைக்கப்படுவார்கள் என்ற திட்டமானது உலகத் தோற்றத்துக்கு முன்னே உருவாக்கப்பட்டது. இக்குழுவிலுள்ள ஒவ்வொரு நபரும் தனித்தனியே தெரிந்து கொள்ளப்படவில்லை. (ஒவ்வொருவரும் தான் இந்த குடும்பத்தில் இருப்பாரா, இல்லையா என்பதை தனக்காக தீர்மானம் செய்து கொள்கிறார்) ஆனால் இந்த குழுவானது ஒட்டு மொத்தமாக "தமக்கு முன்பாக நாம் அன்பில்

**பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு**, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார் (எபேசி.1:4).

மனுஷன் பாவத்தின் துவக்காலத்திலிருந்து தவறு செய்வதில் ஆழமாக விழுந்து போகும்படி தொடர்ந்து கொண்டிருந்தான். மனுஷர் பூமியை நிரப்பும்படி பலுகி பெருகினார்கள், அநேகர் மனுஷனை உருவாக்கிய தேவனை மறந்தார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த தேவர்களை தங்களுடைய சொந்தக் கைகளினால் உருவாக்கி இயற்கையையும், பிரபஞ்சத்தையும் தொழுது கொள்ளத் தொடங்கினார்கள். இந்த அநேகமான தேவர்கள் மனுஷருடைய மனங்களையும், இருதயங்களையும் நிரப்பியபடியால், கொஞ்சமான பேர் ஒரே மெய்யான தேவனை குறித்து எதையாகிலும் நினைவு கூர்ந்தார்கள். அநேகம் புராதனமான மற்றும் தேவ நம்பிக்கையற்ற மார்க்கங்கள் இந்த யுகத்திலேதான் தொடங்கின.

## தெரிந்துகொள்ளப்பட்ட தேசம்

தேவன் தம்முடைய குமாரன் உலகத்திலே ஒருநாள் பிறந்து மரித்து கீழ்ப்படிந்தோரை இரட்சிக்க வேண்டும் என்று எண்ணிய போது தம்முடைய குமாரன் பிறக்கும்படியாக ஒரு ஜனங்களின் தேசத்தை உருவாக்கும்படி தீர்மானம் செய்தார். தன்னை சூழ்ந்திருந்த அநேகம் "தேவர்களுக்கு" தலைகுனிய மறுத்தவனும் தேவனை தொழுது கொண்டவனுமாகிய ஆபிரகாம் என்னும் ஒரு மனுஷனை தேவன் தெரிந்து கொண்டார்- கொடுமையான விக்கிரக வணக்கம் செய்தவர்களின் மத்தியில் ஒரே தேவனை விசுவாசித்த ஒருவனாயிருந்தான்.




மூன்று புருஷர்கள்
ஆபிரகாமை சந்தித்தல்

ஆபிரகாமின் பிள்ளைகளுக்காக தேவன் இஸ்ரவேல் தேசத்தை உருவாக்கி, அவர்கள் தங்களை சுற்றியிருந்த தேசங்களின் செல்வாக்குகளை பின் தொடரும்படி குறைவான சோதனை இருக்கத்தக்கதாக அவர்களுடைய ஆளுகைக்கென்று நீதி மற்றும் தேச சட்டங்களை கொடுத்தார். தேவன் தாமே அவர்களுக்காக யுத்தங்களை முன்னின்று நடத்தி அவர்களை ஆசீர்வதித்து பாது காத்தார்.

## கிறிஸ்துவின் வருகைக்காக தெய்வாதீனமான ஆயத்தம்

ரோம சாம்ராஜ்யத்தை தேவன் ஒரு கருவியாக பயன் படுத்தினார் முன்பு எப்பொழுதுமே இல்லாத அளவில் ரோம சாம்ராஜ்யம் ஆளுகையில் இருந்த பொழுது உலகமானது சாலைகளாலும், வணிகத்தினாலும் மிகவும் நெருக்கமாக கட்டமைக்கப்பட்டிருந்தது அங்கே பல வருஷங்களாக இல்லாத அளவில் ஒரு

சமாதான காலம் ஒன்று இருந்தது. மேலும் மனுஷர் ஒரு தேசத்திலிருந்து மறு தேசத்திற்கு சுதந்திரமாக பிரயாணம் செய்தார்கள். இரட்சகர் வரும் செய்தி வேகமாக பரவத்தக்கதாக இந்த நிலை ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

இன்னும் கூடுதலாக, திரள் கூட்டமான ஜனங்களால் ஒரே பாஷை பேசப்பட்டது. இந்த ரோம ராஜ்யத்தின் காலத்துக்கு முன்பு மாபெரும் கிரேக்க சாம்ராஜ்யமானது அதன் கலாச்சாரத்தையும் பாஷையையும் அறியப்பட்ட உலகம் முழுவதிலும் பரவச் செய்திருந்தது. இது சர்வ தேச கொய்னே கிரேக்க பாஷையாக இருந்தது. அது மனுஷனால் அறியப்பட்ட தெளிவான மற்றும் சுருக்கமான சர்வதேச பாஷைகளில் ஒன்றாக இருந்தது. அதன் மூலமாக கிறிஸ்துவின் செய்தி உலகத்திற்கு போதிக்கப்பட்டது. இன்னும் பிறவாதிருக்கிற சந்ததிகளுக்காகவும் எழுதப்பட்டது. பின்னும் செய்தியின் அர்த்தமானது ஒருபோதும் மாற்றத்துக்குட்பட்டதல்ல என்பதற்கு உத்திரவாதம் அளிக்கும்படியாக தேவன் கொய்னே கிரேக்க மொழியை உபயோகத்தில் இராத ஒரு பாஷையாக மாற்றினார் - அதாவது தற்கால உபயோகத்தில் இருக்கிற பாஷை எப்திலிருந்து அது ஒரு முடிவுக்கு வந்தது. இருக்கிற சகல பாஷைகளிலும் நடைபெறுகிறது போன்று படிப்படியாக வார்த்தைகளின் அர்த்தத்தில் மாற்றம் வராது என்பதை இது உறுதிப்படுத்தியது. அதன் விளைவாக இன்றைக்கு தேவனுடைய புஸ்தகத்தின் பாஷையானது, இது எழுதப்பட்ட சமயத்தில் எவ்வாறு இருந்ததோ, அதே விதமாகவே இன்றைக்கு நமக்கு இருக்கிறது. நவீனமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள எந்த வேதாகமத்தின் மொழிபெயர்ப்புக்கான சரியான தன்மையையும், நாம் கிரேக்க மொழிக்கே மீண்டும் சென்று பரிசோதிக்க முடியும்.

### கிறிஸ்துவை குறித்த தீக்கதரிசனங்கள்:

திட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து அநேக நூற்றாண்டுகள் கடந்துவிட்டன (உலகத்திற்கான அஸ்திபாரம் போடப்படுவதற்கு முன்பே) அச்சமயத்தில் இரட்சகரின் வருகைய குறித்த நானூறுக்கும் மேற்பட்ட செய்திகள் மனுஷருக்கு அளிக்கப்பட்டன. இவைகள் அவருடைய பிறப்புக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே காலம் குறிக்கப்பட்டது. அவருடைய ஜீவியம் மற்றும் விசேஷமாக அவருடைய மரணம் ஆகியவைகளை குறித்த அநேக விவரங்கள் தெளிவாக விளக்கப்பட்டன அதே விதமாக ஒவ்வொரு விவரமும் தெளிவாக நிறைவேறியது. அவருடைய பிறப்புக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கொடுக்கப்பட்ட விளக்கம் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரே ஒருவருக்கு மட்டுமே பொருத்தமாக இருந்தது என்பது வெளியரங்கமாக இருக்கிறபடியால் கிறிஸ்துவை குறித்த நம்முடைய விசுவாசம் இந்த தீர்க்கதரிசனங்கள் மற்றும் இவற்றின் நிறைவேற்றத்தின்மேல் நிலை கொண்டிருக்கிறது. அத்தகைய ஒரு காரியம் உலக வரலாற்றில் ஒரே ஒரு முறை மாத்திரம் நிகழ்ந்திருக்கிறது. நேர்மையாய் தேடுகிற ஒருவரை சம்மதிக்கச் செய்வதற்கு இந்த உண்மைகளை குறித்த அறிவு நிச்சயம் மாபெரும் வல்லமையாக இருக்கும்.

## கேள்விகள்

1. தேவத்துவத்திலுள்ள மூன்று நபர்களின் பெயர்களை குறிப்பிடவும்.
2. "ஆதியிலே ----------- இருந்தது, அந்த வார்த்தை ------------ ----------- அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். ------------- -------------------- --- ---------- உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.
3. எந்த வழிமுறையின் மூலமாக பாவம் உலகத்தினுள்ளே வந்தது?
4. மனுக்குலத்தின் பாவங்களை சுமக்கும்படி யார் அளிக்கப்பட்டார்?
5. கிறிஸ்துவின் பலியினாலே சகல மனுஷரும் இரட்சிக்கப்படுவார்களா?
6. தனித்தனியே யார் இரட்சிக்கப்படுவார்கள் யார் தொலைந்து போவார்கள் என்பதை தேவன் தெரிந்தெடுத்து கொள்கிறாரா?
7. உலகத் தோற்றத்துக்கு முன்னே தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் ஒரு -------- ஒன்று சேர்க்கப்பட்டு ----------- ---------- என்று அழைக்கப்படுவார்கள்.
8. விசேஷமாக எந்த ஜனங்களின் தேசம் மூலமாக கிறிஸ்து பிறக்கும்படி ஆயத்தம் செய்யப்பட்டது?
9. எந்த மற்ற இரு தேசங்கள் மூலமாக கிறிஸ்தவம் பரவுவதற்கான வழியை தேவன் ஆயத்தம் பண்ணினார்?
10. கிறிஸ்துவை குறித்த குறிப்பான ---------- அவர் பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டதென்பது அவர்---- --------- இருந்து அனுப்பப்பட்டார் என்பதற்கு நிரூபணமாக இருக்கிறது.

# இரட்சகர்
# Saviour
## 10

**தே**வனோடு கூட முன்பே இருந்தவரும் "வார்த்தை" ஆக இருந்தவருமாகிய கிறிஸ்து உலகத்திலே தேவகுமாரனாக மாம்ச சரீரத்துடனே பிறந்தார். அவருக்கு மனுஷிகத்தில் ஒரு தாய் இருந்தார் ஆனால் மனுஷிகத்தில் தகப்பன் இல்லை, மாறாக அவருடைய பிதா தேவனாக இருந்தார்.

மேசியா - எபிரெய மொழியில் "மாஷியாக்" (தேவனால்) அபிஷேகம் பண்ணப்பட்டவர். நாசரேத்தில் வாழ்ந்தபோதிலும் அவர் பெத்லகேம் நகரத்தில் பிறக்கவேண்டியவராயிருந்தார். அவருடைய தாயாரும், யோசேப்பும் (வளர்த்த வகையில் ஒரு தகப்பனாக இருந்தவர்) ஜனங்கள் தங்களுடைய சொந்த பட்டணத்தில் பதிவு செய்து வரிகளை செலுத்த வேண்டும் என்று இராயனால் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருந்தது. இந்த பிரமாணத்தின் காரணமாக இயேசு பிறந்த பொழுது அவர்கள் பெத்லேகேம் நகரத்தில் இருந்தார்கள்.



**இயேசுவின் பிறப்பை குறித்து பழைய ஏற்பாட்டிலிருந்த தீர்க்கதரிசனங்கள்**

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா.5:2)

பெத்லகேமில் இயேசுவின் பிறப்பை குறித்து இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாக ஒரு தேவ தூதன் அறிவித்தான்:

"பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். **இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்**" (லூக்.2:10-11).

ஒருவர் வளர்ந்து வாக்குத்தத்தம் பண்ணினபடியே இஸ்ரவேலின் இராஜாவாக ஆவார் என்று பயந்ததினாலே அவரை அழிக்கும் முயற்சியாக, இயேசு பிறந்த உடனே எரே.31:15-ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை **பெத்லேகேமில் புதிதாய் பிறந்த ஆண்பிள்ளைகள் அனைவரையும் கொலை செய்வதன் மூலமாக** ஏரோது நிறைவேற்றினான்.

"அப்பொழுது ஏரோது தான் மந்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான்.

“புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று, எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று” (மத்.2:16-18; எரே.31:15).

**மரணத்திலிருந்து இயேசுவை பாதுகாக்கும்படியாக அவரை எகிப்துக்கு கொண்டு செல்லும்படி தேவனால் யோசேப்புக்கு சொல்லப்பட்டது.**

“அவன் எழுந்து இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய், ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று தீர்க்கதரிசியின் மூலமாய்க் காத்தரால் உரக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது” (மத்.2:14,15).

இது ஓசியா 11:1-ல் முன்னுரைக்கப்பட்டிருந்தது.

**யூதா, புறஜாதியார் ஆகிய இருவரும் தேவனுடைய குமாரன் ஆனவர் தக்க வயதை அடைந்த பொழுது அவரை கொன்று போடும்படி செய்த சதித்திட்டத்தை சங்.2 சொல்கிறது.** இயேசுவானவர் செய்த பல அற்புதங்கள் இயேசுவின் தெய்வீகத் தன்மையை நிரூபித்தபோதிலும், அவர்கள் இயேசுவை புறக்கணித்ததற்கான குறிப்பு பல வசனங்களில் காணப்பட்டாலும், அவர்கள் அவர் மேல் கொண்டிருந்த பகைமைக்கான தெளிவான ஒரு விளக்கத்தை யோவான் 11:47-53 வசனங்கள் கொடுக்கின்றன.

“அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச் செய்து, நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே. நாம் இவனை இப்படி விட்டு விட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே என்றார்கள்.

“அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந் தெரியாது; ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக் காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான். “இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூத ஜனங்களுக்காக மரிக்கப் போகிறாரென்றும் அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்

“அந்நாள் முதல் அவரைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள்” (யோவான் 11:47-53).

**ஜனங்கள் இயேசுவின் போதனைகளுக்கு ஏற்றவாறு பதில் அளித்து,** அவரை தங்களுக்கு ராஜாவாக்க விரும்பினார்கள். அவருக்கான அவர்களுடைய துதி முன்னுரைக்கப்பட்டு அது நிறைவேறியது:

“சீயோன் குமாரத்தியே, மிகவும் களி கூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்” (சகரியா 9:9).

"மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்"

"அல்லாமலும் சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக்குட்டியின் மேலும் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிற பிரகாரமாக இயேசு ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார்" (யோவான் 12:12-15).

**ஒரு சிநேகிதனால் இயேசு சத்துருக்களுக்கு காட்டிக் கொடுக்கப்படுதல்** சங்.4:9-லும் அதன் நிறைவேற்றம் மத்.26:15-லும் விவரிக்கப்பட்டிருக்கிறது. காட்டிக் கொடுக்கப்படுவதற்கான விலைமதிப்பு முப்பது வெள்ளிக்காசாக இருந்தபோதிலும், அந்த பணத்தைக் கொண்டு கடைசியில் என்ன நடந்தது என்பது சகரியா 11:12,13-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்.26:15 மற்றும் மாற்கு 14:10,21 வசனப்பகுதிகள் ஒவ்வொன்றும் சம்பவித்தவைகளை விளக்கமாக வெளிப்படுத்துகின்றன.

**இயேசுவின் மரணத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்**

இயேசு இவ்வுலகத்திற்கு வந்ததன் நோக்கம்: மனுஷருடைய பாவங்களுக்காக தன்னுடைய ஜீவனை கொடுப்பதாக இருந்தது. ஏனென்றால் இது அத்தகைய ஒரு நெருக்கடியான சம்பவமாக இருந்தது. அது பெரிய அளவில் விவரமாக அநேகம் தீர்க்கதரிசிகளினால் விளக்கப்பட்டது. கீழ் காணும் வசனங்களும் அதற்கு இணையான வசனப் பகுதிகளும் நிறைவேறுதல் ஆக இருந்தது இது இயேசுவே இரட்சகர் என்பதற்கு அசைக்கமுடியாத நிரூபணமாக இருக்கிறது.



**தம்மை குற்றஞ்சாட்டியவர்களுக்கு முன்பாக இயேசுவின் மௌனம்:**

"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" (ஏசா.53:7).

**நிறைவேற்றம்:**

"பிரதான ஆசாரியரும், மூப்பரும் அவர் மேல் குற்றஞ்சாட்டுகையில், அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்ல வில்லை; அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்" (மத்.27:12-14).

**அவருடைய பாடுகள்:**

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு,

சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்" (ஏசா.53:4-6).

**நிறைவேற்றம்:**

"ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1பேதுரு 3:18).

**குற்றவாளிகளுடன் அவருடைய மரணம்:**

"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.... அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன் பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்" (எசா.53:9-12).

**நிறைவேற்றம்:**

"அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட் பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்து கொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்றார்" (லூக்.23:39-43).



**அவருடைய கைகளிலும், கால்களிலும் ஆணிகள் கடாவப்படுதல்:**

"தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்து; என் நாவு மேல் வாயோடே ஒட்டிக்கொண்டது; என்னை மரணத்தூளிலேபோடுகிறீர். நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்து கொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள்" (சங்.22:14-16).

**நிறைவேற்றம்:**

"இப்போது, பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவனாகிய தோமா இயேசுவந்தபோது அவர்களுடன் இல்லை. மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன், அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கைகளை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்" (யோவா.20:25,27).

**அருகே நின்றவர்களின் பரியாசம்:**

"என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம் பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி: கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே இப்பொழுது இவனை மீட்டு விடட்டும் என்கிறார்கள்" (சங்.22:7,8).

**நிறைவேற்றம்:**

"அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத்துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயோ இட்சித்துக்கொள். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்" (மத்.27:39,40,43).

**அவருடைய உடைகள் சீட்டுப்போட்டு பங்கிடப்படுதல்:**

"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப்போடுகிறார்கள்" (சங்.22:18).

**நிறைவேற்றம்:**

"போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்த பின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொருபங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது என்று இதைக்குறித்துச் சீட்டுப்போடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். என் வஸ்திரங்களை தங்களுக்குள்ளேபங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப் போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக போர்ச் சேவகர் இப்படிச் செய்தார்கள்" (யோவா.19:23,24).

**கசப்பு கலந்த காடியை குடிக்க கொடுத்தல்:**

"நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப் படுகிறேன்; எனக்காகப் பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன். என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" (சங்.69:20,21).

**நிறைவேற்றம்:**

"...கசப்புக் கலந்த காடியை அவருக்குக் குடிக்க கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார் (மத்.27:34). "ஒருவன் ஓடி, கடற் காளானைக் காடியிலே தோய்த்து அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்து: பொறுங்கள், எலியா இவனை இரட்சிக்க வருவானோ பார்ப்போம் என்றான்" (மாற்.15:36).

**ஐசுவரியவானோடே அடக்கம் பண்ணப்படுதல்:**

"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (ஏசா.53:9).

**நிறைவேற்றம்:**

"சாயங்காலமமானபோது இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச்சரீரத்தை எடுத்து துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துபோனான்"(மத்.27:57-60).

**அவருடைய உயிர்த்தெழுதல்:**

"என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக்காணவொட்டீர்" (சங்.16:10)

**நிறைவேற்றம்:**



"ஆண்டவனே அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது; மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது" (மத்.27:63). "அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் " (மத்.28:6).

**தேவனிடத்திற்கு அவருடைய திரும்புதல்:**

"இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில் இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவரு டைய கர்த்தத்துவம் நீக்காத நித்திய கர்த்தத்துவமும், அவரு டைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" (தானி.7:13-14).

**நிறைவேற்றம்:**

"இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது" (அப்.1:9).

ஒரு சில நிமிடங்கள் நாம் வாசித்திருக்கிற கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசினங்களை சிந்தனை செய்யுங்கள். எத்தனை வருஷ சம்பவங்களின்மேல் அவர் கட்டுப்பாடு உடையவராக இருந்தார்? அவர் தான் பிறக்கும் இடத்தை தேர்வு செய்யக் கூடியவராக இருந்தாரா அல்லது ஏரோதுவை கொண்டு கொலைகார போர்ச்சேவர்களை பெத்லகேமுக்கு அனுப்புவதற்கு காரணமாயிருந்தாரா? அதன்பின் பாதுகாப்பாக எகிப்துக்கு ஓடிப்போகும்படி விருப்பமுடையவராக இருந்தாரா? தன்னுடைய இளம்வயதில் ஒரு நீதியுள்ள போதகராக சதந்திரமாக ஆளுகை செய்கிறவர்களின் பகைமையை எழுப்பி விடவில்லை. தாம் காட்டிக்

கொடுக்கப்படும்படி ஆசாரியர்கள் யூதாசுக்கு முப்பது வெள்ளிக்காசுகள் கொடுப்பதற்கு அவர் காரணமாயிருக்கவில்லை அவருடைய வேதனை, பாடுகள்,மரணம் இவைகள் பற்றிய விவரங்கள் அவரால் முன்னேற்பாடு செய்யப்படவில்லை. அவர் தம்முடைய மரணத்துக்கு பின் ஐசுவரியவானாயிருந்த யோசேப்பு தம்மை அவனுடைய சொந்த கல்லறையில் அடக்கம் செய்யும்படியாக தம்முடைய செல்வாக்கை பயன் படுத்தவில்லை.

ஆனால் இவைகள் ஒவ்வொன்றும் சம்பவித்தன. அந்த சம்பவங்கள் நடப்பதற்கு பலநூறு வருஷங்களுக்கு முன்பு வேதாகமத்தில் எவ்வாறு விவரிக்கப்பட்டு இருந்தனவோ அவ்வண்ணமாகவே மிகச் சரியாக நடந்தேறின. எந்த ஒரு சாதாண மனிதனும், கிறிஸ்துவின் ஜீவியத்தில் மெய்யாகவே நடந்த இந்த சம்பவங்களை கட்டுப் படுத்தியிருக்கமுடியாது என்று பொதுவான அறிவு சொல்கிறது. தேவனுடைய முன்னறிவின் மூலமாக மாத்திரமே தீர்க்கதரிசனங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன, இயேசுவானவர் பூமியிலிருந்த பொழுது மனுஷர் இயேசுவுக்கு என்ன செய்வார்கள் என்பதை தேவன் பல நூற்றாண்டுகளாக உற்று நோக்கிக் கொண்டிருந்தார். எந்த ஒரு மனுஷனும் இயேசு கிறிஸ்துவானவர் உலகத்தின் பாவங்களுக்காக மரித்து தேவகுமாரனாகவும், இரட்சகராகவும் இருக்கிறார் என்பதை வெற்றிகரமாக மறுதலிக்க முடியாது.

## கேள்விகள்

1. ஆதியிலே இருந்தது யார்? அவர் ------------ -------------------- அவர் ---------- ------------ ------------ அவர்------------- -------------
2. சகலமும் அவர்மூலமாய் (வார்த்தை, தேவத்துவத்தில் ஒரு நபர்) சகலமும் ----------
3. எபி.1:5-ல் குறிப்பிட்டிருக்கிறபடி உலகத்திலே ------------ ஆக பிறந்தார்.
4. தேவன் தம்முடைய குமாரனை ஸ்திரீயினிடத்தில் பிறந்தவராக என்ன செய்யும்படி அனுப்பினார்? (கலா.4:4,5)
5. தேவன் தம்முடைய குமாரனுடைய வருகைக்காக பூமிக்குரிய உலகத்தை எவ்வாறு ஆயத்தம் செய்தார்?
6. மீகா தீர்க்கதரிசியானவர் ---------------- நூறு ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்து பெத்லகேமில் பிறப்பார் என்று சொன்னார்.
7. தேவனால் இயேசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒருவர் என்பதை மதத்தலைவர்கள் ஏற்றுக்கொண்டார்களா?
8. ஜனங்களை சம்மதிக்கப்பண்ணும்படி இயேசு பல அடையாளங்களை நடப்பித்தார், அவர் தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதை மதத்தலைவர்கள் ஒத்துக்கொண்டார்களா?
9. ஏசாயா சொல்லியிருந்தார் "கர்த்தரோ---------------- அவர் (இயேசு) மேல் விழப்பண்ணினார்.
10. இயேசுவானவர் எந்த ------------- செய்யவில்லை அவர் வாயில் ---------------- இருந்ததுமில்லை என்ற போதிலும் சிலுவையில் அறையப்பட்டார். அவர் குற்ற மற்றவராகவும், பாவமில்லாதவராகவும் இருந்தார்.
11. இயேசுவுடனே கூட சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி அவரிடத்தில் என்ன செய்யும்படி கேட்டுக் கொண்டான்?
12. இயேசுவின் சிலுவை மரணத்தின் வேதனையை விவரிக்கும் தீர்க்கதரிசனத்தை கொண்ட சங்.22-ல் பயன்படுத்தப்பட்டிருக்கும் சில வார்த்தைகள் என்ன?
13. இயேசு சிலுவையில் அறையப்பட்டதை கண்ட சாட்சி என்ன சொன்னார்?
14. இயேசுவின் உடைகளுக்கு என்ன சம்பவித்தது?
15. இயேசுவின் மரணம் அடக்கத்திற்கு பின்பு அவருடைய சரீரத்துக்கு என்ன சம்பவித்தது?

# வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய திட்டம்
## God`s Plan Revealed

**11**

**நாம்** தேவன், அவருடைய புஸ்தகம் மற்றும் தேவத்துவத்தில் ஒருவராயிருக்கிற வார்த்தை என்னப்பட்டவரின் பிறப்பின் மூலமாக உலகத்தை மீட்கும் தேவனுடைய திட்டம் ஆகிய பாடங்களை படித்திருக்கிறோம். நாம் புரிந்து கொள்ள வேண்டிய அடுத்த முக்கியமான காரியம் என்னவென்றால் நமக்காக இயேசு அடைந்த மரணத்திலிருந்து நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு நன்மையடைய முடியும் என்பதாகும்.

**மனுஷன் தன்னுடைய பாவங்களுக்கு பரிகாரம் செய்வதற்கான வழியை தேடுவது அவனில் இயல்பான ஒன்றாக இருக்கிறது. ஒவ்வொரு சமயமும் உண்மையான மார்க்கத்துக்கு எந்த அளவு அந்நியமாக இருந்தாலும் பரவாயில்லை, உண்மையிலே அதை பின்பற்றுகிறவர்கள் தங்களுடைய மீறுதல்களுக்காக தேவனிடத்தில் சமரசம் செய்து கொள்ள முயற்சிக்கிறார்கள்.** சில ஜனங்கள் நற்கிரியைகளின் மூலமாகவும், சிலர் சுயதண்டனை மூலமாகவும், சிலர் தங்களுடைய சரீர தேவைகள் மற்றும் ஆசைகளை மறுதலிப்பதன் மூலமாகவும், சிலர் இன்னும் தங்களையே அழிப்பதன் மூலமாகவும், பாவமன்னிப்பை சம்பாதித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். **ஆனால் மனுஷனாக வெறுமனே அவன் தனக்கு தானே இரட்சகராக இருக்க முடியாது. அவன் தன்னுடைய பாவத்துக்காக சொந்த தீர்வை காணவும் முடியாது.** "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே.10:23).

இதை உணர்ந்து கொண்டால், நம்மை நாமே ஒருபோதும் இரட்சித்துக் கொள்ள முடியாது, தேவன் நம்மை எவ்வாறு இரட்சிக்க வேண்டும் என்று அவருக்கு சொல்லவும் முடியாது. நாம் தேவனுடைய வழிநடத்துதல்களுக்காக அவரை நோக்கிப்பார்க்க வேண்டும். அதனால் இயேசு நமக்காக சிந்திய இரத்தத்தின் மூலமாக நன்மையை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

### தேவனுடைய குடும்பம்

உலகம் உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்த ஒரு காலத்திலே தேவன் தம்மைப் பின்பற்றுகிற நீதிமான்கள் யாவரும் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே **குடும்பமாக்கப்பட** தேவன் திட்டமிட்டார் "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே...." (எபே.1:4) அவர்கள் தங்களுடைய **பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட்டு இரட்சிக்கப்படுவார்கள்** என்று தேவன் திட்டமிட்டார். "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், **ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியும்**, நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2தீமோ.1:9)

அவர்கள் **நித்திய ஜீவனை** குறித்த நம்பிக்கை உடையவர்களாயிருந்து தம்மோடு கூட இருப்பார்கள் என்பதையும் "பொய்யுரையாத **தேவன் ஆதிகால**

**முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி,** அதைக்குறித்த நம்பிக்கையைப் பற்றி தேவபக்திக் கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி...." (தீத்து 1:3) தேவன் திட்டமிட்டார்.

இந்த நீதிமான்களாகிய குழு **ஒரு இராஜ்யம்** என்று அழைக்கப்பட்டது (மத்.13) நாம் நம்முடைய இராஜாவாகிய இயேசுகிறிஸ்துவுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

"இது **சபை** என்று அழைக்கப்பட்டது" தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" (அப்.2:47). (சபை என்ற வார்த்தையின் அர்த்தம் யாதெனில் திரளானவர்களிடம் இருந்து ஒரு விசேஷமான நோக்கத்திற்காக தனியே அழைக்கப்பட்ட ஜனங்களின் குழு என்பதாகும்). சபை என்பதன் விளக்கம் நம்முடைய ஊழியத்தின் இலக்கை கிறிஸ்துவுக்கான நம்முடைய ஊழியத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த குழுவானது **ஒரு குடும்பம்** என்றும் அழைக்கப்படுகிறது "இதினிமித்தம் நாம் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள **முழுக்குடும்பத்துக்கும்** நாம காரணராகிய...." (எபே.3:14). இந்த நாமம் - கிறிஸ்தவன் - நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிற நெருக்கமான உறவையும், நம்முடைய பிதாவாகிய தேவனோடு உள்ள உறவையும் இது சுட்டிக்காட்டுகிறது.

இன்று தேவன் உலகத்தை காண்கிறபடியே அவருடைய திட்டமானது மாறாமல் இருக்கிறது. **அவருடைய குடும்பம்** கிறிஸ்துவுக்குள் உலகத்தோற்றத்துக்கு முன்னே தெரிந்து கொள்ளப்பட்டதாய் இருந்து **அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவருக்கு கீழ்ப்படிகிறவர்களால் உருவாக்கப்பட்டதாய் இருக்கிறது.** அவருக்கு கீழ்ப்படிய மறுக்கிறவர்கள் அல்லது இரட்சிப்புக்காக தங்கள் மார்க்கங்களையும், சட்டதிட்டங்களையும் உருவாக்குகிறவர்கள் அந்த குடும்பத்தில் இல்லை. இப்படியான உலகத்தின் ஜனத்தொகையானது இரண்டு பிரிவாக மாத்திரம் பிரிக்கப்பட்டிருக்கிறது: தேவனுடைய குடும்பம், **மற்றும் அவருடைய குடும்பத்துக்கு புறம்பே இருக்கிறவர்கள். புதிய ஏற்பாட்டின் எல்லாபக்கங்களிலும் எந்த நபரும் ஒரே ஆவிக்குரிய குடும்பம் அல்லது சபை அல்லது இராஜ்யம் என்பதற்கு கூடுதலாக வாசிக்க முடியாது.** ஒன்றுக்கு மேல் இருந்ததாக எப்பொழுதுமே கருதப்படவில்லை, மேலும் தேவனுடைய பார்வையில் சபையானது ஒன்றுக்கு மேல் ஒருபோதும் இருந்ததில்லை.

அநேக மனுஷர்கள் வேதாகமத்தின் தெளிவான போதனைகளை அசட்டை செய்து, தங்களுடைய சொந்த கருத்துக்களையும், உபதேசங்களையும் உருவாக்கி, தேவனுடைய உண்மையான திட்டத்தை பரியாசம் செய்து, வேதவாக்கியங்களுக்கு எதிராக பல உபதேசங்களை போதிக்கிற நூற்றுக்கணக்கான வித்தியாசப்பட்ட சபைகளை தொடங்கியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அவைகளை "சபைகள்" என்று அழைத்துக்கொள்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனை பின்பற்று வதாக வாதம் செய்கிறார்கள், இன்னும் கிறிஸ்துவையும், வேதாகமத்தையும் பின் பற்றுவதாக சொல்லிக்கொள்கிறார்கள். ஏனென்றால் உலகத்தில் ஜனங்களுக்கு தேவனுடைய சபையின் அருமையையும், தூய்மையையும் காண்பதென்பது கடினமாக இருக்கிறது. கெடுதியான மார்க்க அமைப்புகள் எங்கும் பரவலாக காணப் படுகின்றன. ஆகையால் அவைகள் திரளான ஜனங்களை முற்றிலுமாக குழப்பிக் கொண்டு இருக்கின்றன என்பது பரவலாக அறியப்பட்டகாரியமாய் இருக்கிறது.

ஆனால் நாம் ஒவ்வொரு உபதேசத்தின் கருத்தையும் தேடி நிரூபிப்பதில் இதுவரை ஜாக்கிரதையாக இருந்திருக்கிறோம்.

■ நாம் கண்டறிந்திருக்கிற தேவன் ஒருவரே தேவன் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். வேறு எந்த நபரும் அவருக்கு இணையானவர் அல்ல.

■ தேவனுடைய புத்தகத்தின் உள்ளான நிரூபணங்கள் கேள்விக்கு இடமின்றி இருப்பதினால், தேவனுடைய புத்தகமாக நாம் ஏற்றுக்கொள்ளுகிற இது ஒன்றே உண்மையான புஸ்தகம் என்று நாம் அறிகிறோம்.

■ நாம் நம்முடைய இரட்சிப்புக்காக தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் மாத்திரமே திரும்பவேண்டும், ஏனென்றால் தேவத்து வத்திற்கான நிரூபணங்கள் மறுதலிக்கப்பட முடியாது.

தேவனுடைய குடும்பம் மற்றும், தேவனுடைய பிள்ளைகள் இவ்வுலகத்தில் ஜீவிப்பதற்கான வழியை ஏற்படுத்தியிருக்கிறபடியால், அது நிரூபிக்கப்பட்ட சத்தியமாகவும் இருக்கிறபடியால், நாம் ஏன் அதைவிட குறைவாக கீழிறங்கி செல்லவேண்டும்?

வேதாகமம் மனுஷனுக்கான தேவசெய்தியாகவும் புதிய ஏற்பாடு இன்றைக்கு தேவன் நாம் பின்பற்றவிரும்புகிற பிரமாணமாகவும் இருக்கிறது. வேதவாக்கியங்களை வாசிக்கும் பொழுது இந்த ஜீவியத்தில் தேவன் நம்மை குறித்து என்ன கேட்கிறார் என்பதை கற்றுக் கொள்வது நமக்கு கடினமான காரியமாக இருக்க வேண்டாம். அவர் நம்மைக் குறித்து என்ன வாஞ்சிக்கிறார் என்பதை திட்டவட்டமாகவும், தெளிவாகவும் தேவன் குறிப்பிட்டிருக்கிறார். கீழ்ப்படிதலை குறித்தவிஷயத்தில் தேவன் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடம் கொடுக்கவில்லை. **நாம் நம்முடைய வழிகாட்டுதலுக்காக புதிய ஏற்பாட்டை, வேதாகமத்தை பார்க்கிலும் வேறெந்த புஸ்தகத்தையும் கூர்ந்து கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவனுடைய திட்டத்திற்காக அவருடைய புஸ்தகங்களின் பக்கத்தை பார்க்கிலும் வேறெந்த புஸ்தகத்தையும் அதை எழுதியவருக்காக கூர்ந்து நோக்கக்கூடாது.** இரட்சிக்கப்படுகிறதற்கான எதிர்பார்ப்புடனே அதற்கான விதிமுறைகளுக்காக நாம் வேறெந்த புஸ்தகத்தையாகிலும் சார்ந்திருப்போமேயாகில், அது நாம் மனுஷனால் எழுதப்பட்ட ஏதோ ஒரு விதிமுறைக்காக தேவனை விட்டு வழி விலகி செல்கிறோம் என்பதையே அது குறிப்பிடுகிறது. மனுஷன் நம்மை இரட்சிக்க முடியாது.

"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று ...." (எபே.1:9).

"இதினிமித்தம் நான் பலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாம காரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு,;; (எபே.3:14,15).

தேவனுடைய குடும்பத்துக்கு தொடர்பாக இந்த வசனக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற மூன்று பிரதானமான உண்மைகளை காண்பதற்கு ஒரு நீண்ட சம்பாஷணை அவசியமில்லாத ஒன்றாக இருக்கிறது. **1. ஒரு குடும்பம் இருக்கிறது 2. அது தேவனுடைய குடும்பம் 3. அது தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அழைக்கப்படுகிறது.** நாம் இந்த சத்தியங்களை நினைவு கூருவோமேயாகில் மத உலகத்திலுள்ள அதிகமான குழப்பம் உருகி ஓடிப்போகும்.

**தேவனுடைய குடும்பத்தை அடையாளம் கண்டு கொள்ளுதல்**

தேவனுக்கு ஒரு குடும்பம் இருக்கிறது என்றும் அது அவருடைய குமாரனின் நாமத்தால் அழைக்கப்படுகிறது என்றும் நாம் அறிவோம். இந்த கூட்டத்தை அடையாளப்படுத்த தேவனால் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர்கள் ஆவன:

❖ **தேவனுடைய சபை.** "கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்த மாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப் பட்டவர்களாயுமிருக்கிற **தேவனுடைய சபைக்கும்**, எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:" (1கொரி.1:2).

❖ **கிறிஸ்துவின் மணவாட்டி. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது** போல, புருஷனும் மனைவிக்குத் **தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்**" (எபே.5:23) - "பின்பு கடைசியான ஏழுவாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி" (வெளி.21:9).

❖ **முதற்பேறானவருடைய சபை (கிறிஸ்து):** பரலோகத்திலே பேரெழுதியிருக்கிற **முதற்பேறானவரின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும்**, யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் (எபி.12:23).

❖ **அவருடைய அன்பின் குமாரனுடைய இராஜ்யம்** "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது **அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு** உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" (கொலோ. 1:13).

❖ **கிறிஸ்துவின் சபையார்** "ஒருவரையெருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள். **கிறிஸ்துவின் சபையார்** உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16).

❖ **கிறிஸ்துவின் சரீரம்** "**நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும்** தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள்" (1கொரி.12:27).

இந்த விளக்கங்களில் எவை எந்த பொருளில் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை நாம் கருத்தில் கொள்ளாமல் அவைகள் அனைத்தும் உலகத்தின் வழிகளை விட்டு தேவனுக்காக ஜீவிக்கிற **இயேசுகிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டு அவருடைய நாமத்தினாலே அழைக்கப்படுகிற கூட்டம்.**

**இக்கூட்டத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே "கிறிஸ்துவைப் போன்று" இருக்கவேண்டியதாயிருக்கிறது. அதுவே "கிறிஸ்தவன்" என்ற வார்த்தையின் பொருள் ஆகும்.** இந்த பெயரானது ஏதோ இலேசாக தரித்துக் கொள்ள வேண்டியதல்ல. இப்படியாக தேவனுடைய மகிமையை பிரதிபலிக்கும் **சகல காரியங்களையும்** நாம் செய்ய வேண்டியதாயிருக்கிறது. "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், **அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து,** அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" (கொலோ.3:17). ஆயிரத்துக்கும் மேலாக போலியான சபைகள் இன்றைக்கு உலகத்திலே இருக்கின்றன. அவைகள் அநேகமான நாமங்களைத் தரித்துக்கொண்டு, மாறுபாடான உபதேசங்களை கடைப்பிடிக்கிறவைகளாயிருந்தும்,

கிறிஸ்துவினுடைய நாமத்தை தரித்துக் கொள்ளாமலேயே, கிறிஸ்துவினுடையவர்கள் என்று உரிமை பாராட்டுகின்றன.

இந்த பல் வேறு சபைகள் உருவாக்கிய குழப்பத்தின் காரணமாக, கர்த்தருடைய ஜனங்கள் வழக்கமாக, "கிறிஸ்துவின் சபையார்" என்று அழைக்கப்படுகிறார்கள். ஆகையால் அவர்கள் உலகம் முழுவதும் எளிதாக அடையாளம் காணப்படமுடியும். ஆகையால் "தேவனுடைய சபை" "சபை" "கிறிஸ்துவின் சரீரம்" போன்ற பதங்கள், வசனரீதியான விளக்கங்கள் அல்ல என்ற அர்த்தம் அல்ல, ஆனால் **"கிறிஸ்துவின் சபை"** என்ற பெயரானது எளிதாக அடையாளம் கண்டுகொள்ளும் வகையில் முக்கியமான விளக்கமாக பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறு இருப்பினும் வெறுமனே ஒரு வேதாகம நாமத்தை தரித்துக்கொள்வது என்பது ஒரு கூட்டத்திற்கு கர்த்தருடைய சபை என்ற அங்கீகாரத்தை அளிக்கிறதில்லை; உபதேசமும், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தின் நடைமுறை பழக்க வழக்கங்களுமே அந்த பெயரை சத்தியத்தின்படி தரித்துக் கொள்ள தகுதியுடையதாய் இருக்கிறதா என்பதை தீர்மானிக்கின்றன.

**அடையாளம் கண்டு கொள்வதற்கான கேள்விகள்:**

நான்கு எளிமையான கேள்விகளைக் கொண்டு போலியான சபைகளை வெளியரங்கமாக்கி எந்த சபையானது கிறிஸ்துவினால் தொடங்கப்பட்டது என்பதை காண்பிக்க முடியும்.

1. இந்த சபை **எப்பொழுது** தொடங்கப்பட்டது? கிறிஸ்துவின் சபையானது, இயேசுவானவர் பரத்துக்கு ஏறிச் சென்ற பின்பு, பெந்தேகோஸ்தே நாளிலே கிட்டத்தட்ட கி.பி. 29-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அப்.2-ம் அதிகாரத்தை வாசிக்கவும். இந்த காலத்திற்கு பின்பு தொடங்கப்பட்ட எந்த ஒரு சபையும் கர்த்தரின் சபையாக இருக்கமுடியாது.

2. இந்த சபையானது **எங்கே** தொடங்கப்பட்டது? கிறிஸ்துவின் சபையானது தீர்க்கதரிசனத்தின்படியே அதன் நிறைவேற்றமாக எருசலேமில் தொடங்கப்பட்டது. (ஏசா.2;2,3; தானி.2:44; யோவேல் 2:22; அப்.2).

3. **யார்** இந்த சபையை தொடங்கினார்? கிறிஸ்துவின் சபையானது, அவர்தாமே கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த கிறிஸ்துவின் இராஜ்யமாக இருக்கிறது (மத்.16:18). மற்றெல்லா சபைகளும் மனுஷரால் ஸ்தாபிக்கப் பட்டவைகளாயிருக்கிறன.

4. இந்த சபையானது என்ன **நாமத்தை** தரித்திருக்கிறது? கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறது, அதின் அங்கத்தினர்களும் அவருடைய நாமத்தைமாத்திரமே தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள்.

இந்த நான்கு உண்மைகளைக் கொண்டு பரிசோதனை செய்தால், எந்த ஒன்று மெய்யான சபையாயிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். மற்றெந்த கூட்டமும் வேதாகமரீதியாக இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது.

**விசுவாச வீழ்ச்சி குறித்த ஒரு சுருக்கமான வரலாறு**

சபை தொடங்கப்பட்ட ஐம்பது ஆண்டுகளுக்குள் அதை வழிநடத்திய மனுஷர்கள், வழி விலகிச் செல்லும்படி வழி நடத்தினார்கள். வேதவாக்கியங்களுக்கு எதிரான உபதேசங்கள் போதிக்கப்பட்டு ஜனங்கள் சத்தியத்தை விட்டு விலகும்படியாக வழிநடத்தப்படுவார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிக்கை செய்தார்" ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் **பிசாசுகளின் உபதேசங்களுக்கும்** செவி கொடுத்து, விசுவாசத்தை

விட்டு விலகிப்போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்" (1தீமோ.4:1-3).

கி.பி 606-ம் ஆண்டில் இந்த விசுவாச வீழ்ச்சியின் விளைவாக "புனித கத்தோலிக்க சபை" என்று அழைக்கப்பட்ட சபைக்கு மேலாக முதலாவது "போப்" என்று அழைக்கப்பட்டவர் வந்தார் கத்தோலிக்க சபையே உண்மையான சபை என்று அது உரிமை கொண்டாடுகிறது காலக்கணக்கின்படி பேதுருவே முதல் போப் என்று வாதம் செய்கிறார்கள். ஆனால் இந்த வாதங்கள் பொய்யாக இருக்கின்றன. வேதவாக்கியங்களில் எங்கேயும் கிறிஸ்துவை தவிர வேறு எவரும் தலையாக இருக்கிறதாக நாம் வாசிக்கிறதில்லை (கொலோ.1:18). கத்தோலிக்க உபதேசத்தையும், அதன் முறைமைகளையும், புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருப் பவைகளோடு ஒப்பிட்டுப்பார்ப்போமேயாகில் இந்த ஸ்தாபனமானது, மெய்யான சபையாய் இருப்பதை விட்டு தூரமாயிருக்கின்றன என்பது விரைவாக வெளியரங்கமாகும். இரண்டு முக்கியமான கத்தோலிக்க உபதேசங்கள் ஆவன.

1. ஆசாரியர்கள் விவாகம் செய்வதை தடைசெய்தல்.

2. சில குறிப்பிட்ட இறைச்சிகளை சில குறிப்பிட்ட நாட்களில் புசிப்பதை தடை செய்தல் ஆகிய இவைகள் பவுல் கொடுத்த எச்சரிக்கைக்கான நேரடி நிறை வேற்றமாக இருக்கிறது.

மெய்யாகவே கத்தோலிக்க சபை மிகவும் கேடுபாடு நிறைந்ததாகியது. 1500-ம் ஆண்டில் ஒரு ஆவிக்குரிய கலகம் ஏற்பட்டது. இந்த கத்தோலிக்க சபையில் ஒரு ஆசாரியராயிருந்த மார்ட்டின் லூத்தர் ரோமன் கத்தோலிக்க சபையின் போதனைகளையும், அதிகாரத்தையும் முதலாவதாக வெளிப்படையாக எதிர்த்தவர் ஆவார். தொடர்ந்து வந்த வருஷங்களில் மற்றவர்களும் இதை பின்பற்றினார்கள். "மறுமலர்ச்சி இயக்கம் என்று அறியப்பட்ட ஒன்று நடந்தது. அநேக மனுஷர்கள் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கங்களை விட்டு விலகி புதிய சபைகளை அல்லது நாமகரண கூட்டங்களை தொடங்கினார்கள். இவைகளில் சில அவற்றின் ஸ்தாபகர்களின் பெயரை சூட்டிக் கொண்டார்கள் (லூத்தர்); சிலர் தங்களுடைய குறிப்பிட்ட உபதேசங்களின் பெயர்களை (பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள்,பெந்தெகொஸ்தேக்கள்) மட்டுமல்ல இன்னும் சிலர் தங்களுடைய இயக்கத்திற்காகவும் தங்களை அவ்விதமாக அழைத்துக் கொண்டார்கள் (பிரெஸ்பிட்டேரியன்).

இந்த வருஷங்களின் காலத்திலிருந்து ஆயிரம் ஆயிரமான பிளவுபட்ட குழுக்கள் தொடங்கப்பட்டன இவைகள் தங்களுக்கென்று தலைமை ஸ்தாபனங்களையும், இயக்கங்களையும், தலைவர்களையும் ஏற்படுத்திக் கொண்டன. மிக சமீபமான காலங்களில் மையத்திலிருந்து ஸ்தாபிக்கப்பட்ட குழுக்களை புறக்கணித்து விட்டு தங்களுக்கென்று "சமுதாய சபைகளை" உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவைகள் அத்தியாவசியமாக எந்த ஒரு பெரிய இயக்கத்துடனோ அல்லது குறிப்பிட்ட உபதேசங்களுடனோ அடையாளப் படுத்தப்படுகிறது இல்லை. இவர்களில் அநேகர் இரட்சிப்புக்கான வழியாக "விசுவாசம் ஒன்றே போதுமானது" என்று போதிக்கிறார்கள், வேத வாக்கியங்களிலுள்ள அதிகமான உபதேச சத்தியங்களை அசட்டை செய்கிற ஒரு சமூக சுவிசேஷத்தை உடையவர்களாக இவர்கள் இருக்கிறார்கள் எந்த விதமான அடிப்படை உபதேசமும் இன்றி, எந்த நாமகரண கூட்டத்தில் இருந்து வந்தவர் எவரும் இவர்களுடைய ஐக்கியத்திலிருப்பதை மிகவும் சவுகரியமானதாக உணரக்கூடும்.

உலகத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கிறிஸ்தவத்துடன், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை குழப்பிக் கொள்ளாதீர்கள். **நாமகரண கூட்டத்தார் கிறிஸ்துவின் சபையாக இருக்கிறதில்லை.** அவைகள் மனுஷரால் தொடங்கப்பட்ட இயக்கங்களாய் இருக்கின்றன. மனுஷரை பின்பற்றுகிறவர்களை தாம் இரட்சிக்கவிருப்பதாக கிறிஸ்துவானவர் தம்முடைய வார்த்தையில் எங்கேயும் வாக்குத்தத்தமாக உரைக்கவில்லை. தம்மைப்பின்பற்றுகிறவர்களையே இரட்சிப்பதாக அவர் உரைத்திருக்கிறார்.

**சில நாமகரண சபைகளின் தொடக்கம்**

| பெயர் | ஸ்தாபகர் | இடம் | ஆண்டு |
|---|---|---|---|
| ரோமன் கத்தோலிக்கசபை | போனிபஸ்3 | ரோம் நகரம் | 606 |
| லூத்தரன் சபை | மார்ட்டின் லூத்தர் | ஆகஸ்பர்க், ஜெர்மனி | 1520 |
| பிரெஸ்பிட்டேரிய்ன் சபை | ஜான் கால்வின் | சுவிட்சர்லாந்து | 1535 |
| ஆங்கிலிக்கன் சபை | அரசன்ஹென்றி 4 | இங்கிலாந்து | 1536 |
| பாப்டிஸ்டு சபை | ஜான் ஸ்மித் | ஹாலந்து | 1607 |
| மெதடிஸ்ட் சபை | ஜான் வெஸ்லி | லண்டன், இஸ்கிலாந்து | 1729 |
| இவாஞ்செலிக்கல் சபை | ஜேக்கப் ஆல்பிரைட் | பென்சில்வேனியா அமெரிக்கா | 1803 |
| மோர்மன் சபை | ஜோசப் ஸ்மித் ஜூனியர் | நியூயார்க் அமெரிக்கா | 1830 |
| ஏழாம் நாள் அட்வெந்துசபை | வில்லியம் மில்லர் | மாஸக்யூஸெட்ஸ் அமெரிக்கா | 1830 |
| யெகோவா சாட்சிகள் | சார்லஸ்ரஸ்ஸல் | பென்சில்வேனியா அமெரிக்கா | 1872 |
| பரிசுத்த பெந்தேகோஸ்தே சபை | குழு | சவுத் கரோலினா அமெரிக்கா | 1898 |
| அசெம்ப்ளி ஆப் காட் | குழு | ஆர்கன்சாஸ் அமெரிக்கா | 1914 |
| கிறிஸ்தவ சபை | குழு | கன் சாஸ்நகரம் அமெரிக்கா | 1906 |
| சமுதாய சபைகள்-------------------------------------------------------------------------------- | | | |

ஒரு போலியான சபையினால் வஞ்சிக்கப்படாதிருங்கள். **வேதாகமத்தின் உண்மையான சபைக்கு கீழான எந்த ஒன்றோடும் சமரசம் செய்து கொள்ளாதிருங்கள்.** கர்த்தருடைய ஜனங்களின் பிராந்திய சபை ஒன்று உங்களுக்கு அருகாமையில் இல்லையென்றால் நீங்கள் ஒரு கிறிஸ்தவராகும்படியாக அவசியம் செய்ய வேண்டியது பற்றி புதிய ஏற்பாட்டிலிருந்து என்ன நீங்கள் கற்றுக் கொண்டீர்களோ அதை செய்யுங்கள். அப்பொழுது தேவன் தாமே உங்களை சபையிலே சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). அதன் பின் உங்களுடைய பொறுப்பு என்னவென்றால், உங்களை சுற்றிலும் இருக்கிறவர்களுக்கு நீங்கள் போதனை செய்யுங்கள். நீங்களும் மற்றவர்களும் கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறபடியால் அவருடைய சபையானது உங்கள் பகுதியில் வளர்ந்து பெருகும். நீங்கள் ஒன்று சேர்ந்து ஆராதிக்கவும், ஐக்கியம் கொள்ளவும் முடியும், நீங்கள் சுவிசேஷத்தை உங்களுடைய குடும்பத்துக்கும், சிநேகிதருக்கும் கொண்டு செல்லத்தக்கதாக ஊழியம் செய்ய முடியும்.

ஒரு முறை கிறிஸ்துவின் சபையானது தொடங்கப்பட்டுவிட்டால் அது ஒருபோதும் அழிக்கப்பட்டுப்போவதில்லை என்று கிறிஸ்துவானவர் மத்.16:18-20 வசனங்களில் வாக்குத்தத்தம் செய்தார். பிழையானது சபைக்குள்ளே படிப்படியாக வளரத் தொடங்கிய பொழுது சபைக்கு என்ன சம்பவித்தது? இன்றைக்கு தவறான சத்தியம் போதிக்கப்படும் பொழுது என்ன சம்பவிக்கிறது? சிலர் கள்ள போதனையினாலே விழுந்து போவார்கள், சிலர் சத்தியத்திற்காக எழுந்து நிற்பார்கள். இதே காரியம் பல நூற்றாண்டுகளாக நடந்திருக்கிறது: பலர் - அநேகர் - படிப்படியாக சத்தியத்தை விட்டு விலகினார்கள், ஆனால் இந்த 2000 வருஷ சரித்திரம் முழுவதிலும் எப்பொழுதுமே உண்மையுள்ள கிறிஸ்தவர்களும், உண்மையுள்ள பிராந்திய சபைகளும் உலகத்திலே இருந்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் பிரிவினைகள், குழுக்களாக செயல்படுதல் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் தாங்கள் என்று உரிமை கொண்டாடுகிறவர்களின் சின்னத்தனங்கள் கிறிஸ்துவின் நாமத்திற்கு அவமானத்தை கொண்டு வந்திருக்கின்றன. இப்படி உரிமை கொண்டாடுகிற மற்ற மார்க்கங்கள் தேவன் முன்னுரைத்தபடியே அவருடைய மார்க்கத்தின் பெருமைக்கு முன்பாக குருடாக்கப்பட்டிருக்கின்றன ஐரோப்பாவில் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கங்களினால் மார்க்க பேதமுள்ளவர்களாக எண்ணப்பட்டு உபத்திரவப்படுத்தி கொலை செய்யப்பட்டவர்களுக்கான ரோமன் கத்தோலிக்கர்களுடைய புலனாய்வுகளினால் "கிறிஸ்தவம்" தூஷிக்கப்படுகிறது. ஆனால் இது கிறிஸ்துவின் மகிமையுள்ள நாமத்தை தூஷிக்கக்கூடிய ஒரு குற்றமாக இருக்கிறது. மெய்யான கிறிஸ்தவர்கள் இந்த அக்கிரமங்களில் பங்கு கொள்ளாதவர்களாய் இருக்கிறார்கள்.

இப்பொழுதும் நாம் மனுஷருடைய தவறுகளுக்கு அப்பால் உற்று நோக்குவோம். கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவத்தின் கேடுபாடான அமைப்புகள் தேவனுக்கு ஏற்புடையவைகள் அல்ல. நாம் நமக்காக தேவன் விரும்புகிற ஐக்கியத்தை பரிசுத்தத்தை காண்போமாக.

## ஒரே குடும்பம்

இயேசுகிறிஸ்துவின் பிதாவும், கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களின் இந்த பெரிய குடும்பத்தின் பிதாவுமாகியவரே தேவன் ஆக இருக்கிறார். நாம் **தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறோம்** என்றும் **கிறிஸ்து நம்முடைய மூத்த சகோதரர் ஆக இருக்கிறார்** என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய குடும்பத்திலே ஒருவரோடொருவர் அன்பினாலே ஐக்கியம் கொண்டிருக்கிறபடியால் நாம் இவ்விதமாகவே ஜீவிக்க விரும்புகிறோம். இதனால் நாம் நம்முடைய பிதாவுக்கு பிரியமானவர்களாயிருக்கிறோம். நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொருபாகத்திலும் தேவன் நம்மை வழி நடத்தும் படியாக நாம் அவருடைய புஸ்தகத்தை உற்று நோக்குகிறோம். தேவனுடைய உண்மையான பிள்ளைகளுக்கு மத்தியில் பிரிவினை இல்லை. அங்கே எந்த முரண்பாடும் இல்லை. நம்முடைய அக்கறை என்னவென்றால் நாம் நீதிமான்களாய் ஜீவித்து உலகத்தை ஒரு மேன்மையான ஸ்தலமாக மாற்றி, மற்றவர்களையும் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக்கும்படி உற்சாகப்படுத்துவதின் மூலமாக தேவனுடைய பிள்ளைகள் மேல் அவர்தாமே தம்முடைய ஆசீர்வாதங்களை பொழிய முடியும்.

## நாம் எவ்வாறு தேவனுடைய பிள்ளைகள் ஆகிறோம்?

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளி மற்றெல்லாரையும் தம்முடைய குடும்பத்தில் **சுவீகார புத்திரர்** ஆக்கிக் கொண்டார். "**நாம் புத்திர சுவீகாரத்தையடையும்படி** நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறின போது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். மேலும் **நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால்** அப்பா, பிதாவே! என்று கூப்பிடத் தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் (கலா.4:4-6).

ஜனங்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாற வேண்டியதாய் இருந்தால், அவர்களுக்கான தேவைகளை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரியமாயிருக்கிறது. வேதாகமத்தை வாசிக்கும் பொழுது, ஒரே சரீரமாயிருக்கிற விசுவாசிகளின் **ஐக்கியத்தையும் விசுவாசிகளாகிய சரீரத்தின் ஒருமித்த தன்மையும்** குறித்த எளிமையான சத்தியங்களை ஒருவர்

பிழையின்றி புரிந்துகொள்ள முடியும்.

வேதத்தை வாசிக்கிறவன் சத்தியத்தை தேடுகிறதில் உண்மையுள்ளவராக இருப்பாரேயாகில், அவன் **கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருஅங்கமாக மாறுவதற்கு** செய்யவேண்டியது என்ன என்பதில் தவறான உணர்ந்து கொள்ளுதல் இருக்க முடியாது.

"....கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை **விசுவாசியாதவர்கள்** எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் **கேள்விப்படாதவர்கள்** எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? ஆதலால் **விசுவாசம் கேள்வியி**னாலே வரும், **கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்**" (ரோம.10:13,14,17)


❖ "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை **விசுவாசி** அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" ... (அப்.16:31).

❖ "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; **நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்"** (லூக்.13:3).

❖ "மனுஷர் முன்பாக **என்னை அறிக்கை பண்ணுகிறவன்** எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத்.10:32).

❖ **"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்ற** நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத் தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோம.6:3,4).

**மனுஷனுக்காக தேவன் கொண்டிருக்கிற சித்தத்தை கேட்கிறவனுடைய இருதயத்திலே அவசியம் விசுவாசம் வளரவேண்டும்** - தேவனை பிதா என்றும் கிறிஸ்துவை இரட்சகர் என்றும் **விசுவாசிக்கவேண்டும் என இவ்வசனங்கள் காண்பிக்கின்றன.** அவர்களில் கொண்டிருக்கிற விசுவாசம் உண்மையாய் சத்தியத்தை தேடுகிறவர்களை பாவங்களிலிருந்தும் உலகத்தின் கேடானவைகளிலிருந்தும் தன் சொந்த ஜீவியத்திலிருந்தும் திரும்பி - மனந்திரும்பி தேவனுக்கென்று தன்னுடைய ஜீவனைக் கொடுத்து அவருடைய பிள்ளைகளில் ஒருவராக இருக்க தீர்மானம் செய்யும்படி வழிநடத்துகிறது.



இவ்விதமாக நாம் நம்மை அவருக்கென்று ஒப்புக்கொடுத்திருக்கிற பொழுது **நம்மை சுற்றியிருக்கிறவர்கள் முன்பாக இயேசுவை நம்முடைய இரட்சகர் என்று அறிக்கை செய்கிறோம்.** நாம் மெய்யாகவே இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறோம். அறிக்கை செய்வதை தொடர்ந்து நமக்காக அவர் மரித்ததற்கு ஒப்பாக **புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி (ஜீவிக்க) எழுந்திருக்கத் தக்கதாக**

**நாம் தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுகிறோம்.** நாம் ஞானஸ்நானத்திலே நம்முடைய பாவங்கள் போகக் கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்திற்குள்ளாக பிறக்கிறோம் (அப்.22:16; யோவான் 3:3-5; ரோம.6:3,4).

சில மதகுழுக்கள் தெளிவாகக்காணும் வகையில் மூழ்குதலுக்கு பதிலாக விசுவாசியின் மேல் தண்ணீரை தெளித்து அல்லது ஊற்றி அதை ஞான்ஸ்நானம் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இந்த கிரியைகள் கிறிஸ்துவின் அடக்கத்தை சித்தரிக்கிறதில்லை, "பாப்டிஸோ" (Baptizo) என்று கிரேக்க வார்த்தையின்படி - நம்முடைய பாவங்கள் போக கழுவப்படும்படியாக தண்ணீருக்குள்ளாக ஒரு அடக்கம் அவசியமானதாயிருக்கிறது.

ஒரு நபர் இரட்சிக்கப்படுவதற்கு "விசுவாசம் மாத்திரமே" போதுமானது, ஞானஸ்நானமானது "உள்ளான கிருபைக்கு, ஒரு வெளியரங்கமான அடையாளமாக மாத்திரம் இருக்கிறது" - அதாவது அந்த நபர் ஏற்கெனவே மன்னிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டிருக்கிறார் ஞானஸ்நானமானது கண்களால் காணக்கூடியவகையில் ஒரு அறிவிப்பாக இருக்கிறது என்று சில நாமகரண கூட்டத்தார் போதிக்கிறார்கள். ஆனால் **ஞானஸ்நானம் பெறுவது என்பது இரட்சிப்படைகிறதில் கடைசி குறிப்பாக** இடம் பெறுகிறது என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன: "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் **இரட்சிக்கப்படுவான்**" ... (மாற்கு 16:16) கலா.3:26,27 "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள் ஏனெனில் உங்களில் **கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே"** என்று வெளிப்படுத்துகிறது. ஒருவன் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு முன்பே இரட்சிக்கப்படுகிறான் என்று சொல்வது, அவன் கிறிஸ்துவுக்கு **புறம்பே** இரட்சிக்கப்படுகிறான் என்று சொல்வதாக இருக்கிறது.

நாம் அவசியம் பாதுகாப்பானவர்களாக இருக்க வேண்டும்: நாம் தேவனுடைய குடும்பத்திலே பிறப்பதை தடை செய்யும்படியாக சாத்தான் நம்முடைய பாதையிலே தடைக்கற்களை வைக்கிறான். என்ன எதிர்ப்புகள் வந்தாலும் வேதவாக்கியங்களில் வெளிப்படையாக எழுதியிருக்கிறபடியே நாம் சத்தியத்தை காணாதபடி நம்மை குருடாக்கி ஆவிக்குரிய வகையில் இழந்துபோகும்படி அவன் முயற்சி செய்கிறான்.

**ஞானஸ்நானம் பண்ணப்பட்ட விசுவாசிகளாகிய** நாம் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு நாம் தேவனுடைய குடும்பத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறோம். நாம் மாற்றப்பட்டிருக்கிறோம் அல்லது உலகத்திலிருந்து **புறம்பாக்கப்பட்டிருக்கிறோம்..** "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி,தமது **அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற** பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ.1:12-14).

நாம் **ஆவிக்குரியவகையில்** தேவனுடைய குடும்பத்திற்குள்ளே **பிறந்திருக்கிறோம்.** "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேக முள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள்

ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லா வித்தினாலே **மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே**" (1பேது.1:22,23).

நம்முடைய பழைய ஜீவியம் முழுவதுமாக கடந்துபோய்விட்டது, அது தேவனால் மறக்கப்பட்டிருக்கிறது. உலத்திலே நாம் புதிதாய் பிறந்த குழந்தைக்கு ஒப்பாக நாம் புதிதாய் ஒரு ஜீவியத்தை தொடங்கி, தேவனுடைய அன்பினாலும், பாதுகாப்பினாலும காக்கப்பட்டு, தேவன் நமக்கு செய்திருக்கிற வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். நம்மில் அநேகர், "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" (மத்.25:35) என்று கிறிஸ்துவானவர் சொல்லியிருக்கிறதை எப்போது கேட்போம் என்று அந்த நாளை எதிர்நோக்கியவர்களாக நம்மில் அநேகர் இருக்கிறோம்.

## கேள்விகள்

1. ஒவ்வொரு மார்க்கத்தின் அஸ்திபாரம் என்ன?
2. தேவன் தம்முடைய குடும்பமாக மாறக்கூடிய ஜனங்களைக் குறித்து முதன் முதலாக எப்பொழுது திட்டமிட்டார்?
3. மார்க்கத்தில் எத்தனை குழுக்கள் உலகத்தில் இருக்கின்றன? அவைகள் யாவை?
4. தேவனைப் பிரியப்படுத்துகிறதில் வழிமுறைகளுக்காக நாம் எங்கே உற்று நோக்குகிறோம்?
5. தேவனுடைய குடும்பத்தை குறித்து மூன்று பிரதானமான உண்மைகள் என்ன?
6. உலகத்தில் அநேகப் "போலியான" சபைகள் இருக்கின்றனவா?
7. தேவன் தம்முடைய சபையை விவரிக்கவும், அடையாளப்படுத்தவும் தேவன் உபயோகித்த சில சொற்றொடர்களை வரிசைப்படுத்தவும்.
8. சபையானது உலகம் முழுவதிலும் எளிதாக அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக வழக்கமாக என்ன பெயரில் அழைக்கப்படுகிறது?
9. போலியான சபைகளிலிருந்து உண்மையான சபையை வேறுபடுத்திக் காட்டும் நான்கு கேள்விகள் யாவை?
10. இந்த கேள்விகளுக்கான வேதாகம பதில்கள் யாவை?
11. நீங்கள் ஒரு அங்கமாக இருக்கிற சபையைக் குறித்து இந்த கேள்விகளுக்கு பதிலளியுங்கள். அது எங்கே தொடங்கப்பட்டது? எப்பொழுது தொடங்கப்பட்டது? யார் அதை தொடங்கினார்? அதன் பெயர் என்ன?
12. மனுஷர் எவ்வாறு தேவனுடைய பிள்ளைகள் ஆகிறார்கள்?
13. கிறிஸ்தவர்களாகும்படி கீழ்ப்படிதலுக்கான ஐந்து சட்டங்களை வரிசைப்படுத்தவும்.
14. கீழ்ப்படிதலின் எந்த சட்டமானது ஒரு நபரை கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது?
15. இந்த கீழ்ப்படிதலின் மூலமாக நாம் அனுபவிக்கிறது என்ன?

# தேவனை தொழுது கொள்ளுதல்
# Worship of God

**12**

"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் **சீஷராக்கி** பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு **ஞானஸ்நானங்கொடுத்து**, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி **அவர்களுக்கு உபதேசம்** பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் ஆமென்" (மத்.28:18-20).

"இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் **மனந்திரும்பி** ஒவ்வொருவரும் **பாவமன்னிப்புக்கென்று** இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே **ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்**, அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார்" (அப்.2:37-38).

"தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் **விசுவாசித்தபோது** புருஷரும் ஸ்திரீகளும் **ஞானஸ்நானம் பெற்றார்கள்**" (அப்.8:12).

"....கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு **விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள்** (அப்.18:8).

**கிறிஸ்துவை குறித்த செய்தியை கேள்விப்பட்டவர்கள் அவருக்கு கீழ்ப்படிந்ததினாலே, தேவனுடைய பெரிய குடும்பத்திலே ஒருஅங்கமாகி பூமியிலே மிகவும் சந்தோஷமுள்ள ஜனங்களாயிருக்கிறார்கள்.** கிறிஸ்துவின் சுத்திகரிக்கும் இரத்தத்தினாலே அவர்களுடைய பாவங்கள் போகக் கழுவப்பட்டிருக்கிறது என்பதையும், தங்களை தேவனிடத்திலிருந்து பிரித்திருந்த பாவத்தின் வெறுமையிலிருந்து கடந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். சகலமும் நன்மையாயிருக்கும்படியாக, தேவனுடைய கவனத்தையும், உதவியையும் எதிர் நோக்கியவர்களாக, தேவன் அவர்களுடைய பிதாவாயிருக்கிறதினாலே, **இப்பொழுது தங்கள் பிதாவாகிய தேவனுடனே பேசக்கூடியவர்களாயிருக்கிறார்கள் அவருடைய பாதுகாப்பையும், உதவியையும் எதிர்பார்த்து அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்கள். சகலமும் நன்மையாக இருக்கிறது. இந்த ஜனங்கள் மறுபடியும் பிறந்தவர்களாயிருக்கிறார்கள், இப்பொழுது இவர்கள் கிறிஸ்துவின் சபையிலே அல்லது கிறிஸ்துவின் குடும்பத்திலே ஒருஅங்கமாக இருக்கிறார்கள்.**

வேத வாக்கியங்களில் மாத்திரம் இருக்கிற ஒரு ஆவிக்குரிய கருத்தாக இராதபடிக்கு ஜீவிக்கிற மனுஷர்களிலே அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய ஒரு குழுவாக இது இருக்கிறது. நாம் ஒரு சமுதாயத்தில் கிறிஸ்துவின் சபைக்கான இருப்பிடத்தை காண விரும்புவோமாகில், முந்திய அத்தியாயத்திலே பட்டியலிடப்பட்டிருந்த கீழ்வரும் நான்கு கேள்விகளை கேட்பதன் மூலம் நம்முடைய விசாரணையை தொடங்க முடியும்: 1. இந்த சபை எப்பொழுது தொடங்கப்பட்டது? 2.

எங்கே இந்த சபை தொடங்கப்பட்டது? 3. இந்த சபையை தொடங்கியவர் யார்? 4. இந்த சபையானது என்ன நாமத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறது?

இந்த கேள்விகள் குறிப்பிட்ட ஒரு பிராந்திய சபையைக் குறித்து அல்ல, ஒரு முழுமையான ஒழுங்கு படுத்தப்பட்ட அமைப்பைக் குறித்து பேசுகிறது. உதாரணமாக ஒரு நாமகரண பிராந்திய சபை அந்த இடத்திலே கடந்த வருடம் யாரோ ஒரு உள்ளூர் மனிதரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் இது ஒருபாகமாக இருக்கிற **பெரிதான அமைப்பு ஜெர்மனி தேசத்தில் 1765-ம் ஆண்டிலே** ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம்.

கிறிஸ்துவின் சபையாரின் ஒரு பிராந்திய சபை விஷயத்தில் அது கடந்த வருடத்திலே, அந்த இடத்திலே உள்ளூர் மனுஷர் சிலராலே தொடங்கப்பட்டிருக்கலாம்; ஆனால் அந்த **பெரிய ஸ்தாபனமானது எருசலேம் நகரத்தில் கி.பி.29-ம் ஆண்டிலே கிறிஸ்துவை கொண்டு** தொடங்கப்பட்டிருக்கிற சபையை அடையாளப்படுத்துகிறது.

இந்த விசாரணைகளில் எந்த ஒன்றிலும் வழக்கமாக முதலில் அடையாளப்படுத்தும் காரணமானது அந்த குழுவானது கொண்டிருக்கிற **பெயரில்** உள்ள பிழையை வெளிப்படுத்துகிறது. ஒரு சபையானது குறிப்பிடப்பட்ட நான்கு கருத்துகளில் வேதவாக்கியங்களுக்கு பொருத்தமாக இருந்தால் மாத்திரமே, அது வேதவாக்கியங்களின் படியான சபையாக இருக்க முடியும்.

இன்னும் கூடுதலாக அடையாளப் படுத்துதலுக்கு இந்த சபையானது இரட்சிப்பை குறித்து என்ன போதிக்கிறது?" என்ற கேள்வியை நாம் அவசியம் கேட்க வேண்டும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக கீழ்ப்படிதலுக்கான ஐந்து காரியங்களை வேதவாக்கியங்கள் நமக்கு காட்டுகின்றன: 1. கேள்விப்படுதல் 2. விசுவாசித்தல் 3. மனந்திரும்புதல் 4. அறிக்கையிடுதல் 5. ஞானஸ்நானம் பண்ணப்படுதல். இந்த கட்டளைகள் அனைத்துக்கும் நாம் கீழ்ப்படிகிற பொழுது, தேவன் நம்முடைய பாவங்களை மன்னித்து நம்மை தம்முடைய சபையிலே சேர்த்துக்கொள்ளுகிறார்.

ஒரு சபையானது இரட்சிப்பை குறித்த இந்த கட்டளைகளை போதிக்க வில்லையானால், அது மெய்யான சபையாக இருக்க முடியாது.

**சேவிக்கும் ஜீவியம்**

ஒரு நபர் யாரோ ஒருவனிடத்தில் அன்புகூருகிற பொழுது, அவனுடைய இருதயம் அந்த அன்பை வெளிப்படுத்தும் ஆசையுடன் நிரம்பிவழியும். அந்த விதமாகவே கிறிஸ்தவனுடைய இருதயமும் இருக்கிறது. அவன் தனக்கும், தேவனுக்கும் இடையேயான புதிய பிணைப்பை உணர்ந்து கொள்வது மாத்திரமல்ல, மனுஷனைப் பார்க்கிலும் மிகவும் பெரியவராயிருக்கிற ஒருவரை ஆராதிக்க அனுமதிக்கப்பட்டிருப்பது எப்பேர்பட்ட ஒரு முன்னுரிமையாயிருக்கிறது என்பதையும் அவனால் காணமுடிகிறது. சர்வலோகத்தின் சர்வவல்லமையுள்ள தேவனுடைய **சிங்காசனத்தினிடமாய்** வர அனுமதிக்கப்படுகிறதென்பதும் **அவரால் கேட்கப்படுகிறதும்** தகுதியற்ற எந்த ஒரு மனுஷனுக்கும் கனமான காரியமாயிருக்கிறது.

"ஒரு மனுஷன் விவேகியாயிருந்து, தனக்குத்தான் பிரயோஜனமாயிருக்கிறதினால் **தேவனுக்குப் பிரயோஜனமாயிருப்பானோ?** சந்திரனை அண்ணாந்து பாரும், அதுவும் பிரகாசியாமலிருக்கிறது, நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல. புழுவாயிருக்கிற மனிதனும், பூச்சியாயிருக்கிற மனுபுத்திரனும் எம்மாத்திரம் என்றான்" (யோபு 22:2; 25:5,6).

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது **பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு,** அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு சேஷமத்தை கொடுப்பேன்" (2நாளா.7:14).

பரலோகத்தின் தேவனாகிய இந்த தேவனுக்கும், மனுஷர் தங்கள் கைகளினாலே உருவாக்கிய அவர்களுடைய சொந்த சிருஷ்டிப்பாயிருக்கிறவைகளுக்கு முன் முகங்குப்புற விழுந்து ஆராதிக்கிற அந்த தேவர்களுக்கும் எவ்வளவு பெரிதான வித்தியாசம் இருக்கிறது!

"அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்? நம்முடைய **தேவன் பலலோகத்தில் இருக்கிறார்;** தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார். **அவர்களுடைய விக்கிரகங்கள்** வெள்ளியும், பொன்னும் **மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.** அவைகளுக்கு **வாயிருந்தும் பேசாது;** அவைகளுக்குக் **கண்ணிருந்தும் காணாது.** அவைகளுக்குக் **காதுகளிருந்தும் கேளாது;** அவைகளுக்கு **மூக்கிருந்தும் முகராது.** அவைகளுக்குக் **கைகளிருந்தும் தொடாது;** அவைகளுக்குக் **கால்களிலிருந்தும் நடவாது;** தங்கள் **தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது.** அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை **நம்புகிறவர்கள் யாவரும் அவைகளைப் போலவே இருக்கிறார்கள்**" (சங்.115:2-8).



ஆனால் நம்முடைய தேவனுக்கு முன்பாக நாம் விழுந்து நம்முடைய துதியையும், அவருக்கான தேவ ஆராதனையையும் ஊற்றக் கடவோம். அவர் நமக்கு செவி கொடுத்து ஏற்ற வேளையில் சகாயம் பண்ணுவார். நம்முடைய ஜெபமானது இவ்வண்ணமாக இருக்க வேண்டும்.

"கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். ஆண்டவரே என் சத்தத்தைக் கேளும்; என் விண்ணப்பங்களின் சத்தத்திற்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக. கர்த்தாவே நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான் ஆண்டவரே. உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் **மன்னிப்பு** உண்டு. கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்" (சங்.130:1-5).

**மெய்யான ஆராதனை**

மனுஷன் தேவனை எப்படி தொழுது கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்க எந்த மனுஷனுக்கும் அதிகாரமில்லை. தேவன்தாமே வேதாகமத்திலே ஆராதனையை குறித்து மிகவும் தெளிவான போதனைகளை அறிவித்து பேசியிருக்கிறார். நாம் அவரை பிரியப்படுத்த விரும்புவோமாகில், அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு நாம் செவி கொடுக்கவேண்டும். கிறிஸ்துவின் சபையானது, "நாம் புதிய ஏற்பாட்டின் வழிமுறை மற்றும், போதனைகளுக்கு மீண்டும் திரும்புவோமாக. தேவனுடைய வார்த்தையுடனே எதையும் கூட்டாமலும், குறைக்காமலும் இருந்து அவர் போதிக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தொழுது கொள்வோமாக, என்று ஜனங்களிடம் மன்றாடுகிறது. இந்த ஆராதனை மாத்திரமே அவருக்கு ஏற்புடையதாக இருக்கிறது.


## ஆராதனை நாள்

ஒரு வாரமானது ஏழு நாட்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது இவைகளில் முதலாம் நாள் - ஞாயிறு, கர்த்தருடைய நாள்- தேவனுக்கே உரியது, அந்த நாளிலே கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி தொழுது கொள்கிறார்கள் (அப்.20:7). அவர்களுடைய ஆராதனை எளிமையாக இருக்கிறது, ஆனாலும் அது இருதயத்திலிருந்து வருகிறது. மனுஷரால் உருவாக்கப்பட்ட வடிவமைப்புகளுக்கு எதிராக தேவனுடைய வழிகாட்டுதலின் படியேயான ஆராதனையானது வெறுமையான சடங்காச்சாரங்கள் மற்றும் வழிபாடுகளுக்கு நீங்கலாக இருக்கிறது. ஆராதனையின் ஒவ்வொருபாகமும் ஆழ்ந்த பொருள் நிறைந்ததாகவும், தேவனுக்கான துதி நிறைந்ததாகவும், ஆராத்திக்கின்ற ஒருவரை உயர்த்தக்கூடியதாகவும் இருக்கிறது.

## ஆராதனையின் ஐந்துபாகங்கள்

1. **ஆராதனையானது அவசியமாக ஒரு ஜெபம் நிறைந்த இருதயத்திலிருந்து எழும்பிவரவேண்டும்.** ஜெபத்தின் வழிகளிலே நாம் நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுடனே நாம் நேரடியாக பேசுகிறபடியினால் அது இவ்விதமாக செய்யப்பட வேண்டும். "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (1பேது.3:12).

"பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவபக்தியுள்ள வனாயிருந்து அவருக்குச்சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்" (யோவான் 9:31). "மேலும் நீங்கள் விசுவாச முள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள் என்றார்" (மத்.21:22).




2. ஜெபத்தின் மூலமாக தேவனை நெருங்கிச் சேரும் இருதயங்களுடனே **ஆராதிக்கிறவர் பாடல் மூலமாக தன்னுடைய சிருஷ்டிகரை துதிக்க ஆயத்தமாகிறார்.** மனுஷன் உருவாக்கிய இசைக்கருவிகள் மூலமாக தேவன் தம்மை துதிக்க விரும்புகிறதில்லை. ஆனால் பதிலாக தேவன் தம்முடைய சொந்த இசையினாலே உருவாக்கிய இசைக் கருவியாகிய மனுஷனுடைய குரல் நாண்கள் மூலமாக துதிக்கும்படியாக, ஆராதிக்கும்படியாக தேவன் தேடுகிறார். நாம் நம்முடைய குரல்களை உயர்த்தி இணக்கமான பாடலில் தேவனை மேன்மைப்படுத்தி அவர் நமக்குச் செய்த நன்மைக்காக நாம் அவரை துதிக்கிறோம். பாடல்கள் தேவனுக்கு முன்பாக மேல்நோக்கி அவருக்கு பிரியமான சப்தமாக தேவனுக்கு முன்பாக செல்கிறது மாத்திரமல்ல அவைகள் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு போதிக்கும் ஒரு வழியாக இருக்கிறது.

"ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்". "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக

வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டு களினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி" (கொலோ.3:16).

"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம் பண்ணி நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற் காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து" (எபே.5:19,20).

3. இந்த நாட்களில் தேவன் மனுஷனோடுகூட பேசுவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது: ஏவப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்தின் மூலமாக **தேவன் தனக்கு போதிக்கும்படியாக கிறிஸ்தவன் அவரை அனுமதிப்பதென்பது** ஆராதனையின் ஒரு முக்கியமானபாகமாக இருக்கிறது. பொதுவான ஆராதனை நேரங்களில் **தேவனுடைய வார்த்தைகறகப்படுகிறதினாலும்**, போதிக்கப்படுகிறதினாலும் நாம் அவருடைய போதனைகளை கேட்கிறோம். "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்...." (யோவான் 5:39). "நீ வெட்கப்படாத ஊழியக் காரனாகவும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"



(2தீமோ.2:15). "திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு!... (2தீமோ.4:2). "நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையா யிருங்கள் (1பேது.2:3). "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங்.119:105).

4. தேவகுமாரனுடைய மாபெரிய அன்பின்றி அவர் நம்முடைய பாவங்களுக்காக நம்முடைய ஸ்தானத்தில் மரிக்க விருப்பம் அற்றவராக இருந்திருப்பாரேயாகில், ஆராதனையில் நாம் தேவனுடைய சிங்காசனத்தை நெருங்கிச் சேர அனுமதிக்கப்பட்டிருக்க மாட்டோம். இந்த காரணத்திற்காகவே நாம் அனைவரும் - நம்முடைய ஆராதனை உட்பட - **இயேசுவின் நாமத்தினாலே** செய்யப்படுகிறது. தேவனுடைய குமாரனுடைய அன்பை மறந்து விடுகிறதை தேவன் விரும்புகிறதில்லை, மேலும் **ஆராதனையின் ஒருபாகமாக இயேசுகிறிஸ்துவை கனம் பண்ணும்படியாக நினைவு கூருதலை தேவன் உண்டாக்கியிருக்கிறார்.** இது பளிங்கு கல்லினால் கட்டப்பட்ட ஒரு நினைவுச்சின்னமல்ல, அல்லது செங்கல் மற்றும் சாந்தினால் கட்டப்பட்டதுமல்ல, அல்லது விலையேறப்பெற்றதும் நீடித்து உழைக்கக்கூடிய பொருட்களினால் கட்டப்பட்ட நினைவுச்சின்னமும் அல்ல அது ஆராதனை செய்கிற ஒவ்வொருவருடைய இருதயத்திலும் கட்டப்படுகிற நினைவுகூருதலாக இருக்கிறது - ஒரு எளிமையான **நினைவு கூருதலின் இராப்போஜனம்.**

கிறிஸ்துவின் மரணம் அவருடைய சரீரத்தின் ஜீவனுக்கு விலைக்கிரையமாக இருக்கிறது. அவருடைய மரணத்துக்கு விலைக்கிரையமாக அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. அவருடைய மரணத்தினால், அவருடைய சரீரத்தினால் மற்றும் இரத்தத்தினால், நாம் இரட்சிப்பின் நம்பிக்கையுடையவர் களாயிருக்கிறோம்.

மெய்யான கிறிஸ்தவன் ஒவ்வொரு ஞாயிறு அன்றும் இந்த இராப்போஜனத்தை தாழ்மையோடே நெருங்கிச் சேருகிறான். கடந்த வாரத்தில் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒத்தவகையில் ஜீவித்திருக்கிறோமா என்று பார்க்க நம்முடைய இருதயங்களில் தேடுகிறோம். தகுதியான முறையில் நினைவுகூருதலின் பந்தியில் பங்குபெற நம்முடைய சிந்தைகளை ஆயத்தம் செய்தபிறகு தேவனுக்கு முன்பாக அவருடைய குமாரனை நினைவுகூர நாம் தலை வணங்குகிறோம். "அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம் பண்ணுகிறதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்கு 14:24-25).

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது உங்களுக்காகப்பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப்பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (1கொரி.11:23-25).

5. கிறிஸ்தவனுக்கு வாரத்தின் ஆறு நாட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவன் வேலை செய்து அவனுடைய குடும்பத்திற்கு தேவையான பணத்தை சேர்த்து வைக்கலாம். அவன் சம்பாதிக்கின்ற பணம் அவனுடைய ஜீவனத்துக்கு ஆதாரமாய் இருக்கிறது.

நாம் நம்முடைய ஜீவியங்களை தேவனுக்கென்று அளிக்க வேண்டுமென்று விரும்புகிறார், அந்த ஈவின் பங்கானது நாம் வேலை செய்து சம்பாதிக்கிற பணத்தின் வடிவிலே கொடுக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. நாம் இதை ஒரு நடை முறை காரணத்திற்காக கொடுக்கிறோம் - சபை நடப்பிக்கவேண்டிய பணிக்கு பணம் தேவையாயிருக்கிறது. அந்த பணத்தை பெறுவதற்கான ஒரே வழி கிறிஸ்தவர்களிட மிருந்து மட்டுமே.

சபைக்கு பிரதானமான முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு ஊழியங்கள் இருக்கின்றன. உலகத்திற்கு கிறிஸ்துவின் செய்தியை போதிப்பதும், தங்களுக்கு தாங்களே உதவி செய்ய இயலாத நிலையில் இருப்பவர்களுடைய பூமிக்குரிய தேவைகக்காக உதவி செய்வதும் ஆகும். இவைகள் இரண்டுக்குமே பணம் தேவையாயிருக்கிறது.

**ஆகையால் கிறிஸ்தவன் தன்னுடைய வார சம்பாத்தியத்தில் ஒரு பங்கை முதலாவது எடுத்து ஒரு தாராளமான பங்கை தேவனுடைய ஊழியத்திற்காக கொடுக்க வேண்டும்.** அவன் கட்டாயமாகவோ, விசனமாகவோ

அதை கொடுக்க வேண்டாம், ஏனென்றால் தேவனுடைய கரத்திலிருந்து அவன் பெற்றிருக்கிற நல்ல காரியங்களை அவன் மற்றவர்களுடனே பகிர்ந்து கொள்ள விரும்புகிறான் (2கொரி.9:6,7). இதற்கு பதிலாக நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. "...நான் வானத்தின் பலகணிகளைத்திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று என்னைச் சோதித்துப்பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல்.3:10).

## கேள்விகள்

1. தேவனால் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டவர் யார்?
2. குறிப்பிடப் பட்ட வசனம் பகுதிகள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று போதனைகளை அளிக்கின்றன இயேசு என்ன சொன்னார்? --------------------- பேதுரு என்ன சொன்னார்?------- பிலிப்பு பிரசங்கித்த பின்பு ஜனங்கள் என்ன செய்தார்கள்?-------------------- --------
3. தேவனுக்கு கீழ்ப்படிந்திருக்கிறவர்கள் எதிலே ஒரு அங்கமாக ஆகியிருக்கிறார்கள்? ----------------- ---------------------- ------------
4. கிறிஸ்துவின் சபையானது ஒரு பட்டணத்தில் அல்லது ஒரு சமுதாயத்தில் அமைந்திருக்க முடியுமா?
5. கிறிஸ்தவர்களின் ஆராதனையானது கட்டாயம் தேவனுடைய வார்த்தையின்படி இருக்க வேண்டுமா?
6. அவிசுவாசிகள் தேவன் ஆவியாயிருக்கிறார் என்பதை குறித்து சந்தேகப்படுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் அவரை காணமுடியாது. (அவர்கள்; "இந்த தேவன் எங்கே இருக்கிறார்?" என்று கேட்பார்கள்). எனவே அவர்கள், தேவனுடைய இடத்தில் தங்கள் கைகளினால் என்ன உருவாக்குகிறார்கள்? இவ்வகையான கைகளினால் - உருவாக்கப்பட்ட "தேவர்கள்" பற்றி தேவன் என்ன கூறுகிறார்?
7. கிறிஸ்துவின் சபையானது ஜனங்களிடம் செய்யும்படி என்ன வேண்டுகிறது?
8. ஆராதனை செய்ய வேண்டிய நாள் எது?
9. ஆராதனையின் ஐந்து பாகங்கள் என்ன?
10. தேவனுடைய ஆராதனையை நாம் மாற்றுவோமாகில், அல்லது நாம் எதையாகிலும் அத்துடன் கூட்டுவோமாகில் அல்லது எதையாகிலும் எடுத்துப்போடுவோமாகில் தேவன் சந்தோஷம் அடைவாரா?
11. உங்களுடைய சபையானது ஒவ்வொரு வாரமும் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூரும் அவருடைய இராப்போஜனத்தை புசிக்கிறதா?
12. உங்களுடைய சபையானது அதன் ஆராதனையில் ஒரு கிட்டார் அல்லது பியானோ அல்லது வேறு ஏதோ ஒரு இசைக்கருவியை பயன் படுத்துகிறதா?
13. தேவனுடைய வார்த்தையை படிப்பதற்கும், அதை புரிந்து கொள்ளும்படியாய் எவ்வாறு "சரியாக அதை பகுத்துப் பார்ப்பதற்கும் நமக்கு அது" ஏன் மிக முக்கியமானதாக இருக்கிறது?
14. கிறிஸ்தவனிடமிருந்து தேவன் எப்பேர்பட்ட பலியை விரும்புகிறார்.

# ஆராதனை நிறைந்த ஜீவியம்
# The Worshipful Life

**13**

### அன்றாட ஜீவியத்தில் மெய்யான ஆராதனையின் பலன்

**ஒரு கிறிஸ்தவன் ஆராதனைக்கு பின் வெளியே செல்லும்போது தேவனோடே கூட உள்ள நெருக்கத்தின் சந்தோஷத்தினால் அவனுடைய இருதயம் பிரகாசிக்கும் அவன் பரிசுத்தமானவனாகவும் சுத்திகரிக்கப்பட்டவனாகவும் உணருகிறான் அவனுடைய வழிகள் தேவபக்தியின் புதிய உயரங்களுக்கு உயர்த்தப்படுகின்றன. அவன் கற்றுக்கொண்ட காரியங்களில் ஒவ்வொரு நாளும் ஜீவிக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறான்.**

**தேவனுடைய குணாதிசயங்களை அறிந்த கிறிஸ்தவன் எல்லா மனுஷரிடத்திலும் அன்பாகவும், நியாயமாகவும், நீதியாகவும், சமாதானமாகவும் நடந்து கொள்வதினாலே அவைகளை தன்னுடைய ஜீவியத்திலே பிரதிபலிக்க வாஞ்சையுள்ளவனாயிருக்கிறான். அவனுடைய அன்றாட ஜீவியம் ஒரு ஆராதனை மற்றும் ஊழியம் செய்வதாகவும், தேவனோடு கை கோர்த்து நடப்பதாகவும் இருக்கிறது.**

ஒவ்வொரு மார்க்கமும் ஏதோ ஒரு வகை பலியை வலியுறுத்துகிறது. சில மார்க்கங்கள் பிராணிகளின் ஜீவன்களையும், சில மார்க்கங்கள் மலர்களையும், பணத்தையும் மற்ற மார்க்கங்கள் அன்பின் ஞாபகமூட்டல்களையும், இன்னும் சில மார்க்கங்கள் மனுஷருடைய உயிரையே கொடுக்கும்படியாகவும் வற்புறுத்து கின்றன. கிறிஸ்தவனானவன் ஒரு மனிதனால் செய்யக்கூடிய மிகப்பெரிய ஒரு பலியை செலுத்தும்படி தேவன் எதிர்பார்க்கிறார் - அவனுடைய சொந்த ஜீவன். ஆனால் ஒரு செத்த சரீரம் தேவனை சேவிக்க முடியாது. ஆகையால் தேவன் என்ன கேட்டிருக்கிறார் என்றால்; "...அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் **சரீரங்களைப்** பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான **ஜீவபலியாக** ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரங்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோம.12:1)

தேவனுடைய குடும்பத்துக்குப் புறம்பே இருக்கின்றவர்களுக்கு, ஒருவனுடைய ஆசைகள் மற்றும் விருப்பங்களை மறுதலிப்பதென்பது, வாழ்வதற்கு சகித்துக் கொள்ள முடியாத ஒரு வகையான வாழ்க்கையாகத் தோன்றலாம். தேவன் என்ன கேட்டிருக்கிறாரோ அதை செய்கிற கிறிஸ்தவர்களாக இருந்தால் அதன் விளைவாக சந்தோஷத்தையும், திருப்தியையும், அனுபவிக்கிறவர்களாயிருந்து இதைப்பார்க்கிலும் எந்த விதமான ஜீவியத்தையும் பெரிதாக எண்ணாமல் ஜீவனுள்ள நிரூபணங்களாயிருக்கிறார்கள்.

### சந்தோஷமும் சமாதானமும்

**சந்தோஷத்தை** எல்லா மனுஷரும் விரும்புகிறதில்லையா? தேவன் சந்தோஷத்தின் ஒட்டு மொத்தவடிவமாக இருக்கிறார். எனவே நாம் அதிகமாக **அவரைப்போல்** இருக்க பிரயாசப்படுவதென்பது புத்தியுள்ள காரியமாக இருக்கிறது. ஆகையால் நாமும் அவரைப்போல **சந்தோஷமுள்ளவர்களாயிருப்போம்.** மற்றும்

பொல்லாப்பான பாவ ஜீவியத்திற்கு தங்களை ஒப்புக் கொடுத்து வாழ்கிற அனைவரும் இந்த காரியங்கள் மெய்யான சந்தோஷத்தை கொண்டு வராது என்பதற்கு ஒரு சாட்சியாக இருக்கிறார்கள்.

ஒருவன் தன்னுடைய இருதயத்தில் உணருகிற சமாதானமும், அதனுள்ளே பிரகாசிக்கிற சந்தோஷமும் நன்மை செய்வதிலிருந்து வருகிறது. நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களுடைய ஜீவியங்களில் **சந்தோஷத்தை கொண்டுவரும்படியாக, ஒருவன் எப்படி நடத்தப்பட வேண்டுமோ** அப்படியே நடத்த வேண்டும். சரியானது **என்று எதை நாம் அறிந்திருக்கிறோமோ** அவை அனைத்தையும் நாம் செய்ய வேண்டும், அப்பொழுதுதான் அந்த நாளின் முடிவிலே நாம் நம்முடைய மனசாட்சிகள் நமக்குள்ளே **சமாதானமாய் இருப்பதை** நாம் தேடி காண இயலும். இவைகளே கிறிஸ்தவன் தன்னை சுற்றிலும் இருக்கிறவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறவைகளாக சொல்லப்பட்டிருக்கின்றன.

அவனுடைய ஜீவியத்தில் மாய்மாலம் இல்லை, தேவனுக்கு ஊழியஞ் செய்வதில் மறைவான தூண்டுதல் இல்லை; வாழ்க்கையிலுள்ள எல்லா பிரச்சனைகளும் சீக்கிரம் தீர்ந்துவிடும் என்று பார்க்கும்படியாக கொஞ்சகாலம் தேவனை சோதனையில் வைத்திருக்கும் மனப்பான்மை இல்லை.

சேவிக்கும்படியாக வேறே தேவன் இல்லை என்பதை கிறிஸ்தவன் அறிந்திருக்கிறான்; தேவன் தன்னை நேசிக்கிறார் என்பதையும், "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம.8:28) என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதையும் அவன் அறிந்திருக்கிறான்.



கிறிஸ்தவன் தன்னுடைய ஜீவனை தேவனிடத்தில் கொடுக்கையில் அந்த ஜீவனைக்குறித்து தேவன் அக்கறையாயிருக்கிறார். இருதயத்தின் எல்லா வேதனைகளையும், கவலைகைளையும் பகிர்ந்து கொள்ளவும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதை அறிகிறான். ஒவ்வொரு நாளும் கிறிஸ்தவன் தன்னுடைய விருப்பங்களையும் ஆசைகளையும் தேவனுடைய வைகளைப்போல் அதிகமாகவும், சுயத்துக் குரியவைகளில் குறைவாகவும் அமைத்துக்கொள்ளும்போது, அவன் தன்னுடைய ஜீவியத்தை வளமானதாகவும், ஆசீர்வாதங்கள் நிறைந்ததாகவும் காண்கிறான்.

தங்களை பின்பற்றுகிறவர்கள் தங்கள் மேல் மாம்சத்துக்குரிய தண்டனையை வருவித்து, தங்களையே வருத்திக் கொள்ளும்படியும், தாழ்த்தும்படியும், பூமிக்குரிய தேவைகளை மறுக்கும்படியும், கொடூரமான வேதனைகள் அடையும்படியும், தங்களை தாங்களே மறுதலித்து மரணத்தின் நுனிக்கு செல்ல சிலமார்க்கங்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் தம்மை தாமே தங்களை தேவனுக்கென்று அளிக்க வேண்டியதாயிருந்தாலும், அப்படிப்பட்ட மாம்சரீதியான தகாத வழக்கம் எதுவும் செய்யும்படியாக கேட்கப்படவில்லை. மாறாக நாம் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்படிருக்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சரீரங்கள்

பரிசுத்தாவியானவரின் ஆலயமாகிறது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறோமா - அவர் நமக்குள் வாசம்பண்ணுகிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் இவ்வாறாக எச்சரிக்கப்படுகிறோம்:

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது நீங்களே அந்த ஆலயம்" என்றும் (1கொரி.3:16,17).

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொரி.6:19,20).

**கிறிஸ்தவத்தின் உயர்வு ஊழியமே, பிச்சையெடுக்கும் தொழில்அல்ல**

அநேகம் மார்க்கங்களில் உள்ள பெரிய பக்தர்கள் மார்க்கத்தின் பெயரால் அவர்களுக்கான பூமிக்குரிய தேவைகளுக்கு விநியோகம் செய்வதற்கு வேலை செய்யாமல் சரியான பிச்சைக்காரார்கள் ஆகிறார்கள். கிறிஸ்தவர்கள் வேலை செய்ய வேண்டியது அவசியமானதாயிருக்கிறது. "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்கு கட்டளையிட்டோம்" (2தெச.3:10).

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும்,அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1தீமோ.5:8).

"அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதர ரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய் பெருகவும்; புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு, நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவர்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்" (1தெச.4:10-12).

**தேவனுடைய செல்வாக்கு**
**நம்முடைய ஜீவியங்களில் நம்மை மாற்றும்.**

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்"

"வீண்புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டா மலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம். தன் மாம்சத்திற்கென்றுவிதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.

"நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாசக்குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலாத்.5:22-26; 6:8-10).

இந்த போதனைகள் அன்றாட ஜீவியத்தின் எல்லா பாகங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. நாம் மனுஷ சமுதாயத்தின் ஒரு சமுத்திரத்தில் ஜீவிக்கிறோம். நம்மை சுற்றியிருக்கின்ற அனைத்து சூழ்நிலைகள், நம்முடைய கவனம், எதிர்நோக்குகின்ற தேவைகள் மேலும் அடிக்கடி நம்முடைய தலையிடுதலும், உதவியுமாக இருக்கின்றன. ஆலோசனை தேவையாயிருக்கிற சக கிறிஸ்தவர்களை நாம் காண்கிறோம். நாம் அவர்களை சென்றடையவும், அவர்களுடைய பாடுகளின் மத்தியில் அவர்களுக்கு தயவோடும் ஞானத்தோடும் உதவி செய்ய சமயம் எடுத்துக்கொள்ள வேண்டியவர் களாயிருக்கிறோம்.



பாடுபடுகிறவர்களின் மத்தியிலே ஒரு பாகமாக இயற்கை பேரழிவுகள் அல்லது உதவியற்ற நிலையிலிருக்கிறவர்களுக்கான பூமிக்குரிய தேவைகளை நாம் காண்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் பணத்தை, உடைமைகளை நேரத்தை உதவி என்று வருகிற பொழுது தங்களுக்கு தாங்களே உதவிசெய்ய இயலாத நிலையில் இருக்கிறவர்களுக்கு உதவி செய் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்த மனந்திறந்த நிலையிலான ஒரு முன்மாதிரியை நாம் அப்.4:34-37 வசனங்களில் காண்கிறோம். அந்த சூழ்நிலையில் யூதர்கள் மிகுந்த தூரத்திலிருந்த பல இடங்களிலிருந்து எருசலேமுக்கு பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக வந்தார்கள். அவர்கள் சுவிசேஷத்தைக்கேள்விப்பட்டு முதல் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். புதிய விசுவாசத்தை அவர்கள் அதிகமாக கற்றுக் கொள்ளத்தக்கதாக அவர்கள் தங்கியிருக்கும் காலம் நீடித்துக் கொண்டிருந்தபடியால், அவர்களுடைய அன்றாட அத்தியாவசியமான தேவைகள் சந்திக்கப்பட வேண்டிய நிலையிலிருந்தார்கள். இதன் பொருட்டு கிறிஸ்தவர்கள் நிலங்கள் மற்றும் உடமைகளை விற்று ஒன்றுமில்லாதவர்களோடு அவைகளை பகிர்ந்துகொண்டார்கள். பின்னர் ஏற்பட்ட உபத்திரவம், மற்றும் கஷ்டத்தின் காரணமாக அப்போஸ்தலனாகிய பவுல் மக்கெதோனியா, கொரிந்து பட்டணங்களின் சபைகளிலிருந்தும் பணத்தை சேகரித்து எருசலேமிலிருந்த பிராந்திய சபைக்கு உதவி செய்யும்படியாக வந்தார். (2கொரி.9; ரோம.15:31).

**மத்.25:34-46 வசனங்களில் இயேசு போதித்தார்.**

"அப்பொழுது ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன்; என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்,

வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்"

"அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாத வராகக்கண்டு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்".

"அதற்கு ராஜா பிரதியுத்தரமாக; மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்"

"அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன் நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை, வஸ்திரமில்லாதிருந்தேன் நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும், காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன். நீங்கள் என்னை விசாரிக்கவில்லையென்பார்"

"அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே; உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும், நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவிசெய்யாதிருந்தோம் என்பார்கள்"

"அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்".

"அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்".

## உலகிற்கு தேவனுடைய தொடர்ச்சியான ஈவு

ஒரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் இந்த குணாதிசயங்கள் தேவனால் விரும்புகிறபடியால் நாளுக்கு நாள் என்ற அடிப்படையில் அவனுடைய நடத்தை எல்லா இடங்களிலும் பரவி இந்த உலகில் அவனது நல் வாழ்க்கை நன்மைக்கான ஒரு வல்லமையாக இருக்கிறது. அவன் சத்தியத்தை பேசுவான், சத்தியத்திலே ஜீவிப்பான்; மற்றவர்களுடனே அவனுக்குள்ள ஈடுபாடுகளை நேர்மையானது ஆளுகை செய்யும்; திக்கற்றவர்களுக்கும், தேவையுள்ளவர்களுக்கும் மன உருக்கமானது அவனுடைய கரங்களை திறக்கச் செய்யும்; மனுஷ ஆத்துமாக்களில் அன்பு கூரச் செய்து சுவிசேஷத்தின் நற்செய்தியானது தேவனுடைய குடும்பத்திலே ஒரு பாகமாக இல்லாதவர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளும்படி தூண்டுதல் செய்யும். ஒவ்வொருவகையிலும் கிறிஸ்தவனுடைய ஜீவியம் ஆசீர்வதி கப்பட்டதாயிருக்கிறது. அவன் உலகத்திற்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்கிறான்.

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாசகுடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக் கடவோம்" (கலா.6:10).

## கேள்விகள்

1. இருதயத்திலிருந்து மெய்யாக ஆராதிப்பது எவ்வாறு கிறிஸ்தவனிடத்தில் மாறுதலை ஏற்படுத்துகிறது?
2. என்னென்ன வழிகளில் அவன் தேவனுடைய மாதிரியை பின்பற்ற வாஞ்சிக்கிறான்?
3. அவனுடைய அனுதின ஜீவியம் -------------- ஆகிறது, தேவனோடு கைகோர்த்து நடக்கிற பொழுது.
4. ஒரு பாவ ஜீவியம் மெய்யான சந்தோஷத்தை கொண்டு வருகிறதா?
5. ஒரு கிறிஸ்தவனை சூழ்ந்திருக்கிவர்களிடம் இருந்து அவனை வேறுபடுத்திக் காட்டும் சில குணாதிசயங்கள் என்ன?
6. ஒரு கிறிஸ்தவன் தேவனுக்கு ஊழியம் செய்கிறதிலே மாயமற்றவனாக இருப்பதும் இரகசியமான உள்ளெண்ணங்கள் இல்லாமல் இருப்பதும் ஏன் முக்கியமானதாய் இருக்கிறது?
7. தேவன்"------------------------------------------------------------ - -----------------------------------------------" என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்?
8. நம்முடைய சரீரங்கள் என்னவென்று அழைக்கப்படுகின்றன?
9. கிறிஸ்தவத்தின் உயர்வு என்ன?
10. கிறிஸ்தவர்கள் --------------------- ------------------------ நம்முடைய சொந்த --------------- பார்க்கவும் -------- புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி--------------------- ------ நடந்து ----------- வேண்டியதாயிருக்கிறது.
11. நம்முடைய ஜீவியங்களில் தேவ ஆவியினுடைய பலன் என்னவாக இருக்கிறது?
12. எருசலேமிலிருந்த சபையில் தேவையோடு இருந்தவர்களுக்கு சபையார் என்ன செய்தார்கள்?
13. காவலில் இருக்கிறவர்களுக்கு ஊழியஞ்செய்ய கிறிஸ்தவர்களுக்கு கட்டளையிடப்பட்டு இருக்கிறதா?
14. கிறிஸ்தவம் என்பது ஒரு ------------------ கிறிஸ்தவனின் வாழ்க்கைக்கு மற்றும் அவன் உலகிற்கு ஒரு --------------- இருக்கிறது.
15. ஆகையால் ----------------------, நாம் செய்வோம் --------------------- -க்கு தக்கதாக விசேஷமாக ------------------ ------------- செய்யக்கடவோம்.

# மரணத்திற்கு பின், என்ன?
# After Death, What?

**14**

ஒரு மனுஷனுக்கு மரண தறுவாயில் என்ன நேரிடும் என்று ஒவ்வொரு மார்க்கமும் ஏதோ அந்த மார்க்கத்தை தோற்றுவித்தவர் என்ன நம்புகிறாரோ அதை ஏதோ ஒரு காட்சியாக சித்திரிக்கிறது. ஆனால் எந்த மனுஷனும் மரணம் அடைந்து திரும்ப வந்து, கல்லறைக்கு அப்பால் கடந்து என்ன இருக்கிறது என்று சொல்லவில்லை.

நம்முடைய பாடத்தில் நாம் மெய்யான தேவனை தேடி கண்டுபிடித்திருக்கிறோம். வேதாகமத்தில் சத்தியத்திற்கு எதிராக கேள்வி கேட்க முடியாதவகையில் தேவனே அதை உருவாக்கியவர் என்பதற்குரிய உள்ளான நிரூபணங்கள் அடங்கியிருக்கின்றன. புதிய ஏற்பாடனது கிறிஸ்தவ யுகத்தில் ஜீவிக்கும் ஜனங்களுக்கான தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆகையால் வேதாகமத்தில் மரணத்துக்கு பின் ஜீவன் என்ற தலைப்பில் தேவன் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறாரோ, அவை அனைத்தும் சத்தியமானதாக இருக்கிறது. இந்த சத்தியத்தை அசட்டை செய்யவோ இதற்கு எதிராக கேள்வி கேட்கவோ முடியாது. ஏனென்றால் எந்த மனுஷனும் அந்த ஆவிக்குரிய உலகத்தை குறித்து சுய அறிவுடையவனாக இருக்கிறதில்லை.

நாம் எந்த ஒரு காரியத்தை விசுவாசித்தாலும் அது நாம் அறிந்திருக்கிற மார்க்கங்களின் உபதேசங்களை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும். **நாம் இதை கவனமாக படிக்கும்பொழுது, நாம் மெய்யான தேவனையும், மெய்யான மார்க்கத்தையும் தேடி கண்டுபிடிக்கிறோம். அதோடு கூட மரணத்தின்போது என்ன சம்பவிக்கிறது என்பதை குறித்த மெய்யான காட்சியையும் கண்டு கொள்கிறோம்.**

"அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி.9:27).

"எல்லாம் ஒரே இடத்துக்குப்போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத்திரும்புகிறது" (பிரச.3:20).

"இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத்திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை" (பிரச.12:7).

சரீரமானது மண்ணுக்குத் திரும்புகிறது என்பது சகல மனுஷருக்கும் வெளியரங்கமாயிருக்கிறது. ஒரு மனுஷனுடைய ஜீவனுள்ள ஆவியானது, அவனுடைய மரண நேரத்தில் அவனுடைய சரீரத்தை விட்டு நீங்குகிறது என்பதும் சமமாக வெளியரங்கமாயிருக்கிறது. ஆனால் மனுஷன் என்ன ஆகிறான், அவனுடைய சரீரமரணத்திற்கு பின் அவனுடைய ஆவி எவ்வாறு ஜீவிக்கிறது இந்த ஜீவியத்தில் அவன் வாழ்ந்த விதத்திற்கு தக்கதாக அவன் என்ன பலனை அல்லது தண்டனையை பெற்றுக்கொள்கிறான் - இந்த கேள்விகளுக்கான பதில்கள் பல மாறுபட்ட நம்பிக்கைகளை கொண்டுவருகின்றன.


## வேதாகமத்தின் நோக்கம்

வேதாகமத்தின் முழு நோக்கம் என்னவென்றால் முக்கியமான ஜீவியத்துக்கென்று மனுஷனை ஆயத்தப்படுதுவதுதான்: மரணத்துக்குப்பின்னுள்ள ஜீவியம். அப்படியொரு ஜீவியம் இல்லை என்றால், பின் தேவனை பிரியப்படுத்தும்படி செய்கிற எல்லா கிரியைகளும் வீணானதாகவும், மதியீனமானதாகவும் இருக்கும்.

**சில மார்க்கங்கள் போதிக்கிறபடி ஒரு மனுஷன் அநேக ஜீவியங்களில் ஜீவிப்பானேயாகில்,** அவன் வாழ்கிற ஒரு ஜீவியத்தின் முடிவிலே ஒரு முறை நியாயந்தீர்க்கப்படுகிறதில்லை என்றால் உலகத்தின் கவலைகளிலிருந்து ஒய்வு பெற பிரயாசப்படுகிறதென்பது எந்த அளவுக்கு நம்பிக்கை அற்றதாக இருக்கும். மற்றவர்கள் **"உத்தரிப்பு ஸ்தலம்"** என்னும் உபதேசத்தில் நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். அது என்ன சொல்லுகிறதென்றால்; "ஆத்துமா அதனுடைய தீய செய்கைகளுக்காக கொஞ்ச காலம் பாடநுபவிக்கும் ஆனால் அந்த குடும்பமோ, சிநேகிதர்களோ அந்தநபர் உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்து வெளியேறத்தக்கதாக என்றும் சபைக்கு பணம் கொடுத்து ஜெபிக்க முடியும் என்று சொல்லுகிறது.

ஆனால் தேவனால் கொடுக்கப்பட்ட புஸ்தகத்தில் இந்த உபதேசங்கள் காணப்படுகிறதில்லை. அதனுடைய சத்தியத்தின்படி மனுஷன் **ஒருமுறை ஜீவிக்கிறான், ஒரேதரம் மரிக்கிறான்,** பின்பு அவன் உயிர்த்தெழுதலுக்காகவும். இந்த ஜீவியத்தில் அவனவன் செய்த கிரியைகளுக்குத் தக்க நியாயத்தீர்ப்புக்காகவும் காத்திருக்கிறான்.

கிறிஸ்தவத்தின் முழுமையமானது இந்த உயிர்த்தெழுதலின்மேல் நம்பிக்கை கொண்டிருக்கிறது. நம்முடைய இரட்சகராக இருப்பதற்கு கிறிஸ்து நமக்காக மரித்தார். ஆனால் ஒரு மரித்துப்போன மனுஷனால் எவர் ஒருவருக்கும் எதுவும் செய்ய முடியாது. **கிறிஸ்துவின் வல்லமையானது, அவர் நம்முடைய உயிர்த்தெழுந்த இரட்சகராகும்படியாக மரணத்தின் கட்டுகளை மேற்கொண்டார் என்ற உண்மையில் அமைந்திருக்கிறது.** கிறிஸ்துவானவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார் என்று வேதாகமம் சொல்லுகிற பொழுது இருபது நூற்றாண்டுகளாக வேதாகமம் உண்மையானது அல்ல என்று நிரூபிக்கத்தக்கதாக அவிசுவாசிகள் முயற்சித்திருக்கிறார்கள் ஆனால் முதலாம் நூற்றாண்டில் உயிர்த்தெழுலுக்குபின் அவரை கண்டவர்களுடைய இருதயங்களில் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தை அவிசுவாசிகளால் அசைக்க முடியாமற்போனது. மேலும் அவர்களால் அந்த கண்கண்ட சாட்சியை பொய்யென நிரூபிக்க ஒருபோதும் இயலவில்லை. எது சத்தியம் என்பதை **அறிந்த** அந்த மனுஷர்கள் மரித்தார்கள். மரித்த அவர்கள் உயிர்த்தெழுந்த ஆண்டவர் ஒருநாளிலே அவரை பின்பற்றிய அனைவரையும் உயிரோடெழுப்ப மீண்டும் வருவார் என்று வாக்குப்பண்ணினதை **அறிந்திருந்தவர்களாக** அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்.



இஸ்ரவேல் தேசத்தில் எருசலேமில் உள்ள வெறுமையான கல்லறை. கிறிஸ்துவின் சரீரம் இங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

"இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர் களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர் களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்....

"ஆகிலும் மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடு வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில்,

புத்தியீனனே நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை விதையாமல் கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய் அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்"

"மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். ஜென்ம சரீரமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.

"சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில்; மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரி.15:19,20; 35-38; 42-44; 50-52)

**கிறிஸ்து மீண்டுவரும்பொழுது**

**இன்னும் பிழைத்திருக்கிறவர்களைக்குறித்து என்ன?**

தேவனுடைய குடும்பம் ஒரு ராஜ்யம் என்று அழைக்கப்படுகிறது. அந்த ராஜ்யத்திற்கு மேலாக ஆளுகை செய்யும் அதிகாரம் அவருடைய குமாரனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இராஜ்யத்தின் பிரஜைகளில் சிலர் மரித்திருக்கிறார்கள், சிலர் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"அன்றியும் சகோதரரே, நித்திரையடைந்தவர்களிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத்துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்துப் பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே **இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும்** தேவன் அவரோடே கூடக்கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை"

"ஏனெனில்; கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாக எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்".(1தெச.4:13-17)



"அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத் தையும் சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகைசெய்ய வேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்" (1கொரி.15:24-26).

"பின்பு பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இரு கரையிலும் பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கும் ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர்கள் அவரைச் சேவித்து அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்".

நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும், சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப்பிரகாசிப்பித்தது ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். அங்கே இராக்காலம் இல்லாதபடியால் அதின்வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை"

"தீட்டுள்ளதும், அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" (வெளி.22:1-4; 21:23-25,27).

இந்த புதிய வானம், புதிய பூமி என்ற அழகிய வார்த்தை சித்திரங்களை நாம் எவ்வாறு விவரித்து சொல்ல முடியும்? தேவன் வாக்குத்தத்தம் செய்திருப்பதை பார்க்கிலும் யார் அதிகமாக விரும்பக்கூடும் அவரோடுகூட நித்திய ஜீவனை.

சகல ஜனங்களும் மரணம் அடைந்தாக வேண்டும். ஆனால் அவர்களனைவரும் உயிரோடெழுப்பப்படுவார்கள். இந்த ஜீவியத்திலே எந்த விதமாக வாழ்ந்தார்களோ அதற்கு தக்கதாக ஒவ்வொருவரும் பதிலளிக்க வேண்டியதாயிருக்கும் பொழுது நாம் தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்பை சந்திப்போம். மனுஷனுக்கான தேவனுடைய செய்தியாகிய வேதாகமத்திலே, மீண்டும் பிறப்பது அல்லது மறு அவதாரம் அல்லது மரணத்துக்குப்பின் இரண்டாவது ஒரு சந்தர்ப்பம் இவை போன்ற எந்த ஒரு உபதேசமும் இல்லை. இதற்கு பதிலாக நாம் மரிக்கும்பொழுது தேவனுடைய புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறபடியே அவருடைய வார்த்தைகளை கொண்டு நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்று எச்சரிக்கப்படுகிறோம். ஒவ்வொருவரும் அவரவருடைய ஜீவியத்திற்கு தக்கதாக நித்திய இரட்சிப்பை அல்லது ஆக்கினையை அடைவார்கள்:

- நான் ஜீவித்த பொழுது தேவனுக்கு கீழ்ப்படிந்தேனா?
- தேவனுடைய குடும்பமாகிய சபைக்குள்ளாக நான் பிறந்திருந்தேனா?
- சபையாரோடு கூட நான் ஒழுங்காக தேவனை ஆராதித்தேனா?
- நான் அநுதினமும் ஒரு பரிசுத்தமான ஜீவியம் செய்தேனா?
- கிறிஸ்துவின் அன்பை நான் மற்றவர்களிடத்தில் நடைமுறைப்படுத்தினேனா?
- தேவனுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிறதில் நான் கனி கொடுத்தேனா?

நாம் நியாயத்தீர்ப்பை சந்திக்க ஆயத்தமாய் இருக்கிறோமா என்பதை இந்த ஜீவியத்திலும் கூட நாம் அறிந்து கொள்ள முடியும், ஏனென்றால் நாம் ஏற்கெனவே "பரீட்சை" க்கு நின்றவர்களாயிருக்கிறோம்.

**"என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது, நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" (யோவா.12:48).**

**"மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்....**

**"அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்" (வெளி.20:12-15).**


தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றிருக்கிற விசுவாசிகள் சபையிலே சேர்க்கப்படுகிறார்கள். மரண பரியந்தம் தேவனுக்கென்று உண்மையாய் இருக்கிறவர்களுக்கு ஜீவனுள்ள உயிர்த்தெழுதல் வாக்குப்பண்ணப்பட்டு இருக்கிறது. "அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (மத்.25:34).

இந்த ஜீவியத்தில் தேவனை பிரியப்படுத்துவதை குறித்து அக்கறையற்றவர்களாயிருக்கும் அநேகருடைய நிலை எவ்வளவு துக்கமானதாயிருக்கும்! அவர்கள் தேவனை கண்டடையும்படி அவரை தேடவில்லை. அவர்கள் அவருக்கு கீழ்ப்படிய வில்லை, அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் இருப்பதை குறித்த அக்கறை உடையவர்களாயிருக்கவில்லை.

மெய்யான தேவனையும், அவருடைய வார்த்தையையும் தேடுவதென்பது பெரும் பணியாக இருந்தது. அவர்கள் அதற்கு பதிலாக ஜாக்கிரதையில்லாத வாழ்க்கையை ஜீவிப்பதையும் என்ன மார்க்கமாயிருந்தாலும் எது வந்ததோ அதைபின்பற்றுவதையும் அல்லது மொத்ததில் எந்த மார்க்கத்தையும் பின்பற்றாதவர்களாகவும் இருப்பதை தெரிந்து கொண்டார்கள். அநேகர் விக்கிரகங்களை வழிபட்டார்கள் அநேகர் தேவனை மறுலித்து அவருடைய

நாமத்தை சபித்தார்கள். அவர்கள் விருப்பத்துடனே பாவஞ்செய்து தாங்கள் வாழும்படி தெரிந்து கொண்ட ஜீவியத்தை எப்படியோ வாழ்ந்தார்கள். தேவனை பிரியப்படுத்த முயற்சிப்பதற்கு பதிலாக அதைச் செய்தார்கள். இயேசு சொன்னபடியே; "அவர்கள் தங்கள் பிதாவாகிய பிசாசானவனை சேவித்தார்கள்" "பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற அக்கினிக் கடல்" அவர்களுடைய நித்திய ஸ்தலமாக இருக்கிறது.


**வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள இந்த வசனப்பகுதிகளுடனே ஆதியாகமத்தில் தொடங்கிய சம்பவத்தின் முடிவை நாம் காண்கிறோம், பாவஞ்செய்து இழந்து போன மனுஷன் தேவனுடனே ஐக்கியமாகவும் சமாதானமாகவும் இருக்கும்படியாக நித்தியத்திற்கென்று மீட்கப்பட்டான். பாவத்தினால் இழந்த பரதீசு கிறிஸ்துவினுடைய பலியின் மூலமாக மீண்டும் பெற்றுக்கொள்ளப்படுகிறது.**



மனித வரலாற்றின் ஒரு தேர்வு, இடது புறத்தில் ஏதேன் தோட்டம் ;
மனுஷனுடைய வீழ்ச்சி; பழைய ஏற்பாட்டு காலத்தில் பலிகள் செலுத்தப்படுதல்;
மனுஷனுடைய பாவங்களுக்காக கிறிஸ்து பலியாகுதல்;
சீஷருடனே நினைவு கூரப்படவேண்டிய இராப்போஜனம் நிறுவப்படுதல்;
மேலும் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காகவும்,
கிறிஸ்துவின் சரீரமாகிய
அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் அங்கமாகிய மாறியவர்களுக்காகவும்
புதிய வானம் மற்றும் புதிய பூமி நித்திய வாசஸ்தலமாக வாக்குத்தத்தம்
செய்யப்பட்டதும் காண்பிக்கப்படுகிறது.

## கேள்விகள்

1. நாம் மரித்தபின் என்ன சம்பவிக்கும் என்பதை குறித்த சத்தியத்தை நாம் எவ்வாறு அறிந்தகொள்ள முடியும்?
2. வேதாகமம் சொல்கிறது ------------------------- -------------- ---------- திரும்பி, ----------- ----------- தன்னைத் தந்த -------------------- திரும்புகிறது.
3. நமக்கு மரணத்திற்கு பின் பலன்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறதா? நாம் ஆக்கினையை குறித்த எச்சரிக்கப்படுகிறோமா?
4. வேதாகமத்தின் நோக்கம் என்ன?
5. கிறிஸ்தவம் முழுவதும் எதை மிகவும் முக்கியமான பாகமாககொண்டு அமைந்திருக்கிறது?
6. கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று அறிவித்தவர் யார்?
7. மரணத்துக்குப்பின் எல்லா ஜனங்களும் எதை சந்திக்க வேண்டும்?
8. ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்பிலே சந்திக்க வேண்டிய 4 காரியங்களை பட்டியலிடவும்.
9. யாருடைய வார்த்தைகள் நம்மை நியாயந்தீர்க்கும்?
10. இந்த ஜீவியத்தில் நாம் அவருடைய வார்த்தையை படித்து அவைகளை பின்பற்றுகிறதினாலே, நாம் நியாயத்தீர்ப்பிலே அங்கிகரிக்கப்பட்டவர்களாக இருப்போம் என்பதை அறிந்து கொள்ள முடியுமா?
11. தங்களுடைய பாவ ---------- ------------- பெற்று இருக்கிற --------- ------ ------ ------------- , ------ ---------- --------- ---------- இருக்கிறவர்களுக்கு ஜீவனுள்ள உயிர்த்தெழுதல் வாக்குப்பண்ணப்பட்டு இருக்கிறது, மத்தேயு 25-ன் படி.
12. நித்திய இரட்சிப்பு அடையத்தக்கதாக கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையின்படி ஜீவிக்க வேண்டியது அவசியமா?
13. தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் என்ன சம்பவிக்கும் (1தெச.1:7-9)?.
14. மரித்தோர் தேவனுக்கு முன்பாக நிற்கும் பொழுது அவர்கள் எவ்வாறு நியாயந்தீர்க்கப்படுவார்கள்?
15. புதிய வானம், புதிய பூமியைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பத்தி அளவில் அதை விவரிக்கவும்.


Even so, come, Lord Jesus...
கர்த்தராகிய இயேசுவே, வாரும்...

## பதில்கள்

### அத்தியாயம் -1

1. ------------------------------------------------------------------------
2. அவருடைய குடும்பத்தார் அல்லது நண்பர்கள் எதையெல்லாம் பின்பற்றுகிறார்களோ, அவரும் அதையே பின்பற்றுகிறார்.
3. தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் மற்றும் அவரை மறுதலிக்கிறவர்கள்.
4. மனிதகண், பார்க்க, காணக்கூடாதவை.
5. நுண் நோக்கி.
6. தானே உயிர்வாழ்தல் மேலும் ஒருவர் தான் உயிரோடிருப்பதை விவரிக்கவேண்டிய நிர்பந்தம்.
7. ஜீவியம், சிருஷ்டிகர், யாராயிருப்பினும், என்னவாயிருப்பினும்.
8. நம்மை விட பெரியவராயிருக்கிறார்; நிச்சயமாக இவ்வுலகத்துக்குரியவராக இருக்கமாட்டார்.

### அத்தியாயம் -2

1. ஆராதித்தார்கள்; ஒரே உன்னத தேவனை
2. இயற்கையின், தேவன்.
3. அநேக தேவர்களிடத்தில் நம்பிக்கை, விக்கிரகங்களை தேவனாக வழிபடுதல்.
4. இல்லை.
5. ஷேஙக்டி.
6. அவர்தான் ஒரே தேவன், இருக்கின்ற சகலத்தையும் சிருஷ்டித்தவர்.
7. பிதாக்கள், குடும்பங்களின் தலைவர்கள்.
8. 1.தேவனிடத்தில் விசுவாசம் ஒரு சர்வவல்லமையுள்ள சகலமும் அறிந்த ஆவி.
   2. தேவனுக்கு பலிகள் செலுத்தப்பட்டன.
   3. மனுஷர் தங்களுடைய மரித்தோரை அடக்கம் செய்தார்கள் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுதல் உண்டு என்ற எதிர்பார்ப்புடனே.
9. 1. தேவன் 2. பாவம் 3. முடிவில்லாத ஆத்துமா 4. மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் - காணப்படாத சகல காரியங்களும்.
10. முதலாவது மனுஷர்கள் தங்களை சிருஷ்டித்த தேவனால் காணப்படாத இந்த உண்மைகள் குறித்து நிச்சயம் போதிக்கப்பட்டிருக்கவேண்டும்.

### அத்தியாயம் -3

1. சிருஷ்டிப்பின் சம்பவம்
2. ஆதியிலே ஒன்றும் இருக்கவில்லை, அங்கே இருள் இருந்தது, பின்பு சிருஷ்டிகர்கள் ஒளி உண்டாகும்படி அழைத்தார்கள்; பூமியை மூடியிருந்த ஜலம் பூமி காணப்படத்தக்கதாக கீழ் நோக்கி புரண்டு சென்றது; மிருகங்களும் பின்பு மனுஷரும் சிருஷ்டிக்கப்பட்டார்கள்.
3. அங்கே காற்றும், வானமும் இல்லாதிருந்தது; இருளும், ஜலமும் மாத்திரமே இருந்தது; சிருஷ்டிக்கும் வல்லமையால் வெளிச்சம் உண்டாக்கப்பட்டது.
4. வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவரானவர் வெளிச்சத்தையும், சகலத்தையும் சிருஷ்டித்தார்.
5. ஆதியிலே இருளும், எங்கேயும் ஒரு பெரிய வெற்றிடமும் இருந்தது; ஷேங்க்டி மண்ணிலிருந்து மனுஷன் தோன்றும்படியாக பேசினார். சிருஷ்டிப்பை குறித்த சம்பவத்தின் இந்த மூலகங்களும், மற்ற ஆதியாகம குறிப்புகளும் இதற்கு தொடர்புடைய சீனமொழி வார்த்தைகளை உருவாக்க ஒன்றாக இணைக்கப்படுகின்றன.

6. 1. சிருஷ்டிகர்

2. முழுமையான இருள்

3. எங்கும் பேராழம் கொண்டஜலம்

4. தேவனுடைய வார்த்தையினாலே ஒளி உண்டானது.

5. தேவனுடைய வார்த்தையினாலே ஜலம் குவியலாக ஒன்று சேர்ந்தது, ஆகையால் பூமியிலே வெட்டாந்தரை காணப்பட்டது.

6. சகல ஜீவன்களும் உண்டாயிருக்கும்படி அழைக்கப்பட்டன.

7. மனுஷர் சிருஷ்டிக்கப்பட்டார்கள்.

7. சிருஷ்டிகர் மாத்திரமே

8. இல்லை; சிருஷ்டிப்பின் பணியானது தொடங்கும் முன்பு, அது உண்டாயிருந்தபடியே எவர் ஒருவரும் "கற்பனை செய்திருக்க" முடியாது; அத்தகைய ஒத்த காரியங்களை கற்பனை மூலமாக, சகல சிருஷ்டிப்பின் சம்பவங்களையும் செய்திருக்க முடியாது.

9. சிருஷ்டிகராகிய அவர்தாமே.

10. தேவன் மனுஷருக்கு வெளிப்படுத்திய செய்தியை மாத்திரம் அப்படியே அவர்கள் தலைமுறை தலைமுறையாக அறிவித்தார்கள். காலங்கள் கடந்து சென்று மனுஷரும் பூமியெங்கும் சிதறிவாழ்ந்த பொழுது உண்மையான செய்தி இதிகாசங்களினாலும், காவியங்களினாலும் கேடுபாடானது. ஆனால் சத்தியத்தின் நூலிழைகள் மாத்திரம் அப்படியே இருக்கின்றன.

## அத்தியாயம் -4

1. தேவன்

2. ஒரே ஒரு தேவன்

3. 1. தேவனிடத்தில் நம்பிக்கை, சர்வவல்லமையுள்ள ஒருவர், சகலத்தையும் அறிந்து ஆவியாயிருக்கிறவர்.

2. தேவனுக்கு பலிகள் செலுத்தப்பட்டன

3. கல்லறையிலிருந்து உயிர்த்தெழும் ஒரு எதிர்பார்ப்புடனே, மனுஷர்கள் தாங்களுடைய மரித்தோரை அடக்கம் பண்ணினார்கள்.

4. 1. தேவன் 2. பாவம் 3. அழிவில்லாத ஆத்துமா 4. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் - காணப்படாதவைகளாகிய சகலமும்

5. 1. சிருஷ்டிகர்

2. முழுமையான இருள்

3. எங்கும் மிக ஆழமான ஜலம் இருந்தது

4. தேவனுடைய வார்த்தையினாலே ஒளி உண்டானது

5. தேவனுடைய வார்த்தையினாலே ஜலம் குவியலாக ஒன்று சேர்ந்தது, ஆகையால் பூமியிலே வெட்டாந்தரை காணப்பட்டது

6. சகல ஜீவன்களும் உண்டாகும்படியாக அழைக்கப்பட்டன

7. மனுஷர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள்

6. 1. ஒரு உலகளாவிய ஜலப்பிரளத்தைக்குறித்து ஒரு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

2. ஒரு மனுஷன் தன்னையும், தன் குடும்பத்தையும், எல்லாவகையான மிருகங்கள் மற்றும் போஜனபதார்த்தங்களையும், பாதுகாக்கும்படி ஒரு பேழையைக் கட்ட அறிவுறுத்தப்பட்டான்.

3. பேழைக்கு புறம்பேயிருந்த சகல ஜீவன்களையும் வெள்ளம் அழித்துப்போட்டது.

4. பூமியின் நிலைமையை சோதித்தறியும்படியாக பேழையிலிருந்து

பறவைகள் வெளியே அனுப்பப்பட்டன.

5. அந்த பேழை ஒரு மலையின் மேல் சென்று அடைந்தது.

6. உயிரோடிருந்தவர்கள் ஒரு பலிபீடத்தை கட்டி தேவனை தொழுது கொண்டார்கள்.

7. இல்லை; ஏனென்றால் பொதுவாக இதிகாசங்களில் மற்றகுறிப்புகள் கூடுதலாக சேர்க்கப்பட்டு இருப்பதை போல் அல்லாமல் ஆதியாகமத்தில் அவைகளுக்கு நீங்கலாகி இருக்கிறது.

8. அவைகள் ஒவ்வொன்றிலும் இருக்கும் விளக்கங்கள் வேதாகம விளக்கத்திற்கு ஒத்த வகையில் இருக்கின்றன; சம்வபங்கள் குறித்த விளக்கமான வரைகுறிப்புகள், வேறுபட்ட ஜனங்களால் கற்பனை செய்யப்பட்டிருக்காது ஏனென்றால் அவர்கள் ஒவ்வொருவரும், ஒருவருக்கொருவர் நீண்டதூரமான இடங்களில் பல நூற்றாண்டு காலம் வாழ்ந்தவர்கள்.

## அத்தியாயம் -5

1. நம்முடைய சிந்தனை அமைப்பு நம்முடைய பேச்சு, நம்முடைய பாஷை நம்முடைய உணர்வுகள், காரியங்களை செய்கிறதற்கான நம்முடைய வல்லமை.

2. தேவன் மனுஷரை பார்க்கிலும் மிகவும் பெரியவராயிருக்கிறார். அவர் நம்மை தம்முடைய சாயலில் உருவாக்கவில்லையானால் நாம் தேவனை குறித்த உணர்வற்றவர்களாயிருப்போம். அவர் நமக்கு சிந்திக்கும் தன்மை, உணர்ச்சிகளை உணரும் தன்மையை அவருடைய ஆவியினாலே அடையாளம் காண்கிற தன்மையை அருளியிருக்கிறார்.

3. தொடர்ச்சியாக தேவனை அடையும்படி தேட

4. "தன்னைக்குறித்த எச்சரிக்கை உணர்வு; மரித்துப்போகாத எச்சரிக்கை உணர்வு; தேவன்

5. வெளியே போதிக்கிறதில்லை.

6. உண்மை என்னவென்றால், வேறொரு தனி கேள்வி எதுவும் இல்லை, ஏனென்றால் ஒவ்வொரு மனுஷ ஜீவியும் தன்னிடம் தேவன் இருக்கிறார் என்பதற்கான வல்லமையுள்ள உறுதிப்படுத்துதலை கொண்டதாக இருக்கிறது. இதற்கு எதிரிடையானது எதுவும் இல்லை.

7. சிருஷ்டிகராகிய தேவன் ஒருவர் இருக்கிறார் என்ற முடிவிலிருந்து தப்பிக்க முடியாது.

## அத்தியாயம் -6

1. எந்த அளவுக்கு அதிக நன்மையாயிருக்கிறதோ, அந்த அளவுக்கு அதிக தீமையாகவும் இருக்கிறது.

2. தேவனுக்கு நல்ல பகுதி, தீய பகுதி என்று இல்லை, அவர் அவை இரண்டையுமே சிருஷ்டித்தார்.

3. அவர் எளிமையாக அவர்களுக்கு தெரிந்து கொள்ளும் வல்லமையை அளித்தார்.

4. கேருபீன், கேருப், சேராபீன், பிரதான தூதன்

5. அவன் தன்னை தேவனுக்கு ஒப்பாக மேன்மைப்படுத்த விரும்பினான்.

6. அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப், தேவனுடைய பரிசுத்த பார்வதத்தின் மேல்

7. மிகாவேலும் அவனுடைய தூதர்களும் வலுசர்ப்பத்துடனே (சர்ப்பம், பிசாசு, சாத்தான்) யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

8. பூமிக்கு, மனுஷர் மத்தியில்

9. அவனுக்கு கீழ்ப்படியும் அனைவரையும் அழிக்கும்படியாக ஒரு கர்ச்சிக்கிற

சிங்கம் போல வகைதேடி சுற்றித்திரிந்து கொண்டிருக்கிறான்.

10. பாவஞ்செய்த தூதர்கள் அந்தகார சங்கிலிகளினாலே கட்டப்பட்டு நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

11. சோதோம் கொமோரா பட்டணங்கள்; அவர்கள் தங்களை சீர்கேடான நடக்கைக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். தேவன் அவர்களை முற்றிலுமாக அழித்தார்.

12. ஏனென்றால் அவர்கள் அவருடைய பிரசன்னத்தில் ஜீவித்திருந்தார்கள்.

13. சகல மனுஷரும்

14. ஏனென்றால், விசுவாசிக்கும்படியாக, தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம்.

15. நாம் அவரை தெரிந்து கொண்டால்

## அத்தியாயம் -7

1. குணாதிசயங்கள்
2. இல்லை
3. சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு; 1900 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலத்துக்கு முன்பாக
4. ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு சம்பவம்
5. அவைகள் பரிசுத்தாவியினாலே ஏவப்பட்டு எழுதப்பட்டன
6. சிருஷ்டிப்பும், வீழ்ச்சியும்; இரட்சிக்க; கீழ்ப்படிதல் உள்ள மனுஷன்; தேவன்; நித்திய ஜீவன்
7. பூமி உண்டையின் மேல்
8. 1. விபத்துக்கள் குழப்பங்களை மாத்திரமே உருவாக்குகின்றன.

   2. சகலமும் படிப்படியாக முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன; புதிதாகவும், மேன்மை ஆனதாகவும் மாறாமல் களைத்துப்போய் கொண்டிருக்கிறன.

   3. ஜீவனில்லாதது ஒருபோதும் ஜீவனை உருவாக்கியதில்லை.
9. கோரேஸ்
10. பேசப்பட்டவரையும், தேவனிடம் இருந்து வந்த செய்தியையும்.
11. அவைகள் தவறென்று அவர்களால் நிரூபிக்க கூடாமல் போனது.
12. வேதாகமம்
13. அவைகளின் தொடக்கம் தேவனால் கொடுக்கப்பட்ட பிரமாணங்களிடமாய் திரும்பி கண்டுபிடிக்கப்பட வேண்டும்.
14. மனுஷரை நியாயந்தீர்க்கும் நியாயத்தீர்ப்புவரை அது அதிகாரம் உடையதாக இருக்கிறது.
15. இல்லை இது தெய்வீகமாக ஏவப்பட்ட தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது.

## அத்தியாயம் -8

1. இரண்டு பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு
2. 39,27
3. பிதாக்களின் காலம் மற்றும் நியாயப்பிரமாண காலம்.
4. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் எழுதிய சுவிசேஷம்.
5. நியாயப்பிரமாணம்
6. இஸ்ரவேலர்கள்; கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலும், அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலும், அவருடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள்ளாக பிறந்தவர்கள்.
7. ஆதியாகமம்
8. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்

9. அப்போஸ்தலருடைய நடபடிகள்
10. 21
11. 1. ஒரு குறிப்பிட்ட பாடத்தில் சொல்லப்பட்டு இருக்கிற சகலத்தையும் தேடி கண்டுபிடிக்க வேண்டும்.
2. ஒரு ஒத்து வாக்கிய அகராதியை பயன்படுத்துங்கள்
3. ஒவ்வொரு பத்தியையும், அதைச் சுற்றிலும் உள்ள வசனங்களின் வெளிச்சத்தில் சிந்தித்துப் பாருங்கள்.
4. வேறுபட்ட பத்திகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று ஒரு விளக்க உரையாக இருக்கக் கடவது.
5. உங்களுடைய முடிவானது பத்திகளின் மத்தியில் எந்த விதமான முரண்பாட்டையும் ஏற்படுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
6. பாடத்திலே ஒரு முரண்பாடு காணப்படுமேயாகில் எல்லா பத்திகளையும் மீண்டும் படியுங்கள்.
7. எப்பொழுதுமே சத்தியத்தில் அன்புகூர்ந்து படியுங்கள்.
12. 1. பேசியவர் யார்?
2. அவர் யாருடனே பேசிக்கொண்டிருந்தார்?
3. இது எப்பொழுது பேசப்பட்டது?
4. எந்த பிரமாணத்தின் கீழாக அவர் பேசிக் கொண்டிருந்தார்.
13. திறந்த மனம்
14. ஏற்றுக் கொண்டு அவைகளுக்கு கீழ்ப்படியுங்கள்
15. சத்தியம், சத்தியம் விடுதலையாக்கும்

## அத்தியாயம் -9

1. தேவன், வர்த்தை பரிசுத்த ஆவியானவர்
2. வார்த்தை, தேவனோடிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது, சகலமும் அவர் மூலமாய் சிருஷ்டிக்கப்பட்டது.
3. தேவனுக்கு கீழ்ப்படியாமற் போவதை மனுஷன் தெரிந்து கொள்ளுதல்
4. வாத்தையாகிய இயேசு கிறிஸ்து உலகத்திலே தேவ குமாரனாக பிறந்தார்.
5. இல்லை, தேவனுக்கு கீழ்ப்படிவதை தெரிந்து கொள்கிறவர்கள் மாத்திரம்.
6. இல்லை
7. ஆவிக்குரிய குடும்பம், கிறிஸ்துவின் சபை
8. இஸ்ரவேல்
9. கிரேக்க மற்றும் ரோம தேசங்கள்
10. தீர்க்கதரிசனங்கள், தேவன்

## அத்தியாயம் -10

1. கிறிஸ்து, வார்த்தையாய், தேவனோடிருந்தார், தேவனாய்
2. உருவாக்கப்பட்டன அல்லது சிருஷ்டிக்கப்பட்டன
3. தேவனுடைய குமாரன்
4. பாவம், மரணம் என்பவைகளை பற்றிய பிரமாணத்தின் கீழ் இருந்தவர்களை மீட்கும்படியாக
5. இராயனுடைய மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக, தீர்க்கதரிசனத்தின்படியே இயேசு பிறந்த ஊராகிய பெத்லேகேமுக்கு யோசேப்பும் மரியாளும் சென்றார்கள்
6. பெத்லேகேம்
7. இல்லை, அவர்கள் இயேசுவை கொல்லும்படி சதித்திட்டம் தீட்டியவர்கள்.

8. ஆம்
9. "நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும்"
10. பாவம், வஞ்சனை
11. இயேசு தம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அவனை நினைத்தருளும்படியாக...
12. "தண்ணீரைப் போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது, என் நாவு மேல் வாயோடே ஒட்டிக்கொண்டது, என்னை மரணத்தூளிலே போடுகிறீர்"
13. "தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள், நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள்.... தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்"
14. அவைகள் பிரிக்கப்பட்டு அவைகளை யார் வைத்துக்கொள்ளலாம் என்பதை காணும்படியாக சீட்டு போடப்பட்டது.
15. மூன்றாவது நாளிலே அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார்.

## அத்தியாயம் -11

1. பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக ஒரு வழி தேடுதல்
2. அவர் சிருஷ்டிப்பை தொடங்குவதற்கு முன்பு
3. இரண்டு தேவனுடைய குடும்பமும் அவருடைய குடும்பத்திற்கு புறம்பானவர்களும்
4. அவருடைய வார்த்தையாகிய வேதாகமத்தில், குறிப்பாக புதிய ஏற்பாட்டில்
5. 1. அந்த குடும்பம் ஒரே குடும்பம்தான்
   2. அது தேவனுடைய குடும்பம்
   3. அது அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அழைக்கப்படுகிறது.
6. ஆம்.
7. தேவனுடைய சபை, கிறிஸ்துவின் மணவாட்டி, முதற் பேறானவர்களின் சபை, அவருடைய (பிதாவின்) அன்பின் குமாரனுடைய ராஜ்யம், கிறிஸ்துவின் சபையார், கிறிஸ்துவின் சரீரம்.
8. கிறிஸ்துவின் சபை
9. 1. எப்பொழுது அது தொடங்கப்பட்டது?
   2. எங்கே அது தொடங்கப்பட்டது?
   3. அதை தொடங்கியவர் யார்?
   4. அது என்ன நாமத்தை தரித்திருக்கிறது?
10. 1. கி.பி.33-ம் ஆண்டு, பெந்தெகொஸ்தே நாளான்று
    2. எருசலேமில்
    3. இயேசு கிறிஸ்து
    4. கிறிஸ்துவின் சபை
11. ----------------------------------------------------------------------
12. ஆவிக்குரிய வகையில் தேவனுடைய குடும்பமாகிய அவருடைய சபைக்குள்ளாக பிறப்பதினாலே
13. 1. இரட்சிப்பின் செய்தியை கேட்கவேண்டும்.
    2. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கிறார் என்று அந்த

செய்தியை விசுவாசிக்க வேண்டும்.

3. பாவம் நிறைந்த ஜீவியத்தை விட்டு மனந்திரும்ப வேண்டும்.

4. கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும்.

5. பாவமன்னிப்புக்கென்றும், தேவனுடைய குடும்பத்திற்குள்ளாக "புதிதாய் பிறக்கும்" அனுபவத்திற்காகவும் ஜலத்தில் அடக்கம் செய்யப்பட்டவர்களாய் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும்.

14. ஞானஸ்நானமாகிய இறுதி நிலையை அடையும் பொழுது

15. "புதிதாய் பிறத்தல்"

## அத்தியாயம் -12

1. இயேசு கிறிஸ்து

2. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுதல், மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுதல், விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.

3. கிறிஸ்துவின் சபை

4. ஆம், சமுதாயம் ஏனென்றால் அது ஜனங்களினால் உருவாக்கப்பட்டதாயிருக்கிறது.

5. ஆம்

6. அவர்கள் சுரூபங்களை உருவாக்கி அதை தேவனென்று தொழுது கொள்கிறார்கள் அவைகளுக்கு ஜீவனில்லை, அவைகள் அப்பிரயோஜனமானவைகள் என்று தேவன் சொல்லுகிறார்.

7. புதிய ஏற்பாட்டிற்கு மீண்டும் திரும்பும்படியாகவும், நாம் எப்படி இருக்கவேண்டுமென்று போதிக்கிறதோ அப்படியே நாமும் இருப்பது.

8. வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமை, கர்த்தருடைய நாள்.

9. 1. இசைக் கருவிகளின் துணையின்றிபாடுதல்

2. கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபித்தல்

3. தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளுதல்

4. கிறிஸ்துவினுடைய மரணத்தின் நினைவாக கர்த்தரின் பந்தியில் பங்குகொள்ளுதல்

5. சுவிசேஷம் பரவத்தக்கதாக நம்முடைய சம்பாத்தியத்திலிருந்து ஒரு பகுதியை கொடுத்தல்.

10. இல்லை, நாம் இதைச் செய்ய தடை பண்ணப்பட்டிருக்கிறோம்

11. --------------------------

12. ----------------------

13. ஏனென்றால் சகல ஆவிக்குரிய காரியங்களிலும், அது நம்முடைய வழிகாட்டியாக இருக்கிறது.

14. அவன் தன்னுடைய சரீரத்தை ஒரு ஜீவ பலியாக தேவனுடைய உபயோகத்திற்காக ஒப்புக் கொடுப்பதை.

## அத்தியாயம் -13

1. இது ஒரு சமாதான உணர்வையும், அவருடைய ஜீவியத்தில் சந்தோஷத்தையும் கொண்டுவருகிறது.

2. சகல மனுஷர் மத்தியிலும் அன்பாகவும், நீதியாகவும், நியாயமாகவும், சமாதானமாகவும் இருப்பதன் மூலமாக

3. ஆராதனையின் ஒரு காணிக்கையாகவும் ஊழியமாகவும் ஆகிறது.

4. இல்லை

5. ஒருவன் எப்படி நடத்தப்பட வேண்டுமோ அதே விதமாக மற்றவர்களை நடத்த, நம்மை சுற்றிலும் ஜீவிக்கிறவர்களுக்கு சந்தோஷத்தை கொண்டுவர எல்லாவற்றிலும் நாம் சரியென்று அறிந்திருக்கிறவற்றை செய்ய, ஒவ்வொரு

நாளின் முடிவிலும் மனச்சாட்சிகளை தேடத்தக்கதாக இருப்பதும். நமக்குள்ளே சமாதானமாக இருக்க

6. ஏனென்றால் பரிசுத்தமாக இருப்பதும், உத்தமமாக இருப்பதும் கிறிஸ்தவத்துக்கு அத்தியாவசியமானது.
7. தேவனுடைய திட்டத்தின்படி அழைக்கப்பட்டவர்களாயிருந்து அவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்.
8. பரிசுத்தாவியின் ஆலயம்
9. ஊழியம், பிச்சையெடுப்பது அல்ல
10. வேலை, அலுவல், சரியாக
11. அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்.
12. அவர்கள் தங்களுக்குண்டானவைகளை விற்று அப்போஸ்தலரிடத்திலே கொண்டுவந்தார்கள். தேவையுள்ளவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க.
13. ஆம்.
14. ஆசீர்வாதம், ஆசீர்வாதம்.
15. நமக்கு சமயம் கிடைக்கும்போதெல்லாம்; நன்மை; எல்லாருக்கும்; விசுவாச குடும்பத்தாருக்கு.

## அத்தியாயம் - 14

1. வேதாகமத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிரதோ, அதை மாத்திரம் நாம் விசுவாசிக்கிறபடியே.
2. சரீரம்; மண்; ஆவி; தேவன்
3. ஆம், நாம் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருப்போமேயாகில்; ஆம்.
4. முக்கியம் வாய்ந்த ஜீவனுக்காக மனுஷனை ஆயத்தப்படுத்த; மரணத்துக்கு பின் உள்ள ஜீவன்
5. வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிற மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல்
6. அவரை பார்த்த கண் கண்ட சாட்சிகள்
7. நியாயத்தீர்ப்பு
8. 1. ஜீவனுள்ளவனாயிருந்த போது நான் தேவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவனாய் இருந்தேனா?
   2. தேவனுடைய குடும்பமாகிய சபையில் நான் பிறந்திருந்தேனா?
   3. சபையாரோடு நான் ஒழுங்காக தேவனை தொழுதுகொண்டேனா?
   4. நான் ஒவ்வொரு நாளும் பரிசுத்தமான ஜீவியம் செய்தேனா?
9. கிறிஸ்து பேசிய வார்த்தைகள்; வேதாகமம்
10. ஆம்
11. விசுவாசிகள்; ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள்; மன்னிப்பு; கூட்டப்பட்ட; மரணபரியந்தம் தேவனிடம் உண்மையாயிருந்தவர்கள்
12. ஆம்.
13. கிறிஸ்து அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க மீண்டும் வருவார்.
14. அவர்கள் இந்த உலகத்திலே ஜீவித்த விதத்திற்கு தக்கதாக..
15. "பின்பு,பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. இது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு

ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்"...

"நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். (அங்கே இராக்காலம் இல்லாதபடியால்), அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை".

"தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்".